தாலே.) ஆனால் இச்சை தவிர வேறு கர்த்தவ்யமில்லையாகில் நெடுங்கால மிவனிழந்து போவானென்னென்ன வருளிச்செய்கிறார் (நெடுங்காலமித்யாதி வாக்யத்வயத்தாலே.) இவனுக்கிச்சையுண்டாகிலும் ஸஹகார்யாந்தரமன்றிக்கே ஃபலங்கொடுக்கமாட்டுமோவென்றும் வகுத்தவிஷயமாகிலும் நியமேந பித்ராதிகள் கார்யம் செய்யக்கண்டிலோமீயென்றும் வருகிறஶங்கையிலே யருளிச்செய்கிறார் (ஶக்தியுமித்யாதி;) பித்ராதிகள் ப்ராப்தி கர்மோபாதிகமாகையாலே பூர்ணமன்றென்றுகருத்து. ஆகில், இச்சைதான் வேணுமென்கிற நிர்ப்பந்தமென்னென்ன வருளிச்செய்கிறார் (இவனித்யாதி வாக்யத்வயத்தாலே.) "போதுமின்" என்று சொல்லுமிவர்களும் க்ருஷ்ணஸம்ஶ்லேஷார்த்திகளாயிருக்க, அவர்களைமாத்ரம் போகச்சொல்லக் கூடுமோவென்னும் ஶங்கையிலே,"போதுமின்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ஷுத்ரேத்யாதி.)"போதுமின்"என்றத்தாலே- இச்சையுடையவர்களாகையாலே அபிமுகராயிருக்குமவர்களை "போதுமினோ" என்று விதித்துச் சொல்லவேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ரதிகூலரையு மித்யாதி; பிராட்டியைப்போலே யிவர்களும் கடகராகையாலே திருத்துகை யிவர்களுக்கு ஸ்வபாவமென்றுகருத்து. போமின் என்னாதே, "போதுமினோ" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (நாங்களித்யாதி வாக்யத்வயத்தாலே.)

விலக்ஷணமானவிஷயத்தை க்ஷணகாலம் விஶ்லேஷிக்கும்போதும் விஶ்லேஷவ்யஸநம்பெரிதாயிருக்க, இப்போது ஆபரணம் பூண்டிருப்பாரோ, "நேரிழையீர்" என்று ஸம்போதிக்கும்படி யென்னென்ன; இதுக்கு மூன்று பரிஹார

கணிப்பிருந்தபடி. அன்றிக்கே, "கொங்கைமேற்குங்குமத்தின் குழம்பழிய" என்கிறபடியே க்ருஷ்ணனுடைய வரவைக்கடாக்ஷித்து, அவன் எப்போது வந்து மேல் விழும் என்று அறியாதபடியாலே, தங்களையெப்போதும் அலங்கரித்தபடியே யிருப்பார்களென்றுமாம். "వసతి హృది సౌమ్యరూపః" "வஸதி ஹ்ருதி ஸௌம்யரூப꞉" (௧௯) என்னுமாப் போலே முன்புத்தை க்ருஷ்ணனோட்டைக் கலவியால் பிறந்த புகர் இப்போது தோற்றும்படி யிருக்கையாலே சொல்லவுமாம்.

(சீர்மல்கு மாய்ப்பாடி) இவ்வூரிலைஶ்வர்யம் வழிந்துபோய் வேறேரூர்க்கு வெள்ளமிடப் போந்திருக்கை. அதாவது - க்ருஷ்ணனுடைய இங்குத்தை நீர்மை பரமபதத்திலும் சென்று அலையெறியும்படியாயிருக்கை. வஸ்துவுக்கு குணத்தாலேயிறே [க] உத்கர்ஷம். அங்கு தன்னிற் குறைந்தா ரில்லாமையாலே குணத்துக்கு விஷய மில்லை; ஆகையாலே தர்மியைப்பற்றிக்கிடக்கு மத்தனை அங்கு;

மருளிச் செய்கிறார் (இவர்களித்யாதிவாக்யத்வயத்தாலே.) ஸம்ஶ்லேஷார்த்தமாகப்போகையாலுண்டான த்வராதிஶயத்தாலே ஆபரணங்களிடுமவயவங்களை மாறுடிப் பூண்கையாலே வந்தவடிவிற் புதுக்கணிப்பென்று - முதல் வாக்யத்துக்குக்கருத்து. "వసతిహృదిసనాతనేచతస్మిన్ భవతిపుమాన్ జగతో౽స్య సౌమ్యరూపః । క్షితిరసమతిరమ్యమాత్మనో౽త్ర కథయతిచారుతయైవసాలపోతః" வஸதிஹ்ருதிஸநாதநே சதஸ்மிந் பவதிபுமாந் ஜகதோஸ்ய ஸௌம்யரூப꞉ । க்ஷிதிரஸமதிரம்யமாத்மநோத்ர கதயதி சாருதயைவ ஸாலபோத꞉" என்கிறபடியே ஒரு நாளையிற் கலவியி லாநந்த மிவர்களுக்கு அநுவர்த்திக்கையாலே விஶ்லேஷவ்யஸநம் தோற்றுமையால் தங்களை யெப்போதும் அலங்கரித்திருப்பர்களென்று - இரண்டாம்வாக்யத்துக்குக்கருத்து.

*சீர்பதம்—ஸம்ருத்தியைச்சொல்லுகிறதாய், அதுதானும்-க்ருஷ்ணனுடைய குணஸம்ருத்தியென்றுமாய், இப்பாட்டுக்குண்டானகோஸமருத்தியென்றும் திருவுள்ளம்பற்றி, முந்துற குணஸம்ருத்திபரமாகத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இவ்வூரிலித்யாதி.) அலையெறியும்படியாயிருக்கையாவது-அங்குத்தையில் நாய்ச்சிமார்களும் தேவகீ புத்ராநயந முகத்தாலே கண்டநுபவிக்கலாம்படி யிருக்கையென்றபடி. பரத்வாதி குணங்களை யநுபவித்துக்கொண்டிருக்கிற நாய்ச்சிமார்க்கு நீர்மைகாணவேண்டி யிருந்ததோவென்ன வருளிச்செய்கிறார் (வஸ்துவுக் கித்யாதி.) குணத்தாலேயென்றது-ஸௌலப்யத்தாலேயென்றபடி. இக்குணந்தான் அங்கேதானே அநுபாவ்யமாயிராதோ வென்ன வருளிச் செய்கிறார் (அங்கித்யாதி வாக்யத்ரயத்தாலே.) இங்கு ஸௌலப்யம் ப்ரகாஶிக்கிறபடியை

[க] உத்கர்ஷம்-உயர்த்தி.

[க] அந்தகாரத்தில் தீபம் போலே ப்ரகாஶிப்பதும் இங்கேயாகை யாலே, ஐஶ்வர்யம் பூர்ணமாய்த்தது இங்கேயிறே. [உ] த்ரிபாத்விபூதியி லடங்காத வஸ்து. தன்னை நியாம்யமாக்கி வர்த்திக்கிறவூரிறே. பண்டே கோஸம்ருத்தி யுண்டாயிருக்கச்செய்தே,பிள்ளைகள் கால்நலத்தாலே கறப்பன கடைவனவற்றால் குறைவற்றிருக்கை. நாழிப்பால் நாழிநெய் போருகை யென்றுமாம்.

(ஆய்ப்பாடி) பரமபதம்போலே தேஹாந்தரபரிக்ரஹம்பண்ணிச் சென்றநுபவிக்கவேண்டாதவூர். ஆசாரப்ரதாநரான வஸிஷ்டாதிகள் வர்த்திக்கிற திருவயோத்யைபோலன்றிக்கே, இடக்கையும் வலக்கையு மறியாத இடையர் வர்த்திக்கிறவூர். பெருமாள் குணங் கண்டு உகக்குமூர்போலன்றியே, க்ருஷ்ணன் தீம்புகண்டு உகக்குமூர்.

(செல்வச் சிறுமீர்காள்) இவ் வாத்மாவுக்கு நிலைநின்ற ஐஶ்வர்யமாவது-பகவத்ப்ரத்யாஸத்தியிறே. ராஜ்யத்தை விட்டு வெறுங்கையோடே பெருமாள் பின்னே போன இளைய பெருமாளை, "लक्ष्मणो लक्ष्मिसम्पन्नः" "[illegible]" (உ௦) என்றதிறே: ராவணபவநத்திநின்றும் கால் வாங்கி, பெருமா ளிருந்த தேஶத்தைக் குறித்து வருவதாக, "परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च" "भवद्गतं हि मे राज्यं जीवितं च सुखानि च" (உக) என்று ஸர்வத்தையும் விட்டு ஆகாஶஸ்த்தனான விபீஷணாழ்வானை, "अन्तरिक्षगतः श्रीमान्" "अन्तरिक्षगत

உபாதிக்கிறார் (த்ரிபாத்விபூதியிலித்யாதி.) கோஸம்ருத்திபரமான இரண்டாம் தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் (பண்டேயித்யாதி.)

"ஆய்ப்பாடி" என்று - இடைச்சேரியைச் சொன்னால் அதிஶயம் சொல்லத்தக்க தென்னென்ன ; அதுக்குத் தாத்பர்யமாக மூன்றுப்ரகாரத்தாலே யருளிச்செய்கிறார் (பரமபதமித்யாதி வாக்யத்ரயத்தாலே.)

"செல்வம்" என்றதுக்கு - ஸ்வாப தேஶத்திலே யர்த்தமருளிச்செய்கிறார் (இவ்வாத்மாவுக்கித்யாதி.) ப்ரத்யாஸத்தியாவது - ஸம்பந்தம். பகவத் ஸம்பந்தத்தைச் செல்வமாகச் சொல்லுகைக்கு மூன்று த்ருஷ்டாந்த மருளிச்செய்கிறார் (ராஜ்யத்தையித்யாதி.) "लक्ष्मिसम्पन्नः" "[illegible]" என்றது- பகவத் ஸம்பந்தமாகிற ஸ்ரீயாலே அதிஶயித்தவ ரென்றபடி. லக்ஷ்மீஶப்தம் ஆர்ஷமாகையாலே "லக்ஷ்மி" என்று குறுகிக்கிடக்கிறது. அந்யஶேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்களிரண்டும் பால்யந்துடங்கி யின்றிக்கே கைங்கர்யபரதையென்றும், ஸ்வாதந்த்ர்யமின்றிக்கே அந்யனான ராவணனுக்கு பரதந்த்ரரானவர்க்கு அந்த ஶேஷத்வம் கழிகை யென்றும், அந்யஶேஷத்வமின்றியிலே ஸ்வரக்ஷணே ஸ்வாதந்த்ர்ய நிஷ்டரானவர்க்குப் பின்பு அதுவு மழிந்திருக்கையென்றும், த்ருஷ்டாந்தங்களுக்கு பேதங் கண்டுகொள்வது. உக்தார்த்தத்தை

[க] அந்தகாரம் - இருள். [உ] த்ரிபாத்விபூதி - பரமபதம்.

ஶ்ரீராந்” (உ௨) என்றதிறே: அவனைரக்ஷகனாக அத்யவஸித்துத் தன் பக்கல் முதலற்றுக் கை வாங்கின ஸ்ரீ கஜேந்த்ராழ்வானை, “ஸதுநாகவர ஶ்ரீமாந்” “நாராயணபராயண ஶ்ரீராந்” (உ௩) என்றதிறே: அப்படியே இவர்களுக்கும். இங்கு ஐஶ்வர்யமாகச் சொல்லுகிறது-க்ருஷ்ண ப்ரத்யாஸத்தியை. அதாவது - வலிபாதி, வழக்குப்பாதி, தர்மம்பாதியாக, பஞ்ச லக்ஷம் குடியிற் பெண்களில் இவனால் புஜிக்கப்படாதாரொருவருமில்லை. வலியாகிறது — தன்செல்லாமை; வ்ழக்காகிறது-மைத்துனமை; தர்மமாவது-ஆந்ருஶம்ஸ்யம். (சிறுமீர்காள்) க்ருஷ்ணனோடொத்த பருவமாயிருக்கை. “துல்யஶீலவயோவ்ருத்தாம்” “தாஷ்ரூஶீல வயோவ்ருத்தாம்” (உ௪) என்கிறபடியே எல்லாவற்றிலும் அவனுக்கீடாயிருக்கை. பருவம் நிரம்பின ஸ்திரீகளையும் புருஷர்களையுங்கண்டால், தேவதாந்தரபஜநம் பண்ணினாரையும், தந்தாமுக்காக நினைத்திருப்பாரையும்போலே நினைத்திருக்கும். தனக்கு அநந்யார்ஹைகளாக நினைத்திருப்பது இவர்களை. இத்தால்--அவனுக்கேயாயிருக்கிற யோக்யதையைச்சொன்னபடி. ஜ்ஞாநலவதுர்விதக்தரன்றியே இடக்கையும் வலக்கையு மறியாத கந்யகைகளாயிருக்கை. இவனுடைய

ப்ரக்ருதத்திலே நிகமிக்கிறார் (அப்படியேயிவர்களுக்கு மென்று.) அந்யாபதேஶத்திலே “செல்வம்” என்றதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார் (இங்கித்யாதி.) தன் செல்லாமையென்றது - அவர்களோடு ஸம்ஶ்லேஷியாவிடில் தரியாமை. ஆந்ருஶம்ஸ்யமாவது - தன்னோடு கலவாவிடில் தரியாத பெண்களிடத்தில் பண்ணும் காருண்யம்.

இவர்களுடைய சிறுமையை விட்டு இப்படி ஸம்போதிக்கை - * அசோதையிளஞ்சிங்கமான க்ருஷ்ணனுடைய போகத்துக் குடலாயிருக்கும் பருவமென்று தோற்றுகைக்காக வென்றர்த்த மருளிச் செய்கிறார் (க்ருஷ்ணனித்யாதி.) பருவமொத்திருந்தாலும் ஶீலவ்ருத்தாதிகளொத்திராவிடில் போகத்துக் குடலாக மாட்டாதென்று அத்தை உபலக்ஷணமாக்கித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (துல்யேத்யாதி.) பெண்கள் பருவம் க்ருஷ்ணன் பருவத்துக் கொத்ததாயிருக்கவேணுமோ, போகார்ஹமாய் விஞ்சியிருந்தா லாகாதோ வென்ன வருளிச்செய்கிறார் (பருவமித்யாதி.) புருஷர்களையு மென்றது - த்ருஷ்டாந்தார்த்தம். (தேவதாந்தரபஜநம் பண்ணினாரையும்) என்றதுக்கு — பருவம் நிரம்பினவர்கள் பர்த்ருபரிக்ரஹம்பண்ணி யிருப்பர்களென்று தாத்பர்யம். (தந்தாமுக்காகநினைத்திருப்பாரையும்) என்றது - ஸ்வதந்த்ரரையு மென்றபடி. பெரியோர்களுக்குச் சிறியவர்கள் வஶ்யராயிருப்பர்க ளென்றும், அத்தைப் பற்ற “சிறுமீர்காள்” என்றதுக்கு - வஶ்யர்க ளென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம் பற்றி தாத்பர்ய மருளிச் செய்கிறார் (தனக்கித்யாதிவாக்யத்ரயத்தாலே.)

விஷயீகாரத்தாலே இளகிப்பதிக்கை. † ([க] அங்கோலத்தைலத்திற் குறைந்த க்ருஷ்ண கடாக்ஷ மில்லைபிறே. அதாவது - *கோவிந்தனுக் கல்லால் வாயில்போகாதிருக்கை.)

(கூர்வேற்கொடுந்தொழிலன்நந்தகோபன்) ஸ்ரீநந்தகோபர், முன்பு பசும்புல் சாவ மிதியாதவராய்த்து. நம் சிறியாத்தானைப்போலே ஆந்ருஶம்ஸ்யப்ரதாநராயாய்த்துப் போருவது. பிள்ளைகள் பிறந்த பின்பு அவர்கள்மேலுண்டானவாத்ஸல்யத்தாலே "அவர்களுக்கு என் வருகிறதோ!" என்று அஞ்சி, வேலைப்புகரெழக் கடைந்து பிடிக்கத் தொடங்கினர். (கொடுந்தொழிலன்) தொட்டிற்கீழே எறும்பு புகுரி லும் ஸிம்ஹத்தின் மேலே விழுமாப்போலே சீற்றத்தின்மிகுதியாலே உதிரக்கையரானர். "𑌨 𑌹𑌿𑌂𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿" "நஹிம்ஸ்யாத்ஸர்வ பூதாநி" (உரு) என்கிற ஸாமாந்யவிதி, "𑌅𑌗𑍍𑌨𑍀𑌷𑍋𑌮𑍀𑌯𑌂 𑌪𑌶𑍁𑌮𑌾𑌲𑌭𑍇𑌤" "அக்நீஷோமீயம்பஶுமாலபேத" (உசா) என்கிற விஶேஷத்தில் வாராதிறே. ஸ்வார்த்தமாகச்செய்யுமன்றிறே நிஷித்தமாவது; அத்தலை க்கு என்வருகிறதோ! என்று அஞ்சிச்செய்யுமன்று அவை தர்மமா கக் கடவது. "𑌮𑌨𑍍𑌯𑍁𑌮𑌤𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌮𑍍" "உந்நித்தந்க்ருதம்வாவத" (உஎ) இத்யாதி, "நின்பால் பொறுப்பரியனகள்பேசில் - ஆங்கே தலையை அறுப்பதே கருமங் கண்டாய்" என்றதிறே. (நந்தகோபன்)

"நந்தகோபன் குமரன்" என்ன வமைந்திருக்க, இப்போது நந்தகோபரை "கூர்வேற்கொடுந்தொழிலன்" என்று விஶேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச் செய்கிறர் (ஸ்ரீநந்தகோபரித்யாதி வாக்யத்ரயத்தாலே.) புகரெழக்கடைந்தென் றது-தேஜஸ்கரமாம்படி சாணைபிடித்தென்றபடி.

கூர்வேல்தொழிலன் என்னவமைந்திருக்க, "கொடும்" என்று விஶேஷித் ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறர் (தொட்டிலித்யாதி.) உதிரக்கையரென் றது-அவற்றை ஹிம்ஸிக்கையாலே வேல்வழியேவந்த ரக்தத்தைக் கையிலே யுடையவரென்கை. அந்யாபதேஶத்தில் - பிள்ளைகளிடத்தில் பரிவாலே கொடுந் தொழிலனானென் றர்த்தமருளிச்செய்கிறர் என்கையாலே, ஸ்வாபதேஶத்தி லும் - பகவத்விரோதி விஷயத்திலே யிப்படி கொடுந்தொழிலனாயிருக்கை பலிக் கையால், அதில் ஹிம்ஸை நிஷித்தமன்றென்று வரும் ஶங்கையைப் பரிஹரிக் கிறர் (நஹிம்ஸ்யாதித்யாதி.) விஶேஷத்தில் வாராதென்றது-விஹிதமான பஶ் வாலம்பநத்தைநிஷேதியாதென்கை. ஆகில் இதுக்கு நிஷேதத்வந்தானேதென்ன வருளிச் செய்கிறர் (ஸ்வார்த்தமாகவித்யாதி.) அக்நீஷோமீய ஹிம்ஸையைப் போலே பகவத்விரோதிஹிம்ஸை விஹிதமானதர்மமோவென்ன வருளிச் செய் கிறர் (அத்தலைக்கித்யாதி.) இது தர்மமாகைக்கு விதியைக்காட்டுகிறர் (நின்பா லித்யாதி.) பொறுப்பரியனகள் - துஸ்ஸஹங்கள். கருமங்கண்டாய்-கர்த்தவ்யங் கிடாயென்றபடி.

---

† குண்டலிதக்ரந்தம் சில ஸ்ரீகோசங்களில் இல்லை [க] அங்கோலம்-அழிஞ்சில்.

பிள்ளையைக்கண்ட ப்ரீதியாலே ஆநந்தத்தையுடையரென்று சொல்லுதல்; நாமதேயமாதல். இப்போது இவரைச்சொல்லுவானென்னென்னில்; உத்தேஶ்ய வஸ்துவை நோக்கித் தருவ ரென்னும் ப்ரீதியாலே. "நந்தகோபாலாவெழுந்திராய்" என்று-எழுப்பிக்கார்யம்கொள்ளலாம்படியிறே இவர்களுக்கு அவர்விதேயராயிருக்கும்படி. (குமரன்) வெண்ணெய் களவுகண்டான், பெண்களைக்களவுகண்டான், ஊரை மூலையடியாக்கினான் என்று எல்லாரும்வந்து முறைப்பட்டால், "என்கண் வட்டத்திலேவந்து தோற்றினாகில் நியமிக்கக்கடவேன்" என்று பெரிய உத்யோகத்தோடே யிருந்தால், அவர்முன்பு தோற்றும்போது ஸவிநயமாகத் தோற்றுகையாலே, "கெட்டேன்! இவனையோ இங்ஙனே பழியிட்டது" என்று அவர்களையேபொடியும்படியாயிருக்கை. யசோதைப் பிராட்டி பொடியும்போதும், "உந்தமடிகள் முனிவர்" என்றன்றே பொடிவது. "படிறுபலசெய்திப்பாடி யெங்குந் திரியாமே-கொடியேனென்பிள்ளையைப்போக்கினேன்" என்றிறே யிவளிருப்பது.

(ஏரார்ந்தகண்ணி யசோதை) யசோதைப் பிராட்டி கண்ணிலே அழகு குடிகொண்டாய்த்திருப்பது. பிள்ளையை மாறாதே பார்த்துக்கொண்டிருக்கையாலே. அவ்வாசி யடையக் கண்ணிலே தோற்றும்படியாயிருக்கை. * அழுகையும் அஞ்சிநோக்கு மந்நோக்கும் தொழுகையு

க்ருஷ்ணன் பக்கல் பரிவாலே நந்தகோபர் கூர்வேல் கொடுந்தொழிலனாகிலும், பெண்க ளிப்போது அத்தையிட்டு விஶேஷித்து அவரைச் சொல்லுகைக்குக் காரணமேதென்னும் ப்ரஶ்நத்தை யநுவதித் தருளிச் செய்கிறார் (இப்போதித்யாதி.) நோக்கித்தருவ ரென்றது - ரக்ஷித்துத் தருவரென்றபடி. பெரியாழ்வாரைப்போலே நந்தகோபரும் பரிவராய் நோக்கித்தருவராகையாலே, பெரியாழ்வார் பெண்பிள்ளை தானே கோபிமார் பாசுரத்தாலே பேசுகையால் அவரிடத்தில் ப்ரீதியுண்டென்று - இவ்வாக்யத்துக்குத்தாத்பர்யம். கூர்வேல்கொடுந்தொழிலனுடைய குமரனென்னாதே, "நந்தகோபன்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நந்தகோபாலாவித்யாதி.) நந்தகோப னிளஞ்சிங்கமென்னாதே, "குமரன்" என்றத்தாலே - சிறு பிள்ளையாய், அத்தாலே - பவ்யதை தோன்றுகையாலே பலிதார்த்தத்தை யருளிச்செய்கிறார் (வெண்ணெயித்யாதி.) நந்தகோபன் பக்கலிலே போய் ஊரார் முறைப்படும்படி, பெற்ற தாய் தீம்பு கண்டு முனியாதே விட்டிருக்குமோ வென்ன வருளிச் செய்கிறார் (யசோதையித்யாதி வாக்யத்வயத்தாலே.)

"ஏர்" என்று - அழகாய், * ஆர்தல் - பூர்த்தியாய், அத்தாலே பலித்தத்தை யருளிச் செய்கிறார் (யசோதைப் பிராட்டி யித்யாதி. "அசோதை யிளஞ் சிங்கம்" என்ற பதச் சேர்த்தியைத் திருவுள்ளம் பற்றி, அழகுக்கு ஹேதுவை யருளிச் செய்கிறார் (பிள்ளையித்யாதி.) அவ்வாசி யென்று - ஹர்ஷவிஶேஷம்.

மிவைகண்டகண்ணிறே. "அம்பன்ன கண்ணாளசோதை" என்னக்கடவதிறே. (அசோதை) "அசோதா யெழுந்திராய்" என்று எழுப்பிக் கார்யங் கொள்ளலாம்படியிறே இவர்கள் திறத்தில் அவள் அநுகூலித்திருக்கும்படி.

(இளஞ்சிங்கம்) ஸ்ரீநந்தகோபர் ஹிதகாமராகையாலே அங்கு விநயம்தோற்ற நின்றபடியைச்சொல்லிற்று; இவள் ப்ரியமே நடத்துமவளாகையாலே, செருக்கும் மேனாணிப்புந் தோற்ற நின்ற நிலையைச்சொல்லுகிறது. "அஞ்சவுரப்பாள் அசோதை ஆணாட இட்டிட்டிருக்கும்" என்று இவன் செய்ததெல்லாம் உத்தேஶ்யமாகவிறே இவள் நினைத்திருப்பது. ஆரேனும் வந்து முறைப்பட்டால் [அஞ்சவுரப்பாள்] இவன் தீம்பிலே தகணேறும்படியாக வாய்த்து உரப்புவது. (இளஞ் சிங்கம்) * சிறுமியர்க்கு ஒத்த பருவமா யிருக்கை. "சிங்கக் குருகு" என்று பட்டரருளிச்செய்வர்.

(கார்மேனி) நம்முடைய ஸகலதாபங்களு மாறும்படியான வடிவு. "தூநீர்முகில் போல் தோன்றாய்" என்று ப்ரார்த்தித்த வஸ்துவிறே இவர்களுக்கு ப்ரத்யக்ஷித்து நிற்கிறது. மாதா பிதாக்கள் தங்களை மறைத்துவைத்தாலும் விடவொண்ணாத வடிவழகு. (செங்கண்) அத்திருமேனிக்கு பரபாகமான சிவப்பை யுடைய திருக்கண்கள். அக

அம்பன்ன என்றது - அம்பு தைத்து ஈடுபடுத்துமாப்போலே அழகாலே யீடுபடுத்துகையாலே அம்புபோன்ற வென்றபடி.

செருக்கென்றது - "இளம்" என்ற பதத்தாலே லப்யமான ஹர்ஷாதிஶயம். மேனாணிப்பு மென்றது - * சிங்க பதத்தாலே தோற்றுகிற தேஜோவிஶேஷம். "ப்ரியமேநடத்துமவள்" என்றதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (அஞ்சவித்யாதி.) உரப்பாள் - அதட்டாள். ஆணாட்டம் - ஆண்பிள்ளைத்தனம். ஆணாட- கொண்டாட. எடுத்த பாசுரத்துக்குத் தாத்பர்ய மருளிச் செய்கிறார் (ஆரேனுமித்யாதி வாக்யத்வயத்தாலே.) தகணேறும்படியாக வென்றது-முற்றும்படியாக வென்றபடி. "இளஞ் சிங்கம்" என்றதுக்குத் தாத்பர்யாந்தர மருளிச் செய்கிறார் (சிறுமியர்க்கித்யாதி.) இளமையை யுடையவனுமாய் ஸிம்ஹம் போன்றவனென்று தோன்றாமைக்காக ஸம்வாதமுகேந ஸப்தார்த்தமருளிச்செய்கிறார் (சிங்கக்குருகித்யாதி.) குருகு - குட்டி.

ப்ரத்யக்ஷித் தென்றது - ப்ரத்யக்ஷமா யென்றபடி. "கார்" என்றதுக்கு - மேகமர்த்தமாய், அதுக்குத் தாத்பர்ய மருளிச் செய்து, அழகு ஸப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (மாதாபிதாக்களித்யாதி.)

"செங்கண்" என்றதுக்கும் - ஸ்வாபாவிகமான சிவப்பு ஸப்தார்த்தமாய், "கார்மேனி" என்ற ஸமபிவ்யாஹார தாத்பர்யத்தை யருளிச் செய்கிறார்

வாயில் வாத்ஸல்ய மடையத் திருக் கண்களிலே தோற்றும்படியாயிருக்கை; ஐஶ்வர்யத்தாலும் குதறியிருக்குமிறே. வடிவாலேயணைத்துக் கண்ணாலே குளிர நோக்குகையிலேயிறே கருத்து. (கதிர்மதியம் போல் முகத்தான்) ப்ரதாபத்துக்கும் குளிர்ச்சிக்கும் ஆதித்யனுடைய புகரையூட்டின சந்த்ரனைப்போலே யாய்த்துத் திருமுக மிருக்கும்படி. ப்ரதிகூலர்க்கு அநபிபவநீயனாய் அநுகூலர்க்குக் கிட்டி நின்று அநுபவிக்கலாம்படியிருக்கை. "తత్రగోవిన్దమాసీనంప్రసన్నాదిత్యవర్చసమ్" "ததரொவிந்தமாஸீநம் ப்ரஸந்நாதித்யவர்ச்சஸம்" "(உஅ)என்னக்கடவதிறே. (கதிர்மதியம்போல் முகத்தான்) ப்ரகாஶமுமாய் ஆஹ்லாதகரமுமான முகத்தையுடையவ னென்னவுமாம். (முகத்தான்) அவ்வளவிலும் உபமாநம் நேர் நிற்கமாட்டாமையாலே உபமேயந்தன்னையே சொல்லுகிறது.

(நாராயணனே) கோவர்த்தநோத்தரணாத்யதிமாநுஷ சேஷ்டிதங்களாலே ஸர்வேஶ்வரத்வம் பெண்களுக்கும் தெரியும்படியாயிறே

(அத்திருமேனிக் கித்யாதி.) தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (அகவாயித்யாதி.) மூன்றும் தாத்பர்ய மருளிச் செய்கிறார் (ஐஶ்வர்யத்தாலு மித்யாதி.) இவர்களிப்போது "கார்மேனி" என்றும், "செங்கண்" என்றும் அநுஸந்தித்ததுக்கு ப்ரயோஜநமருளிச்செய்கிறார் (வடிவாலேயித்யாதி.)

புகரையூட்டினவென்றது - தேஜஸ்ஸை யேறிட்டவென்றபடி. ப்ரதிகூலர்க்குக் கிட்ட வரியனாய் அநுகூலர்க்கு எளியனானமைக்கு ப்ரமாண மருளிச் செய்கிறார் (தத்ரேத்யாதி.) "ப்ரஸந்ந" என்றது - சந்த்ரனுடைய தெளிவை யுடையவென்றபடி. "ప్రసాదస్తుప్రసన్నతా" "ப்ரஸாதஸ்து ப்ரஸந்நதா" என்று சந்த்ரனுடைய தெளிவைச் சொல்லிற்றிறே. "கதிர்" என்று - ஸூர்யகிரணங்களாய், அத்தையுடைய சந்த்ரனைப்போலேயென்று - அபூதோபமையாக்கி, அத்தாலே பலிதத்தையு மருளிச்செய்து, "கதிர்" என்று ஸூர்யனாய், "மதி" என்று - சந்த்ரனாய், அவர்களைப்போலே யென்று ஶப்தார்த்தமாய், அத்தாலே தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (ப்ரகாஶமுமித்யாதி.) திருமுக மண்டலத்தை * கதிர்மதியாகவே விவக்ஷித்து, கதிர்மதியுடையவனென் றருளிச்செய்யாமல், உபமாநந்தன்னிலும் பேதந்தோற்ற "முகத்தான்" என்று விஶேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அவ்வளவிலு மித்யாதி.) அவ்வளவிலும் - உபமாநத்தைச் சொன்னவளவிலும். நேர்நிற்கமாட்டாமையாலே யென்றது - பூர்ணஸத்ருஶமாகமாட்டாமையா லென்றபடி. (உபமேயந்தன்னையே சொல்லுகிறது) என்றதுக்கு - உபமாநத்தை யிட்டு மறைத்துச் சொல்லாமல் உபமேயத்தைத்தானே ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறதென்று கருத்து.

இடைப் பெண்கள் க்ருஷ்ணனை ஸர்வேஶ்வர னென்றறிய ஸம்பாவனையில்லாமையாலே யிப்படிஸம்போதிக்கக் கூடுமோ வென்ன; அதுக்குப்பரிஹாரம் மூன்றுவகையாகவருளிச்செய்கிறார் (கோவர்த்தநேத்யாதிவாக்யத்ரயத்தாலே.)

இவ்வவதாரந்தானிருப்பது. தேவதாந்தரங்களை யறியாத கோப வ்ருத்தர்கள் நோன்புக்கு அங்கமாக ஜபிக்கும் மந்த்ரமாக உபதேஶிக் கையாலே சொல்லுகிறார்களென்னவுமாம். இன்னமும், தன்னுடைய தமப்பன்மார் சொல்லவும் கேட்டிருக்குமிறே. "நன்மை தீமைக ளொன்று மறியேன் நாரணனென்னு மித்தனை யல்லால்" என்றும், "நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம்" என்றும், "திண்ணம் நாரணம்" "நாரணனை நன்கறிந்தேன்" என்றும்; இவ் வர்த்தத்திலே ரிஷிகளும் "நாராயணஶப்³த³மாத்ரம்" "நாராயணஶப்³த³மாத்ரம்" (உக) என்றும், "ஏஷ நாராயண: ஶ்ரீமாந்" "ஏஷ நாராயண ஶ்ரீமாந்" (௩௦) என்றும்; ஶ்ருதியும் "நாராயண: பரம் ப்³ரஹ்ம" "நாராயண பரம்ப்³ரஹ்ம" (௩௧) என்றும் பலவிடத்திலும் சொல்லிற்று.

(நாராயணனே நமக்கேபறைதருவான்) ஸர்வஸ்வாமியானவனே நம்முடைய அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணுவான். இத்தலை இசை யாதவன்றும் தான் விடமாட்டாத வாத்ஸல்யம். அவதாரணத்துக்குக் கருத்து – ஸமிதைபாதி ஸாவித்ரிபாதியன்றிக்கே தானே சென்று தலைக்கட்டவல்லனென்கிற ஸாதந நைரபேக்ஷ்யம் சொல்லுகையிலே

(உபதேஶிக்கையாலே சொல்லுகிறார்க ளென்னவுமாம்) என்றதுக்கு - கோப வ்ருத்தர் "நாராயணன்" என்று உபதேஶிக்கும் மந்த்ரப்ரதிபாத்யன் க்ருஷ் ணனே யென்று சொல்லுகையாலே "நாராயணனே" என்கிறார்க ளென்று கருத்து. கோபவ்ருத்தர்க்கு க்ருஷ்ணன்பக்கல் பரத்வ ஜ்ஞாநாஜ்ஞாநங்கள் கலந் திருக்குமென்றது ப்ரமாணஸித்தமிறே. தமப்பன்மார் சொல்லவு மென்றது - க்ருஷ்ணனை ஸர்வேஶ்வரனென்று சொல்லவுமென்றபடி. க்ருஷ்ணன் ஸர்வேஶ் வரனேயாகிலும் திருநாமங்கள் மற்றும் பலவுமுண்டாயிருக்க இத்திருநாமத்தை யருளிச்செய்கைக்கு ஆழ்வார் முதலானோர் ஆதரித்த தென்னுமத்தை நியாமகமா கக் காட்டுகிறார் (நன்மையென்று துடங்கி, சொல்லிற்று என்னுமளவும்.) (நன் கறிந்தேனென்றும்) என்ற வநந்தரம், "ஆழ்வார்களருளிச் செய்தார்கள்" என்று கூட்டிக்கொள்வது.

* நாராயணஶப்தத்துக்கு-தத்புருஷபஹுவ்ரீஹ்யர்த்தங்களை யுட்கொண்டு க்ரமேண ஶப்தார்த்த மருளிச் செய்கிறார் (ஸர்வஸ்வாமியித்யாதி வாக்யத்வயத் தாலே;) பஹுவ்ரீஹ்யர்த்தமான அந்தர்யாமித்வத்துக்கு வாத்ஸல்யம்ஹேது வென்றுகண்டுகொள்வது. (கருத்து) என்ற வநந்தரம், "என்னென்னில்" என்று ஶேஷம். ப்ரம்ஹசாரிகளுக்கு ஆயிரம் ஸமிதையும் ஆயிரம் ஸாவித்ரியுமாகக் கூட்டி ஒருப்ரத்யவாயபரிஹாராதியாக பலத்தையுண்டாக்குமாப்போலே யன்றி க்கே நிரபேக்ஷனாகவே பலத்தைக் கொடுக்குமென் றருளிச்செய்கிறார் (ஸமிதை யித்யாதி.) "நமக்கே" என்று நிரபேக்ஷனாக பலங் கொடுக்கு மென்று நிஶ்ச யிக்கக்கூடுமோ, நாராயணத்வம் ஸர்வஸாதாரணமன்றோ வென்னும் ஶங்கையை

நோக்கு. நாராயணத்வம் ஸர்வஸாதாரணமன்றேவென்னில்(நமக்கே) "அத்தலையாலேபேறு" என்றிருக்கிற நமக் கென்றபடி. அகிஞ்சநராய் அவன்கைபார்த்திருக்கிற நமக்கேயென்றுமாம். (பறைதருவான்) நாட்டுக்கு"பறை" என்று-ஒரு வ்யாஜமாய், தங்களுக்கு அபிமதமான அடிமையாய்த்து நினைக்கிறது. இத்தை ஸாதித்துத் தருவாரா ரென்னில்; இவர்கள்தாங்களேயிறே: "இற்றைப்பறை கொள்வா னன்று காண்" என்று மேலேசொன்னார்கள். (தருவான்) ப்ராப்தியுண்டானாலும் அவன்தரக் கொள்ளவேணுமென்னுமிடம் தோற்றுகிறது.

(பாரோர்புகழ)க்ருஷ்ணனையும்நம்மையும்சேரவொட்டாதவர்கள் தாங்களே கொண்டாடும்படி. க்ருஷ்ணன் வேண்டும் உபகரணங்கள் கொடுக்க, பெண்கள் நோன்பிலே உபக்ரமித்தார்கள். நாடடங்க, அநாவ்ருஷ்டிதீர்ந்து ஸம்ருத்தமாய்த்ததென்றுகொண்டாடும்படி.(படிந்து) இந்நோன்பிலே அவகாஹித்து, "நீராடப்போதுவீர்! போதுமினோ"

யநுவதிக்கிறார் (நாராயணத்வமித்யாதி.) அவனாலேதானேபேறு, வேறு ரக்ஷகராலேயல்லவென்று அநந்யகதிகளாயிருக்கும் நமக்கே யென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, ப்ரஸ்துதஶங்கைக்குப் பரிஹார மருளிச்செய்கிறார் (அத்தலையித்யாதி.) உபாயாந்தரஶூந்யமென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம் பற்றி பரிஹாராந்தர மருளிச்செய்கிறார் (அகிஞ்சநரித்யாதி.) யத்வா, ஶக்தியுண்டாயிருக்க ஸ்வரூபவிருத்தமென்று உபாயாந்தரஶூந்யரான நமக்கே யென்று-(அத்தலையாலே) என்ற வாக்யத்துக்குக் கருத்து. ஶக்தியின்றிக்கே அவன் கை பார்த்திருக்கையேயென்றிரண்டாம் வாக்யத்துக்குத் தாத்பர்யமென்றுமாம். "பறை" என்ற ஶப்தம் வாத்யவிஶேஷ வாசகமாயிருக்க, அடிமையைச் சொல்லுமதென்னு மிவ்வர்த்தத்துக்கு ஸாதகமேதென்று ஶங்கித்துப் பரிஹரிக்கிறார் (இத்தையித்யாதி.) நாராயணன்பக்கல் நாமே பறைகொள்ளுவோ மென்னாதே, "தருவான்" என்று தததீநமாகச் சொல்லுகையாலே தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் (ப்ராப்தியித்யாதி.)

பாருக்கெல்லாமான வ்ருஷ்டியில்லாமையாலே வர்ஷித்தால் பாரெல்லாங் கொண்டாட ப்ரஸக்தியில்லாமையாலும், சேரவொட்டாதவர்கள்புகழே யிவர்களுக்கு பரமோத்தேஶ்யமாயிருக்கையாலும், "பாரோர்" என்றதுக்கு - கோபவ்ருத்தர்பரமாக அர்த்தமருளிச்செய்கிறார் (க்ருஷ்ணனையுமித்யாதி.) "படிந்து" என்றதுக்கு அர்த்தமருளிச்செய்துகொண்டு அந்வயங் காட்டுகிறார் (இந்நோன்பிலே யித்யாதி.)

"திங்கள் - மார்கழி, நாள்-மதிநிறைந்தநாள், ஆல் - ஆஶ்சர்யம்; பாரோர் புகழப் படிந்து-நீராடப்போதுவீர் போதுமினோ, நேரிழையீரான சீர்மல்குமாய்ப்பாடிச்செல்வச் சிறுமீர்காளித்யாதி, நாராயணனே நமக்கே, எம்பாவாய் - எங்கள் நோன்பைப் பின்சென்று, எங்கள் வார்த்தையைப் பின்சென்று, பறை

என்று அங்வயம். (ஏல், ஓர்) பாதத்தைப்பூரித்துக் கிடக்கிறது. (எம் பாவாய்) எங்கள் நோன்பென்னுதல்; எங்கள் சந்தஸ்ஸென்னுதல். க

தருவான்" என்று ப்ராதாந்யேந காலத்தைக்கொண்டாடுகிற பக்ஷத்திலே அந்வயம்: சிறுமீர்காளென்னுமளவும் ப்ராப்யஸங்க்ரஹமென்றபக்ஷத்தில், நேரிழையீரான செல்வச்சிறுமீர்காள்! திங்கள் - மார்கழி, நாள்-மதிநிறைந்தநாள், ஆல், பாரோர்புகழப்படிந்து - நீராடப்போதுவீர் போதுமினோ, கூர்வேலித்யாதி; நாராயணனே நமக்கே - எம்பாவாய் - பறைதருவான்" என்றந்வயம். இப்பக்ஷத்வயத்திலும் "ஏல், ஓர்" என்றது - நிரர்த்தகாவ்யயம், சந்தஸ்ஸென்றது - உபலக்ஷணயா வார்த்தையென்றபடி.

வ்யாக்யாநாந்தரங்களில் நிர்வஹிக்கும் ப்ரகாரம்—(ஏல்) என்றது - இப்படியாகிலென்றபடி. (ஏல்) என்று - ஸம்போதநமாகவுமாம். (ஓர்) புத்திபண்ணுங்கோளென்னுதல்; புத்திபண்ணென்னுதல். எம்பாவாய்- எங்கள் சந்தாநுவ்ருத்தி பண்ணியென்னுதல்; * தையொருதிங்களில் காமஸமாஶ்ரயணம் பண்ணுகையாலே, பாவையென்று-அவனகமுடையாளான ரதியைச்சொல்லுதல். "பாவாய்" என்றதுக்கு-சந்தாநுவ்ர்த்தி அர்த்தமானபோது, "போதுமினோ," ஏல் - இப்படியாகில், நாராயணனே! எம்பாவாய் - நமக்கே பறைதருவான், இத்தை ஒருங்கோள்-விசாரித்துக்கொள்ளுங்கோளென்றந்வயம். ரதிபரமானபோது, "ஏல் - பாவாய்-ஓர்" என்றந்வயம். அங்ஙனுமன்றிக்கே, "ஏல், ஓர், எம்பாவாய்" என்ற பதங்களெல்லாம் பாதபூரணமென்று நிர்வஹித்தகட்டளை யநுஸந்திப்பது....க

ஸத்தஸத்த்வம் தொட்டாசார்யரருளிச்செய்த

திருப்பாவை ஸ்வாபதேஶவ்யாக்யாநம்.

அவதாரிகை.— (மார்கழியித்யாதி) இப்பாட்டில் – அதிகாரி ஸ்வரூபத்தையும், உபாய ஸ்வரூபத்தையும், உபேய ஸ்வரூபத்தையும் ஸங்க்ரஹித்து, இந்நோன்புக்குக் காலம் நேர்பட்ட படியைக் கொண்டாடுகிறார்கள்.

வ்யாக்யாநம்.— (மார்கழியித்யாதி) ஸத்வோத்தரமான காலத்திலே ஸதாசார்ய ப்ரஸாதமடியாக ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநம் பரிபூர்ணமாய், இச்சேதநன் பகவத்விஷயீகார பாத்ரபூதமான திவஸத்திலே தங்களுக்கு பகவத் கைங்கர்யத்தில் ருசிபிறந்த வின்று மங்களகார்யம் செய்யு மவர்களுக்குத் தேட்டமான காலம் தன்னடையே நேர்பட்டபடியைக்கண்டு ஆஶ்சர்யப்படுகிறார்கள்.

(நீராடப்போதுவீர்) பகவத்கைங்கர்யம் பண்ணப்போருகையிலே ருசியையுடையவர்களாய்; (நேரிழையீர்) இதுக்குத் தகுதியானஜ்ஞாந பக்தி வைராக்யங்களை யுடையராய்; (சீர்மல்குமித்யாதி) எம்பெருமானுடையக்ருபா க்ஷமாதி கல்யாண குணங்கள் தந்தாம் விஷயங்களிலே சேர்ந்து பொங்கி, பரமபதத்தளவும் சென்று அலை யெறியும்படி அபிவ்ருத்தமாகா நின்றுள்ளதாய், ஜ்ஞாந ஜந்மாக்கள் ஸாதரமாக வர்த்தியாநின்றுள்ள வூரிலே பகவத்ஸம்பந்தமுடையராய், தததுபவ பரிகரமான அபிநிவேஶாதிஶயத்தை யுடையராய் அநந்யார்ஹரான வர்கள்; (நீராட - போதுமினோ) பகவத் கைங்கர்யம் பண்ணவாருங்கோள். "ஆயர்" என்னுங்காட்டில் ஜ்ஞாந ஜந்மாக்களைக் காட்டுமோ வென்னில்; லோகத்தில் ஆயர் பகவதேகபரரா யிருக்குமாப்போலே ஜ்ஞாநஜந்ம முடையவர்களும் பகவதேகபர ராகையாலே த்ருஷ்டாந்த விதையாகக் காட்டும்.

"சிறுமீர்காள்" என்று - ஸ்த்ரீத்வேந நிர்த்தேஶம், அநந்யார்ஹத்வ த்யோதநார்த்தம். ‡ஶரீரஜந்மமான ஆயருக்கு ப்ரக்ருதிஸம்பந்தத்தாலே அந்யபரதை யுண்டாகைக்கு யோக்யதை யுண்டு; ஆகையாலே, உபாயாந்தரஸம்ஸர்க்க யோக்யதாகந்த ரஹிதமான விலக்ஷண ஜந்மம் ஜ்ஞாநஜந்மமேயா மித்தனையல்லது அத்ரைவர்ணிக ஜந்மமன்று; அஜ்ஜந்மந் தன்னிலும் சிலரை உபாயாந்தரபரராகவும் உபேயாந்தர பரராகவும் தேவதாந்தர பரராகவும் காணாநின்றோமிறே; ஜ்ஞாந ஜந்மந்தன்னில் அப்படிகாண விரகில்லையிறே. ஆகையால், நம்மாசார்யர்கள், உத்க்ருஷ்ட ஜந்ம மென்கிறது - ஜ்ஞாநஜந்மமே யென்று கொள்ளவேணும்.

இப்படி நாம் கனக்கப்பாரித்துக்கொண்டு போங்காட்டில் நமக்கு அப்புருஷார்த்தம் ஸித்திக்குமோ வென்ன (கூர்வேலித்யாதி) கூரியதாய் ஸர்வாநிஷ்ட நிவர்த்தகமானமங்களாஶாஸநத்தை யுடையராய், அல்பாமங்களஸம்பாவனையிலும் அதிஶயித மங்களாஶாஸந பரராய், பகவல்லாபத்தாலே களித்து, பகவத்விஷயத்தை அசலறியாதபடி ரக்ஷித்துக்கொண்டு போருகிற ஆசார்ய விஷயத்தில் தன்னுடைய நியாம்யதை தோற்றும்படி யிருக்குமவனாய்.

"கண்" என்று - ஜ்ஞாநமாய், அதுக்குக் கூர்மையாவது - வஸ்துவை உள்ளபடி க்ரஹிக்கையாய், அத்தாலே - பூர்ணமான ஜ்ஞாநத்துக்கு ப்ரகாஶகமாய் தன்னை யநுஸந்திப்பார்க்கு ஆபிஜாத்யாதி

‡ "ஶரீரஜந்மாக்களான" என்று சில ஸ்ரீகோஶங்கள்.

ஸகலாதிஶயப்ரதமான திருமந்த்ரத்திலே தன்னுடைய ஸகலகாரணத்வாத்யதிஶயங்களெல்லாம் ப்ரகாஶிக்குமவனாய். "மந்த்ரமாதா" "ஜ்ஞாநதா" என்னக்கடவதிறே. இம்மந்த்ரந்தானும் ஸமஸ்த கல்யாண குணாத்மகனான எம்பெருமானைத் தன்னுடைய கர்ப்பத்திலே வைத்துக்கொண்டு எல்லாருமறியலாம்படி ப்ரகாஶிப்பிக்கையாலே இம்மந்த்ரத்தை "மாதா" என்னக் குறையில்லை. ஆஶ்ரித ஸகலதாப நிவர்த்தகமாய், பரமோதாரமான திருமேனியை யுடையனாய். இத்தால் — உபாயக்ருத்யஞ் சொல்லுகிறது. அன்றிக்கே, "கார்மேனி" என்று-மேகம்போலே தர்ஶநீயமான திருமேனியையுடையவனென்று அழகைச் சொல்லுகையாலே — உபேயத்வம் சொல்லிற்றாகவுமாம். அத்திருமேனிக்கு பரபாகஶோபாவஹமாய், அகவாயில் வாத்ஸல்ய ப்ரகாஶகமாயும் பரத்வப்ரகாஶகமாயு மிருந்துள்ள சிவந்ததிருக்கண் மலர்களையுடையனாய். "கார்மேனி" என்கையாலே - ஸௌலப்ய ஸௌஶீல்யங்களும், "செங்கண்" என்கையாலே-வாத்ஸல்யஸ்வாமித்வங்களும் தோற்றுகையாலே, ஆஶ்ரயண ஸௌகர்யாபாதக குணசதுஷ்டயமும் சொல்லிற்றாய்த்து.

(கதிர்மதியமித்யாதி) ஸூர்யகிரணங்களையுடைய மதியம்போலே யிருக்கிற திருமுகமண்டலத்தை யுடையனாய். இத்தால் — அநுகூலர்க்கு அணுகலாம்படி யிருக்கையும் ப்ரதிகூலர்க்கு அணுகவொண்ணாதபடி யிருக்கையும் தோற்றுகையாலே, அநபிபவநீயத்வம் ஶக்திகார்யமாகையாலே ஆஶ்ரிதகார்யாபாதக குணசதுஷ்டயமும் சொல்லிற்றாய்த்து. இப்படி ஆசார்யபவ்யத்வாதி குணங்களையும், வாத்ஸல்யாதி குணங்களையும், ஜ்ஞாநஶக்த்யாதி குணங்களையு முடையனான நாராயணனே. (நமக்கே) ஸஹாயாந்தர நிரபேக்ஷமாக அவனாலே புருஷார்த்தமென்றிருக்கிற நமக்கே. "நமக்கே" என்கிறவிடத்தில் ஏவகாரத்தாலே - உபாயாந்தரங்களையும் தன்னையும் உபாயமாகப் பற்றினவர்களுக்கு ஈஶ்வரன் கர்மாநுகுணமாக பலங்கொடுப்பானத்தனையல்லது க்ருபாநுகுணமாக பலங்கொடானென்னுமிடம் தோற்றுகிறது,

(பறைதருவானித்யாதி) புருஷார்த்தத்தைக் கொடுப்பான். ஆகையாலே பூமிப்பரப்பிலுள்ள லௌகிக பரமவைதிகரெல்லாரும் கொண்டாடும்படி இந்நோன்பிலே அவகாஹித்து - நீராடப்போதுமினோ என்றந்வயம். காமநாதிகாரிகளுக்கு ஸாதநமாயும், நிஷ்காமருக்கு நித்யமாயும், பகவத்ப்ரபந்நர்க்கு கைங்கர்யமாயும்போருகிற

இந்நோன்பிலே பகவதநுபவைகாந்தம் என்று அத்யவஸித்து, ஶ்ரத்தாபூர்வகமாக யதாவிதாநமநுஷ்டித்தால், லௌகிக வைதிக பரம வைதிகர்களுடைய கொண்டாட்டம் தன்னடையே ஸித்திக்குமிறே. "யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே" "யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே" என்னக்கடவதிறே.

இப்பாட்டில் "ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்" "ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்" என்கிறபடியே க்ரீஷ்மகாலத்தில் ஸூர்யகிரண தப்தனானவன் தன் தாபமாறும்படி குளிர்ந்த மடுவிலே நாமரூபவிபாகாநர்ஹனாம்படி ப்ரவேஶிக்குமாப்போலே, ஸம்ஸாரதாபார்த்தனான நான் அந்த தாபமாறும்படி ஸமஸ்த கல்யாணகுணாத்மகனான ஸ்ரீமந்நாராயணனை, அவனையொழிய ப்ருதக்ஸ்த்திதியுபலப்தி யில்லாதபடி ப்ரவேஶித்து ஸ்வஸத்தையை லபித்தேன் என்று ப்ரம்ஹாநுபவத்துக்கு நீராட்டத்தை த்ருஷ்டாந்தமாகச் சொல்லுகையாலே, "நீராட" என்று - ப்ராப்யத்தை ஸங்க்ரஹித்தார்கள். "நீராடப்போதுவீர்" என்று - இப்புருஷார்த்தத்துக்கு இதில் இச்சையையுடையவர்களே அதிகாரிகள் என்று அதிகாரியை ஸங்க்ரஹித்தார்கள். "நாராயணனே" என்று - ப்ராபகத்தை ஸங்க்ரஹித்தார்கள். "நமக்கே" என்று - உபாயாதிகாரியை ஸங்க்ரஹித்தார்கள். இத்தால் - உபாயாந்தர நிவ்ருத்திபூர்வகமாக அவனையே உபாயமாகப் பற்றுகை அதிகாரமென்றதாய்த்து. ... ...(௧)

அ.—இரண்டாம்பாட்டு. க்ருத்யாக்ருத்ய விவேகம்பண்ணுகிறது, இதரவிஷயங்களில் விடப்படுமவை விடவும் அரிதாயிருக்கும்; பற்றப்படுமவை பற்றவுமரிதாயுருக்கும். அதுக்கடி - இவனுடைய கர்மாநுகுணமாக நன்றாயும் தீதாயுந்தோற்றுகிற வித்தனைபோக்கி, ஸ்வதஃ விஷயத்தைப்பற்றி வருவதொருநன்மையும் தீமையுமில்லை. எங்ஙனேயென்னில்; ஒருநாள் ஒருவன் ஒன்றையாதரித்து, அவன்றானே, பின்பு சிலநாள் சென்றவாறே அதுதன்னையே உபேக்ஷியாநின்றான்;

இரண்டாம்பாட்டு.—(வையத்து) ஸ்வாபதேஶத்திலே தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார்(க்ருத்யேத்யாதி.) க்ருத்யமாவது-பரமனடிபாடுகை முதலானவை; அக்ருத்யமாவது-நெய்யுண்ணோம்" "இத்யாதியிற் சொல்லுகிற போக்யாந்தராந்வயம் முதலானவை. க்ருத்யாக்ருத்யவிவேகம் பண்ணுகை யரிதன்றோ என்னும் ஶங்கையில்;இதரவிஷயங்கள் போக்யங்களாகையாலே அங்கே அரிதாமித்தனை போக்கி, பரமபோக்யமான பகவத்விஷயத்தைப்பற்றி யிருக்குமவனுக்குப் பற்றுகையும் விடுகையும் ஸுகரமென்று உபபாதிக்கிறார் (இதரேத்யாதி.)

முன்பு உபேக்ஷித்ததுதன்னையே பின்பு ஒருநாளிலே ஆதரிப்பதும் செய்யாநின்றான்; ஆகையால், இவனுடைய கர்மமடியாக நன்றாயும் தீதாயும் தோற்றுகிற வித்தனைபோக்கி, விஷயத்தைப்பற்ற வரில் என்றும் ஒருபடிப்பட்டிருக்கவேணும்; அதில்லாமையால் புறம்புள்ளவை விடவும் அரிது, விடுகிறவற்றுக்கும் பற்றுகிறவற்றுக்கும் வாசிதெரிவிக்க வரிதாகையாலே. இங்ஙனன்றியே, அல்பமுமாய் அஸ்த்திரமுமாய் ஹேயமுமாயிருக்கிற விஷயங்களைவிட்டு *ஸமஸ்தகல்யாண குணாத்மகனைப்பற்றுகையாலே, விடுகையும் பற்றுகையு மிரண்டுமெளிதாயிருக்கும்.

கீழிற்பாட்டில் - ப்ராப்யஸ்வரூபத்தையும் ப்ராபகஸ்வரூபத்தையும் அதிகாரிஸ்வரூபத்தையும் சொல்லிற்று; இதில் - அந்த அதிகாரிக்கு ஸம்பாவித ஸ்வபாவங்களைச்சொல்லுகிறது.

மூ.—வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ; பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி
உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய்.

பதம்	உரை.
	ஸர்வேஶ்வரன் க்ருஷ்ணனாய்த் திருவவதரித்தகாலத்திலே
வையத்து	பூமியில்
வாழ்வீர்காள்!	வாழப்பிறந்தவர்களே!
பாற்கடலுள்	திருப்பாற்கடலில்

(அதில்லாமையால் - விடுகிறவற்றுக்கும் பற்றுகிறவற்றுக்கும் வாசிதெரிவிக்கவரிதாகையாலே - புறம்புள்ளவை விடவுமரிது பற்றவுமரிது) என்று அந்வயித்துக்கொள்வது. தெரிவிக்கவென்றது - தெரியவென்றபடி.

இவ்வதிகாரிக்கு இச்சைக்குமேற்பட க்ருத்யாக்ருத்யங்களுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (கீழிற்பாட்டிலித்யாதி). (அதிகாரிஸ்வரூபத்தையும் சொல்லிற்று) என்று இங்கே கூட்டுகையாலே, முதற்பாட்டில் (ப்ராப்யப்ராபகஸங்க்ரஹம்) என்றது இதுக்கு முபலக்ஷணமென்று கண்டுகொள்வது. இவ்வதிகாரிக்கு அவன் குணங்களை அநுஸந்தித்தால் அடிபாடுகை முதலானவையெல்லாம் அவர்ஜநீயங்களாய் வருமென்று - (ஸம்பாவிதஸ்வபாவங்களை) என்றதுக்குக்கருத்து.

பைய	மெள்ள
துயின்ற	கண்வளர்ந்தருளுகிற
பரமன்	ஸர்வஸ்மாத்பரனுடைய
அடி	திருவடிகளை
பாடி	ப்ரீதிப்ரேரிதைகளாய்ப்பாடி ;

அவன் வருமளவும் ;

நாம்	நாங்கள்
நெய் உண்ணோம்	நெய் புஜியாதவர்களாயும்
பால் உண்ணோம்	பால் அமுதுசெய்யாதவர்களாயும்

உபவாஸக்ருஶைகளாய்,

நாட்காலே	விடியற்காலத்தில்
நீராடி	ஸ்நாநஞ்செய்து
மைஇட்டு எழுதோம்	கண்களை அஞ்ஜநங்கொண்டு அலங்கரியாதவர்களாய்,
மலர் இட்டு	நல்லவாஸனையுள்ள பூக்களைக்கொண்டு
முடியோம்	குழலில் தரியாதவர்களாய்,
செய்யாதன	முன்னோர்கள் அநுஷ்டியாதவற்றை
செய்யோம்	செய்யாதவர்களாய்,
தீ	அநர்த்தத்தை விளைவிக்கத்தக்க
குறளை	பொய்யான வார்த்தைகளை
சென்று	ஒருவரிடம்போய்
ஓதோம்	சொல்லாதவர்களாய்,
ஐயமும்	யோக்யவிஷயத்தில் கொடுக்கும்பொருளையும்
பிச்சையும்	ப்ரம்ஹசாரிகளுக்கும் ஸந்யாஸிகளுக்கும்கொடுக்கும் பிக்ஷையையும்
ஆந்தனையும்	இனி அர்த்திகளில்லையென்னுமளவும்
கைகாட்டி	கொடுத்து,

இப்படிகளாலே

உய்யும் ஆறு	உஜ்ஜீவிக்கும் வழியை
எண்ணி	மநோரதித்து
உகந்து	ஸந்துஷ்டசித்தராய்க்கொண்டு
நாமும்	"அவனாலேபேறு" என்றிருக்கும் நாங்களும்
நம்பாவைக்கு	நம்முடைய நோன்புக்கு
செய்யும்	பண்ணுகிற
கிரிசைகள்	க்ருத்யங்களை
கேளீர்.	கேளுங்கோள் என்கிறார்கள்.

எல், ஓர், எம்பாவாய்—அசைகள்

வ்யா.—(வையத்துவாழ்வீர்காள்) ஸர்வேஶ்வரன் திருவாய்ப்பாடியிலே க்ருஷ்ணனுய்வந்து திருவவதரித்துத் தன்னைத் தாழவிட்டுப் பரிமாறுகிறகாலத்திலே வாழப்பிறந்த பாக்யவதிகாள்! இங்குத்தை வாழ்ச்சிக்கு பரமபதமும் ஸத்ருஶமன்று. அங்கு மேன்மை காணலாமித்தனைபோக்கி, நீர்மைகண்டு அநுபவிக்கலாம்படியிருப்பது இங்கேயிறே. அங்கு, போக்தாக்கள் அஸங்குசிதராயிருப்பர்கள்; இங்கு, போக்யம் அஸங்குசிதமாயிருக்கும். * தயநீயருண்டான இடத்திலேயிறே தயாதிகுணங்கள் அநுபவிக்கலாவது; அங்கு விஷயமில்லாமையாலே தயாதி குணங்கள் ப்ரகாஶிக்கப்பெறுதே: அக்குறை தீருகைக்காகவிறே நித்யஸூரிகள் இங்கேவந்து அநுபவிக்கிறது. அவதாரத்தில் நீர்மையிலே யகப்பட்டார்க்கும் மற்றோரிடம் பெருதபடியாயிருக்கும். "భావో నాన్యత్ర గచ్ఛతి" "ஹாவொ நாந்யத்ர கச்சதி" (கஉ)என்றுனிறே திருவடி. "அச்சுவைபெறினும் வேண்டேன்" என்றுரு முண்டிறே. "கண்டகண்கள் மற்றொன்றினைக் காணுவே" என்றுரிறே. அதவா, மறுபூமியில் தண்ணீர்போலே * இருள்தருமாஞாலமான ஸம்ஸாரத்திலே யிருந்து வைத்து க்ருஷ்ணுநுபவம் பண்ணி வாழப்பிறந்தீர்காளென்றுமாம். (வாழ்வீர்காள்) அவ்வூர் தன்னில் பிறந்துவைத்துப் பருவம்நிரம்பியிருக்கையன்றிக்கே, அவனுடைய கடாக்ஷத்துக்கு இலக்காம்படி ஒத்த பருவமாயிருக்கை.

வையத்திலே - திருவாய்ப்பாடியிலே, வாழ்வை யுடையவர்களென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, அர்த்தஸித்தமான ஹேதுக்களைக்கூட்டித் தாத்பர்ய மருளிச்செய்கிருர் (ஸர்வேஶ்வரனித்யாதி.) "வாழ்வீர்காள்!" என்றவிடம் - பெண்களை ஸம்போதிக்கும்போது க்ருஷ்ணனவதரித்ததேஶத்தில் வாழ்ச்சியிதுவென்று ஸித்தமாயிருக்க, "வையத்து" என்று விஶேஷிப்பானென்னென்னவருளிச்செய்கிருர் (இங்குத்தையித்யாதி;) பரமபதத்தில் வாழ்ச்சியிலும் வையத்துவாழ்ச்சி விஞ்சினது என்று தோற்றுகைக்காக "வையத்து" என்று விஶேஷித்ததென்று, கருத்து. விஞ்சினமையை உபபாதிக்கிருர் (தயநீயரித்யாதி வாக்யத்வயத்தலே.) இவ்விடத்தில் வாழ்ச்சிவிஞ்சியிருக்கு மென்றதுக்கு நியாமகங்களைப் பலபடியாகக் காட்டுகிருர் (அக்குறையித்யாதி.) நீர்மையிலே யென்றது - தயாதிகுணங்களுக்கு முபலக்ஷணம். ஆதிஶப்தத்தாலே - வீர்யகுணத்தை விவக்ஷித்தருளிச்செய்கிருர் (ஹாவஇத்யாதி;) "భక్తిశ్చనియతా వీర భావో నాన్యత్ర" "ஹக்திஶ்ச நியதாவீர ஹாவொ நாந்யத்ர" என்றுனிறேயென்று கருத்து. வையத்துக்குண்டான பகவதநுபவ விரோதித்வத்தைத் திருவுள்ளம்பற்றி, "வையத்து" என்று விஶேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச் செய்கிருர் (அவ்வூர்தன்னிலித்யாதி.) உக்தார்த்தங்களை வ்யாவ்ருத்தி

க்ருஷ்ணாவதாரத்துக்கு முன்னாதல் பின்னாதலன்றிக்கே ஸமகாலத்திலே பிறக்கப்பெறுவதாம்; அதுதன்னிலும் இவ்வூரையொழிந்தவிடத்தேயன்றியே இவ்வூரிலே பிறக்கப்பெறுவதாம்; அதுதன்னிலும் அவனோடொத்த பருவமாகப் பெறுவதாம்; இதொருபாக்யாதிஶயமிருக்கும்படியென்!. (வாழ்வீர்காள்) அவ்வூரில் வர்த்தநமென்றும் வாழ்ச்சியென்றும் இரண்டில்லைகாணும். அவன் நித்யவாஸம் பண்ணுமிடத்தில் வர்த்தநமே வாழ்ச்சியாயிருக்குமிறே. "வேங்கடத்தைப்பதியாக வாழ்வீர்காள்" என்னக்கடவதிறே, இது கோயிலில் வர்த்தநம்போலே காணும். சொல்லுகிற தங்களுக்கும் வாழ்ச்சி ஒத்திருக்க, "வாழ்வீர்காள்" என்று பிறரைச் சொல்லுகிறதென்னென்னில்; தாங்கள் தனியே அநுபவிக்குமநுபவம் ரஸாநுபவமாய்த் தோற்றாமையாலே, அத்தை ரஸமாக்கித் தருமவர்களைக் கொண்டாடுகிறார்கள்.

(நாமும்) "அத்தலையாலே பேறு" என்றிருக்கிற நாமும் அவனாலே பேறாகிலும் ருசி இருந்தவிடத்திலிருக்கவொட்டாதிறே; இந்த பலம் ஒருநாள் வரையிலே கைவந்ததாகவற்றே! என்றிருக்கிற நாமுமென்னவுமாம். (நம்பாவைக்கு) நம்முடைய நோன்புக்கு. அவனையும் அவனுடையாரையும் அழிக்கைக்குப் பண்ணும் இந்த்ரஜித்ப்ரப்ருதிகளுடைய யாகம்போலன்றியே, ததீயரும் அவனும் வாழுகைக்குப் பண்ணும் யாகம். ப்ரயோஜநாந்தரபரமான நோன்பன்றியே, க்ருஷ்

பூர்வக மநுஸந்தியாநின்றுகொண்டு வ்யாக்யாதா ஈடுபடுகிறார் (க்ருஷ்ணாவதாரத்துக்கித்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே.) ஒத்தபருவமாய்ப் பிறந்தவன் போகத்துக்கிலக்காமளவும் வேண்டாவிறே, அவன்பிறந்த வூரிலிருப்பே வாழ்ச்சியென்னவமையுமென்று விவக்ஷித்து, தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (அவ்வூரிலித்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே.)

"நாமும்" என்றதுக்கு இரண்டர்த்தம் - "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்று உபாயாத்யவஸாயத்தை யுடைத்தான நாமுமென்றும், உபேயத்வராவிஶிஷ்டரென்றும். முந்தினது (அத்தலையாலேயித்யாதி.) இரண்டாவது (அவனாலேயித்யாதி வாக்யத்வயம்.)

"பாவைக்கு" என்னவமைந்திருக்க, "நம்" என்று விஶேஷித்ததுக்குத் தாத்பர்யம் (அவனையுமித்யாதி.) ப்ரப்ருதிகளென்றது - பௌண்ட்ரக வாஸுதேவாதிகளைச் சொல்லுகிறது. அவனிறே க்ருஷ்ணனையும் த்வாரகையையும் நலிகைக்காக யாகம்பண்ணி க்ர்த்யையைப் பிறப்பித்தான். கீழே "நம்" என்றதுக்கு - பகவத்விரோதி வ்யாவ்ருத்திபரமாக ஒருயோஜனை யருளிச்செய்து, ப்ரயோஜநாந்தரபர வ்யாவ்ருத்திபரமாக தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ப்ரயோஜ

ணனும் க்ருஷ்ணவிபூதியும் உண்டாகைக்குப் பண்ணுகிறநோன்பு. (செய்யுங்கிரிசைகள்) பண்ணக்கடவ க்ருத்யங்கள். சேதநனுகையாலே ப்ராப்யஸித்தியளவும் காலக்ஷேபத்துக்காக இழிந்து அநுபவிக்கக்கடவ அநுஷ்ட்டாநமென்றபடி. ஆரம்பித்துத் தவிருமவையல்ல; பத்தும் பத்தாகச்செய்தறவேணும்; மடல்போல காட்டிவிடுமதல்ல.

(கேளீரோ) "'பெண்கள்கிடாய், க்ருஷ்ணன்கிடாய்' என்று, நிஷேதிக்கிறவூரிலே இங்ஙனே யொருசேர்த்தியுண்டாவதே!, பகவத்விமுகர் கோலாஹலத்திலே க்ருஷ்ணுநுபவத்துக்கு இத்தனைபேருண்டாவதே!" என்று அவர்கள் இந்த லாபாநுஸந்தாநத்தாலே ஸ்தப்தைகளாயிருக்கையாலே "கேளீரோ" என்கிருர்கள். மேய்ச்சல் தலையிலே அசையிடுவாருண்டோ. இந்த நாலுநாளும்போனல் நம்மை ஒருவரை யொருவர் சேர வொட்டுவர்களோ. (கேளீரோ) "సంశ్రవేమధురంవాక్యమ్" "«ஸம்ஶ்ரவே மதுரம் வாக்யம்" (௩௩)என்னும்படியே ஶ்ரவணந்தானே ப்ரயோஜநமாயிருக்கிறபடி. (கேளீரோ) పురుషార్థోయమేవైకోయత్కథాశ్రవణంహరేః" «புருஷார்த்தோயமேவைகோ

நேத்யாதி.) உண்டாகையாவது - பெண்களையுமவனையு மெழுப்பிக் கூட்டிப் பேரோலக்கத்திலே யிருத்திக்காண்கை.

ஸித்தஸாதந நிஷ்ட்டனுக்கு கர்த்தவ்யமுண்டோவென்ன வருளிச்செய்கிருர் (சேதநனுகையாலே யித்யாதி.) காலக்ஷேபார்த்தமாகச் செய்கிற க்ரியைகளென்று கீழருளிச்செய்து, "செய்யும்" என்றதுக்கு - அவஶ்யம் செய்யத்தக்கதென்று விவக்ஷித்து தாத்பர்ய மருளிச்செய்கிருர் (ஆரம்பித்தித்யாதிவாக்ய த்ரயத்தாலே.) "வாழ்வீர்காள்!" என்று ஸம்போதித்து, "செய்யும் கிரிசைகள்" என்னவமைந்திருக்க, (கேளீரோ") என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிருர் (பெண்கள் கிடாயித்யாதி;) "க்ருஷ்ணனோட்டைச் சேர்த்தி தங்களுக்குண்டாவதே!" என்றும் "க்ருஷ்ணுநுபவத்துக்கு இத்தனைபேர் துணையுண்டாவதே!" என்றும் பரவஶைகளாயிருக்கையாலே, கேளீரோ என்கிருர்களென்று கருத்து. "கேளீரோ" என்றதுக்கு ஹார்த்தபாவத்தை யருளிச்செய்கிருர் (மேய்ச்சல் தலையிலேயித்யாதி.) மேய்ச்சல் தலையென்றது - க்ருஷ்ணஸம்ஶ்லேஷம் பண்ணும்காலம். அசையிடுகை - ஸ்தப்தைகளாயிருக்கை. "கேளீரோ" என்கிறதென்று தாத்பர்யாந்தர மருளிச்செய்கிருர் (ஸம்ஶ்ரவேத்யாதி.) ஸம்வாதாந்தர மருளிச்செய்கிருர் (புருஷார்த்தஇத்யாதி;) அதாவது-மஹாபாரதத்திலே ஸபாதலக்ஷக்ரந்தத்தாலும் தர்மார்த்த காம மோக்ஷங்களைச்சொல்ல, இவற்றிலெது புருஷார்த்தமென்றிருந்தாய்? என்று வைஶம்பாயநபகவான் தன் ஶிஷ்யனுன ஜனமேஜயனைக்கேட்க; "நீ பகவத்குணங்களைச் சொல்ல நான் கேட்கை

யத்தயாஸ்ரவணம்ஹரெஃ" (கூச) என்றானிறே. சொல்லுகிறவர்கள் தான், ஆசார்யபதம் நிர்வஹிக்கைக்காகச் சொல்லுகிறார்களல்லர்; கேட்கிறவர்கள், தங்களுக்கு அஜ்ஞாதமாய்க் கேட்கிறார்களல்லர். "போதயந்த பரஸ்பரம்" "ரெமயயஞஃவரஸாமரழ" (கூரு) என்று இங்ஙனே யல்லது போதுபோகாமலிருந்தபடி.

எங்களுக்கு ஏதானுல் நல்லது, ஆகில் சொல்லலாகாதோவென்ன; மேல் சொல்லுகிறார்கள் (பாற்கடலுள் பையத்துயின்ற) பரமபதத்தில் நின்றும் ஆர்த்தரக்ஷணத்துக்காகத் திருப்பாற்கடலளவும் ஒரு பயணமெடுத்துவிட்டு ஜகத்ரக்ஷண சிந்தையிலே அவகாஹிதனுய் ஆர்த்த த்வநிக்குச் செவிகொடுத்துக்கொண்டு கிடக்கிறபடி. (பையத்துயின்ற) "வெள்ளைவெள்ளத்தின்மே லொருபாம்பை மெத்தையாக விரித்ததன்மேலே - கள்ளநித்திரைகொள்கின்ற" என்னக் கடவதிறே. இவ்வுறக்கத்தின் உண்மையறிந்தவர், "கள்ளம்" என்று வெளியிட்டாரிறே. (பையத்துயின்ற) பிராட்டிமாரோட்டை போகத்துக்கு இடங்கொடாதே "ஆராலே ஆருக்கு என்னநலிவு வருகிறதோ!" என்று அதிலே அவகாஹிதனுய்க்கொண்டு சாய்ந்தபடி. முதற்பாட்டில் - நாராயணத்வஞ் சொல்லி, இப்பாட்டில் - அங்கு நின்றும் திருவவதாரார்த்தமாகத் திருப்பாற்கடலிலே சாய்ந்தபடியைச் சொல்லுகிறது. (பரமன்) தகட்டிலழுத்தின மாணிக்கம்போலே திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தருளினபின்பு வடிவிற்பிறந்த புகரின் பெருமையைச்சொல்லுகிறது. அன்றியே, ஜகத்ரக்ஷணார்த்தமாக வந்து கண்வளர்ந் தருளுகையாலே குணத்தினேற்றத்தைச் சொல்

யிதொன்றுமே புருஷார்த்தமாக நினைத்திருந்தேன்" என்றானென்கை. பகவத்குணஜ்ஞராயிருப்பார்களை அஜ்ஞர்க்குபதேசிக்கிறாப்போலே "கேளீரோ" என்று உபதேசிக்கக்கூடுமோவென்ன; காலக்ஷேபத்துக்குடலாக "கேளீரோ" என்கிறதென்று மூன்றும் தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் (சொல்லுகிறவர்கள் தானித்யாதி வாக்யத்ரயத்தாலே.)

மேலுக்கவதாரிகை (எங்களுக் கேதானுலித்யாதி;) ஏதானுல் நல்லதோ அத்தையாகில் சொல்லுங்கோளென்றபடி. அன்றிக்கே, ஏதானுலும் நல்லதாகில் சொல்லலாகாதோவென்று சகாரத்தை அத்யாஹரித்துக்கொண்டு யோஜிக்கவுமாம்; 'பரமனடிபாடி', என்ன வமைந்திருக்க, "பாற்கடலுள் பையத்துயின்ற" என்றதுக்கு பாவமருளிச் செய்கிறார் (பரமபதத்திலித்யாதி;) தாங்களுமார்த்தைகளாகையாலே, ஆர்த்தரக்ஷணத்துக்கு உபயுக்தமான ஆகாரத்தையிட்டுப் பாடுகிறார்களென்று விசேஷணமிட்டதென்று கருத்து.

விற்றுகவுமாம். ஸர்வத்தாலும் அதிகனென்றபடி. (அடிபாடி) அவனுடைய ஆதிக்யத்தினெல்லையை அநுஸந்தித்தால், பின்னை தங்கள் தாழ்ச்சியினெல்லையிலே நிற்குமத்தனையிறே. ஔசித்யத்தாலும் போக்யதையாலும் க்ருஷ்ணன் திருவடிகளைப்பாடாதே திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறவனைப் பாடுவானென்னென்னில்; இரண்டிடமு மொருவனேயாகையாலும், "நோன்புநோற்கப்புக்கவர்கள் க்ருஷ்ணனைப் பாடாநின்றார்கள்" என்று சொல்லாமைக்காக ஒரு தைவத்தின்பேரைச் சொல்லிற்றுகச் சொல்லுகிறார்கள்.

(பாற்கடலுள் பையத்துயின்ற)க்ருஷ்ணனை அநுபவிக்கப்புகுந்து க்ஷீராப்திநாதனைச் சொல்லுகிற தென்னென்னில்; "க்ருஷ்ணனைச் சொல்லிப் பண்டேஶங்கித்திருக்கிற இடையர், நமக்கு தைவம்தந்த இச்சேர்த்தியை யழிக்கிறார்களோ!" என்று பயப்பட்டு, க்ருஷ்ணனுக்கடியான க்ஷீராப்திநாதனைச் சொல்லுகிறார்கள். "ఏష నారాయణః శ్రీమాన్ క్షీరార్ణవనికేతనః । నాగపర్యఙ్క ముత్సృజ్య హ్యాగతో మధురాం పురీమ్" "ஏஷ நாராயணஶ்ஸ்ரீமாந்க்ஷீரார்ணவநிகேதநः । நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம்" (௩௬) என்னக்கடவதிறே. (அடிபாடி) மஹிஷிகளோடு அல்லாதாரோடு வாசியற ஶேஷத்வம் ஸமாநமாயிருக்கையாலே, திருவடிகளைப்பாடி என்கிறார்கள். "பள்ளிகொள்ளு மிடத்தடிகொட்டிட" என்னக்கடவதிறே. அவனுடைய வடிவழகை ப்ரீதிப்ரேரிதைகளாய்க்கொண்டு பாடி.

(பாடிநெய்யுண்ணோம் பாலுண்ணோம்) போக்யாந்தரங்களில் அந்வயியோம். உண்டார்க்கு உண்ணவேண்டாவிறே. இவர்கள்

"பைய" என்றதுக்கு - பராக்கில்லாமை அர்த்தமாம், அந்த பராக்கு ப்ரஸக்தி யருளிச்செய்யாநின்றுகொண்டு, தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதி.) பரமனைப்பாடியென்னுதே, "அடி" என்றதுக்கு தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அவனுடையவித்யாதி.)

உத்தஶங்கா பரிஹாரங்களை விவரியாநின்றுகொண்டு ப்ரமாணம் |சொல்லுவாராக ப்ரதீகக்ரஹணம் பண்ணுகிறார் (பாற்கடலித்யாதி.) உத்தமநாயகிகளாயிருக்குமிவர்கள் தங்கள் போக்யதையாலே அவனைத் தொழுவித்துக்கொள்ளுமவர்களாயிருந்து வைத்து, அடிபாடக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (மஹிஷிகளித்யாதி.) "அடி" என்றது - உபலக்ஷணமாய், திருமேனியில் ஸௌந்தர்யத்தைச் சொல்லுகிறதென்று தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (அவனுடையவித்யாதி.)

அடிபாடுகை "நெய்யுண்ணோம்" இத்யாதிக்கு ஹேதுவென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (போக்யாந்தரங்களிலித்யாதி.) அந்யாபதேஶத்திலே

உண்டார்களோவென்னில்; ஓம். "உண்ணுநாள்பசியாவதொன்றில்லை-நமோநாரணாவென்று - உனபாதம் நண்ணுநாள் - அவை பட்டினி நாளே" என்றும், "எல்லாம் கண்ணன்" என்றும் "கூறைசோறிவை வேண்டுவதில்லை" என்றும், "పాథేయం పుణ్డరీకాక్ష నామసఙ్కీర్తనామృతమ్" "வாயேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்" (௩௭) என்றும், "వాసుదేవస్సర్వమ్" "வாஸுதேவஸ்ஸர்வம்" (௩௮) என்றும், இப்படியேயிறே ஜ்ஞாநம்பிறந்தாலிருப்பது. "குடியோம்" என்னாதே, "உண்ணோம்" என்பானென்னென்னில்; "உண்ண" என்று - குடிக்கைக்கு சாதிப்பேச்சு. ஆகையிறே, "நெய்யுண்டான், வெண்ணெயுண்டான்" என்று க்ருஷ்ணனுக்குப் பேராகிறது. முதல்தன்னிலே க்ருஷ்ணன் பிறந்தபின்பு அதில் வ்யுத்பத்தியில்லாமை. அவன் வருமளவும் உபவாஸக்ருஶைகளா யிருக்கக்கடவோம். இவர்கள்தான் ஆரைக்கெடுக்கப் பட்டினிகிடக்கிறதென்னில்; இவர்கள் உண்ணுதொழிந்தால் பட்டினி விடுவான் அவன்போலேகாணும்; ஆகையிறே இவர்கள் இங்ஙனே சொல்லுகிறது.

(நாட்காலேநீராடி) அவன் வந்தால் குளிக்கவிராதே, முன்பே தத்போக யோக்யமாகக் குளித்து. விடிவோறேபோய்க் குளிக்கக்கடவோம். அவன் திருப்பாற்கடலிலே வந்து சாய்ந்தருளினத்தை அஸத்ஸமமாக்கக்கடவோம். மஹிஷியானவள் ஸ்வரக்ஷணத்திலே

ஶங்கித்துப் பரிஹரிக்கிறுர் (குடியோமித்யாதி.) பரிஹாராந்தரமருளிச்செய்கிறுர் (முதல்தன்னிலேயித்யாதி) அதிலென்றது - "குடிக்கக்கடவது, உண்ணக்கடவது" என்ற பேதத்திலென்றபடி. அதாவது - இவர்கள் பர்த்தாக்கள் காமரஸமறியிலாய்த்து க்ருஷ்ணைகபோகரான விவர்கள் இத்தை யறிவதென்றபடி. "நெய்யுண்ணோம் பாலுண்ணோம்" என்கிறவற்றுக்கு - நெய்முதலானவையு மறியோமென்று கீழேயருளிச்செய்து, அங்ஙனன்றிக்கே, "உண்ணோம்" என்றதுக்கு - உண்ணவேண்டாமென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யார்த்த மருளிச்செய்கிறுர் (அவன் வருமளவுமித்யாதி;) நாய்ச்சியார்க்கு கோபிமார்தஶை சொல்லாநிற்கச்செய்தேயும் தானானதன்மையில் தம்முடைய க்ருஷ்ணவ்யஸநம்பின்னுடி வருகையாலே, தம்முடையதோழிமார்களைக் குறித்து இப்படி யருளிச்செய்தாரென்று இவ்வாக்யத்துக்குத்தாத்பர்யம்.

"நீராடி" என்றதுக்கு மூன்றுதாத்பர்யம் - போகார்த்தமென்றும், அவனைப் பெறுகைக்கு ஸாதனமென்றும், விரஹதாபமாறுகைக்கென்றும். அதில் முந்தினது(அவன்வந்தாலித்யாதி.)இரண்டாமர்த்தம்(அவன்திருப்பாற்கடலிலே

ப்ரவர்த்திக்கும்படியாக இருக்கைக்குமேற்பட்ட புருஷனுக்கு அவத்ய மில்லையிறே. அதாவது - தங்கள் த்வரையாலே அத்தலையில் உபாய பாவத்தை அழிக்கிறார்கள். "ஓதிநாமங்குளித்துச்சிதன்னுலொளிமா மலர்ப் - பாதநாளும்பணிவோம் நமக்கேநலமாதலில்" என்கிறார்கள். ஸ்ரீபரதாழ்வானைப்போலே, விரஹதாபமாறுகைக்காக "நோன்பு" என்று ஒரு வ்யாஜத்தையிட்டுக் குளிக்கத் தேடுகிறார்களிறே; "అత్యన్తసుఖసంవృద్ధస్సుకుమారస్సుఖోచితః । కథన్వపరరాత్రేషు సరయూమవగాహతే" "அத்யந்தஸுகஸம்வ்ருத்தஸ்ஸுகுமாரஸ்ஸுகோசித: । கதந்வபரராத்ரேஷு ஸரயூமவகாஹதே" (ரு.அ) என்கிறபடியே.

(மையிட்டெழுதோம்) முதலிலே * மையகண்ணாளிறே. இனி அஞ்ஜநமிடுவதும் மங்களார்த்தமாகவிறே; அது தவிரக்கடவோமெ ன்கையாலே - அவனுக்கு அவகாஶப்ரதாநம் பண்ணக்கடவோமல்லோ மென்கிறார்கள்; இவர்கள் அஞ்ஜநமெழுதப்புக்கால் குறையும் தலைக் கட்டுவான் அவனேயிறே. பரிபூர்ணவிஷயத்தில் இப்படி அவகாஶ ப்ரதாநம் பண்ணப்பெறுதவன்று கிஞ்சித்கரித்ததாக விரகில்லையிறே. அவனும் பரமப்ரணயி யாகையாலே "இங்கே கிஞ்சித்கரித்து ஸ்வரூபம் பெறவேணும்" என்றிருக்கும். (மலரிட்டு நாம் முடியோம்) "சூரும் பார் குழற்கோதை" என்றும், "வாசஞ்செய்பூங்குழலாள்" என்று மிறே யிருப்பது. இனி, பூவுக்குத்தான் நாற்றங்கொடுக்கைக்காக வாய்த்து பூமுடிப்பது; அதுசெய்யக்கடவோ மல்லோமென்கை. (நாம்முடியோம்) அவன்தான் மாலையைக்கொடுவந்து மயிரை முடித்து அலங்கரித்து விரல்கவ்வி "இது வாங்காதொழியவேணும்"

யித்யாதி.) மூன்றும் தாத்பர்யம் (ஸ்ரீபரதாழ்வானை யித்யாதி;) ஸ்ரீபர தாழ்வான் அபரராத்ரியிலே ஸ்நாநம் பண்ணுமாப்போலே இவர்களும் விரஹ தாபமாறும்படி க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்தைத் தேடுகிறார்களென்று கருத்து.

"நெய்யுண்ணோம்" என்கிறவிடத்தில் உண்ணக்கடவோ மல்லோமென்று விரஹதஶைக்கநுகுணமாக ப்ரணயரோஷம்தோற்றச் சொன்னப்போலே, "மையிட்டெழுதோம்" என்றதும் ப்ரணயரோஷத்தாலே சொல்லும் பாசுர மென்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (முதலிலே யித்யாதி.) இவர்களிப்படி அவகாஶப்ரதாநம் பண்ணவேண்டுவானென்? அவன்றானு மிவ்வளவைக் கொண்டு மேல்விழுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (பரிபூர்ணேத்யாதி வாக்ய த்வயத்தாலே.) இத்தால் - சேதநனுக்கு ஆபிமுக்யமும் அவனுக்கு அது கொண்டு கார்யம் செய்கையும் ஸ்வரூபமென்றதாய்த்து.

"முடியோம்" என்றத்தாலே ஸித்தமாயிருக்க, "நாம்" என்று சொன்னது க்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவன்தானித்யாதி.) விரல்கவ்வியென்றது- ப்ரணாமம்பண்ணி பெருவிரலைத் திருப்பவளத்தாலே ஸ்பர்ஶித்தென்றபடி. இத்

என்னுமாகில், செய்யலாவதில்லை. அவன் தீம்பாலே செய்யுமத்தை நம்மால் செய்யலாவதில்லையே; நாமாகச் செய்யாதொழியு மித்தனையிறே வேண்டுவது. "అత్రోపవిశ్యసాతేన ఙాపిపృష్ఠేరలఙ్కృతా। అన్యజన్మని సర్వాత్మా విష్ణురభ్యర్చితోయయా" "அத்ரோபவிஶ்ய ஸாதேந தாபீப்ருஷ்டேரலங்க்ருதா। அந்யஜந்மநி ஸர்வாத்மா விஷ்ணுரப்யர்ச்சிதோ யயா" (சo) என்னக்கடவதிறே.

(செய்யாதனசெய்யோம்) விதியுண்டாகிலும், பூர்வர்கள் ஆசரித்ததற்கு மேற்பட ஆசரிக்கக்கடவோ மல்லோம். அதாகிறது- "సుహృదంసర్వభూతానామ్" "ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்" (சக) என்று- அவன் ஸர்வபூதஸுஹ்ருத்தாக விருந்தானேயாகிலும் ததீயரை முன்னிட்டுக்கொண்டல்லது அவனைக்கிட்டக் கடவோமல்லோமென்கை. பெண்களில் முற்படவுணர்ந்தார் ஒருவரையொருவர் எழுப்பி, எல்லாருங்கூடி யல்லது க்ருஷ்ணனைக்கிட்டக் கடவோயல்லோ மென்கை. "నివేదయతమాంక్షిప్రమ్" "நிவேதயத மாம் க்ஷிப்ரம்" (சஉ) என்றும் "పితామహంనాథమునింవిలోక్యప్రసీద" "பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத" (சங) என்றும் இவையிறே ப்ரமாணங்கள். ஸ்ரீபரதாழ்வானை முடிசூடச் சொன்னவிடத்தில் ஸர்வப்ரகாரத்தாலும் யோக்யதையுண்டாயிருக்க "இக்குடியில் இதுக்கு முன்பு செய்யாதன நான் செய்யமாட்டேன்" என்றானிறே.

(தீக்குறளைச் சென்றோதோம்)பிறர்க்கு அநர்த்தாவஹமாகப் பொய்சொல்லக்கடவோமல்லோம். பிராட்டி, பெருமாள்பக்கல் ஏகாந்தத்திலும் ஏகாக்ஷி ஏககர்ணிகள் நலிந்தபடி சொல்லிற்றாக வில்லையே

தால்-வேண்டிக்கொண்டென்றதாய்த்து. உங்கள் ஸ்வரூபத்துக்குச் சேராதத்தையவன்செய்தால் அதுக்கிசையக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அவன் தீம்பாலேயித்யாதி.) அவன்றா னிப்படி தானுகந்த விஷயத்திலே யலங்கரித்ததுண்டோவென்ன; ஸம்வாதங் காட்டுகிறார் (அத்ரேத்யாதி)

"செய்யாதனசெய்யோம்" என்கைக்கு செய்ய ப்ரஸக்தி யுண்டோவென்ன; அத்தை யருளிச்செய்யா நின்றுகொண்டு, அர்த்தமருளிச்செய்கிறார் (விதியித்யாதி.) இது துடங்கி ப்ரணயரோஷத்தாலே யன்றிக்கே அதிகாரிஸ்வரூபத்தைச் சொல்லுகையென்று கண்டுகொள்வது. ஸ்வாபதேஶத்திலும் அந்யாபதேஶத்திலும் தாத்பர்யத்தை விவரிக்கிறார் (அதாகிறதித்யாதி வாக்யத்வயத்தாலே.) புருஷகாரத்தை முன்னிட்டுக்கொள்ளுகை பூர்வர்கள்செய்தார்களென்கைக்கு ப்ரமாணங் காட்டுகிறார் (நிவேதயதேத்யாதி.) செய்யாதன செய்யாதிருக்கைக்கு உதாஹரணங் காட்டுகிறார் (ஸ்ரீபரதேத்யாதி.)

"குறளை" என்றதினர்த்தம் (பொய்யென்றது;) அதாவது - குற்றமென்றபடி. ப்ரகருதத்திலே கோபிமார்க்குக் குற்றத்துக்கு ப்ரஸக்தியுண்டோவென்ன

ஸ்ரீராமாயணத்தில். நம்மில் நாம் "நப்பின்னை நங்காய்" என்றும் "நாயகப்பெண்பிள்ளாய்" என்றும், "பேய்ப்பெண்ணே" என்றும் ஒருவர்க்கொருவர் இட்டீடுகொண்டு சொன்னவை. க்ருஷ்ணன் செவிப்படுத்தக் கடவோமல்லோம்.

(ஐயமும் பிச்சையு மாந்தனையும் கைகாட்டி) ஐயமாவது - யோக்யவிஷயத்திலே குருவாக வ்யயிக்குமது ; பிச்சையாகிறது - ப்ரஹ்மசாரிகளுக்கும். ஸந்யாஸிகளுக்கும் இடுமது. "இங்கு க்ருஷ்ணநுபவம்பண்ணுவோம்" என்பார்க்கு அவனை யநுபவிப்பித்தும், "ததீயரையநுபவிப்போம்" என்பார்க்கு அவர்களை யநுபவிப்பித்தும் போரக்கடவோம். (ஆந்தனையும்) அவர்கள் கொள்ளவல்லராந்தனையும் ; அர்த்திகள் ஆமளவும். (கைகாட்டி) ஸர்வத்தையும் கொடுத்தும் "ஒன்றும் செய்யப்பெற்றிலோம்', என்றிருக்கை. இவர்களை க்ருஷ்ணநுபவம் பண்ணிவைத்தும் இவர்கள் திறத்தில் ஒன்றும் செய்யப்பெற்றிலோம் என்றிருக்கையைச் சொல்லுகிறது. அதவா, ஐயமாகிறது - ஈஶ்வரனுடைய ஸ்வரூபரூபகுணவிஷயஜ்ஞானம் ; பிச்சையாகிறது - ஆத்மஸ்வரூப மாத்ரஜ்ஞானம். இவற்றை தனக்குள்ள வளவும் உபதேஶிக்கையென்றுமாம். (கைகாட்டி) இப்படி ஜ்ஞானோபகாரகனாலும் அவ்வுபகாரம் தன்னெஞ்சில் தட்டாதிருக்கை.

(உய்யுமாறெண்ணி) இப் ப்ரகாரங்களினாலே உஜ்ஜீவிக்கும் படிகளையெண்ணி. பகவத்விஷயத்திலே உள்புக்கவன்றிறே இவன் உஜ்ஜீவித்தானாகிறது ; அது இல்லாதபோது * அஸந்நேவவிறே. (எண்ணியுகந்து) மநோரதவேளையே துடங்கி ரஸிக்கிறபடி. "ஸுஸுகம் கர்த்தும்" "ஸஹஸம் ப்ரஹ்ருஷ்டவதி" (சச) என்கிறபடியே - ஸ்மர்த்தவ்யவிஷயத்தின் ரஸ்யதையாலே ஸ்ம்ருதிவேளையே துடங்கி ரஸிக்குமிறே. "எண்ணியுகந்து - செய்யும்கிரிசைகள்கேளீரோ" என்றந்வயம்.

வருளிச்செய்கிறார் (நம்மில் நாமித்யாதி.) (நாயகப்பெண்பிள்ளாய்) என்றதுக்கு- "நிர்வாஹகையாயிருந்தபடி யிதுவோ ?" என்று வெறுத்துச் சொல்லுகையாலே குற்றமென்று கண்டுகொள்வது.

"ஐயம்" என்றது - விபுவான க்ருஷ்ணனை யநுபவிக்கையென்றும், * பிச்சையாவது - அணுஸ்வரூபாரான ததீயரை யநுபவிக்கை யென்றும் திருவுள்ளம் பற்றி, ப்ராக்ருதத்திலேயேறிடுகிறார் (இங்கித்யாதி.) யோஜநாந்தர மருளிச்செய்கிறார் (அர்த்திகளித்யாதி ;) அதாவது - அர்த்திகளாக வந்தவர்களெல்லார்க்கும் கொடுத்து, இனி அர்த்திகளில்லையென்னுமளவு மென்றபடி. கொடுத்து என்றதே, "கைகாட்டி" என்றதுக்கு பலிதத்தை யருளிச்செய்கிறார் (ஸர்வத்தையித்யாதி.) இப்பாட்டிலே, "ஏல், ஓர், எம்பாவாய்" என்றதெல்லாம் பாதத்தைப் பூரித்துக்கிடக்கிறது. ... ... (உ)

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அவதாரிகை.—இரண்டாம் பாட்டு. (வையத்தித்யாதி) இப்பாட்டில், பகவத்கைங்கர்யத்திலே ருசியுடையராய் அவனையே உபாயமாகப் பற்றியிருக்கிற இவ்வதிகாரிக்கு ஸம்பாவித ஸ்வபாவவிஶேஷங்களை யருளிச்செய்கிறார்.

வ்யா.— (வையத்து வாழ்வீர்காள்) * இருள்தருமாஞாலமான விவ்விபூதியிலே பிறந்துவைத்து பகவதநுபவம் பண்ணப்பெற்ற பாக்யவதிகாள்!. பகவத்குணங்கள் ஸ்வஸ்வ விஷயத்திலே சேர்ந்து விளங்காநின்றுள்ள இவ்விபூதியிலே பிறந்து பகவத்குணாநுபவம் பண்ணுகிற பாக்யவதிகாளென்கிறார்களாகவுமாம். இத்தால்-"விண்ணுளாரிலுஞ்சீரியர்" என்கிறது. விண்ணுளாருக்கும் இங்கேவந்திறே ஶீலாதி குணங்களை யநுபவிக்கவேண்டுவது. இங்குள்ளார்க்கு ஸ்வரூப ஜ்ஞாநமுண்டானால் யாவத்குணவிஶிஷ்டனை இங்கேயநுபவிக்கலாமிறே.

(நாமும்) "அவனாலே புருஷார்த்தம்" என்றிருக்கிற நாமும் (நம்பாவைக்கு) ப்ராப்யருசிபரவஶராய் நாமநுஷ்ட்டிக்கிற நோன்புக்கு. அவனும் அவன் விபூதியும் வாழ்கைக்கு பகவத்விஷய மங்களாஶாஸநபரரான நாமநுஷ்டிக்கிற நோன்புக்கென்னவுமாம். (செய்யும்கிரிசைகள்) அவஶ்யமநுஷ்ட்டேயமான க்ரியைகளை (கேளீரோ) அந்யபரதை யில்லாமல் கேளுங்கோள். பகவத்விமுக கோலாஹலத்திலே தாங்கள் பகவதநுகூலராய், பகவதநுகூலரைத் தேடி அழைக்கும்படி யித்தனைபேருண்டாவதே! என்று அந்யபரரா யிருக்க, "கேளீரோ" என்று அந்யபரதையைத் தவிர்க்கிறார்கள்.

(பாற்கடலித்யாதி) திருப்பாற்கடல்நடுவே திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே பிராட்டிமார் திருமுலைத்தடத்தாலே நெருக்கி யணைத்தாலும் அவர்களுக்கு முகங்கொடாதபடி ஜகத்ரக்ஷண சிந்தையிலே அவஹிதனாய்க் கண்வளர்ந்தருளுகிறவனாய்; [க] அதஏவ பரமபதத்தில் நின்றும் ஸம்ஸாரிசேதநஸம்ரக்ஷணார்த்தம் திருப்பாற்கடலிலே அவஸரப்ரதீக்ஷனாய்க்கொண்டு கண்வளர்ந் தருளுகையால் வந்த குணதிஶயத்துக் கொப்பில்லாதவனாய்; திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்தருளுகையால் வந்த பரபாகஶோபைக் கொப்பில்லாதவனாயிருக்கிற வெம்பெருமானுடைய திருவடிகளை, ப்ரீதிக்குப் போக்குவிடாகப் பாடி போக்யாந்தரங்களில் அந்வயியோம்.

[க] அதஏவ - ஆகையால்.

(நாட்காலே நீராடி) ப்ராதஸ்நாநத்தைப்பண்ணி. இத்தால்-கர்ம யோகத்தை உபலக்ஷிக்கிறது. இத்தால் - தத்தத்வர்ணாஶ்ரமோசித மான ஸ்நாநாதி நித்யகர்மங்கள் இவ்வதிகாரிக்கு யதாவதநுஷ்ட்டேய மென்றதாய்த்து. "பாடி" என்றது-பாடக்கடவோ மென்றபடி.—"நீராடி" என்றது - நீராடக்கடவோமென்றபடி. "తత్తుకర్మ సమాచరేత్" "தத்கர்ம ஸமாசரேத்" என்று - இவ்வதிகாரிக்கு அநபிஸம்ஹித பலமான கர்மம் அநுஷ்ட்டேய மென்றதிறே. (மையிட்டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்) மை, கண்ணுக்கு ப்ரகாஶக மாகையாலே, ஆத்மயாதாத்ம்யப்ரகாஶகமான ஜ்ஞாநயோகத்தி லந்வயிக்கக்கடவோ மல்லோம்; பூச்சூடுகை போகரூப மாகையாலே, "மலரிட்டு நாமுடியோம்" என்று - பகவதநுபவ ரூபமான பக்தியோகத்தி லந்வயிக்கக் கடவோமல்லோ மென்கிறது.

(நாம் முடியோம்) நாமாய் பகவத்ப்ராப்தி ஸாதநங்களான ஜ்ஞாநயோக பக்தியோகங்க ளிரண்டிலு மந்வயியா தொழிகையே வேண்டுவது; அவன்றனே யிவ்வாத்மவஸ்துவை அநுபவிக்கும்போது ஜ்ஞாந பக்திக ளிரண்டையுங் கொடுத்து, "இவற்றை நீ தவிரா தொழிய வேணும்" என்று நிர்ப்பந்திக்கும்போது, நம்மால் செய்யலாவதொன்றில்லையிறே. நாமா யநுஷ்ட்டிக்கிறபோதும் அவன்கொடுக்க நாம் பரிக்ரஹியாதபோதும் ஸ்வஸ்வாதந்த்ர்யம் குலையாமையாலே, அது குலைகைக்காக நாமா யநுஷ்ட்டியா தொழிகையும் வேணும்; அவன் தர நாம்பரிக்ரஹிக்கையும் வேணும்.

(செய்யாதனவித்யாதி) ப்ரமாணமுண்டேயாகிலும் பூர்வாசார்யர்கள் அநுஷ்ட்டியாதவற்றை யநுஷ்ட்டிக்கக் கடவோமல்லோம். அதாவது-எம்பெருமான் வாத்ஸல்யாதிகுணவிஶிஷ்டனே யாகிலும் ததீயரை முன்னிட்டல்லது அவனைப் பற்றக்கடவோ மல்லோம். (தீக்குறளைச் சென்றோதோம்) பராநர்த்தாவஹமான பொய் சொல்லக் கடவோமல்லோம்.

(ஐயமித்யாதி) பகவத் வைபவத்தையும் பாகவத வைபவத்தையும் தாமறிந்தவளவு முபதேஶித்து. "நாமொன்று முபதேஶித்திலோம்" என்று தன் கார்ப்பண்யத்தை யநுஸந்தித்து. அர்த்திகளுள்ள வளவும் உபதேஶிக்கக்கடவோம்.

(உய்யுமாறெண்ணியுகந்து) ஏவம்ப்ரகாரேண வுஜ்ஜீவிக்கும்படி யெண்ணியுகந்து - செய்யுங் கிரிசைகள் கேளீரோ என்றந்வயம்...உ

அ.—மூன்ரும் பாட்டு ஸ்வர்க்கார்த்தமாக யஜிக்கு மவனுக்கு ஸ்வர்க்கம் ப்ரதாந பலமா யிருக்கச் செய்தேயும், "ఆయురాశాస్తే" "ஆயுராஶாஸ்தே" (௪௫) என்கிறபடியே ஆயுஸ்ஸூபுத்ரனென்று அவாந்தரபலமா யிருப்பன சிலவுண்டாயிருக்கும்; இவர்களுக்கு அங்ஙனமொன்று மின்றிக்கே, "సర్వలాభాయ కేశవః" "ஸர்வலாபாய கேஶவ:" (௪௬) "మాతా పితా భ్రాతా" "மாதா பிதா ப்ராதா" (௪௭) "சேலேய் கண்ணியரும்" என்றும் - எல்லாம் அவன்ருனே யாகையாலே தங்களுடைய நோன்புக் கநுமதி பண்ணிஞர்க்கு வரக்கடவதான பலமிருக்கும்படியைச் சொல்லுகிருர்கள். "అనసూయవే" "அநஸூயவே" (௪௮) என்று - அஸூயையைப் பண்ணு தொழிய வமையுமிறே அதிகாரிகளாகைக்கு. "యత్రాష్టాక్షరసంసిద్ధః" "யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்த:" (௪௯) இத்யாதியாலே ஒருத்தனைச் சொல்லக் கடவது. ஆனபின்பு, இவர்க ளித்தனைபேரிருந்தால் நாடு வாழச் .சொல்ல வேண்டாவிறே.

மூன்ரும் பாட்டு (ஓங்கியித்யாதி.) கீழிரண்டுபாட்டாலும் எம்பெருமானை ப்ராப்யமும் ப்ராபகமு மென்று நிஶ்சயித் திருந்த விவர்களுக்கு பலாந்தரங்கள் இப்பாட்டிற் சொல்லும்படி எங்ஙனே கூடுவது? இது ப்ரதாநபலமென்ருதல், ஆநுஷங்கிக பலமென்ருதல் சொல்லக்கூடாமையாலேயென்னும் ஶங்கையிலே யருளிச்செய்கிருர் (ஸ்வர்க்கார்த்தமித்யாதி.) புத்ரனென்றது-"సుప్రజాస్త్వమ్" "ஸுப்ரஜாஸ்த்வம்" என்றத்தைப்பற்ற. ஒருவர் நோன்பு நோற்க மற்ருெருவர்க்கு அநுமதிமாத்ரத்தாலே ஃபலம் ஸித்திக்கும்படி யென்னென்ன வருளிச்செய்கிருர் (அநஸூயவேத்யாதி;) "ఇదన్తు తే గుహ్యతమం ప్రవక్ష్యామ్యనసూయవే" "இதந்து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே" என்று கீதோபநிஷதாசார்யன், அஸூயாராஹித்யமே உபாயாந்வயத்துக்கும் பலாந்வயத்துக்குமமையுமென்றிறே திருவுள்ளம்பற்றி யருளிச்செய்தது; ஆகையால் இவர்களும் அஸூயையின்றிக்கே அநுமதியும் பண்ணிஞர்களாகையால் இந்நோன்பால் பலாந்வயம் வரத்தட்டில்லை யென்று கருத்து. அவதாரிகாந்தர மருளிச் செய்கிருர் (யத்ரேத்யாதி;) "యత్రాష్టాక్షరసంసిద్ధో మహాభాగో మహీయతే। నతత్ర సఞ్చరిష్యన్తి వ్యాధిదుర్భిక్షతస్కరాః" "யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே। நதத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதிதுர்பிக்ஷதஸ்கரா:" என்று ஒருவரிருக்கும்போது நாடுவாழச்சொல்லுகையாலே, அப்படி இவர்கள் பலர் அஷ்டாக்ஷரஸித்தரா யிருந்தால் அநுமதி பண்ணிஞரோடு அநுமதி பண்ணுதாரோடு வாசியற வாழச்சொல்லவேண்டாவிறேயென்று கருத்து.

மூ.—ஓங்கி யுலகளந்த வுத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினல்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கய லுகளப்
பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடநிறைக்கும் வள்ளற் பெருபசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

பதம்.	உரை.
	மஹாபலிவார்த்த நீர் கையில் விழுந்தவாறே
ஓங்கி	ஆகாஶத்தளவும் வளர்ந்து
உலகு	மூன்று உலகங்களையும்
அளந்த	தன் திருவடிகளாலே அளந்துகொண்டு தேவர்கள் துன்பத்தைப்போக்கின
உத்தமன்	புருஷோத்தமனுடைய
பேர்	திருநாமங்களை
பாடி	ப்ரீதிபூர்வகமாகப்பாடி,
நாங்கள்	அவன் திருநாமத்தைச் சொல்லாவிடில் தரிக்க மாட்டாத நாங்கள்
நம்பாவைக்கு	எங்கள் நோன்புக்கு என்று
சாற்றி	ஒரு வ்யாஜத்தையிட்டு
நீராடினல்,	ஸ்நாநஞ்செய்தால்,
நாடெல்லாம்	தேசமெங்கும்
தீங்கு	வ்யாதி துர்ப்பிக்ஷம் வெள்ளக் கேடு வறட் கேடு முதலான அமங்களங்களெல்லாம்
இன்றி	நீங்கி-ஸம்ருத்தமாய்,
திங்கள்	மாஸந்தோறும்
மும்மாரிபெய்து	மூன்றுமழைபெய்திடும்;
(அத்தாலே)	
கயல்	கயல்மீன்கள்,
ஓங்கு	வளர்ந்து
பெரு	பருத்த
செம் நெல் ஊடு	செந்நெற்களினுள்ளே
உகள,	போக இடம்பெறுமையாலே துள்ளவும்;
பொறி	அழகிய
வண்டு	வண்டுகள்
பூ	தர்ஶநீயமான
குவளைப்போதில்	நெய்தல்மலரிலே

கண்படுப்ப,	உறங்கவுமிருக்கும்;
வள்ளல்	பெருந்தன்மையுடைத்தாய்
பெரு	மிகப்பருத்திருக்கிற
பசுக்கள்	பசுக்களானவை,
பால்கறக்குமவர்கள்,	
தேங்காதே	ஏங்காமல்-சலியாமல்
புக்கு	கறக்கவொருப்பட்டு
இருந்து	ஒருநிலையாகவிருந்து,
சீர்த்தமுலை	பருத்தமுலைகளை
பற்றி	இருகையாலும் அணைத்து
வாங்க	இழுக்க,
குடம்	குடங்களை
நிறைக்கும்;	நிறையாநிற்கும்;
இப்படி	
நீங்காத	அழிவில்லாத
செல்வம்	ஸம்பத்து
நிறைந்து;	நிறைந்திடும்;
எம்பாவாய்	எங்கள்வார்த்தையைப்பின்சென்று
ஓர்.	அவன் வைபவத்தை புத்திபண்ணுங்கோளென்கிறார்கள்.

ஏல்-அசை.

வ்யா.—(ஓங்கியுலகளந்த) இவர்கள் முதலே தொடங்கி "நாராயணன்" என்று-உபயவிபூதியோகத்தைச்சொல்லி, "பாற்கடலுள் பையத்துயின்ற" என்று-அவதாரார்த்தமாகப் பள்ளிகொண்டருளினபடியைச்சொல்லி, அங்கு நின்றும் போந்து அவதரித்தவளவும் வர அடியொத்துகிறார்கள்.

(ஓங்கி) ஜகத்ரக்ஷணார்த்தமாகத் திருப்பாற்கடலிலே சாய்ந்தருளினபோது ஆர்த்தரக்ஷணம் பண்ணப்பெறுமையாலே; பனிப்பட்டுச் சாய்ந்த மூங்கில்போலேயாய், அது ஆதித்யகிரணம் பட்டுக்கிளம்புமாப்போலே, மஹாபலியாலே நோவுபட்ட தேவர்களார்த்தத்வநி

நாராயணனடிபாடி என்றுதல், பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடிபாடி யென்றுதல் சொல்லுகையன்றிக்கே, "ஓங்கி யுலகளந்த" என்றதுக்கு நியாமக மருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி.) "ஓங்கி" என்று இப்போது சொல்லுகையாலே - முன்பிப்படி ஓங்குதலில்லாமை தோன்றுகையாலே, கீழ்ப் பாட்டில் "பையத்துயின்ற" என்ற பதத்தைக் கடாக்ஷித்து இரண்டடிக்கும் ஹேது பூர்வகம் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஜகதித்யாதி.) ஆர்த்தத்வநி

கேட்டபின்பு போந்து வளர்ந்தபடி. பிறர்காரியஞ் செய்யப் பெறுகையாலே வளர்ந்தபடி யென்னவுமாம். "உவந்த வுள்ளத்தனு யுலகமளந்து" என்னக் கடவதிறே. அங்ஙனன்றிக்கே, இரப்புப்பெறு வதற்கு முன்னே வாமநனானவன் இரப்புவாய்த்த ப்ரீதியாலே வளர்ந் தபடியாகவுமாம். கையில் நீர்விழுந்தபின்பு வளர்ந்த கடுமை. ப்ரம்ஹா, திருவடிகள் விளக்கின நீருங்கூட விழுந்தபடியிறே.

(உலகு அளந்த) "ஐசக்ரமே ப்ருதிவீமேஷஏதாம்" "விவக்ரமிஷ்வே பூயிவீஷேஷிவநதாம்" (ருo) என்கிறபடியே - குணுகுணநிரூபணம் பண்ணுதே ஸர்வப்ராணிகள் பக்கலிலும் திருவடிகளை வைத்தபடி, வ்யாப்தியில் வரைத லில்லாதாப்போலே யாய்த்திதுவும். வ்யாப்திக்குக் கருத்து—இவற்றினுடைய ஸத்தை யுண்டாக்குகைக்காக. இங்கு இவற்றேட்டை ஸ்பர்ஸம் தனக்கு தாரகமாகவிறே நினைத்திருப்பது. இவற்றுக்கு அபேக்ஷிதமின்றிக்கே யிருக்கச் செய்தேயும், உறங்குகிற ப்ரஜையை யணைத்துக்கொண்டு கிடக்கும் மாதாவைப்போலே, இவற்றேட்டை ஸ்பர்ஸந்தனக்குத் தான் உகக்கிறனிறே. வரையாமையும், அதிமாநுஷ சேஷ்டிதங்களும், வடிவழகும் க்ருஷ்ணவதாரத் தோடொத்திருக்கையாலே, ஸ்ரீவாமநாவதாரத்தை யநுபவிக்கிறர்கள்.

கேட்கையே வளருகைக்கு ஹேதுவானபடி யென்னென்ன வருளிச்செய்கிறர் (பிறரித்யாதி.) "உவந்த" என்றதுக்கு - பிறர்காரியம் செய்யப் போருகையாலே யுகந்த என்று கருத்து. வளர்ந்து உலகளந்த என்னுதே "ஓங்கி" என்றத்தால் பலிதமான த்வரையின் மிகுதியை யருளிச்செய்கிறர் (கையிலித்யாதி.)இத்தால்-தாராஜலமும் ஸ்ரீபாததீர்த்தமுங் கூட விழுந்தபடியான வென்று சொல்லிற்றுய்த்து.

* ஓங்குபதவாஸனை (குணுகுணேத்யாதி.) உக்தார்த்தத்தை த்ருஷ்டாந்த பூர்வகம் விஸ்த்தரீகரிக்கிறர் (வ்யாப்தியிலித்யாதி.) வரைதல் - தாரதம்யம். ஆகில் வ்யாப்தியே யமையாதோ, உலகளப்பானென்னென்ன வருளிச்செய்கிறர் (வ்யாப்திக்கித்யாதி வாக்யத்வயத்தாலே.) (உண்டாக்குகைக்காக) என்றவநந்தரம், என்று என்று ஸேஷம். திருவடிகளோட்டை ஸ்பர்ஸம் லோகத்துக்கு தாரகமென்ன வேண்டியிருக்க,அவாப்த்தஸமஸ்தகாமனான தனக்கு தாரகமாகக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறர் (இவற்றுக்கித்யாதி.) ஸ்பர்ஸந்தனக்கு - முழுச்சொல்லு. க்ருஷ்ணன்பக்கல் வ்யாமுக்தரான விவர்கள், மதுரையிற்பிறந்த உத்தமனென்ன வேண்டியிருக்க, "ஓங்கியுலகளந்த" என்னக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறர் (வரையாமையுமித்யாதி;) க்ருஷ்ணன்பக்கல் வ்யாமோஹம் இவன்போலியளவு பெருகிச்சென்றதென்று கருத்து.

(உத்தமன்) இத்தை; இவர்களுக்கு ஒருஉபகாரம் பண்ணினனாக வன்றிக்கே தன்பேறாக நினைத்திருக்கிறபடி. பிறரை ஹிம்ஸித்துத் தன்வயிற்றை வளர்க்கவேணு மென்றிருக்குமவன் - அதமன்; "பிறரும் ஜீவிக்கவேணும், நாமும் ஜீவிக்கவேணும்" என்றிருக்குமவன் - மத்யமன்; தன்னை அழியமாறியாகிலும் பிறர் ஜீவிக்கவேணு மென்னுமவன் - உத்தமன். "భక్తానామ్" "𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑍍" (௫௧) "అప్యహంజీవితం జహ్యామ్" "𑌅𑌪𑍍𑌯𑌹𑌂𑌜𑍀𑌵𑌿𑌤𑌂𑌜𑌹𑍍𑌯𑌾𑌮𑍍" (௫௨) என்றிருக்கை.

(பேர்பாடி) இக்குணங்களுக்குவாசகமான திருநாமங்களை ப்ரீதிபூர்வகமாகப் பாடி. "உத்தமன்பேர்" என்கிறது - திருமந்த்ரத்தை. முதற்பாட்டில், "நாராயணன்" என்கையாலும், இரண்டாம் பாட்டில், "பரமன்" என்று - அந்த மந்த்ரார்த்தமான குணபூர்த்தியைச்

இத்தை யென்றது - மஹாபலி நிரஸநார்த்தமாக உலகளந்தத்தை யென்றபடி. இவர்களுக்கென்றது - இந்த்ராதி தேவதைகளுக்கென்றபடி. "உத்தமன்" என்றதுக்கு-தன்பேறாக நினைத்திருக்கை அர்த்தமாக வருளிச்செய்து, தன்னை யழியமாறியும் பிறர்காரியஞ் செய்கையென்று அர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (பிறரை யித்யாதி வாக்யத்ரயத்தாலே.)

இரண்டாமர்த்தத்துக்கும் மூன்றாமர்த்தத்துக்கு மடைவே ப்ரமாணங்களருளிச்செய்கிறார் (பக்தாநாமித்யாதி;) "నతేరూపం నచాకారోనాయుధాని నచాస్పదమ్ । తథాపిపురుషాకారోభక్తానాంత్వంప్రకాశసే" "𑌨𑌤𑍇𑌰𑍂𑌪𑌂 𑌨𑌚𑌾𑌕𑌾𑌰𑍋 𑌨𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑌿 𑌨𑌚𑌾𑌸𑍍𑌪𑌦𑌮𑍍 । 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌕𑌾𑌰𑍋 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍇." இது நிஷேதமன்று, ஸ்வாதீநதையைத் தவிர்க்கிறது. நமக்கு * అహమపినమమ, భగవతఏవాహమస్మి - 𑌅𑌹𑌮𑌪𑌿𑌨𑌮𑌮, 𑌭𑌗𑌵𑌤𑌏𑌵𑌾𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 போலே, இவனுக்கு "నతేరూపమ్-భక్తానామ్" "𑌨𑌤𑍇𑌰𑍂𑌪𑌮𑍍-𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑍍" என்கை; "అప్యహంజీవితంజహ్యాం త్వాంవా సీతేసలక్ష్మణామ్ । నహిప్రతిజ్ఞాంసంశ్రుత్య బ్రాహ్మణేభ్యోవిశేషతః" "𑌅𑌪𑍍𑌯𑌹𑌂 𑌜𑍀𑌵𑌿𑌤𑌂 𑌜𑌹𑍍𑌯𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂𑌵𑌾 𑌸𑍀𑌤𑍇 𑌸𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 । 𑌨𑌹𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌂 𑌸𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃" என்கிறபடியே - * என்னையுமென்னுடைமையையும் சேர்ந்தாகிலும் ஒருவர்க்குச்செய்கிறோமென்றத்தைத் தவிருகிறிலேனென்று, தன்னையழியமாறியும் பிறர்காரியஞ்செய்யுமவனென்கை.

"பேர்" என்றதுக்கு-எல்லாத் திருநாமங்களையும் என்றருளிச்செய்து, திருமந்த்ரபரமாக அர்த்தமருளிச்செய்கிறார் (உத்தமனித்யாதி.) "பேர்" என்று திருமந்த்ரத்தைச் சொல்லும்படி யெங்ஙனே யென்ன வருளிசெய்கிறார் (முதலித்யாதி.) நம்மாசார்யர்களுக்கு ஶப்தம் முன்னாதல் அர்த்தம் முன்னாதல் சேர்ந்த திருமந்த்ரத்தை யநுஸந்திக்கை நியதமாகையாலே - முதற்பாட்டில் (ஶப்தமும், இரண்டாம்பாட்டில் "பாற்கடலுள்பைய்த்துயின்ற பரமன்"

சொல்லுகையாலும், இதில் மந்த்ரோக்தவ்யாப்திக்கு ப்ரத்யபிஜ்ஞா கரமான த்ரைவிக்ரமாபதாநத்தைச் சொல்லுகையாலும், திருமந்த்ரத்தைச் சொல்லுகிறது. திருமங்கையாழ்வார், "மந்திரத்தை மந்திரத்தால்" என்று மந்த்ரத்தைச்சொல்லி, அநந்தரத்திலே அதில் உக்தமான வ்யாப்திக்கு ப்ரத்யபிஜ்ஞாகரமான த்ரைவிக்ரமாபதாநத்தை அநந்தரம் பாட்டிலே யருளிச்செய்தாரிறே. (உத்தமன்பேர்) அவன் றனக்கும் பிறர்க்கு முண்டான வாசிபோலும் அவனுக்கும் திருநாமத்துக்கும். கட்டிப்பொன்போலே அவன்; பணிப்பொன் போலே திருநாமம். அவன்றன்னை இல்லைசெய்கிறவர்களும் திருநாமங்கொண்டு காரியங்கொள்ளாநிற்பர். அதாவது-வ்யாப்திபரிஹாரார்த்தமாகத் திருநாமஸங்கீர்த்தநத்தை விதித்தால் அப்போதே அத்தைச் செய்யாநிற்பர்கள். இனி மாத்ருகாதகனுக்கும் கைநொந்தால் "அம்மே!" என்ன ப்ராப்தி யுண்டாமாப்போலே, திருநாமம் சொல்லுகைக்கு எல்லார்க்கும் ப்ராப்தி யுண்டாயிருக்கும். திருநாமஞ்சொல்லுகைக்கு யோக்யதை ஸம்பாதிக்கவேண்டா, இதுதானே யோக்யதையைப் பண்ணிக் கொடுக்கவற்று.

என்கையாலே-விக்ரஹகுணங்களாலும் ஆத்மகுணங்களாலும் பரமனென்கையாலே, தத்புருஷனிற்சொன்ன குணயோகமும், இப்பாட்டில் "ஓங்கியுலகளந்த" என்று பஹுவ்ரீஹ்யர்த்தமான வ்யாப்தியும் பலித்ததாகையாலே இது திருமந்த்ரார்த்தத்தைச் சொல்லுகிறதென்று கருத்து. ப்ரத்யபிஜ்ஞாகரமான த்ரைவிக்ரமாபதாநமென்றது-குணகுணிநிரூபண மின்றிக்கே யிருக்கையாகிற ஸாத்ருஶ்யத்தாலே ஸ்மாரகமென்றபடி.

உத்தமனைப்பாடியென்றால், பாடும்போது பேரன்றிக்கே பாடக்கூடாதே, "பேர்" என்று விஶேஷிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார்(அவன்றனக்கு மித்யாதி.) பணிப்பொன் - ஆபரணரூபமான பொன். இத்தால் - அவனிலும் அவன் திருநாமம் பரமபோக்யமாகையாலே அவனுடைய அதிஶயத்தையே உள்ளீடாகவைத்துத் திருநாமத்தைப் பாடுகை விவக்ஷித மென்றதாய்த்து. கீழே-போக்யதையால் வந்த வைபவத்தை நியாமகமாக வருளிச்செய்து, பல ப்ரதத்வத்தாலும் அவனிலு மிதுக்குண்டான பெருமையை நியாமகமாக வருளிச்செய்கிறார் (அவன்றன்னையித்யாதி.) இல்லை செய்கிறவர்-நிரீஶ்வரமீமாம்ஸகர். இப்படி சீர்மையை யுடைத்தான திருநாமத்தைச் சொல்லும்போது ப்ரீதனுய்ச் சொல்லவேண்டாவோ வென்ன வருளிச்செய்கிறார் (இனி யித்யாதி வாக்யத்ரயத்தாலே.) ப்ராப்தியுண்டா யென்றது - யோக்யத்தை யுண்டாயென்றபடி.

(நாங்கள்) திருநாமத்தை வாயாலே சொல்லாவிடில் தரிக்கமாட்டாத நாங்கள். நெஞ்சு காவலிடுகிற வூரிலே இது நமக்கு ஸித்திப்பதே! என்று ப்ரீதைகளாய், தங்களை ஶ்லாகிக்கிறார்களென்னவுமாம். (நம்பாவைக்கு) ப்ராபகதயாவன்றிக்கே, ப்ராப்யருசி யிருந்தவிடத்திலிருக்கவொட்டாமல் செய்கிற நோன்புக்கு. (பாவைக்குச் சாற்றி நீராடினால்) நாட்டார்க்கு "நோன்பு" என்றொரு வ்யாஜத்தை யிட்டு நம்முடைய விரஹதாபம்போக நாம் குளித்தால். நோன்பென்றொரு வ்யாஜத்தையிட்டு க்ருஷ்ண ஸம்ஶ்லேஷத்தைப் பண்ணினாலென்றுமாம். (பேர்பாடி-நீராடினால்) ஸம்பந்தஜ்ஞாந பூர்வகமாக க்ருஷ்ணஸம்ஶ்லேஷம் பண்ணினால், பலமும் பலபரதாதாவான உலகளந்தவன்படியாகை.

(தீங்கின்றிநாடெல்லாம்) நாட்டில் * வ்யாதி துர்ப்பிக்ஷாத்யமங்களங்களெல்லாம் போய் ஸம்ருத்தமாய். தந்தாமுடைய ஸுக்ருதமநுபவிக்கிலிறே அவ்வளவிலே நன்மையாவது. "ராமோராஜ்யம்ப்ரஶாஸதி" "ராமோராஜ்யம்வ்யஶாஸத்" (ருரு) என்கிறபடியே தந்தாமுடைய புண்யாநுகுணமாக வன்றிக்கே, பெருமாளுடைய பாக்யத்தாலே, "ப்ரஹ்ருஷ்டமுதிதோலோக:" "வ்யஹ்ருஷ்டமுதிதோலோக:" (ருச) என்று ராஜ்யம் சென்றாப்போலே, இவ்வூரே யன்றிக்கே இவ்வூரோடே

"நம்பாவைக்கு" என்றபோதே நாங்கள் என்றது அர்த்தஸித்தமாயிருக்கவும், "நாங்கள்" என்றதுக்கு இரண்டு தாத்பர்ய மருளிச்செய்கிறார் (திருநாமத்தை யித்யாதி வாக்யத்வயத்தாலே.) இதென்றது - க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்தை. நாங்கள் பாவைக்கு என்ன வமைந்திருக்க, "நம்" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ப்ராபகேத்யாதி.) "நம்பாவைக்கு" என்ற வநந்தரம் "பாவையென்றொரு பேரை" என்று அத்யாஹரித்து, "சாற்றி" என்றதுக்கு- இட்டு என்றர்த்தமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (நாட்டார்க்கித்யாதி.) "பேர்" என்றதுக்கு - திருமந்த்ரமர்த்தமான பக்ஷத்திலே யருளிச்செய்கிறார் (ஸம்பந்தேத்யாதி.)

(ஸம்ருத்தமாய்) என்றதுக்குமேலே, "நீங்காத செல்வம் நிறைந்து" என்றது -ஊரில் ஸம்ருத்தியைச் சொல்லுகையாலே' நாட்டுக்கு அமங்களங்கள் போகையைச் சொன்னது உபலக்ஷணமாய், ஸம்ருத்திபர்யந்தம் சொல்லுகிறதென்று கருத்து. நீராடினால் நாடெல்லாம் ஸம்ருத்தமாம்படி யெங்ஙனே யென்ன வருளிச்செய்கிறார் (தந்தாமித்யாதி.) த்ருஷ்டாந்த பூர்வகம் உக்தார்த்தத்தை விவரிக்கிறார் (ராமோராஜ்யமித்யாதி.) இத்தால்- சேதந கர்மோபாதிகமன்றிக்கே இவர்களிடத்தி லநுக்ரஹத்தாலே இவர்களிருந்த நாடெல்லாம்

ஸம்பந்தித்த நாடெல்லாம் மங்களமாகை. (திங்கள் மும்மாரிபெய்து) வெள்ளக்கேடும் வறட்கேடு மின்றிக்கே ஊறெண்ணெய் விட்டாப்போலே யிருக்கை. ஒன்பதுநாள் வெய்யிலும் ஒருநாள் மழையுமாய். "𑌨𑌿𑌕𑌾𑌮𑍇 𑌨𑌿𑌕𑌾𑌮𑍇 𑌨𑌃 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑍋 𑌵𑌰𑍍𑌷𑌤𑍁" "நிகாமெநிகாமெநஃபர்ஜந்யோவர்ஷது" (௫௫) என்று - அபேக்ஷித்தகாலத்திலே யுண்டாயிருக்கை. (ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயலுகள) கீழ்ச்சொன்ன திருவுலகளந்தருளின ஸர்வேஶ்வரனே யொத்திருக்கை. விடிவோறேநட்டு நாயிறுபோது வந்துபார்த்தால், கைகவித்துப் பார்க்கவேண்டும்படி யிருக்கை. மாரீசன் பெருமாளை "𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌹𑌿 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿" "வ்ருக்ஷெவ்ருக்ஷெஹிபஶ்யாமி" (௫௬) என்றாப்போலே, இவர்களும் ஸ்ரீவாமநநிமித்தமாக "𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌹𑌿 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿" "வ்ருக்ஷெவ்ருக்ஷெஹிபஶ்யாமி" என்றிருக்கிறபடி.

(ஓங்குபெருஞ் செந்நெல்) ஒருமுதலே ஒருசெய்யை விளாக்கொலைகொண்டு அங்கொருவரப்பில்லாமையாலே ஆகாஶாவகாஶமுள்ளளவும் வளர்ந்திருக்கை. (ஊடு கயல் உகள) செருக்காலே யானைக்கன்றுபோலே வளர்ந்த கயல்களானவை செந்நெல்களின்

ஸம்ருத்தமாமென்று கருத்து. (மங்களமாகை) என்றவநந்தரம், கூடும் என்று ஶேஷம். ஊறெண்ணெயென்றது - தலையிலே யூறவூற எண்ணெயிட்டாப்போலே யென்றபடி.

"பெருஞ்செந்நெல்" என்னவமைந்திருக்க, "ஓங்கு" என்று விஶேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கீழித்யாதி.) வளர்ந்த பெருஞ்செந்நெல் என்ன வமைந்திருக்க, "ஓங்கு" என்றத்தாலே தோற்றுகிற அர்த்தத்தை யருளிச்செய்கிறார் (விடிவோறேயித்யாதி.) நாயிறு போதென்றது - ஸூர்யனுச்சிப்படும்போதென்றபடி. கைகவித்தென்றது - ஸூர்யகிரணங்கள் கண்ணுக்குத் தாங்காதபடி தன் கையை வைத்துக்கொண்டென்றபடி. தாங்கள் நீராடினால் வரும் ஸம்ருத்தி சொல்லுமளவில், "திங்கள் மும்மாரி" என்றாப்போலே ஸ்வாபாவிகமான ஸம்ருத்தியைச் சொல்லவேண்டியிருக்க, ஓங்குகையை யிப்படி விஶேஷித்து அதிஶயோக்தியைச் சொல்லுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (மாரீசனித்யாதி;) பயத்தாலே மாரீசனுக்குத் தோற்றுமாப்போலே இவர்களுக்கு ப்ரேமாதிஶயத்தாலே வாமநனுடைய தர்மங்களெங்குந் தோற்றிச் சொல்லுகிறார்களென்று கருத்து.

கீழெல்லாம் தாத்பர்ய மருளிச்செய்து, "பெரும்" என்றதுக்கும் "ஓங்கு" என்றதுக்கும் ஹேதுபூர்வகம் ஶப்தார்த்த மருளிச்செய்கிறார் (ஒருமுதலேயித்யாதி.) "செந்நெல்" என்ற ஏகவசநத்தாலே (ஒருமுதலென்றது

உள்ளேபுக்கு, பேர்கவிடம் பெருமையாலே துள்ளாநிற்கும். விழுக் காட்டறியாமே யகப்பட்டபடி. திருவுலகளந்தருளின ஸர்வேஶ்வரனைக் கண்ட அநுகூலர்பட்டது படாநிற்குமாய்த்து இவை.

(பூங்குவளைப்போதில் பொறிவண்டு கண்படுப்ப) பூத்தகுவளை யிலே என்னுதல்; காலத்திலே என்னுதல்; தர்ஶநீயமான குவளைப் பூவிலே என்னுதல். (பொறிவண்டு கண்படுப்ப) மதுபாநத்தாலும் அந்யோந்ய ஸம்ஶ்லேஷத்தாலும் பிறந்த புகரையுடைய வடிவிலே தொடைகொள்ளலாம்படியிருக்கிற வண்டுகள், தன்னில்தானென்றுமா காரத்தைப் பாரித்துக்கொண்டு புக்கு, புஷ்பத்திலே கிடந்துறங்கி யுணர்ந்தெழுந் திருக்கும்போது, "என்னை நீ யெழுப்பிற்றிலை, என்னை நீ யெழுப்பிற்றிலை" என்று ஒன்றுக்கொன்று "சிறு, பாறு" என்னாநிற்கும். "பள்ளிக்கமலத்திடைப்பட்ட பகுவாயலவன் முகம் நோக்கி - நள்ளியூடும்" என்னக்கடவதிறே. (ஊடு கயல் உகள - பூங் குவளைப்போதில் பொறிவண்டுகண்படுப்ப) குவளைப்பூவிலே, வண்டு, மதுபாநம்பண்ண என்று படிந்ததசையிலே கயல் ஊடேயுகள, செந் நெலும் குவளையு மொக்கவசைந்து, தூங்குமெத்தையிலே யுறங்கும் ராஜபுத்ரர்களைப்போலே வாயில் மதுவோடே வண்டுகள் கண் படுப்ப என்று.

இது, வயலில் ஸம்ருத்தி; இனி ஊரில் ஸம்ருத்தியிருக்கும்படி சொல்லுகிறது (தேங்காதே புக்கிருந்து) எத்தனையேனும் முன்கை யுரவியராயிருப்பார் இழியவேணுமாய்த்து பசுகறக்கப் புகும்போது. இதுக்கடி - பால் மாறுமையாலே யெழுந்திருக்கப் போகாது. இத் தால் - பால்போரும் பெருமையை அநுஸந்தித்தவாறே கறக்கவொரு ப்படுவாரில்லை. திருவடி, ஸமுத்ரம் கடக்க வொருப்பட்டாப்போலே,

---

மத்ஸ்யங்களை யிப்படி வர்ணித்ததுக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (திருவுல களந்தருளின வித்யாதி.)

"பொறி" என்று - அழகாய், அதுக்கு ஹேது பூர்வகமர்த்த மருளிச்செய் கிறார் (மதுபாநமித்யாதி.) கண்படுக்கை - உறங்குகையாய், அதினெல்லை நில த்தை யருளிச்செய்கிறார் (தன்னில் தானித்யாதி.) பகுவாயலவன் - பெரிய வாயையுடைய புருஷநண்டு. நள்ளி - பெண்நண்டு. ஊடும் - வெறுக்குமென்ற படி. ஸமபிவ்யாஹார தாத்பர்ய மருளிச்செய்கிறார் (குவளை யித்யாதி.)

தேங்காதே - ஏங்காதே, புக்கு - கறக்க வொருப்பட்டு, இருந்து - ஒருநிலை யாக விருந்து என்று ஶப்தார்த்தமாய், ஏங்குகைக்கு ப்ரஸக்தியையும் ஒருப்படு கையிலுள்ள அருமையையும் இருக்கைக்கு ஹேதுவையு மருளிச்செய்கிறார் (எத்தனையேனுமித்யாதி வாக்ய சதுஷ்டயத்தாலே.) பால்போருமென்று -

ஒரு ப்படுக்கொண்டு இழிய வேண்டும்படியாய்த்து இருப்பது. (இருந்து) பால்மாறிலிறே எழுந்திருக்கலாவது. ஸ்த்தாவரப்ரதிஷ்டைபோலே யிருந்து (சீர்த்தமுலே) விரலிட்டுச் சுற்றிப்பிடிக்கவொண்ணுது, இரண்டு கையாலும் அணைத்துக் கறக்கவேண்டும்படி கனத்திருக்கை. (பற்றிவாங்கக்குடம் நிறைக்கும்) வாங்குகை - வலிக்கையாய், பற்றிக்கறக்கக் குடம் நிறைக்குமென்னுதல்; முலையைப்பற்றிக் கைவாங்க, தானே நின்று பால்சொரியுமென்னுதல்; இட்டகுடங்கள் வாங்கவாங்க நிறைக்கு மென்னுதல். குடமிடாதாரிழக்கிறது பசுவின் குற்றமன்றே. இச்சையுடையார் ஈஶ்வரனைப்பற்றி க்ருக்தருத்யராமாப்போலே யாய்த்து இவையும்.

(வள்ளல்) கீழே - பால்போரும் பெருமையைச் சொல்லிற்றுகில் இனி வள்ளல்தனமாவது என்னென்னில்; க்ருஷ்ணன்படி இவற்றுக்கு முண்டாயிருக்கை. ஆரேனும் இவன் கழுத்திலே ஓலைகட்டி "தூதுபோ" என்றுல் போமாப்போலே யாய்த்து இவையும். சிறு ப்ரஜைகளுக்குங்கூடக் கட்டவுமடிக்கவு மாம்படி தன்னைக்கொடுத்துக்கொண்டு நிற்கை. (பெரும்பசுக்கள்) புல்லும் தண்ணீரும் தாரகமாக வளர்ந்தவையன்றிக்கே, க்ருஷ்ண ஸ்பர்ஶமே தாரகமாக வளர்ந்தவை யாகையாலே, ஸ்ரீ ஶத்ருஞ்ஜயனைப்போலே யாய்த்து இருப்பது.

(நீங்காதசெல்வம் நிறைந்து) அழிவில்லாத ஸம்பத்து நிரவதிகமாம்படி. சேதநருடைய புண்ய பாபாநுரூபமாகப் படிவிடும் ஸர்வேஶ்வரனடியாக வந்த ஸம்பத்தாகிலிறே அளவுபட் டிருப்பது. "பாபாநாம்வா ஶுபாநாம்வா" "வாவா நாංவா ஶுஹா நாංவா" (ருஎ)

பால் சுரக்குமென்றபடி. "இருந்து" என்றதுக்குச் சொன்ன வர்த்தத்தை விவரிக்கிறுர் (பாலித்யாதி.) "சீர்த்த" என்றதுக்கு - பருத்த என்று அர்த்தமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறுர் (விரலித்யாதி.) "பற்றி" என்றது - பற்ற என்றுய், "சீர்த்தமுலைபற்றி - குடம் - வாங்க - நிறைக்கும்" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி மூன்றுமர்த்த மருளிச்செய்கிறுர் (இட்டவித்யாதி வாக்யத்ரயத்தாலே.) "குடம்" என்றது - ஜாத்யேக வசநம்.

ஐஹிகபலமான ஸம்பத்தை தேஶவிச்சேதமும் காலவிச்சேதமுமின்றிக்கே நிரவதிகமென்னக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறுர் (சேதநருடையவித்யாதி.) (பாபாநாம்) இத்யாதிக்கு - புண்யபாபமடியாக வருமதன்றிக்கேயிருக்கையாலே அவன் க்ருபை அளவு பட்டிராமையால், அத்தால்வரும் ஸம்பத்து மளவில்லாதே நிரவதிகமாம்படி யிருக்குமென்று கருத்து.

ஓங்கியித்யாதி, நீராடினல் – நாடெல்லாம் - தீங்கின்றி, திங்கள் மும்மாரி பெய்திடும்; கயல் - ஓங்குபெருஞ் செந்நெலூடு - உகள, பொறிவண்டு - பூங்

என்னுமவளடியாகவந்த ஸம்பத்தாகையாலே ஊற்றுடைத்தாயிருக்குமிறே இது : ஆகையாலே "நீங்காத செல்வம்" என்கிறது...... (ரு)

குவளைப்போதில் - கண்படுப்பவிருக்கும்; வள்ளல் பெரும்பசுக்கள் - தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலைபற்றி வாங்கக் குடம் நிறைக்கும்; இப்படி நீங்காத செல்வம் நிறைந்திடும்; எம்பாவாய் - எங்கள் வார்த்தையைப் பின்சென்று, ஓர் - ஒருங்கோள், - அஷ்டாக்ஷர வித்தருடைய வைபவத்தை புத்திபண்ணுங்கோளென்றறி என்றந்வயம் கண்டுகொள்வது.... ... ... (ரு)

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அவதாரிகை.—மூன்றும் பாட்டு. (ஓங்கியித்யாதி.) இப்பாட்டில் தங்கள் நோன்புக்கு அநுமதிதாநம்பண்ணினருக்கு வரக்கடவ த்ருஷ்டபலத்தைச் சொல்லுகிறார்கள்.

(ஓங்கி) ஸம்ஸாரிசேதநோஜ்ஜீவநார்த்தமாக பரமபதத்தில் நின்றும் திருப்பாற்கடலிலே சாய்ந்தருளி; * ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷணாயிருக்கிறகாலத்திலே, ஒருவனுக்கு ஆகஸ்மிக ஸ்வகடாக்ஷத்தாலே ஸத்த்வோத்ரேகம்பிறந்து, "அஹங்காராபிபூதரான நமக்கு ரக்ஷகனாவான் ஆர்?" என்று ரக்ஷகாபேக்ஷை பிறந்தவாறே, அதுவே விளைநீராக அபிவ்ருத்தனாய். (உலகளந்த) ஆபிமுக்யமுடைய ஒரு சேதநனை மாத்ரமன்றிக்கே, "எமர் - கீழ்மேல் - ஏழெழுபிறப்பும் - கேசவன்றமர்" என்கிறபடியே-அவனோடே ஸம்பந்தமுடைய அனைவரையும் தன் திருவடிகளாலே யளந்து தனக்கு ஶேஷமாக்கிக்கொண்ட. இத்தால் அஹங்கார க்ரஸ்தரானவர்களை, மஹாபலியபிமாநத்தில் நின்றும் பூமியைமீட்டுத் தன் திருவடிகளாலே அளந்து தனக்கு ஶேஷமாக்கிக்கொண்டாப்போலே, தனக்கு ஶேஷமாக்கிக்கொண்டமையைச் சொல்லுகிறது. (உத்தமன்) தன்னை அழியமாறியாகிலும் பிறர்காரியம் செய்யுமவனாகையாலே "உத்தமன்" என்கிறது. (பேர்பாடி) உத்தமன் பேருண்டு - அவனுடைய வாத்ஸல்ய ப்ரகாஶகமான திருமந்த்ரம், அத்தை ஸ்வயம் புருஷார்த்தமாகப்பாடி.

(நாங்கள் நம்பாவைக்குச்சாற்றி) அநந்யோபாயரான நாங்கள், ஸ்வயம் ப்ரயோஜநமான நோன்பை உத்தேஶித்து வ்யாஜமாக்கி. (நீராடினால்) பகவதநுபவத்தைப் பண்ணினால். (நாடெல்லாம்) பூமியெங்கும். (தீங்கின்றி) தேஹாத்மாபிமாநாதி தோஷங்களொன்றுமின்றிக்கே. (திங்கள்மும்மாரிபெய்தித்யாதி) ஸத்த்வோத்தரமான காலத்திலே அநந்யார்ஹஶேஷத்வ அநந்யஶரணத்வ அநந்யபோக்யத்வங்க

ளாகிற ஆகாரத்ரய ஜ்ஞாநமுண்டாய் அத்தாலே அபிவ்ருத்தங்களாய் ஒருருக்கொருவரே போரும்படியான சேதநருடைய நடுவிலே தத்ஸம்பந்திகளாய் ததேகதாரகரான ஆத்மவர்க்கங்கள் களிப்பாலே துள்ளாநிற்க. (பூங்குவளை யித்யாதி.) "సౌమ్యరూపః" "ஸௌந்தர்யவ:" என்கிறபடியே ஜ்ஞாநிகளோடொக்கவளர்ந்து அத்தாலே தர்ஶநீயரான ஜ்ஞாநாதிகரிடங்களிலே, ஸ்வாமித்வஸூசகமான திருவபிஷேக முடையனாய் பரஞ்ஜ்யோதிஸ்ஸான ஸர்வேஶ்வரன் லக்ஷ்மீஸநாதனாய் ஜ்ஞாநலப்தனாய் வந்து அவர்களுடைய ஹ்ருதயங்களிலே ஸுகஸ்பர்ஶத்தாலே கண்வளர. இது சேதநஸம்ருத்தி; இனி சைதந்ய ஸம்ருத்தியைச் சொல்லுகிறது. இது ஶிஷ்ய ஸம்ருத்தியைச் சொல்லுகிறதாகவுமாம்.

(தேங்காதே யித்யாதி.) "దీర్ఘసూత్రుడు..." "யீரஸ்லாரணஉ-வாமதஃ" என்கிறபடியே - பிற்காலியாமல் குருகுலத்திலே ப்ரவேஶித்து, "సంవత్సరమ్" "ஸம்வத்ஸரம்" இத்யாதிப்படியே - ஸுஸ்த்திரனாயிருந்து, தன்னைப் பற்றினார்க்கு பரமபதநாதனோடே பரமஸாம்யாபத்தியைப் பண்ணிக்கொடுக்கும் சீர்மையை யுடையனாய், ப்ரஜைக்கு முலைபோலே ஶிஷ்யனுக்கு தாரகமான திருவடிகளைப்பற்றி ப்ரார்த்திக்க, உபதேஶபாத்ர பூதரான ஶிஷ்யரை பரிபூர்ணஜ்ஞாநிகளாக்கு மவர்களாய் ஶிஷ்யவிதேயராய் நிரந்தர பகவத்குணாநுபவத்தாலே பரிபுஷ்டரான ஆசார்யர்களுடைய அவிச்சிந்நமான ஸம்பத்து பரிபூர்ணமாய்த்து. ... ... (௩)

அ.—நாலாம் பாட்டு. உபயவிபூதி யுக்தனான ஸர்வேஶ்வரன் இங்கே க்ருஷ்ணனாய்வந்து தன்னைத் தாழ விட்டு, பெண்கள் சொல்லிற்றுச் செய்யும்படிக் கீடாகத் தான் கையாளாய், அவர்களுடைய அபேக்ஷித ஸம்விதாநம்பண்ணிப் போருகிறபடி கண்டால், இதர தேவதைகளுக்குச் சொல்லவேண்டாவிறே. இவர்களும் அவனுமான

நாலாம் பாட்டு. (ஆழியித்யாதி.) இவர்கள் அஷ்டாக்ஷர வித்தராகையாலே தேவதாந்தர ப்ரார்த்தநை ஸ்வரூப விருத்தமாகையாலே அவர்களை விதிக்கிறாரென்று திருவுள்ளம்பற்றி, அந்த தேவதைகள் விதேயராகைக்கு கைமுதிக ந்யாயத்தாலே உபபாதித்தருளிச்செய்கிறார் (உபயேத்யாதி.) அவன் பரமப்ரணயியாகையாலே ஆளாயிருந்தானேயாகில் இவர்களிருக்கும்படி யெங்ஙனே யென்ன வருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி.) ஸ்வரூபலாபத்தி லா

சேர்த்தியிலே கிஞ்சித்கரித்து அத்தாலே ஸ்வரூபலாப மாயிருக்குமிறே. "ద్రవన్తి దైత్యాః ప్రణమన్తి దేవతాః" "த்ரவந்தி தைத்யா: ப்ரணமந்தி தேவதா:" (ருஅ) என்கிறபடியே பகவத்ஸமாஶ்ரயணம் பண்ணினார்க்கு தேவதைகள் தாங்களேவந்து [க] உபஸ்த்திதராகக்கடவரிறே: 'స్వపురుషమ్' "ஸ்வபுருஷம்" (ருகூ) இத்யாதி. இஶ்ஶ்லோகார்த்தத்தைத் திருமழிசைப்பிரானருளிச்செய்தார்; "திறம்பேல்மின்" இத்யாதி. ஆக, இப்படி பகவத்ஸமாஶ்ரயணம் பண்ணினாரை இதரதேவதைகள் அநுவர்த்திக்கக் கடவராகையாலே, வர்ஷதேவதையான பர்ஜந்யன், "நாம் இச்சேர்த்தியிலே கிஞ்சித்கரித்து ஸ்வரூபம் பெறவேணும்" என்று வந்து, "நானிங்குத்தைக்குச் செய்யவேண்டு மடிமையை நியமிக்கவேணும்" என்ன; செய்யக்கடவபடியை "இன்னபடியும், இன்னபடியும்" என்று கையோலைசெய்து கொடுக்கிறார்கள்.

சையாலே கிஞ்சித்கரிக்க வருமவர்களென்னுமளவே யன்றிக்கே, "భీషాస్మాద్వాతః పవతే" "பீஷாஸ்மாத் வாத: பவதே" இத்யாதிப்படியே எம்பெருமான் பக்கல் பீதியாலும், ததீயரைக்கண்டஞ்சி கிஞ்சித்கரிக்கு மவர்களென்று நியாமகாந்தரத்தை ப்ரமாண பூர்வக மருளிச்செய்கிறார் (த்ரவந்தீத்யாதி.) ஸம்வாதாந்தரங்களை யருளிச்செய்கிறார் (ஸ்வபுருஷமித்யாதி;) 'స్వపురుషమభివీక్ష్య పాశహస్తం వదతి యమః కిల తస్య కర్ణమూలే। పరిహర మధుసూదనప్రపన్నాన్ ప్రభురహమన్యనృణాం న వైష్ణవానామ్" "ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே । பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் நவைஷ்ணவாநாம்." திறம்பேல்மின் கண்டீர் தப்பாதே கிடிகோள். திருவடிதன்னாமம் மறந்தும் - வகுத்தவனுடைய திருநாமத்தை மறக்கவுமாம். "భవశరణమ్" "பவசரணம்" என்கிறதும் கழியுண்கிறதித்தாலே. புறந்தொழா மாந்தரை - தேவதாந்தர ஸ்பர்ஶ மின்றிக்கே யிருக்குமவர்களை. பர்த்தாவோடு பார்யைக்குப் பொருத்தமில்லையே யாகிலும் ருசியுண்டானவன்று கூடலாம்; பர்த்ரந்தர ஸம்ஶ்லேஷமுண்டானால் யோக்யதையுங் கெடுமெத்தனையிறே. இறைஞ்சியும் சாதுவராய்ப் போதுமின்களென்றான் - வணங்கி அநுகூலவேஷத்தோடே போருங்கோளென்றான். நமனும் தன் தூதுவரைக் கூவிச்செவிக்கு "స్వపురుషమ్" "ஸ்வபுருஷம்" என்றாப்போலேயும், "కర్ణమూలే" "கர்ணமூலே" என்றாப்போலேயும், "தூத·ர் துவர்' என்றும் "செவிக்கு" என்று மருளிச்செய்தாரிறே. கையோலை செய்தென்றது - ஜ்ஞாபகத்துக்குச் சீட்டெழுதிக்கொடுக்கை.

[க] உபஸ்திதர் - ஶேஷபூதர்.

மூ.—ஆழி மழைக்கண்ணா வொன்றுநீ கைகரவேல்
ஆழியுட் புக்கு முகந்து கொடார்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (௪)

பதம்.	உரை,
ஆழி	கடல்போலே கம்பீரமான ஸ்வபாவத்தையுடையனாய்
மழைக்கண்ணா!	வர்ஷத்துக்கு நிர்வாஹகனான
நீ	நீ
கை	உன் ஔதார்யத்தில்
ஒன்றும்	அல்பமும்
கரவேல்;	மாறாதொழியவேணுமென்று

வர்ஷதேவதையான பர்ஜந்யனைப்பார்த்துச்சொல்ல;
அவன் "நான்செய்யவேண்டு மடிமையை நியமிக்கவேணும்" என்ன;

ஆழிஉள்	நடுக்கடலில்
புக்கு	இழிந்து
முகந்துகொடு	நீரையெல்லாம் மொண்டுகொண்டு
ஆர்த்து	பெருமுழக்கமிட்டு
ஏறி,	ஆகாசமெங்கும் பரம்பியும்
ஊழி	காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களுக்கும்
முதல்வன்	காரணபூதனுடைய
உருவம்போல்	வடிவுபோலே
மெய்கறுத்து,	உடம்பு கறுத்தும்,
பாழி	இடமுடைத்தாய்
அம்	அழகிதாயிருந்துள்ள
தோள் உடை	திருத்தோள்களையுடையனாய்
பற்பநாபன்	திருநாபீகமலத்தையுடையனான ஸர்வேஶ்வரனுடைய
கையில்	வலத்திருக்கையில் வர்த்திக்கிற
ஆழிபோல்	திருவாழியாழ்வானைப்போல்
மின்னி,	ப்ரகாஶித்துக்கொண்டும்,
கையில்	இடத்திருக்கையில் வர்த்திக்கிற
வலம்புரிபோல்	ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானைப்போல்
நின்று அதிர்ந்து,	மாறாதேநின்று ஶப்தித்தும்,

உலகினில் வாழ,	லோகத்திலுள்ளார் வாழும்படியாகவும்,
நாங்களும்	நோன்பு நோற்கின்ற நாங்களும்
மார்கழி	எங்கள் நினைவு பலிக்கும்படியான மார்கழி மாஸத்தில்
மகிழ்ந்து	க்ருஷ்ணஸம்ஸ்லேஷத்தால் பிறந்த ஸந்தோஷத்துடன்
நீராட,	ஸ்நாநஞ் செய்யவும்,
தாழாதே,	காலவிளம்பமின்றியே,
சார்ங்கம் உதைத்த	ஸ்ரீஶார்ங்கத்தால் தள்ளப்பட்ட
சரமழைபோல்	பாணவர்ஷம்போலே
பெய்திடாய்;	மழைபெய்யவேணும்;
எம்பாவாய்	எங்கள் வார்த்தையைப் பின்சென்று
ஓர்.	இதினுண்மையை விசாரித்துக்கொள் என்று அநுக்ரஹிக்கிறார்கள்.

வ்யா.—(ஆழிமழைக்கண்ணா) கம்பீரஸ்வபாவத்தையுடையனாய் வர்ஷத்துக்கு நிர்வாஹகனானவனே. ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை ப்ரஹ்ம ருத்ரர் தலையிலே போகட்டு, ஸ்வரூபத்துக்குச் சேர்ந்த பாலந விதியைத் தான் நடத்துமாப்போலே, நாட்டாரைக்கட்டுவது விடுவதாகிற · க்ரௌர்யவ்யாபாரத்தை யமாதிகள் தலையில் ஏறிட்டு, "நம்மோபாதி ஜகத்தை ஈரக்கையாலே தடவி நோக்கவல்லன்" என்று ஈஶ்வரனாலே மதிக்கப்பட்டவனல்லையோ நீ. இத்தால் – நாட்டார் சிறுமை பாராதே, உன்பெருமைக்கு ஈடாக வர்ஷியென்கை. "ஆழி மழை" என்று – மண்டல வர்ஷமாக்கி, மண்டலவர்ஷத்துக்கு நிர்வாஹகனானவனே யென்னவுமாம். ஸுக்ருதம் பண்ணினாரிருந்தவிடத்தே வர்ஷித்தும், பாபம் பண்ணினாரிருந்தவிடத்தே வர்ஷியாமையும் பொருவதொன்றுண்டிறே, எங்கள் பாக்யத்தையே நினைத்து புஜிக்கும் நாடாகையாலே நீ யங்ஙன் புதைத்துப் பார்க்கவொண்ணாது,

"ஆழி" என்று-ஸமுத்ரமாய், அதுபோன்றவனென்று ஶப்தார்த்தமாய், பலிதார்த்தத்தை யருளிச்செய்கிறார் (கம்பீரேத்யாதி.) இவனுக்கு காம்பீர்யமேதென்ன; எம்பெருமானாலே மதிக்கப்படுகையால் வந்த பெருமையென்று, அத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (ஸ்ருஷ்டி யித்யாதி.) "ஆழி" என்று - வட்டமாய், அத்தால் நினைக்கிறது - மண்டலத்தையாய், அதுதானும் ஓரிடங்களிலே சுழித்து வர்ஷிக்கையாய், மண்டல வர்ஷத்துக்கு நிர்வாஹகனே யென்று தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (ஆழிமழையித்யாதி.) இப்படியிவனை விஶேஷித்ததுக்குப்ரக்ருதோபயோகங்காட்டுகிறார்(ஸுக்ருதமித்யாதி.) புதைத்தென்றது - சிலதேஶத்திலே பெய்யாதே நீரை யடக்கிக்கொண்டென்றபடி. எம்பெருமான் நியமித்தபடியன்றோ நான் செய்வதென்ன வருளிச்செய்

“ஸாஸாநாம்வாஸுபூநாம்வா” “வாவா நாம்வா ஸஹா நாம்வா” (நிஎ) என்கிற எங்கள் கோடியிலே யாகவேணும். நாட்டுக்கு இட்டநினை வைக்கொண்டு படுக்கைப்பற்றிலே செல்லாதேகொள். இவனை இங்ஙனேசொல்லுவா னென்னென்னில் ; இப்பெண்கள் பாலைகளாகையாலே யிவன்பேர் சொல்லவறியார்கள் ; ஆகையாலே இவனதிகரித்த கார்யந் தன்னையிட்டே சொல்லுகிறுர்கள்.

(ஒன்று நீ கைகரவேல்) உன்னுடைய ஔதார்யத்திலொன்றும் மாறுதபடி தோற்றவேணும். “கை” என்று - கொடை. கரக்கை- மாறுகை. சேதநனுடைய நன்மை தீமைகளைக் கணக்கிட்டுப் படிவைக்கும் குசாண்டுள்ள ஈஶ்வரகோஷ்டியைப் பார்த்து விஷமமாக வர்ஷியாதே, “ஸர்வேஷாமுபகாரார்த்தம்” “நகஶ்சிந்நாபராத்யதி” (நிஎ) என்று- பாபமே பச்சையாக ரக்ஷிக்குமெங்கள் படியைப்பார்த்து எங்குமொக்க வர்ஷிக்கவேணும்.

(ஆழியுட்புக்கு) ஸகரர் கல்லின சிறுகுழியிலன்றிக்கே, ஸமுத்ரத்திலே போய்ப்புகவேணும். அதிலும் வாய்கரையிலே யாகவொண்ணுது, நடுவே சென்றிழியவேணும். (முகந்துகொடு) இழிந்தால், மேற்பட்டஜலம் கொண்டுபோரவொண்ணுது, கடலை மணலே ஶேஷிக்கும்படி க்ரவிக்கவேணும். (ஆர்த்து) இராமடம் ஊட்டுவாரைப் போலே முகம்தோற்றுமல்நின்று ரக்ஷிக்கு மீஶ்வரனைப்போலே யாக

கிறுர் (நாட்டுக்கித்யாதி.) படுக்கைப்பற்றிலென்றது - அந்தஃபுரத்துக்குவிட்ட தேஶத்திலே யென்றபடி. பர்ஜந்யனே ! என்று பேரிட்டுச் சொல்லாதே, “ஆழி மழைக்கண்ணு” என்று தொழிலையிட்டுச் சொல்லுகிறுர்களென்று நிர்வஹிப்பாருமுண்டு.

“நீ, கையில், ஒன்றும் - அல்பமும், கரவேல்” என்றந்வயித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறுர் (உன்னுடையவித்யாதி.) மாறுகைக்கு ப்ரஸக்தியைக் காட்டிக்கொண்டு விவரிக்கிறுர் (சேதநனுடைய வித்யாதி.)குசாண்டு - குஸ்ருஷ்டி. பச்சை - உபஹாரம்.

“ஆழி” என்றது - ஸ்வாபாவிகமான ஆழத்தை யுடைத்தானதென்று விவக்ஷித்து, வ்யாவ்ருத்தி பூர்வகம் தாத்பர்ய மருளிச்செய்கிறுர் (ஸகரரித்யாதி.) ஸகரர் கல்லின சிறுகுழியிலென்றது - ஸகர புத்ரர்கள் கல்லின விந்தப் பக்கத்தில் முன்பாழியிலே யென்றபடி. “உட்புக்கு” என்ற பதச்சேர்த்தியைக் கடாக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறுர் (இழிந்தாலித்யாதி வாக்யத்வயத்தாலே.) “ஆர்த்து-” த்வநித்து என்றுய், இது மேகத்துக்கு ஸஹஜமாயிருக்க இப்படி சொல்லுகைக்கு வ்யாவ்ருத்தி பூர்வக மர்த்தமருளிச்செய்கிறுர் (இராவித்யாதி.) அவிதேய புத்ரராய் தர்மச்சாவடியிலெ பட்டினியே கிடப்பார்க்குத் தங்கள் ப்ரேமத்தாலே மாதாபிதாக்கள் இராவிலே, மடத்திலே - தர்மச்சாவடி-

வொண்ணாது. [க] அநஶநத்திலே தீக்ஷித்த முதலிகளடையத்திரு வடிவரவாலே ஸத்தைபெற்று ஸம்ப்ரமித்தாப்போலே, நாடடைய உங்களுடைய த்வநிகேட்டு வாழும்படி மின்னிமுழங்கி வில்லிட்டுக் கொண்டு பெரிய ஸம்ப்ரமத்தோடேவந்து தோற்றவேணும். (ஏறி) ஆகாஶாவகாஶமிட மடையும்படி உங்கள் வடிவைக்கொண்டு [உ] பாரிக்கவேணும்; "விண்ணீலமேலாப்பு விரித்தாப்போல்" என்றும், "மதயானைபோலெழுந்த மாமுகில்காள்" என்றுஞ் சொல்லுகிற படியே.

(ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்து) ஜகத்காரணபூத னானவனுடைய வடிவுபோலே யிருக்கவேணும். இந்நிர்த்தேஶத்து க்குக் கருத்தென்னென்னில்; நெடுநாள் தன்பக்கலிலே [ங] ஸம்ஹ்ருத தமாய்க்கிடந்த ஜகத்தை யுண்டாக்குவதாக ஸங்கல்பித்தவாறே, பண்டுபோலன்றிக்கே கருவடைந்த பயிர்போலே நிறத்திலே வருவ தொரு வேறுபாடுண்டு; அத்தை நினைக்கிறார்கள். காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களையு முண்டாக்கினவனுடைய வடிவு உங்களுக்கு உண்டாகவேணும். (மெய்கறுத்து) அகவாயில் நீர்மை உங்களா லுண்டாக்க வொண்ணாதிறே. வர்ஷித்தால் அநந்தரம் வெளுத்துப் போமவையிறே இவை.

யிலே, அந்நத்தைக் கொடுத்து விடுமவர்களைப்போலே யென்றபடி. முகந்தோற் றுமலென்றது - இவர்கள் தங்களையு மறியாம லென்றபடி. திருவடிவரவாலே யென்றது - பிராட்டியைத் திருவடிதொழுத ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஆர்த்துக் கொண்டுவந்த திருவடிவரவாலே யென்றபடி. முகந்துகொடார்த்துப் பெய்தி டாய் என்ன வமைந்திருக்க, "ஏறி" என்றதுக்குக் கருத்து (ஆகாஶேத்யாதி.) மேலாப்பு - விதாநம்.

"ஊழி" என்று - காலத்தைச்சொல்லுகிறதாய், அது உபலக்ஷணமாய் ஜக த்தைச் சொல்லுகிறதாகத் திருவுள்ளம்பற்றி ஶப்தார்த்த மருளிச்செய்கிறார் (ஜகத்காரணபூதனித்யாதி.) "ஊழி" என்றபதம் - ஜகத்தைச்சொல்லும் ப்ரகா ரத்தை முக்தகண்டமாகத் தாமேகாட்டாநின்றுகொண்டு, உக்தார்த்தத்தை நிக மிக்கிறார் (காலேத்யாதி.) "உருவம்போல் - கறுத்து" என்ன மெய் அர்த்தஸித் தமாயிருக்கவும், "மெய்" என்று விஶேஷித்ததுக்கு - மெய்யேகறுத்தென்று அர்த்தம் திருவுள்ளம்பற்றி, வ்யாவ்ருத்யங்காட்டுகிறார் (அகவாயிலித்யாதி.) நீர்மை - க்ருபை. அகவாயில் க்ருபையில்லாமைக்கு நியாமகங்காட்டுகிறார் (வர் ஷித்தாலித்யாதி;(ஜகத்துக்கு வர்ஷத்தையுபகரிக்கும்போது க்ருபையுண்டா கில் பின்பு வைவர்ண்யம் ஜநிக்கவொண்ணாதிறேயென்று கருத்து.

[க] அநஶநம் - பட்டினியிருக்கை. [உ] பாரிக்கை - பரப்புகை. [ங] ஸம்ஹ்ருதமாய் - மயங்கி.

(பாழிஅம்தோள்) "బాహుచ్ఛాయా మవష్టబ్ధో యస్యలోకో మహాత్మనః" "𑌬𑌾𑌹𑍁𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌮𑌵𑌷𑍍𑌟𑌬𑍍𑌧𑍋 𑌯𑌸𑍍𑌯𑌲𑍋𑌕𑍋 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃" (சு0) என்கிறபடியே - உபயவிபூதியு மொதுங்கினாலும் ஒதுங்கின ரக்ஷ்யவர்க்கமளவுபட்டு, ரக்ஷகனுடைய காவல்துடிப்பே மிக்கிருக்கை. (பாழி) வலியுடையதோள் என்னுதல்; இடமுடைய தோளென்னுதல். (அம்தோள்) அழகியதோள் அங்ஙனன்றிக்கே, குழைச்சரக்கேயாகிலும் விடவொண்ணாத போக்யதை மிக்கிருக்கை. ரக்ஷகமுமாய் அதுதானே போக்யமுமாயிருக்கை. (பாழி அம்தோளுடைப் பற்பநாபன்) பிள்ளைகளைத் தொட்டிலிலேவளர்த்திப் புற்பாயிட்டுப் பூரித்து ஆயுதங்கொண்டுநோக்கி யிருப்பாரைப்போலே, திருநாபீகமலத்திலே வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்குக் காரணபூதனான ப்ரஹ்மாவைப்பெற்றுவைத்துத் திருத்தோள்களாலே காத்துக்கொண் டிருக்கிறவன். (பற்பநாபன் கையிலாழிபோல்மின்னி) ஸ்ருஷ்டிக்குமுதலான ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்த திருநாபீகமலத்தையுடைய ஸர்வேஶ்வரன்கையில் திருவாழியோபாதி மின்னவேணும். இந்நிர்ப்பந்தத்துக்குக் கருத்தென்னென்னில்; "పుత్రస్తే జాతః" "𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍇 𑌜𑌾𑌤𑌃" என்றால் அத்தால் வந்த ஹர்ஷம் விஞ்சியிருக்கச்செய்தேயும் காம்பீர்யத்தாலே அது தோற்றாதிருப்பர்கள். அவ்வவர்க்குரிய அகம்படியரானவர்கள், அந்த ப்ரீதிக்குப் போக்குவிட்டு நெய்யாடல் பொற்றிக்கொண்டு திரியுமாப்போலே, ப்ரதமஜனான ப்ரஹ்மாவுண்டானபின்பு ஸர்வேஶ்வரனுக்குப்பிறந்த ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டுக்கொண்டாடினான் திருவாழியாழ்வான்; ஆகையாலே அவனையொப்பாகச்சொல்லுகிறது.

"பாழி" என்றதுக்கு - இடமுடைத்தாயென்று அர்த்தத்தைவிவக்ஷித்து, த்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார் (பாஹுச்சாயாமித்யாதி.) "யஸ்ய" என்றபோதே - லோகத்துக்கெல்லாம் ஆஶ்ரயமாயிருக்கிற அதிஶயந்தோற்றியிருக்கவும், "மஹாத்மந:" என்கைக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உபயேத்யாதி.) குழைச்சரக்கு - அஸாரமானவஸ்து. "பற்பநாபன்" என்னவமைந்திருக்க, "பாழியந்தோளுடை" என்று விஶேஷித்ததுக்கு ஸத்ருஷ்டாந்த தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பிள்ளைகளையித்யாதி.) கர்ணிகை தொட்டிலாகவும், அத்தைச் சூழ்ந்திருக்கும் கேஸரங்கள் புற்பாயாகவும், த்ருஷ்டாந்தாநுரூபம் கண்டுகொள்வது. ஆழிபோலே என்னவமைந்திருக்க, "பற்பநாபன் கையில்" என்றதுக்கு ஶங்காபரிஹாரரூபேண ஸாவமருளிச்செய்கிறார் (இந்நிர்ப்பந்தத்துக்கித்யாதி.) அகம்படியர் - ஶேஷபூதர்.

"வாழவுலகினிற் பெய்திடாய்" என்று - லோகமெல்லாம் வாழவேணுமென்னு மிவர்களபிப்ராயத்தைத் திருவுள்ளம்பற்றி, "வலம்புரிபோல்" என்றது

(வலம்புரிபோல் நின்றதிர்ந்து) பாரதஸமரத்தில் ஸ்ரீபாஞ்சஜந்யத்வநிபோலே யிருக்கவேணும். "సఘోషోధార్తరాష్ట్రాణాం హృదయాని వ్యదారయత్" "ஸகோஷோதார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்" (சூக)என்கிறபடியே அநுகூலர் வாழவும் ப்ரதிகூலர் முடியவும் ஆகவேணும். (நின்றதிர்ந்து) அதுபோலே யொருக்கால்முழங்கிவிடவொண்ணாது, மாறாதேநின்று அதிரவேணும். (தாழாதே) நோன்பிலே நின்று உபக்ரமித்து உபாஸக்ருஸைகளாயிருந்த எங்கள் வடிவிருந்தபடி கண்டாயிறே; அத்தனை காலவிளம்பத்தோர்டேயாகவொண்ணாது. ஆர்த்திக்கு முற்பாடனாய் ரக்ஷிக்கு மீஸ்வரனைப்போலே யாகவேணும். தேவமாத்ருகம்போலன்றிக்கே, பகவத்ஸமாஸ்ரயணம் நதீமாத்ருகம்போலே [க] சரதமென்கை. (சார்ங்கமுதைத்த சரமழைபோல்) இரைபெறாத பாம்புபோலே, முன்பு விஷயமில்லாமையாலே அடங்கியிருந்த ஸ்ரீஸார்ங்கம், சக்ரவர்த்தித்திருமகன் கடைக்கணித்தவாறே நூறாயிரம் ஸரவ்ருஷ்டியைத் தானேபண்ணிற்று. *எய்வண்ணவெஞ்சிலையிறே. உடையவன்அம்புபெறுக்கியிடுகை. (சார்ங்கமுதைத்த) அகம்படியர் கிளர்ந்தால் அரசனாலு மடக்கப்போகாதிறே; அதுபோலே, பெருமாள் கடைக்கணித்தபின்பு பெருமாளாலும் விலக்கவொண்ணாதாயிருக்கை. "అవష్టభ్యమహద్ధనుః" "அவஷ்டப்ய மஹத்தநு:" (சூஉ) என்னக்கடவதிறே. (சரமழை) "శరవర్షం వవర్ష హ" "ஸரவர்ஷம் வவர்ஷ ஹ" (சூரு) என்கிறபடியே. (வாழ உலகினிற்பெய்திடாய்)

க்கு - வ்யாவ்ருத்திபூர்வகம் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பாரதேத்யாதி.) இத்தை விவரிக்கிறார் (ஸகோஷ இத்யாதி.) ப்ரதிகூலரென்றது - அதிமாத்ர ப்ரதிகூலரென்றபடி. பர்ஜந்யன் தேவதாந்தரமாகையாலே தாழ்ந்திருக்க ப்ரஸக்தியுண்டென்று திருவுள்ளம்பற்றி, தாழ்ந்திருக்கைக்கு ஹேதுபூர்வகம் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (நோன்பிலேயித்யாதி.) (கண்டாயிறே) என்ற வநந்தரம், ஆகையாலே என்று ஸேஷம். தேவதாந்தரங்கள் விளம்பிக்கைக்கும், ஈஸ்வரன் அவிளம்பேந ரக்ஷிக்கைக்கும் த்ருஷ்டாந்த மருளிச்செய்யாநின்றுகொண்டு, ஸமர்த்திக்கிறார் (தேவேத்யாதி.) சரதம் - அமோகம். எய்கையே - சரம் விடுகையே, வண்ணம் - ஸ்வபாவமாகவுடையதாய், வெம் - க்ரூரமான, சிலை - தநுஸ்ஸென்று பாசுரார்த்தம். (சரமழை) என்ற வநந்தரம், "తతోరామోమహాతేజా ధనురాదాయవీర్యవాన్। ప్రవిశ్యరాక్షసంసైన్యమ్" "ததோராமோமஹாதேஜா தநுராதாயவீர்யவாந் । ப்ரவிஸ்யராக்ஷஸம்ஸைந்யம்" என்று வசநஸேஷம் சொல்லிக்கொள்வது.

[க] சரம் - நிஸ்சயம்; "சரதமும் வாய்மையும் ஆண்மையும் திட்டமும் தூய்மையும் மெய்யெனச்சொல்லுவர் புலவர்" என்று நிகண்டு.

த்ருஷ்டாந்தமான ஶரவர்ஷத்தில் ராக்ஷஸஜாதியடங்க முடிந்தது, அங்ஙனொண்ணாது, அநுகூல ப்ரதிகூல விபாகமின்றிக்கே லோகமாக வாழவேணும். அழகிது, ஈஶ்வராஜ்ஞையாலே நான்முன்பே அதிகரித்ததொரு கார்யமன்றோ, இங்குத்தைக்கு நான் கிஞ்சித்கரித்தவனும்படி யென்னென்ன (நாங்களும் மார்கழிநீராட) நாங்கள், காலத்திலேபோய் மார்கழிநீராடக்கடவோம். அதுவும் முன்பே ஊராக நிஶ்சயித்த தொன்றன்றோ, இப்போது வந்த தன்னேற்ற மென்னென்ன (மகிழ்ந்து) நாங்களும் நோன்பு நோற்றோமாய், அந்த நோன்புக்கு ஃபலமான வர்ஷமுண்டாய்த்ததாய், க்ருஷ்ணனோட்டை ஸம்ஶ்லேஷத்தாலே மகிழ்ந்து நீராடக்கடவோம். (மகிழ்ந்து) ஊரார்க்கு, மார்கழிநீராடுகைக்கு மேலே ப்ரீதிபூர்வகமாகக் குளிக்கவேண்டுவதொரு நிர்ப்பந்தமில்லையே. உனக்கு ப்ரியகரமாக க்ருஷ்ணனும் நாங்களும் மகிழ்ந்து குளிக்கிறோம் என்கிறார்கள். † ... ச

மேலுக்கவதாரிகை (அழகித்யாதி.) தன்னேற்றமென்றது - நானுங்களுக்கு கிஞ்சித்கரித்தேனும்படியான அதிஶயமென்றபடி. மகிழுகைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (நாங்களுமித்யாதி.) ப்ரதிக்ரஹணபூர்வகம் உத்தரத்தை யருளிச்செய்கிறார் (ஊரார்க்கித்யாதி.) (ஊரார்க்கு) என்றதுக்கு, (நிர்ப்பந்தமில்லை) என்றத்தோடந்வயம். உனக்கு ப்ரியமாகவென்றது – உனக்கு புருஷார்த்தமாகவென்றபடி. இத்தால் - நாங்களும் க்ருஷ்ணனும் மகிழ்ந்து குளிக்கை அலப்யலாபமன்றோ வென்று கருத்து. இவர்கள் மகிழ்ந்து குளிக்கை அவனுக்கு புருஷார்த்தமென்கைக்கு ஸம்வாதங் காட்டுகிறார் (ப்ரஹர்ஷயிஷ்யாமியித்யாதி.)

ஏல் - ஆழிமழைக்கண்ணா ?, எம்பாவாய் - எங்கள் வார்த்தையைப் பின்சென்று, ஓர் - கையோலை செய்தபடியிலொன்றும் குறையாமல் விசாரித்துக்கொள்ளென்று அநுக்ரஹபுத்தியாலே சொல்லுகிறார்களென்று கண்டுகொள்வது.

ஸ்வாபதேஶவ்யாக்யாநம்.

அ....நாலாம் பாட்டு. (ஆழியித்யாதி) இப்பாட்டில், இவர்களை வர்ஷதேவதை, "அடியேனுக்கொரு கிஞ்சித்காரம் நியமித்தருளவேணும்" என்று ப்ரார்த்திக்க, இவர்கள் அவனுக்கு கைங்கர்யம் நியமித்தபடியைச் சொலுகிறது.

வ்யா.—(ஆழி) அபரிச்சேத்யமான ஜ்ஞாநவைபவத்தை யுடையையாய். (மழைக்கண்ணா) பகவத்காருண்ய வர்ஷநிர்வாஹகனானவனேயென்னுதல் ; பூமிப்பரப்பிலுள்ள சேதநருடைய பகவத்காருண்

†இங்கு "ப்ரஹர்ஷயிஷ்யாமி" என்னும்வாக்யத்தை கோஶாந்தரங்களிற்காண்க.

யத்துக்கு விஷயமாம்படி பண்ணவல்லவனே யென்னுதல்; பகவத்குணாம்ருதவருஷிகளான ஆசார்யர்களுக்கும் ஆசார்யபதம் நிர்வஹிக்குமவனே. (ஒன்றும்) ஏகதேஶமும். (நீ) ஸ்வஸம்பந்தமே ஹேதுவாக அனைவரையும் பகவத்காருண்யத்துக்கு விஷயமாக்கவல்லநீ, வர்ஷியாவிட்டால் உடம்புவெளுக்கும் நீ. (கைகரவேல்) பகவத்குணவர்ஷத்தில் சோராதே கொள்ளாய்.

(ஆழி) பகவத்குணாம்ருதஸாகரத்திலே.(உள்புக்கு) உள்ளே அவகாஹித்து. (முகந்துகொடு) யாவத்குணங்களையும் புத்திஸ்த்தமாம்படி [க] அகஞ்சுரிப்படுத்திக்கொண்டு. அதாவது - எப்பேர்ப்பட்ட அபராதிகளாகிலும் தாம் அபிமாநித்தவர்களில் காருண்யத்தைப் பண்ணும்படி யெம்பெருமானை விதேயமாம்படி பண்ணிக்கொள்ளுகை. (ஆர்த்து) ஸஸம்ப்ரமமாக. (ஏறி) ஆசார்யபதத்திலேறி.

(ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்து) ஸ்ருஷ்ட்யுந்முகனான ஈஶ்வரனுடைய திருமேனியைப்போல் காருண்ய ஸ்ருஷ்ட்யுந்முகனான வுன்திருமேனியிலும் வேறுபாடுண்டாய்.

(பாழிஅம் தோளுடைப் பற்பநாபன்கையில் ஆழிபோல்மின்னி) பலிஷ்டமாய் ஸர்வாபாஶ்ரயமாய் அதிஸுந்தரமான புஜங்களையுடையனாய், ஸமஷ்டிஸ்ருஷ்டிக்குக் கடவனாய், ப்ரஹ்மாவுக்கு உத்பத்திஸ்த்தாநமான திருநாபீகமலத்தையுடைய வெம்பெருமானுடைய திருக்கையிலே யிருக்கிற திருவாழியாழ்வானைப்போலே, காருண்ய ஸ்ருஷ்டிக்குக் கடவரான வெம்பெருமானை யோகபலத்தாலேஸாக்ஷாத்கரிக்கையால் வந்த மிக்க புகரையுடையராய். (வலம்புரிபோல் நின்றதிர்ந்து) இவ்விடத்திலேயும் "பற்பநாபன்கையில்" என்று அநுஷங்கிக்கவேணும். அவன்கையில் வர்த்திக்கும் ஸ்ரீ பாஞ்சஜந்யம்போலே இடைவிடாமல் த்வநித்து. அதாவது - ப்ரணவார்த்தத்தை அனைவருமறியும்படி திருவாய்மொழி முகத்தாலே வெளியிட்டருளிச்செய்கை.

(தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல்) அவிச்சிந்நமாக ஶார்ங்கம் வர்ஷித்த பாணவர்ஷம்போலே. ப்ரணவத்தில் ஶேஷஶேஷிபாவ ஸம்பந்த ப்ரயுக்தமான பகவத்காருண்ய வர்ஷத்தை. (வாழ) லௌகிகரெல்லாரும் ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்து வாழும்படி. (உலகினில்) லௌகிகரிடங்களிலே. (பெய்திடாய்) பகவத்குண கதாம்ருதத்தை வர்ஷிக்கக்கடவாய்.

[க] அகஞ்சுரிப்படுகை - குறைகை. நெல்லைக்குலுக்கினா விடமுண்டாமாப்போலே ஸங்கோசிப்பிக்கை யென்றபடி.

(நாங்களும் மார்கழி நீராட) பகவத்கைங்கர்யைக போகரான நாங்களும், "நோன்பு" என்கிற வ்யாஜத்தாலே பகவத்ஸம்ஶ்லேஷத்தைப் பண்ணி. (மகிழ்ந்து) மகிழக்கடவோம். அதாவது - பகவதநுபவ ஸஹகாரிகள் இத்தனைபேருண்டாவதே! என்று அவர்களோடே கலந்து பகவதநுபவத்தைப்பண்ணி ஆநந்திக்கை. இப்பாட்டில், வர்ஷதேவதைக்கு அவன் அதிகரித்த கார்யத்தையே தங்களுக் கிஷ்டமாக நியமிக்கையாலே பகவத்பாகவதேஷ்டத்வேந நித்யநைமித்திகாதி தர்மங்களை யதாவாக வநுஷ்டிக்கை, ப்ரபந்நாதிகாரிகளுக்கு ஆவஶ்யகமென்றதாய்த்து. ... ... (ச)

அ.—அஞ்சாம் பாட்டு:—பெண்பிள்ளைகளிலே யொருத்தி "நாம் இப்படியே கனக்கப் பாரித்துக்கொண்டு இழியாநின்றோம், நமக்குத்தான் இது தலைக்கட்டுகைக்கு விஶ்வாஸமென்? அநாதிகால ஸஞ்சிதமான கர்மங்கள் இதுக்கு விரோதத்தைப் பண்ணாதோ?, "శ్రేయాంసి బహువిఘ్నాని" "ஶ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி" (கூச) யன்றோ?" என்று ப்ரஶ்நம்பண்ண; அவர்களிலே வேதாந்த ஜ்ஞாநமுடையாளொருத்தி, நாம் நம்முடைய விரோதிகளைப் போக்கிக்கொண்டுவந்து இதிலே யிழிகையென்று ஒரு பொருளில்லை; நமக்கடைத்த பகவதநுபவத்தைப் பண்ணாநின்றால், சேர்ப்பால் போகரூபமாகப் பருகுமவனுக்குத் தன்னடையே பித்தம் போமாப்போலே, இவை தன்னடையே விட்டோடிப்போம்; ஆனபின்பு, இனி அயோக்யதையைப் பார்த்து அகல

அஞ்சாம் பாட்டு (மாயனை யித்யாதி.) "செப்பு" என்று - ஒருத்தியைப் பார்த்துச் சொல்லுகிறதாக விருக்கிற பாசுரத்துக்குச் சேரவேண்டி, ஒருத்தி ப்ரஶ்நம் பண்ணினதாகவும், அவளைக்குறித்துப் பலர் சொல்லுமளவில் பலமிடறுகையால் விஶதமாகத் தெரியாதென்று ஒருத்தியே சொன்னாளாகவும் ஸாவமருளிச்செய்கிறார் (பெண்பிள்ளைகளிலே யித்யாதி.) விஶ்வாஸமென்? - நிஶ்சய ஹேதுவென்?. (பஹுவிக்நாநியன்றோ) என்றதுக்கு - சக்ரவர்த்தித் திருமகன் திருவபிஷேகத்துக்கு வஸிஷ்டன் முஹூர்த்தமிடவும், பாக்யாதிகரான பெருமாள் முடிசூடவிருக்கவும், ஜகத்தடைய "సర్వాన్ దేవాన్ నమస్యన్తి" "ஸர்வாந்தேவாந் நமஸ்யந்தி" என்று ப்ரார்த்திக்கவும், பெரிய பெருமாள் ஆஶ்ரயணீயராயிருக்கவும், "శ్రేయాంసి బహువిఘ్నాని భవన్తి మహతామపి" "ஶ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி பவந்தி மஹதாமபி" என்று அங்கும் விக்நம்வந்தபடி கண்டோமேயென்று கருத்து. சேர்ப்பால் - குழம்புப்பால். (தன்னடையே விட்டோடிப்போம்) என்றதுக்கு - எம்பெருமான் தன் ஸங்க

வேண்டா என்கிருள். மாயனைமன்னு வடமதுரைமைந்தனைத் தூயபெருநீர் யமுனைத்துறைவனை ஆயர்குலத்தினிற்றோன்றும் மணிவிளக்கைத் தாயைக்குடல் விளக்கஞ்செய்ததாமோதரனை-செப்பு; போயபிழையும் புகுதருவானின்றனவும் தீயினிற்றூசாகும் என் கிருர்கள்.

மூ.—மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினிற் றோன்றும் மணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கஞ் செய்ததா மோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினுற் பாடி மனத்தினுற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவா னின்றனவும்
தீயினிற் றூசாகுஞ் செப்பேலோ ரெம்பாவாய். (௫)

பதம்.	உரை.
மாயனை,	ஆஸ்சர்யசேஷ்டிதங்களையுடையனாய்,
மன்னு	பகவத்ஸம்பந்தம் மாருத
வடமதுரை	ஸ்ரீமதுரையில் திருவவதரித்து
மைந்தனை,	மிடுக்குடையவனாய்,
தூய	பரிசுத்தமாய்
பெரு	ஆழம் மிக்க
நீர்	ஜலத்தையுடைய
யமுனைத்துறைவனை,	யமுனையாற்றங்கரையில் வர்த்திக்குமவனாய்,
ஆயர்குலத்தினில்	இடைக்குலத்தில்
தோன்றும்	திருவவதரித்தருளினதாக ப்ரகாஸிக்கும்
மணிவிளக்கை,	ஸ்லாக்யமான விளக்குப்போன்றவனாய்,

ல்பத்தை யழியமாறி ஸ்ரீபீஷ்மார்ஜுந ஸங்கல்பத்தை முடிய நடத்துமவனுகை யாலே, நாமிம்மஹோத்ஸவத்திலே அதிகரித்துச் செல்லாநிற்கவே, அதுக்கு விக்நங்கள் தன்னடையே போகுமென்று கருத்து. பெருமாள் தாமும் முடிசு விர்ந்தது, மஹாராஜர்க்கும் ஸ்ரீவிபீஷணுழ்வானுக்கும் முடிசூட்டுகைக்காக வென்று கண்டுகொள்வது.

"அகலவேண்டா வென்கிருள்" என்றத்தை அந்வயமுகேந விவரிக்கிருர் (மாயனை யித்யாதி.) "செப்பு" என்றது-பாடு என்றுய், அது உபலக்ஷணமாய், தூவித்தொழுது, பாடு-சிந்தியென்றபடி. "செப்பு" என்ற வநந்தரம், "தூயோமாய்" இத்யாதியையும் கூட்டிக்கொள்வது. ஏல் - இப்படி, எம்பாவாய் - என் வார்த்தையைப் பின்சென்று, ஓர் - த்ருடமாக விசாரித்துக்கொள். அன்றிக்கே, ஏல்வாய் - வாராய் பெண்ணே !, ஓர் - நன்ருக புத்திபண்ணு என்று இங்ஙனே யாகவுமாம்.

தாயை	யசோதைப்பிராட்டியின்
குடல்	திருவயிற்றை
விளக்கம்செய்த	ப்ரகாஶிக்கப்பண்ணி
தாமோதரனை,	இடையர்க்கு மிடைச்சிகளுக்கும் கட்டவுமடிக்கவு மாம்படி ஸுலபனானவனை,
நாம்	அவன் வரவிருக்கக்கடவ நாம்
தூயோமாய்	பரிசுத்தராய்க்கொண்டு
வந்து	வந்துகிட்டி,
தூமலர்	தூய்தான புஷ்பங்களை
தூவி	அடைவுகெடப்பரிமாறி
தொழுது	அவன் பெறுக்கவெண்ணுதபடி அஞ்சலிபண்ணி,
வாயினால் பாடி	வாயால் திருநாமஸங்கீர்த்தநஞ்செய்து,
மனத்தினால் சிந்திக்க,	மநஸ்ஸால் த்யாநிக்க,
போய பிழையும்	பகவத்ஜ்ஞாநம் பிறப்பதற்கு முன்பு செய்த பாபங்களும்
புகுதருவான் நின்றனவும்	பின்பு தன்னையறியாமல் வருகிற பாபங்களும்
தீயினில் தூசு ஆகும்;	நெருப்பிலிட்டபஞ்சுபோல் உருமாய்ந்து போம்;
(ஆகையால்)	
செப்பு	அவன் திருநாமங்களை யநுஸந்தியென்கிறார்கள்.

வ்யா.—(மாயனை) பரமபதத்திலே * அயர்வறுமமரர்க ளதிபதியாய்க் கொண்டு தன் ஐஶ்வர்ய வ்யாவ்ருத்தி தோற்றவிருக்கு மிருப்பை நினைத்து, அது தான் வாசாமகோசரமா யிருக்கையாலே "மாயன்" என்கிறது. க்ருஷ்ணாவதாரத்தில் நீர்மை தங்களுக்கு நிலமல்லாமையாலே பரமபதத்திலே யநுபவிக்கக்கோலி, அதுதானும் நில்மல்லாமையாலே "எத்திறம்!" என்கிறார்கள். (மாயனை) ஒருருக்குத் தன்னைக்கொடுத்த நீர்மையிறே யிது; ஒரு நாட்டுக்காகத் தன்னைக் கொடுத்துக்கொண்டிருக்கிற நீர்மையாகையாலே ஏற்றமுண்டே அங்குத்தைக்கு. அன்றிக்கே, "జాతో౽సిదేవ దేవేశ శఙ్ఖచక్రగదాధర" "ஜாதொஸி தெவதெவெஶ ஶங்கசக்ரகதாதர" (சுரு) என்கிறபடியே நித்ய

"மாயன்" என்றதுக்கு - க்ருத்ரிமனென்று சொல்லுகை ப்ராக்ருதத்துக்குச் சேராமையாலே, ஆஶ்சர்யபூதனென்று திருவுள்ளம்பற்றி ஈடுபாடாகத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பரமபதத்தி லித்யாதி.) க்ருஷ்ணாவதாரத்தில் ப்ரவணரான விவர்கள் பரமபதத்திலிருப்பை நினைக்க ப்ரஸக்தி யேதென்ன வருளிச்செய்கிறார் (க்ருஷ்ணேத்யாதி.) பரமபதத்தில் நீர்மையை அநுஸந்தித்து ஈடுபடுகிறார்களென்று தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (ஒருருக்கித்யாதி.) "జాతో౽సిదేవదేవేశ శఙ్ఖచక్రగదాధర । దివ్యంరూపమిదందేవ ప్రసాదేనోపసంహర"

ஸூரிகளுக்கும் நேர்நின்று பார்க்கவொண்ணாத நிரங்குஶை ஶ்வ ர்யத்தை யுடையவன்கிடீர் அவதரித்தானென்று அவதாரஸௌலப்ய த்தை யநுஸந்தித்து, அந்த ஆஶ்சர்யத்தைச் சொல்லுவதற்கு முன் பே ஆழங்கால் பட்டு "எத்திறம்!" என்கிறார்களாகவுமாம். [ஜாதோஸி- ஜாதோஸி] தேவகிவயிற்றில் பன்னிரண்டுமாஸம் குடியிருந்து பிறந்த பிள்ளைத்தனத்தில் குறைவறப் பிறந்தவனுக்கும் இல்லை செய் யவொண்ணாதபடி மூதலித்துக் கொடுக்கலாயிருக்கை. [தேவதேவேஶ- தேவதேவேஶ] இப்படி யிருக்கிறவனாரென்னில்; ஒருகாலத்திலும் கர்மஸ்பர்ஶமில்லாத நித்யஸூரி பரிஷந்நிர்வாஹகனான * அயர்வறு மமரர்களதிபதியென்கை. அதறிந்தபடி யென்னென்னில் [ஶங்கசக்ர கதாதர- ஶங்கசக்ரகதாதர] "தமஸ꞉ பரமோ தாதா ஶங்கசக்ரகதாதர꞉" "தமஸ꞉

"ஜாதோஸி தேவதேவேஶ ஶங்கசக்ரகதாதர ॥ திவ்யம் ரூபமிதம் தேவ ப்ரஸாதேநோபஸம்ஹர" என்றவிடத்தில், "தேவ-இதம்-ரூப ம்-உபஸம்ஹர" "தேவ-இதம்-ரூபம்- உபஸம்ஹர" என்று இவ்வள வேசொல்ல வமைந்திருக்க "ஜாதோஸி" "ஜாதோஸி" என்று - பிறந்திருக் குமவனைச் சொல்லுகைக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (தேவகி யித்யாதி; நானுன் திறத்தில் பிறக்கையால் கம்ஸாத்பீதனாய் உபஸம்ஹரிக்கச் சொல் லாநின்றால் இந்த திவ்யரூபமென்னது? உன் மநுஷ்யரூபமேது? நானுன் க்ருஹ த்திலே பிறக்கை யென்றொரு பொருளுண்டோ? என்று இல்லைசெய்யப்போ கிறானென்று வஸுதேவன் மூதலித்துக் கொடுக்கிறானென்று கருத்து. "தேவ தேவேஶ" "தேவதேவேஶ" என்றவிடத்தி லிரண்டு தேவபதங்களிருக்கையா லே, முந்தினது "திவ்யந்தீதி தேவா꞉" "திவ்யந்தீதி தேவா꞉" என்கிற வ்யுத்ப த்தியாலே ஸநாதந த்யோதமாநத்வமர்த்தமாய், ஆக்கரானவர்களைச் சொல்லு கையன்றிக்கே அகர்மவஶ்யரைச் சொல்லுகிறதென்றும், ஈஶபதம் - இந்த நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியென்னு மர்த்தத்தைச் சொல்லுகிறதென்றும், "தேவாஶ்சாஸாவீஶஶ்ச தேவேஶ꞉, தேவாநாம் தேவேஶ꞉ தேவதேவேஶ꞉" "தேவஶ்சாஸாவீஶஶ்ச தேவேஶ꞉, தேவாநாம் தேவேஶ꞉ தேவதேவேஶ꞉" என்று திருவுள்ள ம்பற்றி ஶங்காபூர்வகமாக அர்த்த மருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதி.) இர ண்டாம் தேவ பதார்த்தம் (நிர்வாகஹகனானவென்றது.) ஈஶபதார்த்தம் அயர்வ றுமித்யாதி.) "தமஸ꞉ பரம꞉" "தமஸ꞉ பரம꞉" ப்ரக்ருதிமண்டலத்துக்கு மவ்வருகேயிருக்குமவன். 'தாதா - யாதா- ஸ்வாநுபவ ப்ரஸாதத்தாலே அங்கு ள்ளாரை தரிப்பிக்குமவனென்னுதல்; "டுதாஞ் தாரணபோஷணயோ꞉" "டுதாஞ் தாரணபோஷணயோ꞉" என்றிறே தாது. இத்தால் - தேவதேவேஶத்வம்

வஸதோ யாதா ஸஜ்வரா மஹாயஶ:” (௬௬) என்று பரமபதநில யமாய் ஸூரிநிர்வாஹகமான வஸ்துவுக்கு அஸாதாரண சிஹ்நமான ஆழ்வார்களோடே யவதரிக்கையாலே.

(மன்னுவடமதுரை) பகவத்ஸம்பந்தம் மாறுததேஶம். முன்பு ஸித்தாஶ்ரமமாய் ஸ்ரீவாமநன் நெடுங்காலம் தபஸ்ஸுபண்ணி, ஶத்ருக்களாழ்வான் [௧] வன்னியமறுத்துப் படைவீடுசெய்து, ஸர்வேஶ்வரன் எப்போதும் இப்படி யவதரித்துப் போருவதொருதேஶம். (வடமதுரை) “మథురానామనగరీపుణ్యాపాపహరీశుభా । యస్యాంజాతోజగన్నాథస్సాక్షాద్విష్ణుస్సనాతనః” “மதுரா நாம நகரீ புண்யா பாபஹரீ ஶுபா। யஸ்யாம் ஜாதோ ஜகந்நாத: ஸாக்ஷாத் விஷ்ணு: ஸநாதந:” (௬௭) [మథురా నామ- மதுரா நாம] “நலமந்தமில்லதோர்நாடு” என்னுமாப்போலே: பரமபதம்போலே போக்யதையால் ப்ரஸித்தமானவூர். [నగరీ-நகரீ] பரமபதம் கலவிருக்கை யென்னும்படி பிறந்து விரும்பின படைவீடு. [పుణ్యా-புண்யா] அவனைத் தருகைக்கு உபாயமாகை. [పాపహరీ-பாபஹரீ] விரோதி நிரஸநத்துக்கும் தானேயாகை. [శుభా- ஶுபா] ப்ராப்யமும் தானேயாகை. [యస్యాంజాతః-யஸ்யாம்ஜாத:] இத்தனைக்கும் அடி திருவவதரித்தருளுகை. [జగన్నాథః-ஜகந்நாத:] தன் ப்ரஜைகள் பட்ட ஆபத்தை நீக்குகைக்கு அவர்களை யிழக்கமாட்டாமல் பிறந்தபடி. [సాక్షాత్-ஸாக்ஷாத்] “அங்குவைத்திங்குப்பிறந்த” என்னுமாப்போலே, அஜஹத்ஸ்வபாவனாய்க்கொண்டு. [విష్ణుః- விஷ்ணு:] வ்யாபகவஸ்து வ்யாப்யைகதேஶத்திலே அந்தர்ப்பவித்தபடி. [సనాతనః - ஸநாதந:] நித்யனானவன். ஆஶ்ரிதஸஜாதீயனாய்ப்பிறந்த மெய்ப்பாடு. (மைந்தனை) மிடுக்கனை; “தந்தைகாதலிற்பெருவிலங்குதாளவிழ நள்ளிருட்கண்வந்தவெந்தை” என்று - மாதாபிதாக்கள்காவில் வில்

சொல்லிற்றாய்த்து. இத்தைச் சொல்லுகிறார் (பரமபத நிலயமாய் ஸூரிநிர்வாஹகமான வஸ்துவுக்கென்று.)

“மன்னு” என்றதுக்கு - வர்த்திக்கப்பட்ட என்று அர்த்தமாய், பலிதார்த்தமருளிச்செய்கிறார் (பகவதித்யாதி.) “மல்லைமூதூர்வடமதுரை” என்று ஆழ்வார் ஈடுபடுமாப்போலே, இவர்களும் “மன்னுவடமதுரை” என்று ஈடுபடுகிறார்களென்று திருவுள்ளம்பற்றி, ரிஷி ஈடுபட்டமையை ஸம்வாதமாக வருளிச்செய்கிறார் (மதுராநாமேத்யாதி.) “மைந்தன்” என்றதுக்கு நாலர்த்தம் ;- மிடுக்கனென்றும், பிள்ளையென்றும், யுவாவென்று, ராஜாவென்றும். இத்தைக் காட்டுகிறார் (மிடுக்கனை யித்யாதி வாக்யபஞ்சகத்தாலே.) “రజ్ఞయతి” “ரஜ்ஞ

[௧] வன்னியம் குறும்பு

ங்கு கழலவந்து திருவவதரித்தபடி. பிள்ளையென்றுமாம்; திருவவதரித்து எனக்கு உபகரித்தபின்பு இளகிப் பதித்தபடியாதல்; ராஜாவென்றுமாம். தன்னழகைக்காட்டி இருந்ததே குடியாகத் தன்வஶமாக்கினபடி.

(தூயபெருநீர் யமுனைத்துறைவனை) விரஜைபோலே போந்தவிடத்துக்கு ஓராறுண்டானபடி. (தூய) "వసుదేవో వహన్ కృష్ణం జానుమాత్రోదకో యయౌ" "வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோ யயௌ" (சுஅ) என்று - ஸ்ரீவஸுதேவர் எழுந்தருளுவித்துக்கொண்டு போகிறபோது பாங்காக வற்றிக்கொடுத்தபடி. க்ருஷ்ணனும் பெண்களும் மாறிமாறிக் கொப்பளிக்கையாலே வந்த தூய்மையாகவுமாம். "ప్రసాదం నిమ్నగా యాతః" "ப்ரஸாதம் நிம்நகா யாதா:" (சுக) என்று - நீரில் தெளிவைச் சொல்லிற்றாகவுமாம். (பெருநீர்) "యమునాఞ్చాతి గమ్భీరాం నానావర్తశతాకులామ్" "யமுநாஞ்சாதி கம்பீராம் நாநாவர்த்தஶதாகுலாம்" (எ0) என்று - அத்யகாதமான ஆறு பாங்காகவற்றிக் கொடுத்தது. மனோஹரமாகையாலும் பாவநமாகையாலும் ஶ்லாக்யதையைச் சொல்லிற்றாகவுமாம். (யமுனைத்துறைவனை) திருக்குரவை ஸ்த்தாநமாகையாலே பெண்கள் படிந்துறையை யுடையவனை.

(ஆயர்குலத்தினிற்றோன்றும் மணிவிளக்கை) பரமபதத்திற்காட்டில் குணங்கள் இடைச்சேரியிலே அத்யுஜ்ஜ்வலமானபடி.

யதி" என்கிற வ்யுத்பத்தியை யுட்கொண்டு உபபாதிக்கிறார் (தன்னழகையித்யாதி.)

* கலங்காப்பெருநகரம்விட்டு வந்தவனுக்குத் திருவாய்ப்பாடியென்றொரு [க] அஞ்சினன் புகலிடமுண்டானாப்போலே, விரஜையை மறுக்கும்படி ஓராறுண்டாவதே! என்றீடுபடுகிறார்களென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (விரஜையித்யாதி.)

"వల్లవీవదనోచ్ఛిష్ట పవిత్రాధరవిద్రుమః" "வல்லவீவதநோச்சிஷ்ட பவித்ராதரவித்ரும:" என்கிறபடியே - க்ருஷ்ணன் திருப்பவளத்துக்கு பவித்ரதையையுண்டாக்கும் இடைப்பெண்களுடைய எச்சில், ஆறுக்கு உண்டாகச் சொல்லவேண்டாவிறே யென்று திருவுள்ளம்பற்றி, அருளிச்செய்கிறார் (க்ருஷ்ணனுமித்யாதி.) "தூய" என்றபதச்சேர்த்தியைத் திருவுள்ளம்பற்றி முதலர்த்தத்துக்கு அநுகுணமாக ஈடுபாடுதோற்றத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (யமுநாமித்யாதி.)

ஆயர்குலத்தினில் வர்த்திக்குமதாய், தேவகிவயிற்றில் தோற்றினதாய், அத்தாலே ஶ்லாக்யமான விளக்கென்று திருவுள்ளம்பற்றி, "மாயன்" என்றதைக் கடாக்ஷித்து, "ஆயர்குலத்தினில்" என்றதுக்கு பரமபதம் வ்யாவர்த்யமென்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பரமபதத்திலித்யாதி.)

[க] அஞ்சினன்புகலிடம் - பயந்தார்க்கு ஒதுங்குமிடம்.

அந்தகாரத்தில் தீபம்போலே. (தோன்றும்) “అచ్యుతభానునా । దేవకీపూర్వ సన్ధ్యాయామావిర్భూతమ్” “அச்யுதபாநுநா । தெவகீ பூர்வஸந்த்யாயா மாவிர்பூதம்” (எக) என்றுகொண்டு கர்ப்பத்தில் தொற்றில்லாமை. கீழைதிக்குக்கு ஆதித்யனோடுள்ள ஸம்பந்தம் இவளோடு அவனுக்குள்ளது. ஸ்ரீமதுரையிலே யவதரித்திருக்கச்செய்தே திருவவதார ப்ரகாஶம் திருவாய்ப்பாடியிலே சென்றது என்றுமாம். (மணிவிளக்கை) திருவாய்ப்பாடிக்கு மங்களதீபமென்றுமாம்.

(தாயைக்குடல்விளக்கஞ்செய்த தாமோதரனை) வயிற்றில் தழும்பாலே யசோதைப்பிராட்டியை விளங்கப்பண்ணினவனை. (தாயைக் குடல்விளக்கஞ்செய்த) “కౌసల్యా శుశుభే తేన పుత్రేణామిత తేజసా” “கௌஸல்யா ஶுஶுபெ தெந புத்ரேணாமிததெஜஸா” (எஉ) என்றும், “என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப்பெற்ற வயிறுடையாள்” என்றும் - நாட்டார்புகழ்ச்சியாலே, பெற்றவயிற்றுக்குப் பட்டங்கட்டினவனை, (தாமோதரனை) தன்னுடைய பவ்யதையாலும் அவனை நாட்டார் கொண்டாடும்படி பண்ணினவனை. நம்முடைய பந்தம் நம்மாலறுக்கப்போகாதாப்பேலே, அவனுடையபந்தமும் அவனாலறுக்கவொண்ணாதே. இந்தபந்தத்தை அநுஸந்தித்தால் ஆஶ்ரிதருடைய ஸம்ஸார பந்தம் போமென்கை.

“வடமதுரைமைந்தனை” என்றத்தைக்கடாக்ஷித்து, ஆயர்குலத்தினில், தோன்றும் - அவதரித்ததாக ப்ரகாஶிக்கும், ஶ்லாக்யமான விளக்கென்று ஶப்தார்த்தமாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீமதுரையித்யாதி.] ஆயர்குலத்தினில் மணிவிளக்காய்த்தோன்றினவனையென்று விவக்ஷித்து மூன்றாம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவாய்ப்பாடிக்கித்யாதி.)

(தாமோதரனை) அத ஏவ, தாயைக் குடல்விளக்கம் செய்தவனையென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (வயிற்றிலித்யாதி.) “மாயனை” இத்யாதிகளைக்கடாக்ஷித்து பரத்வாதிகுண விஶிஷ்டனுகையாலும் தாமோதரத்வத்தால்வந்த பவ்யதையாலும் தாயைக்கொண்டாடும்படி. பண்ணினவனென்று தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (கௌஸல்யேத்யாதி.) கீழ்ப்பதங்களைப்போலே இப்பதத்தாலும் ஈடுபாடுதோற்றவேண்டி பவ்யனுனபடியைத் திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார் (நம்முடையவித்யாதி.) ஸம்ஸாரிகள் பந்தத்துக்கும் அவனுடைய பந்தத்துக்கும் ஸாதர்ம்யத்தைப்பற்றி ஈடுபாடாகத் தாத்பர்ய மருளிச்செய்து, வைதர்ம்யத்தைப்பற்றி ஈடுபாடாக ஹாவமருளிச்செய்கிறார் (இந்தவித்யாதி.) இத்தால் - இவனுடைய பந்தமாகில் அநுக்ரஹகார்யமாகையாலே அநுபவித்தேயறவேணுமென்றபடி.

வேதாந்த ஜ்ஞானமுடையாளொருத்தி சொல்கிறாளாகையாலே வேதாந்த முக்யதாத்பர்யமான ப்ரபத்திக்கு ஸ்நாநாதிகள் உபேதங்களாகையாலே

(தூயோமாய்வந்து நாம்) அங்குத்தைக்கு நாம் யோக்யரோ அயோக்யரோ என்று பாராதே இருந்தபடியே வந்து. இருந்தபடியே வருகைக்கு மேற்பட்ட ஸாத்திதேடவேண்டாவிறே. "ஶுத்³ம் வே த்ரிவிஷணம்" "ஸாஸம்வெத்திவிஷீஷணழ்" (எங) என்றதிறே இருந்தபடியே வந்த ஸ்ரீவிபீஷணுழ்வானை. (வந்துநாம்) அவன்வர விருக்கக்கடவ நாம் வந்து. "உபஸ்தேயைருபஸ்தித꞉" "உவஷெயெயரா-வஷிதஃ" (எச) என்றும், "பத்³ப்⁴யாமபி⁴க³மாச்சைவ" "வஜிஹா ஹி மஹா செவ" (எரு) என்றுமிறே அவன்வார்த்தை. முறைகெட வருவானென்னென்னில்; உபாயத்தில் துணிவு புறப்படவொட்டாதாப்போலே உபேயத்தில் த்வரை முறைபார்த்திருக்கவொட்டாதிறே.

(தூமலர் ‡) "மிக்கசீர்த்தொண்டரிட்டபூந்துளவம்" என்றும், "சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி" என்றும் - அநந்யப்ரயோஜநமான பூவிறே. (மலர்) யோக்யமென்றும் அயோக்யமென்றும் பாராதே கண்ணுக்குத்தோற்றின மலரென்றுமாம். (தூவி‡) "யதா²ஶக்தி" "யயாதயாவாவி" (எசு) என்னும் ந்யாயத்தாலே அடைவு கெடப்பரிமாறி. ப்ரேமம், அடைவுபார்க்கவொட்டாதிறே. (தொழுது) அவனுக்குப் பொறுக்கவொண்ணுதபடி அஞ்ஜலியைப்பண்ணி. "ருணம் ப்ரவ்ருத்³த⁴மிவ மே ஹ்ருத³யாந்நாபஸர்பதி" "ஊணம்வ்ருவுஜவெஹாஜாணாவஸரதி" (எஎ) என்றிறே அவன்படி. அவனைத்தொழுவித்துக்கொள்ளுமவர்களிறே தொழுகிருர்கள். பித்ராதிகளுக்கு அடைவு கேடென்று தோற்றுதபடி அஞ்ஜலிபண்ணுகிருர்கள் என்றுமாம்.

யோக்யரோ அயோக்யரோவென்று பாராமையே தூய்மை என்று தாத்பர்ய மருளிச்செய்கிருர் (அங்குத்தைக்கித்யாதி.) உக்தத்துக்கு ப்ரமாணங்காட்டுகிருர் (ஸாத்தமித்யாதி.) "மமசாப்யந்தராத்மாயம் ஶுத்³ம் வே த்ரிவிஷணம்" "ஊவாவஹுராதாயஸாஸம்வெத்திவிஷீஷணழ்" என்று - மஹாராஜர் கடலிலே ஒரு முழுக்கிட்டு வாராதிருக்க, பாவஸாத்தியைக்கண்டு "ஶுத்³த⁴ம்" "ஸாஸழ்" என்றுனிறே யென்றுகருத்து. "நாம்" என்றதின் தாத்பர்யமருளிச்செய்கிருர் (அவனித்யாதி.) நாமிப்படியிருக்கைக்கு அவன் வரும் ஸ்வபாவனேவென்ன அருளிச்செய்கிருர் (உபஸ்த்தேயைரித்யாதி.)

அவன் அஞ்ஜலியைப்பொறுக்கமாட்டாமையை இரண்டுவகையாக உபபாதிக்கிருர் (ருணமித்யாதி வாக்யத்ரயத்தாலே.)

---

‡ "தூமலர்கள் தூய்" என்றும் பாடம்.

(வாயினாற்பாடி) வாய்படைத்த லாபம்பெற்றோ மென்று, திருநாமத்தைச்சொல்லி. மநஸ்ஸஹகாரமின்றிக்கே யென்றுமாம். [ஃவா-சச- உவாவவ] என்னுமாப்போலே—வருவதற்குமேலே, சொல்லுவதும் செய்தோமென்றுமாம். (மநத்தினாற் சிந்திக்க) மநஸ்ஸைப் படைத்தலாபம் பெற்றோமென்று. [யத்புருஷ மநஸாऽபிகச்சதி, யத்மநஸா த்யாயதி, தத்வாசா வததி, தத்கர்மணா கரோதி- யத்தூ-ஈஷொஃநவஷாயிமத்தி, யஜீ ஃநவஷாயயாயதி, தஆாவாவஷதி, தக்ஷணாகரோதி] (எஅ) என்று மநஸ்ஸடியாக வரக்கடவ உக்தியும் வ்ருத்தியும் தவிர்ந்து, தொழுது. "வாயினாற்பாடி மநத்தினாற் சிந்திக்க" என்று - தனித் தனியே கரணங்கள் மேல்விழுந்தபடி சொல்லுகிறது.

(போயபிழையும் புகுதருவானின்றனவும்) உத்தரபூர்வாகங்கள். (தீயினில் தூசாகும்) நெருப்பிலிட்ட பஞ்சுபோலேயாம் தூசு - பஞ்சு. பாலும் கண்டசர்க்கரையும் குடிக்கப் பித்தம் தன்னடையே போமாப்போலே, பகவதநுபவம்பண்ண நெருப்பிலிட்ட பஞ்சுக் குவை போலே உருமாய்ந்துபோம். [இஷீகாதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத- ஐவஷீகாதூலஃஹளவெ-ாதம்வ-ஃஷயெத] (எகூ) என்றுமுண்டிறே.

(செப்பு) சொல்லவமையுமென்கை. பூர்வாகமாவது – அநாதிகாலம் புத்தி பூர்வகமாகப் பண்ணிப்போந்தவை; உத்தராகமாவது - பகவத்ஜ்ஞாநம் பிறந்தால் ப்ரக்ருதிவாஸநையாலே ப்ராமாதிகமாகப் பிறந்தவை. ... ... (ரு)

"பாடி" என்னவமைந்திருக்க, "வாயினால்" என்றதுக்கு மூன்றுதாத்பர்யமருளிச்செய்கிறார் (வாய்படைத்தவித்யாதி.) "தாமோதரனை" என்னுமளவும் கடாக்ஷித்து முந்தினதாத்பர்யம்; "மனத்தினால்சிந்திக்க" என்றத்தைப்பற்ற இரண்டாம்தாத்பர்யம்; "தூயோமாய்வந்து" என்றத்தைப்பற்ற மூன்றாம்தாத்பர்யம். "உவாச ச மஹாப்ராஜ்ஞ ஸ்வரேண மஹதா மஹாந் । ஸுக்ரீவம் ஸாம்ப்ரதம் † ஸம்ப்ரேக்ஷ்ய ஸர்வாந் வாநரயூதபாந்" "உவாவவஃஹாவ-ாஜஸுரெணஃஹதாஃஹாநு। ஸு-ரீவம்தாம்ஹம்வெ-க்ஷ்வஸாநு வாநரயூதவாநு" என்று வசநமேஷம்.

"மனத்தினால்" என்று விஶேஷித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (மநஸ்ஸையித்யாதி.) ஶ்ருதிக்ரமேணவன்றிக்கே, மநஸ்ஸுக்கு முன்னே தொழுகையும் பாடுகையும் சொல்லுகையால் ஆற்றாமையின் மிகுதிதோற்றுகிறதென்கிறார் (யத்புருஷயித்யாதி.) ... ... (ரு)

---

† "ஸம்ப்ரேக்ஷ்ய ஹஸ்த்ஸவநிபீஷணாः" "ஸம்வெ-க்ஷவஹுவஷவநவிபீஷணஃ" என்றுசில ஸ்ரீகோஶங்களில் பாடம்.

ஸ்வாபதேஶவ்யாக்யாநம்.

அ.—அஞ்சாம் பாட்டு. (மாயனை இத்யாதி.) ‡ (மாயனை) "ஸதா பஶ்யந்தி" "ஸூரயஸ்ஸூரி" என்கிறபடியே விஸ்ருங்கலஜ்ஞாநிகளான நித்யஸூரிகளாலும் கரைகாணவொண்ணாத பரத்வத்தை யுடையவனை. (மன்னு வடமதுரை மைந்தனை) பகவத்ஸம்பந்தம் மாறாத வடமதுரையிலே யிருக்கிற ராஜாவாய், மிடுக்கனாய், யுவாவானவனை. (தூய) ஸ்ரீவஸுதேவர், கண்ணனை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு திருவாய்ப்பாடிக் கெழுந்தருளுகிறபோது * ஜாநுமாத்ரோதகரா யெழுந்தருளலாம்படி பாங்காக வற்றிக்கொடுத்த தூய்மையாகவுமாம்; ஜலக்ரீடையிலே பெண்களும் அவனுமாகக் கொப்பளிக்கையால் வந்த தூய்மையாகவுமாம். (பெருநீர்) மஹாஜலத்தை யுடைத்தாகையாலே அத்யகாதமான. (யமுனைத் துறைவனை) யமுனையினுடைய துறையைத் தனக்கு நிரூபகமாகவுடையவனை. (ஆயர்குலத்தினில் தோன்றும் மணிவிளக்கை) திருவாய்ப்பாடியிலே வளராநின்று கொண்டு அக்குலத்துக்கு மங்களதீபமாயுள்ளவனை. (தாயைக் குடல் விளக்கம்செய்த தாமோதரனை) * கண்ணிக்குறுங்கயிற்றாலே உரலோடே கட்டுண்டு பெற்றதாயான யஶோதைப் பிராட்டியினுடைய ஹ்ருதயத்துக்கு ப்ரகாஶகனானவனை. (நாம்) "அவனே உபாயம்" என்றிருக்கிற நாம். (தூயோமாய்) அநந்ய ப்ரயோஜனராய். (வந்து) ப்ராப்யருசி இருந்தவிடத்தி லிருக்கவொட்டாமையால் வந்து. (தூமலர்) யோக்யமோ, அயோக்யமோ என்று தேடப்படாத மலர்களை. (தூவி) அக்ரமமாக அவன் திருவடிகளிலே பரிமாறி. (தொழுது) ஸேவித்து. (வாயினால்பாடி மனத்தினால்சிந்திக்க) "அவன் கொடுத்த கரணத்தால் அவனை யாஶ்ரயிக்கப் பெற்றோம்" என்றுபாடி நினைக்க. (போயபிழையும்) கழிந்த அநாதியான பூர்வாகங்களும். (புகுதருவானின்றனவும்) ப்ரவேஶத்தைத் தருகிறவையாய் நின்ற உத்தராகங்களும். (தீயினில் தூசாகும்) நெருப்பிலிட்ட பஞ்சுபோலேயாம். (செப்பு) ஆகையால், உக்தகுணவிஶிஷ்டனான வெம்பெருமானை அநுஸந்தியுங்கோள். ஆயர்குலமென்றது - அநந்யஸாதனரான பாகவதகுல மென்றபடி. ... ... (ரு)

‡ இப்பாட்டின் அவதாரிகையை கோஶாந்தரங்களிற் கண்டுகொள்வது.

அ.—ஆறும் பாட்டு.—முதற்பாட்டில் - பகவத்ஸம்ஶ்லேஷமே ப்ராப்யமும், அநந்யஸாத்யமான விதுக்கு ஸாதநமுமவனே, அந்த ஸாதநத்திலே அந்வயிக்கைக்கு அதிகாரிகளும் அந்த ப்ராப்யத்தில் இச்சையுடையவர்களே என்று ஸாத்யஸ்வரூபத்தையும் ஸாதநஸ்வரூபத்தையும் அதிகாரிஸ்வரூபத்தையும் ஸாதித்து ; இரண்டாம்பாட்டில் -ப்ராப்ய ப்ராபகங்கள் இரண்டும் ஈஶ்வரனே யென்றிருக்கும் இச்சாதிகாரிகளுக்கு ஸம்பாவிதமுமாய் குர்வத்ரூபமான கரணங்களுக்கு வகுத்த வ்யாபாரவிஷயங்களைக் காட்டிக் கொடுக்கவேண்டுகையாலும் காலக்ஷேபத்துக்காகவும் ராகப்ரேரிதமாக அநுஷ்டேயமான கர்த்தவ்யாம்ஶத்தைச் சொல்லிற்று ; மூன்றும்பாட்டில் - பகவதநுபவஸஹகாரிகள்பக்கல் உபகார ஸ்ம்ருத்யதிஶயத்தலோஅவர்களுக்கு யாவை யாவை சில அபேக்ஷிதங்கள், அந்த ஸம்ருத்திக ளடைய அபேக்ஷிக்கக் கடவதென்கிறது ; நாலாம்பாட்டில் - தேவதாந்தரஸ்பர்ஶரஹிதராய், இப்படி அநந்ய ப்ரயோஜநராய், பகவதேகப்ரவணராய், பகவதநுபவோபகரணமானவற்றிலே யிழிந்தவர்களுக்கு அந்த தேவதாந்தரங்களும் ஏவல்செய்யு மென்னுமிடஞ் சொல்லிற்று; அஞ்சாம்பாட்டில் - இப்படியே பகவதநுபவத்தி லிழிந்தவர்களுக்குவரும் அநுபவ விரோதிகளை அவ்வநுபவந்தானே நிரோதிக்கு மென்னுமிடஞ் சொல்லிற்று. ஆக, இப்படி கீழஞ்சுபாட்டாலே – ப்ராப்யமான க்ருஷ்ணாநுபவத்துக்கு ஏகாந்தமான உபகரணங்களைச் சொல்லி, அநந்தரம், மேல் பத்துப்பாட்டாலே - அந்த உபகரணங்களைக்கொண்டு அநுபவிக்குமவர்களை யெழுப்புகிறது.

தந்தாமுக்கே அவ்வநுபவத்துக்கு ப்ரதாநோபகரணமான ப்ரேமமும், கர்த்தவ்யதயாஉக்தமான உபகரணங்களும், அநுபாவ்யனான க்ருஷ்ணனும், அதுக்கு ஏகாந்தமான காலமும், ஊரில் கோபவ்ருத்த

ஆறும் பாட்டு (புள்ளும்சிலும்பினவித்யாதி.) (ஆறும் பாட்டு) என்றதுக்கநந்தரம், வ்யாக்யாநம் பண்ணவிழிகிறோம் என்றுகூட்டுவது; இப்பாட்டின் வ்யாக்யாநாந்தத்திலே "எழுந்திரா யென்கிறார்கள்" என்கிறவாக்யத்தோடு அந்வயமாதல் கண்டுகொள்வது. கீழஞ்சுபாட்டும் ஒருபேடிகையாகவும், மேல் பத்துப்பாட்டும் ஒருபேடிகையாகவும் திருவுள்ளம்பற்றி ஸங்கத்யர்த்தம் வ்ருத்தகீர்த்தநம்பண்ணுகிறார் (முதற்பாட்டிலென்றுதொடங்கி, எழுப்புகிறதென்னுமளவும்.)

கர்த்தவ்யதயா உக்தமான வுபகரணங்களென்றது - ப்ராப்ய ப்ராபகங்களவனேயென்கையும், த்யாஜ்யோபாதேய ஜ்ஞாநபூர்வகமான அநுஷ்டாநமும் பரஸம்ருத்யைக ப்ரயோஜநதை முதலானகுணங்களும். க்ருஷ்ணாநுபவம்

ருடைய இசைவும் உண்டானபின்பு தனித்தனியே அநுபவிக்க அமைந்திருக்க, ஒருவரை யொருவர் எழுப்ப வேண்டுகிறதென்னென்னில்; பெருக்காற்றி லிழிவார்க்குத் துணைதேட்டமாமாப்போலே, "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றும், "உயிர்காத்தாட்செய்மின்" என்றும், "ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய வடிகளை யின்னாரென்றறியேன்" என்றும் இழிந்தாரைக் குமிழிநீரூட்டக் கடவதான விஷயத்திலே யிழிகிறவர்களாகையாலே துணைதேட்டமாய் ஒருவரை யொருவர் எழுப்புகிறார்கள். "அடியார்கள் குழாங்களை — உடன்கூடுவ தென்றுகொலோ" என்று சொல்லுகிறபடியே பராவஸ்த்தையில் புருஷோத்தமனை யநுபவிக்கும்போதும் விஶ்ருங்கலமான ஜ்ஞாநபலங்களை யுடையரான நித்யஸூரிகளுக்கும் துணைதேட்டமாகா நிற்க, "இமையோர் தமக்கும் - செவ்வே நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெ யூணென்னும் மீனச்சொல்" என்று - அந்த நித்யஸூரிகளுக்கு மநுபவிக்க வொண்ணாதபடி நீர்மைக்கும் மேன்மைக்கும் அழகுக்கும் நிரவதிக ஸாகரமான க்ருஷ்ணனை யநுபவிக்குமிடத்தில், இடக்கையும் வலக்கையுமறியாத இடைச்சிகளுக்குத் துணைதேட்ட மென்னுமிடம் சொல்லவேணுமோ. அதுக்குமேலே, "[illegible]" "[illegible]" (அ0) என்று நிரதிஶயபோக்யமான அவ்விஷயத்தைத் தனியநுபவிக்கமாட்டாத ப்ரக்ருதிக ளாகையாலும் எழுப்புகிறார்கள்; அதுக்குமேலே, இவ்வஸ்துவை அநுபவிக்கைக்கு ருசியுடையராயிருக்குமவர்க ளிழக்கவொண்ணாதென்னும் நினைவாலு மெழுப்புகிறார்கள்; அதுக்குமேலே, பகவத்விஷயத்தை யநுபவிக்கும்போது ததீயரை முன்னிட்டல்லது அநுபவிக்கமாட்டாதவர்க ளாகையாலும் எழுப்புகிறார்கள். விஷயம் தனி யநுபவிக்க அரிதாகையாலும், இவர்கள் தனி யநுபவிக்கவல்ல ப்ரக்ருதிகளல்லாமையாலும், ருசியுடை

துணைத்தோட்டமாம்படியை கைமுத்திக ந்யாயத்தாலே த்ருடீகரிக்கிறார் (அடியார்களித்யாதி.)

(விஶ்ருங்கலஜ்ஞாநபலங்களை யுடையரான) என்றதுக்கு எதிர்த்தட்டான ஜ்ஞாநபல சூந்யதையை யருளிச்செய்கிறார் (இடக்கையித்யாதி) இடைச்சிகளென்று - ஸ்த்ரீத்வம் தோற்றுகையாலே, பலசூந்யதை ஸித்தம். விஷயம் தனி யநுபவிக்க வரிதாகையாலுமென்றது - "கூர்வேல்கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன் - ஏரார்ந்தகண்ணி யசோதையிளஞ்சிங்கம் - கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல்முகத்தான்" இத்யாதியிற்சொன்ன பரமபோக்யதையைப் பற்ற. இவர்கள் தனியநுபவிக்கவல்ல ப்ரக்ருதிகளல்லாமையாலுமென்றது-

யாரிழக்கை நெடுந்தட்டுடன் றிருக்கையாலும், ததீயரையொழிய வநுபவிக்க மாட்டாமையாலும், முந்துற வுணர்ந்தவர்கள், உறங்குகிறவர்களை யெழுப்பத்தட்டில்லை.

எல்லார்க்கு மொக்க க்ருஷ்ணாநுபவத்தில் கௌதுகம் அவிஶிஷ்டமாயிருக்குமாகில், சிலர் எழுப்பச் சிலருறங்குகை கௌதுகத்துக்குக் குறையன்றோவென்னில்; அநுபாவ்யமான க்ருஷ்ணகுணங்கள், நஞ்சூண்டாரைப்போலே சிலரை மயங்கப்பண்ணுகையாலும், சிலரை இருந்தவிடத்தி லிருக்கவொட்டாதே துடிக்கப் பண்ணுகையாலும்; அவர்கள் கௌதுகத்துக்குக் குறையல்லாமையாலே, சிலரை சிலர் எழுப்பத்தட்டில்லை. இதில் இப்பாட்டுக்கு வாக்யார்த்தம், பகவத் விஷயத்தில் புதியளாகையாலே இங்ஙோன்பின் சுடவறியாதாளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

மூ.—புள்ளுஞ் சிலும்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ
பிள்ளா யெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி
கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவிற் றுயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள வெழுந் தரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (சு)

"வையத்துவாழ்வீர்காள்" என்றுகொண்டாடினமைக்குத் தாத்பர்யமாய், தங்களநுபவத்தை; ரஸமார்க்கித்தருமவர்களென்று சொல்லப்பட்ட ஸ்வபாவத்தைப் பற்ற, ருசியுடையாரிழக்கை நெடுந்தட்டுடன்றிருக்கையாலுமென்றது - "ஐயமும் பிச்சையும்" என்றவிடத்தில் சொல்லப்பட்டதாய் பகவத்பாகவதாநுபவம் பண்ணுவிப்பர்களென்னும் ஸ்வபாவத்தைப்பற்ற. நெடுந்தட்டென்றது - மஹாப்ரதிஹதியென்றாய், அத்தால் - அதிதுஸ்ஸஹமென்றபடி. ததீயரையொழிய அநுபவிக்கமாட்டாமையாலுமென்றது - "செய்யாதனசெய்யோம்" என்றவிடத்திற்சொன்ன புருஷகாராஶ்ரயணத்தைப்பற்ற.

இதில் என்றது - இப்பத்துப்பாட்டிலென்றபடி. "பிள்ளாய்" என்றத்தைப் பற்ற வருளிச்செய்கிறார் (பகவதித்யாதி.) (எழுப்புகிறார்கள்) என்றவநந்தரம், என்று என்று ஶேஷம்.

பதம்.	உரை.
	நூதநமாக பகவத்ஸம்பந்தம் பெற்று இந்நோன்பின் வாசியறியாதா ளொருத்தியை "போதுவிடிந்தது, எழுந்திராய்" என்றெழுப்ப; "விடிந்தமைக்கு அடையாளமென்" என்றுகேட்க; "நாங்களுணர்ந்துவந்தோமே" என்ன; "உங்களுக்கு உறக்க மில்லாமையால் அது அடையாள மன்று, வேறடையாளமுண்டோ?" என்று வினவ;
புள்ளும்	காலமுணர்த்த உணரும் பக்ஷிகளுங்கூட
	இரைதேடுகைக்காக எழுந்திருந்து
சிலும்பினகாண்,	கூவிக்கொண்டு செல்லாநின்றனகாண் எனவே;
	"நீங்களிருந்தவூரில் பக்ஷிகளுணர்த்தியும் விடிவுக்குடலன்று; மற்றை யடையாளங்க ளுண்டாகிற் சொல்லுங்கோள்" என்றுகிடக்க;
புள் அரையன்	பக்ஷிராஜனான பெரியதிருவடிக்கு
கோ	நிர்வாஹகனான ஸர்வேஸ்வரனுடைய
இல்லில்	கோயிலிலே,
	திருப்பள்ளியெழுச்சிக்கு ஊதுகிற,
வெள்ளை	வெளுத்தநிறமுடைத்தாய்
விளி	பணிக்குக்கடவாரை சாமங்கள் தோறும் அழைக்கைக்குறுப்பான
சங்கின்	சங்கத்தின்
பேர் அரவம்	மிக்க த்வநியையும்
கேட்டிலையோ?	கேட்கவில்லையோ? என்ன;
	பின்பு பேசாதே கிடக்க;
பிள்ளாய்!	பகவத் விஷயத்தில் புதியையாய் க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்தளவில் நிற்கிற பெண்ணே!
எழுந்திராய்;	எழுந்திரு என்று மீளவுமெழுப்ப;
	"நான் பிள்ளையாகிலாகிறென், உங்களை உணர்த்தினரார்?" என்றுவினவ; எங்களை யொருவரு மெழுப்பவில்லை;
பேய்	தாய்வடிவுகொண்டுவந்த பூதனையுடைய
நஞ்சுமுலை	விஷம் நிறைந்த முலைவழியே
உண்டு,	அவளுயிரையும் வாங்கினவனாய்,
	தாயாரால் காவலாக வைக்கப்பட்டு அஸுராவேஶத்தாலே தன்மேல் ஊரத்தொடங்கின
கள்ளம்	க்ருத்ரிமமான
சகடம்	சகடமானது
கலக்கு அழிய	கட்டு அழிந்து சிதறும்படியாக,

கால் ஓச்சி,	ஸ்தந்யார்த்தியாய்த் தொட்டிலையுதைத்த திருவடிகளை நிமிர்த்து முடித்தவனாய்,
வெள்ளத்து	திருப்பாற்கடலில்
அரவில்	திருவனந்தாழ்வான்மேலே
துயில் அமர்ந்த	கண்வளர்ந்தருளுகிற
வித்தினை,	ஜகத்காரணபூதனானவனை,
முனிவர்களும்	ஒருப்ரவ்ருத்திக்கு க்ஷமரன்றிக்கே மநநஶீலரான குணாநுபவபரரும்
யோகிகளும்	யோகாப்யாஸம் பண்ணுகிற கைங்கர்யபரரும்
உள்ளத்துக்கொண்டு	ஹ்ருதயத்தில் த்யாநித்து,
மெள்ள எழுந்து	ஸர்வேஶ்வரன் தளும்பாதபடி எழுந்திருந்து
அரி என்ற பேர் அரவம்	ஹரி: என்ற மஹாத்வநியானது
உள்ளம் புகுந்து	எங்கள்நெஞ்சிற்புகுந்து
குளிர்ந்து;	குளிர்ந்தது;

அத்தாலே நாங்களுமுணர்ந்தோம், எழுந்திராய் என்கிறார்கள்.

வ்யா.—(புள்ளும்சிலும்பினகாண்) இப்பெண்பிள்ளைகள் "போதோடே வாசலிலேசென்று உணர்த்தக்கடவதாக ஸங்கல்பித்துப் போது விடியச்செய்தே கிடந்துறங்குவதே" என்று ஶிஷ்டகர்ஹை பண்ணினவாறே, "போதுவிடியவேண்டாவோ எழுந்திருக்க" என்ன; போதுவிடிந்தது எழுந்திராய்" என்ன; விடிந்தமைக்கடையாளமென்? என்ன; நாங்களுணர்ந்து வந்தது போராதோவென்ன; நீங்களுறங்கிலன்றோ உணருவது, வேறடையாளமுண்டோவென்ன (புள்ளும்சிலும்பினகாண்) போது விடிந்தது, பக்ஷிகளகப்படக் கிளம்பி யிரைதேடிப் போகாநின்றன காணென்ன; அது விடிந்தமைக் கடையாளமோவென்ன, என் அல்லவோவென்ன ; ஓம், அல்லவி என்ன; ஆவதென்

"புள்ளும்" என்ற சகாரத்தாலே - வேறே அடையாளமும் விவக்ஷிதமென்று தோற்றுகையால், இரண்டடையாளம் சொல்லுகையாலே உக்தி ப்ரத்யுக்தி ரூபேண தாத்பர்யமருளிச்செய்கிறார்(இப்பெண்பிள்ளைகளித்யாதி.)"சிலும்பின" என்னவமைந்திருக்க, "காண்" என்கையாலும், "கேட்டிலையோ' என்றத்தாலும் வெறுப்புத்தோற்றுகையாலே (ஶிஷ்டகர்ஹைபண்ணினவாறேயென்றது.) சிலும்புகை - ஶப்திக்கையாய், பலிதார்த்தத்தையருளிச்செய்கிறார் (போதித்யாதி.) (இவ்விடத்திலே) இத்யாதி ஜதிஹ்யவாக்யத்தை (போகாநின்றனகாண்) என்றவநந்தரம் அநுஸந்திப்பது.

லோகத்தில் பெண்கள்பேச்சான ரீதிதோற்றும்படி உக்தி ப்ரத்யுக்தி ரூபேண மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார்(அதுவிடிந்தமைக்கித்யாதி.)ஆவதென்னென்னவென்றது - அடையாளமாகாமையாவதென்னென்னவென்ற

னென்ன; நீங்கள் அவற்றை யுறங்கவொட்டாதே கிளப்பினவாறே கிளம்பிற்றின வல்லது விடிந்தமைக் கடையாளமோ வென்ன; நீங்கள்பிறந்தவூரில் பக்ஷிகளுக்கு உறக்கமுண்டோ; "காலையெழுந்திருந்து கரியகுருவிக்கணங்கள் - மாலின்வரவு சொல்லி மருள்பாடுதல் மெய்ம்மைகொலோ" என்றன்றோ விருப்பது, வேறடையாளமுண்டோவென்ன; இவ்விடத்திலே "பிள்ளைப்பிள்ளையாழ்வான், பகவத்ஸமாஶ்ரயணத்துக்கு அநுகூலமான காலத்தை ஸூசிப்பிக்கிற இந்த பக்ஷிகள் நாதமல்லது இவ்வாத்மாவுக்கு உத்தேஶ்யமில்லை என்று பணிக்கும்" என்றருளிச்செய்வர்.

(புள்ளரையனித்யாதி) அது கிடக்கிடாய், இதுவுமுன் செவிப்பட்டதில்லையோ, புள்ளுக்கு நிர்வாஹகனான பெரியதிருவடியுண்டு, அவனுடைய கோவுண்டு - ஸர்வேஶ்வரன், அவனுடைய இல் என்னுதல்; "புள்" என்று - பெரியதிருவடியாய், அவனுக்கு நிர்வாஹகனானவனுடைய கோயிலென்னுதல். திருப்பள்ளியெழுச்சியில் சங்கத்வநி கேட்டிலையோ. க்ருஷ்ணன் திருவவதரித்து திருவாய்ப்பாடியிலே இருந்ததே குடியாக அவனழகிலே பத்தபாவராய்ச் செல்லுகிற காலத்திலே கொண்டாடுகைக்கு ஒரு திருமுற்றமுண்டோ வென்னில்; சக்ர

படி. இதுக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (நீங்களவற்றையித்யாதி.)

உன்னையெழுப்பவந்த வெங்களுக்கு அவற்றையெழுப்புகைபணியோ, நாங்களெழுப்பினோமென்கிற தென்னென்ன அருளிச்செய்கிறார் (நீங்கள்பிறந்தவித்யாதி.) நாங்கள் பிறந்தவூரிலே பக்ஷிகள் உறங்காதிருக்கைக்கு நியாமகமென்னென்ன; ஸம்வாதமுகேந நியாமகமருளிச்செய்கிறார் (காலையித்யாதி.) [காலையெழுந்திருந்து] * ப்ராஹ்மே முஹூர்த்தத்திலே யெழுந்திருந்து. [கரியகுருவிக்கணங்கள்] க்ருஷ்ணன்வடிவை ஸ்மரிப்பிக்குமவை. [மாலின்வரவுசொல்லி] அவன் வ்யாமுக்தனாய் வரும்படியைச்சொல்லி [மருள்பாடுதல் மெய்ம்மைகொலோ] ப்ரேமாந்தத்தாலே பாடுகைமெய்யாகப் புகுகிறதோ என்று; இப்படியே பக்ஷிகளும் உங்களைப்போலே வ்யாமோஹத்தாலே கூப்பிடும்படியிறே நீங்கள் பண்ணிவைப்பது; ஆகையால், உங்கள் ஸ்வபாவம்போலே அவையும் உறக்கமற்றுச் சிலும்பிற்றினவித்தனை; இது விடிவுக்கடையாள மன்றென்றதாய்த்து. இவ்விடத்தில் - "காலையெழுந்திருந்து" என்றது விவக்ஷிதம். இரண்டாமர்த்தத்தில் "கோயில்" என்றது - முழுச்சொல்லு.

(க்ருஷ்ணன் திருவவதரித்து) என்றவநந்தரம், "இருக்கையாலே" என்று ஶேஷம். இருந்ததே குடியாகவென்றது - குடியிருந்தவர்களெல்லாருமென்றபடி. கொண்டாடுகைக்கென்றது - "புள்ளரையன்கோயிலில்" என்று ஸ்துதிக்கைக்கென்றபடி. க்ருஷ்ணனிடத்தில் பத்தபாவராகிலும் அவன்விரும்பின விஷயமென்று கொண்டாடுகைக்குக் கோயிலுண்டென்னுமத்தை ஸத்ருஷ்டாந்த

வர்த்தித் திருமகன் திருவவதாரம் பண்ணி, இருந்ததேகுடியாக அவனழகிலே ஈடுபட்டுச் செல்லாநிற்க, "సహపత్న్యా విశాలాక్ష్యా నారాయణముపాగమత్" "ஸஹபத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" (அக) என்று-அவர் தாம் பெரியபெருமாளை ஆஶ்ரயிக்குமாப்போலே, க்ருஷ்ணனையும் கும்பிடுகொள்கைக்கு ஒருதிருமுற்றமுண்டு (புள்ளரையன்) பெரியதிருவடியை நிரூபகமாகவுடையவன். ஆஶ்ரிதர் தனக்கு நிரூபகமாம்படியிறே இவர்களுக்குக்கொடுத்த ஐஶ்வர்யம்; "లక్ష్మణపూర్వజః" "லக்ஷ்மணபூர்வஜ:" (அஉ) என்றிறே யிருப்பது. பகவத்விஷயத்தில் வழியெயிழியுமவர்களாகையாலே பெரியதிருவடியை முன்னிடுகிறார்கள். (வெள்ளை விளிசங்கு) சங்கு வெளுத்திருக்குமது விடிந்தமைக்கடையாளமோ, இது வ்யர்த்த விஶேஷணம். (விளிசங்கு) சாமங்கள் தோறும் முறையுடையாரை அழைக்கிறார்களாகில் போது விடியவேணுமோ; அங்ஙனல்ல, (பேரரவம்) விடிந்தமைக்கு அடையாளமன்றோ, ஸ்ரீபாஞ்சஜந்யத்வநியிலும் இது அதிகமாகவன்றோ த்வநிக்கிறது. நீயுமுணருகைக்குப் போரும் த்வநி, இவர்கள் சங்கின் வெளுப்புச் சொல்லுவானென்னென்னில்; சங்கத்வநி வழியே யூதும்போதை முகமுத்ரையும் சங்கின் வெளுப்பும் உத்தேஶ்யமாகையாலே. (விளிசங்கு) விளிக்கை - அழைக்கை. "கைவிளிக்கின்றதுங் கண்டேநின்றேன்" என்னக்கடவதிறே. கையாலே யழைக்கையென்றபடி.

மாக வருளிச்செய்கிறார் (சக்ரவர்த்தியித்யாதி.) இவர்களுக்குக்கொடுத்த வைஶ்வர்யம்) என்றதுக்கு - தன்னையும் தன்விபூதியையும் ஆஶ்ரிதரிட்டவழக்காக்கி வைக்கையாலே அவர்கள் ப்ரஸித்தராய் அவர்களையிட்டு நிரூபிக்கலாம்படி யிருக்குமென்றுகருத்து. தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (பகவதித்யாதி) வழியேயிழிகையாவது - புருஷகார புரஸ்ஸரமாகப்பற்றுகை.

சங்குக்கு வெளுப்பு ஸித்தமாயிருக்க, "வெள்ளை" என்று சொல்லும் போது விடிந்தமைக்கடையாளமாகச் சொல்லிற்றாக வேணும், அதில்லாமையாலே இது வ்யர்த்தமாகையால் உங்கள்வார்த்தை விஶ்வஸநீயமன்றென்னும் சங்கையை உத்க்ஷேபிக்கிறார் (சங்குவெளுத்தித்யாதி.) முறையுடையார் - அவ்வவகாலத்துக்குத்தக்க கைங்கர்யம்பண்ணும் ப்ராப்தியுடையவர்கள். "வெள்ளை" என்னுமது வ்யர்த்தமாகிலும் * விளிசங்கினரவம் பேரரவமாகையாலே அடையாளமாமென்று திருவுள்ளம்பற்றி இவர்களுடைய ப்ரத்யுக்திமுகேந பரிஹரிக்கிறார் (அங்ஙனல்லவித்யாதி.) "வெள்ளை" என்றத்தை அடையாளமாக்காவிடில் அத்தை யிவர்கள் சொல்லுகைக்குக் காரணமென்னென்று ஶங்கித்து விவரிக்கிறார் (இவர்களித்யாதி.) சங்காலேயழைக்கிறபடியை யருளிச்செய்கிறார்

ஸத்த்வோத்தரமான காலத்திலே அடிமைசெய்ய வாருங்கோ ளென்று அழைக்கிறபடி. (கேட்டிலையோ) இது கேட்க பாக்யமின் றிக்கே யொழிவதே!.

இவர்கள் இப்படி சொல்ல, பின்பு நிருத்தரையாய்க் கிடந்தாள் (பிள்ளா யெழுந்திராய்) பகவத்விஷயத்தில் புதியையிறே. பாகவத ஸம்ஶ்லேஷத்தி லினிமையறியாயிறே. அநுபாவ்யங்களில் காஷ்ட்டா பூமியான பாகவத ஸம்ஶ்லேஷரஸம் பிறக்குமளவும் பகவத் விஷயத் திலே அவகாஹிக்கப் பெற்றிலையே. நாங்கள் உன்னைக்காண வாசைப் பட்டவோபாதி நீயு மெங்களைக்காண வாசைப்பட வேண்டாவோ.

அறிந்திருக்கிற வுங்களை யெழுப்பினாரார் என்ன (பேய்முலை இத் யாதி) எங்களை யெழுப்பினாரில்லை, தந்தாங் காரியஞ் செய்வார் த்வநி கேட்டெழுந்திருந்தோம் என்றார்கள். (பேய்முலை நஞ்சுண்டு) பெற்ற தாயுமுதவாத தனிமையிலே பாதிக்கவந்த பூதனையை முடித்து. இத் தலையை முடிக்கவந்தவள் தன்னோடேபோம்படி பண்ணி. (கள்ளச்சக டம்) பேயாகில் ஆராய்ந்துகொள்ளலாம்; தாயே ரக்ஷையாக வைத்த ஶகடம். அஸுராவேஶத்தாலே பிறந்த அபாயமாகையாலே “கள் ளச்சகடம்” என்கிறது. (கலக்கழியக் காலோச்சி) ஶகடமானது

(ஸத்த்வோத்தரேத்யாதி.) “சிலும்பினகாண்” என்னுமாப்போலே பேரரவம் முழங்கிற்றென்று சொல்ல வமைந்திருக்க, “கேட்டிலையோ” என்கைக்கு உப லம்பம்தோற்றத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இதுகேட்கவித்யாதி.)

போதுவிடிந்தமைக்கடையாளம் சொல்லியிருக்கையால், “எழுந்திராய்” என்றது அர்த்தவித்தமாயிருக்கவும், சொன்னதுக்கு ஹாவமருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி.) “பாவாய்” என்னலாயிருக்க, “பிள்ளாய்” என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பகவதித்யாதி வாக்யத்வயத்தாலே.) உக்தவாக்ய த்வயத்தையும் க்ரமேணவிவரிக்கிறார் (அநுபாவ்யங்களிலித்யாதி.)

பாகவதஸம்ஶ்லேஷரஸம் அறிந்திருக்கிற வுங்களை யாரேனும் பாகவதர் வந்து எழுப்ப அவர்களோடே ஸம்ஶ்லேஷிக்கைக்கு எழுந்திருந்திகோளோ, காலமறியாமல் எழுந்திருந்திகோளித்தனை யென்று திருவுள்ளம்பற்றி யருளிச் செய்கிறார் (அறிந்தித்யாதி) நாங்கள்வந்து உன்னை எழுப்புகிறாப்போலே எழுந் திருந்திகோளித்தனை யென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (அறிந்தித் யாதி.) நாங்கள் வந்து உன்னை எழுப்புகிறாப்போலே எழுப்பினாரில்லை, நாங் களே ஸ்வாநுபவத் [illegible] ரிஷிகள் சொல்லும் ஶப்தம் கேட்டுணர்ந்தோம் பாகவத ஸம்ஶ்லேஷத்துக்காகவென்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (எங்களை பித்யாதி. (முடிக்க வந்தவள்) என்ற வநந்தரம் “நினைவை அவள்” என்று ஶேஷம்.

கலக்கழியும்படி திருவடிகளையோச்சி. மூலவரவு தாழ்த்ததென்று மூரிநிமிர்த்த திருவடிகள் பட்டு முறிந்தது. இப்போது இவ்வபதாநங்கள் சொல்லுகிறது -- பிறந்த வபாயங்கள்கேட்டு துணுக்கென்றெழுந்திருக்கைக்காக. (வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை) இவ்வபாய ப்ரஸங்கமில்லாத விடத்திலே, பரிவனான திருவநந்தாழ்வான்மேலே சாயப் பெற்றதே! என்று ஹ்ருஷ்டைகளாகிறார்கள். (வெள்ளம்) ஸௌகுமார்யத்துக்குச் சேரக் குளிர்ச்சி யுண்டானபடி. (அரவில்) அந்நீருறுத்தாமைக்குப் படுத்தபடுக்கை. மென்மை குளிர்த்தி நாற்றங்கள் ப்ரக்ருதியான திருவநந்தாழ்வான்மேலே. இவன் மூச்சுப்பட்டு மதுகைடபர்கள் பொடிபட்டுப்போகையாலே, பயப்படவும் வேண்டாவென்கை. (துயில்) ஜகத்ரக்ஷண சிந்தை. "பணிக்கடலிற் பள்ளிகோளைப் பழகவிட்டோடிவந்தென் மனக்கடலில் வாழவல்ல மாயமணாளநம்பி" என்று-ஓராஸ்ரிதனுடைய ஹ்ருதயத்தைக் கணிசித்துக் கிடக்குமவனென்னவுமாம். (அமர்ந்த) பிராட்டிமார் திருமுலைத்தடத்தாலே நெருக்கினாலும் உணராமை. (வித்தினை) திருவவதாரத்துக்கு நாற்றங்கால். பிறந்த பிறவிகள் போராமை திரியப் பிறக்கைக்கு அடியிட்டபடி. (உள்ளத்துக்கொண்டு) "அரவத்தமளியினோடு மழகிய பாற்கடலோடு மரவிந்தப்பாவையுந் தானு மகம்படி வந்து புகுந்து" என்கிறபடியே திருப்பாற்கடலோடும் திருவநந்தாழ்வானோடும் நாய்ச்சிமாரோடுங்கூடத் தங்கள் நெஞ்சிலே கொண்டு. (முனிவர்களும் யோகிகளும்) யோகாப்யாஸம் பண்ணுகிறவர்களும், மநநசீலரும், அவர்களாகிறார் - வ்ருத்தி நிஷ்டரும், குண நிஷ்டரும். இங்கு உறங்குகிறவர்களையும் எழுப்புகிறவர்களையும்போலே யிருக்கிறவர்கள்.

கலக்கு-அவயவஸந்திபந்தம். "கலக்கழியப்பண்ணி" என்னாதே, "காலோச்சி" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (மூலயித்யாதி.) இத்தால்-கள்ளச்சகடழியவேணுமென்னும் நினைவாலே கலக்கழியச்செய்தமைதோற்றாதே, மூலவரவு தாழ்த்து நிமிர்த்த திருவடிகளாலே கலக்கழிந்தமை தோற்றுகைக்காக "காலோச்சியென்றது" என்றதாய்த்து.

அவள் துணுக்கென்றெழுந்திருக்கைக்காக அபாயப்ரஸங்கம் பண்ணுவது தங்களுக்கு பயஹேதுவாகையாலே, தந்நிவ்ருத்தியாம்படி க்ஷீராப்திஶாயியை அநுஸந்திக்கிறார்களென்கிறார் (இவ்வபாயமித்யாதி.) "வெவ்வுயிர்ப்பவாய்ந்த மதுகைடபரும் வயிறுருகிமாண்டார்" என்கிற பாசுரத்தை யுட்கொண்டருளிச்செய்கிறார் (இவனித்யாதி.)

(மநநசீலரும் - யோகாப்யாஸம் பண்ணுகிறவர்களும்) என்றந்வயித்துக்

(மெள்ளவெழுந்து) கர்ப்பிணிகள் ப்ரஜைகளுக்கு நோவுவாராமே எழுந்திருக்குமாப்போலே. "ஹ்ருதயேநோத்வஹந் ஹரிம்" "ஹ்ருதயெநாத்வஹந்ஹரிம்" (௮௩) என்று - வளையம் அலையாமே என்றிறேயெழுந்திருப்பது. திருவாய்ப்பாடியிலே முனிவர்களும் யோகிகளுமுண்டோவென்னில்; க்ருஷ்ணன்வந்து அவதரித்தபின்பு இடையருடைய பசுநிரைக்கொட்டில்களிலே வந்து அவர்கள் [௧] படுகாடு கிடப்பர்கள். (அரியென்ற) அரியென்கையாவது -"ஹரிர்ஹரதி பாபாநி" "ஹரிஹரதிபாபாநி" (௮௪) என்கிறபடியே பகவதநுபவ விரோதிகளைப் போக்கியருளவேணுமென்கை. பின்னை யிவர்களுக்கு பாபமாவது - க்ருஷ்ணனுக்கு அஸுரர்களாலே வரும்தீங்கு; அத்தையவன்றானே போக்கித்தந்தருளவேணுமென்று மங்களாஶாஸநம் பண்ணுகையென்றுமாம். "அத ஸோऽபயம் கதோ பவதி" "அதஸொபயங்கதொபவதி" (௮௫) என்று - அவனாலே பயங்கெட்டால் பின்பு அத்தலைக்கு பயப்பட்டுத் திருப்பல்லாண்டு பாடுமித்தனையிறே. பகவத்ஸம்பந்தஜ்ஞாநம் பிறப்பதற்குமுன்பு இழவுபேறுகள் தன்னளவிலேயாயிருக்கும்; ஸம்பந்தஜ்ஞாநம் பிறந்தபின்பு, இழவுபேறுகள் அவனளவிலேயாயிருக்கக்கடவதிறே.(பேரரவம்)பஞ்சலக்ஷம் குடியிலுமிந்தத்வநியேயாயிருக்கை. எல்லாரும் ப்ரபுத்தரான காலமாகையாலே யொருவர் சொல்லுமளவன்றிக்கே எல்லாருஞ்சொல்லுகை. (உள்ளம்புகுந்து குளிர்ந்து) படுக்கைக்கீழே வெள்ளங்கோத்தாப்போலே, திருநாமம் செவிவழியே புகுந்து வவ்வலிட்டது: அவன் அவர்கள் நெஞ்சிலேபுகுந்து ஆநந்திப்பித்தாப்போலே க்ருஷ்ணவிரஹத்தாலே கமர்பிளந்து கிடக்கிறநெஞ்சு பதஞ்செய்யும்படி இவர்களுடைய த்வநியும் எங்கள் நெஞ்சிலே புகுந்து எங்களை ஆநந்திப்பித்தது. ஆகையாலே எழுந்திராய் என்கிறூர்கள். ... ... (௬)

கொள்வது.வளையம்-திருமாலை என்றிறே யென்றது - ஏந்திக்கொண்டிறேயென்றபடி. எல்லாருமென்றது - எல்லாரிஷிகளுமென்றபடி.

வவ்வலிட்டது - வவ்வலிடப்பண்ணிற்று. ஆகையாலேயென்றது - நாங்களெழுந்திருக்கும்படி ஆநந்திக்கும்படி ஆநந்திப்பிக்கையாலே யென்றபடி.

"உள்ளம்புகுந்து குளிர்ந்து" என்றவநந்தரம், "நாங்களெழுந்திருந்தோம்" என்று பாட்டிலே கூட்டிக்கொள்வது. "எல், ஓரி" இத்யாதி - பாதபூரணம் (௬)

---

[௧] படுகாடு - வெட்டிவிழுந்த காடு என்றுபெரிய ஜீயர்; இடையில் நெரிந்த மரம் என்று வானமாமலை ஜீயர்.

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—ஆறும் பாட்டு. (புள்ளுமித்யாதி) முதற்பாட்டில் - ப்ராப்ய ஸ்வரூபத்தையும் ப்ராபகஸ்வரூபத்தையும் அதிகாரி ஸ்வரூபத்தையும் ஸங்க்ரஹேண வருளிச்செய்து, இரண்டாம்பாட்டில் - அவ்வதிகாரிக்கு ஸம்பாவிதமான ஸ்வரூபதர்மங்களை யருளிச்செய்து, மூன்றும் பாட்டில் - இவ்வதிகாரிகளநுஷ்ட்டாநத்தாலே இவர்களிருக்கும் நாட்டிற்பிறக்கும் ஸம்ருத்தியைச்சொல்லி, நாலாம்பாட்டில் -அவ்வதிகாரிகளுக்கு பகவதநுகூலரானவர்கள் கிஞ்சித்கரிக்கும்படி சொல்லி, அஞ்சாம்பாட்டில் - அவ்வதிகாரிகளுக்கு பூர்வாகோத்தராகங்கள் ஸித்தோபாயபலத்தாலே நெருப்பிலிட்ட பஞ்சுபோலே தன்னடையே நஶித்துப்போம்படிசொல்லி, இனி, மேல் பத்துப்பாட்டாலே — பகவதநுபவ ஸஹகாரிகளை யெழுப்புகிறபடியைச் சொல்லுகிறது. அதில், இப்பாட்டில் - நூதநமாக பகவத்ஸம்பந்தம் பெற்ற வதிகாரியை யெழுப்புகிறார்கள்.

(புள்ளும் சிலும்பினகாண்) இப்போது இவள் புள்ளென்கிறது, * சேர்ப்பாரையில் சொல்லுகிறபடியே ஜ்ஞாநாநுஷ்டாநங்களாலே பகவத்ஸம்பந்தகடகரான பாகவதர்களை. ஆகையாலே. ஸத்த்வோத்தர காலமானவாறே ஸாத்த்விகரான பாகவதர்கள் பகவத்குணாநுஸந்தாந பூர்வகமாக பகவத்கைங்கர்ய ரூபங்களாய் தத்தத்வர்ணாஶ்ரமோசிதங்களான காலீநகர்மங்களை யநுஷ்ட்டிக்கைக்காக ஸர்வதோதிக்கமாக வெழுந்திருந்து புறப்பட்டார்கள். (பிள்ளாயெழுந்திராய்) பகவதாராதந காலமாய்த்து, எழுந்திராயென்ன; அவர்களும் உங்களாரவாரம் கண்டெழுந்திருந்தார்கள், வேறடையாளமுண்டோ வென்ன (புள்ளரையன்கோயிலில் வெள்ளைவிளிசங்கின்பேரரவங் கேட்டிலையோ) புள்ளுக்கு - பெரியதிருவடிக்கு, அரையன் — அரையனை வெம்பெருமானுக்கு ப்ரதிபாதகத்வேந கோயிலான திருமந்த்ரத்தில் உக ரத்தை மத்யத்திலே யுடைத்தாகையாலே பரிஶுத்தமாய் அகிலாத்மவர்க்கத்துக்கும் பகவத் கைங்கர்யோபயுக்தமாய் பகவத்ஸம்பந்த ஜ்ஞாபகமாய் தக்ஷிணாவர்த்த சங்கதுல்யமான ப்ரணவத்தின் மகாத்வநியைக் கேட்டிலையோ. (பேய் இத்யாதி) பேயுண்டு-ப்ரக்ருதி, முலையுண்டு - அஹங்கார மமகாரங்கள், நஞ்சுண்டு - அதுகளாகிறவிஷம், உண்டு - அநுபவித்து. அதாவது - ப்ரக்ருதிஸம்பந்த நிபந்தநமாய் சேதநருக்குவரும் அஹங்கார மமகாரங்களைப் போக்கியென்றபடி.(கள்ளச்சகடங் கலக்கழியக்காலோச்சி) காமக்ரோதங்களை

யும் நிவர்த்திப்பித்து. (வெள்ளத்து) திருப்பாற்கடலிலே. (அரவில்) திருவநந்தாழ்வான்மேலே. (துயிலமர்ந்த) யோகநித்ரையிலே அந்ய பரதையில்லாம லமர்ந்திருக்கிற. (வித்தினை) ஜகத்காரணபூதனை. (உள்ளத்துக்கொண்டு) ஹ்ருதயத்தில் த்யாநித்து. (முனிவர்களும் யோகிகளும்) குணாநுபவபரரும், கைங்கர்யபரரும். (மெள்ள) ஸாவதாநமாக. (எழுந்து) ஜாகரூகராய். (அரியென்ற) ஹரிர்ஹரிஃ என்ற. (பேரரவம்) மஹாத்வநியானது. (உள்ளம்புகுந்து) ஹ்ருதயத்தில் ப்ரவேஸித்து. (குளிர்ந்து) குளிர்ந்தது. எழுந்திராய் இத்யந்வயஃ (சு)

அ.—ஏழாம்பாட்டு.—பகவத்விஷயத்தில் சுவடறிந்தே மறந்து கிடக்கிறுளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

மூ.—கீசுகீ சென்றெங்கு மானைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவங் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறப்புங் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவங் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய் நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய் திறவேலோ ரெம்பாவாய். (எ)

பதம்.	உரை.
	பகவத்விஷயத்தின் வாசியறிந்தும் மறந்து உறங்குகிறுளொருத்தியைநோக்கி,
ஆனைச்சாத்தன்	வலியன் என்னும் பாரத்வாஜபக்ஷிகள்
கலந்து	ஒன்றோடொன்று ஸம்ஶ்லேஷித்து
கீசு கீசு என்று	எழுத்தும் பொருளும் தெரியாதே
எங்கும்	எல்லா திக்குக்களிலும்
	விடிவுக்கடையாளமாக
பேசின	தங்கள் தளர்த்தி தோற்றப் பேசுகிற
பேச்சு அரவம்	பேச்சின் த்வநியை
கேட்டிலையோ?	நீ கேட்கவில்லையோ?
	எழுந்திராய் என்று எழுப்பியும் பேசாதே கிடக்க;
பேய்ப்பெண்ணே!	அறிவில்லாதவளே!
நறு வாசம்	மிக்கபரிமளம் வீசாநின்றுள்ள

ஏழாம்பாட்டு (கீசுகீசென்றித்யாதி.) "நாயகப்பெண்பிள்ளாய்" என்றத்தைப்பற்ற (சுவடறிந்தென்றது.) "பேய்ப்பெண்ணே" என்றத்தைக்கடாக்ஷித்து (மறந்துகிடக்கிறுள் என்றது.)

குழல்	மயிர்முடியையுடைய
ஆய்ச்சியர்	இடைச்சிகள்,

க்ருஷ்ணன்கண்ணழகில் தோற்றுப் பாடும் த்வநியும்,

காசும்பிறப்புங்கலகலப்ப	அச்சுத்தாலியும் முளைத்தாலியும் கலகலவென் ஒலிக்க
கைபேர்த்து	கைசலிக்கும்படி
மத்தினால் ஓசைபடுத்த தயிர் அரவம்	மத்தால் கடைகிற தயிரோசையும்
கேட்டிலையோ?	உன்செவியிற்பட்டதில்லையோ? என்னச்செய்தேயும்,

இவ்வூரிலெப்பொழுது மிடைவிடாமல் தயிர்கடைகை ஸ்வபாவமன்றோ என்று பேசாதேகிடக்க;

நாயகப்பெண்பிள்ளாய்!	பெண்களுக்கெல்லாம் நிர்வாஹகையானவளே!
நாராயணன்	வாத்ஸல்யத்தாலே எல்லார்க்கும் ரக்ஷகனாய்
மூர்த்தி	ஸௌசீல்யத்தாலே கிருஷ்ணனாய்வந்து திருவவதரித்தவனாய்
கேசவனை	கேசியை நிரஸித்தாப்போலே நம் விரோதிகளைப்போக்குமவனான ஸர்வேஶ்வரனை
பாடவும்	நாங்கள் பாடாநிற்கச்செய்தேயும்,
நீ கேட்டே	அவன் விஜயத்தை நீ கேட்டிருந்தும்
கிடத்தியோ?	கிடந்து உறங்குகிறாயோ?
தேசம் உடையாய்!	மிக்கதேஜஸ்ஸை யுடையவளே!
திற.	கதவைத்திறந்துவிடாயென்கிறார்கள்.

வ்யா.—"போதுவிடிந்தது, எழுந்திராய்" என்ன; விடிந்தமைக் கடையாளமென்னென்ன; ஆனைச்சாத்தன் ¶ கீசுகீசென்று நின்றது. (கீசு) அநக்ஷரரஸமாயிருக்கை. ஓரானைச்சாத்தன் பேசுங்காட்டில் போது விடிந்ததாக வேணுமோ வென்ன; எங்கும் பேசாநின்றதென்ன; அவற்றை உணர்த்துகைக்கு நீங்களுண்டே யென்ன; எங்களாலன்று, தானே யுணர்ந்தன வென்ன; அதுக்கடையாள மென்னென்ன (கலந்துபேசின பேச்சரவங் கேட்டிலையோ) கலந்து பேசி

அப்ருஷ்டோத்தரமாகாமைக்காக பதாவதாரிகை யருளிச்செய்கிறார் (போதித்யாதி வாக்யத்ரயத்தாலே.) "ஆனைச்சாத்தன்கலந்துபேசினபேச்சு" என்று இவ்வளவேயமைந்திருக்க, "கீசுகீசு" என்னவேணுமோமென்ன; அதுக்கு ப்ரயோஜநமருளிச்செய்கிறார் (அநக்ஷரேத்யாதி;) அவ்யக்தமதுரதையை ஸூசிப்பிக்கிறதென்றுகருத்து. "எங்கும்" என்றதுக்கு ப்ரஶ்நப்ரதிவசநரூபேண தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஓரானைச்சாத்தனித்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே.) கலக்கையாவது - உறங்கவொட்டாதே கிளப்புகையென்கை. கலந்து – ஸம்ஶ்லேஷித்து. அநந்தரம் ஸம்ஶ்லேஷிக்கப் புகுகிறபோது பேசினபேச்சென்று திரு

¶ "ஆனைச்சாத்தம்" என்று சில ஸ்ரீகோசங்கள்.

னபடி அறிந்தபடி யென்னென்ன ; பிரிந்துபோனால் பகலெல்லாம் தரிக்கும்படி கலந்து பிரியப் புகாநின்றோ மென்னும் தளர்த்தி தோற்றப்பேசுகிற மிடற்றோசை கேட்டிலேயோ. கேளாமைக்கு அங்கே ஆரவார முண்டாகையாகாதே செல்லுகிறது என்று மர்மம் சொல்லுகிறார்கள் (கேட்டிலேயோ) என்று.

(பேய்ப்பெண்ணே) இவர்களாகி லிப்படி சொல்லுகையே பணி யென்று பேசாதேகிடக்க ; அறிந்துவைத்துக் காற்கடைக் கொள் வாயே ! மதிகேடீ ! என்கிறார்கள். இவர்களுக்கு அறிவாகிறது - பகவத் விஷயத்திலும் ததீயவிஷயம் நன்றென்று அறிகை. அதை யறிந்துவைத்துப் பேசாதே கிடக்கையாலே சொல்லுகிறார்கள். என்னறியாமை சொல்லாதே விடிந்தமைக்கடையாளஞ் சொல்லுங்கோளென்ன ; தயிர் கடைகிறவோசை கேட்டிலேயோ. (காசும்பிறப்பும்) அச்சுத்தாலியும், முளைத்தாலியும். (கலகலப்ப) கடைகிறபோதை வ்யாபாரத்தாலே, "அரவூறுசுலாய் மலைதேய்க்குமொலி" என்னுமாப் போலே த்வநிக்கை. (கைபேர்த்து) தயிரின்பெருமையாலும் இவர்கள் ஸௌகுமார்யத்தாலும் மலைபேர்த்தாப்போலே கைபேர்க்கப் போகாதபடி. க்ருஷ்ணன் ஸந்நிதியில்லாமையாலே கைசோர்ந்ததென்ன

வுள்ளம்பற்றி ப்ரஶ்நப்ரதிவசநரூபேண அபிப்ராயத்தை யருளிச்செய்கிறார் (கலந்தித்யாதி.) "கேட்டிலேயோ" என்றதுக்கு - அவற்றின் தளர்த்தி ஸ்பஷ்டமாகத்தோற்றும்படிபேசின மிடற்றோசையைக்கேளாதே போனாயோ, கேட்டிருந்தாயென்றொரு தாத்பர்யமருளிச்செய்து, இப்படி ஸ்பஷ்டமானவிதுவும் க்ருஷ்ணாநுபவத்தி லாதரத்தாலே கேளாதிருந்தாயோவென்று தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (கேளாமைக்கித்யாதி.)

"பெண்ணே" என்னாதே "பேய்ப்பெண்ணே" என்றதுக்கு ப்ரஸக்திபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவர்களாகிலித்யாதி.) தாங்கள் விஶ்லேஷ துஃகிகளாகையாலே அவற்றின் மிடற்றோசையிலேயும் தளர்த்தியை ஆரோபித்துச்சொல்லுகிறார்களித்தனை, இது விடிவுக்கடையாள மன்றென்று பேசாதே கிடந்தாள் என்று இப்படி ஸம்போதிக்கிறார்களென்று இவ்வாக்யத்துக்கு தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அறிந்துவைத்தித்யாதி.) மதியையின்னதென்னா நின்றுகொண்டு மதிகேட்டை விவரிக்கிறார் (இவர்களுக்கித்யாதி.)

"காசும்" இத்யாதிக்கு ப்ரஶ்நோத்தரரூபேண ஸங்க்ரஹமாக தாத்பர்ய மருளிச்செய்கிறார் (என்னறியாமை யித்யாதி.) அச்சுத்தாலியாவது - அச்சாலே போட்டடித்து மாலையாகக்கோத்துக் கழுத்திலேதரித்த ஆபரணம். முளைத்தாலியாவது - முளைமுளையாகப்பண்ணிக்கோத்து தரித்த ஆபரணம். அரவு - வாஸுகி. "கை" - என்றது-மத்தைப்பற்றினகையென்றாய், பேர்க்கை- சலிப்பிக்கையாய், அதிலருமைக்கு நாலுஹேதுக்களை யருளிச்செய்கிறார் (தயிரினித்

வுமாம். அன்றியே அவன்றானே ஸந்நிஹிதனாய் நின்று "தயிரை மோராக்கவொட்டேன்" என்று கையைப்பற்றி நாலுகையாலே யென்றுமாம். "மோரார் குடமுருட்டி" என்னக்கடவதிறே. (வாசமித்யாதி) ஆயாஸத்தாலே மயிர்முடி நெகிழ்ந்து பரிமளந்தானே புறப்பட்டு ப்ரவஹிக்கிறபடி. (மத்தினாலோசைபடுத்த) மந்தரத்தாலே கடலைக் கலக்கினாப்போலே, இந்த கோஷமும் செவியில் பட்டதில்லையோ. "ఉద్గాయతీనామరవిన్దలోచనం వ్రజాఙ్గనానాందివమస్పృశద్ధ్వనిః । దధ్నశ్చ నిర్మన్థనశబ్దమిశ్రితో నిరస్యతే యేన దిశామమఙ్గళమ్" "உத்காயதீநாமரவிந்தலோசநம் வ்ரஜாங்கநாநாம் திவமஸ்ப்ருஶத் த்வநி:। தத்நஶ்ச நிர்மந்தநஶப்தமிஶ்ரிதோ நிரஸ்யதே யேந திஶாமமங்கலம்" (அசு) என்று - அவன் கண்ணழகிலே தோற்றுப் பாடுகிற த்வநியும், கடைகிற தயிரோசையும், ஆபரண ஓசையும் கிளர்ந்து, ஊர்த்த்வலோகங்களிலே சென்று கிட்டுவதான ஓசை உன்செவியில் படாதொழிவதே!. இவ்வூரில் "முப்

யாதி வாக்யத்ரயத்தாலே.) நப்பின்னைப்பிராட்டி திருமாளிகையிலே க்ருஷ்ணனுறங்குகிறதாகவும் தாங்களொருவரையொருவர் எழுப்பி அவனையுமெழுப்புகிறதாகவும் வருகிறப்ரகரணத்தில் க்ருஷ்ணன் கையைப்பிடித்து நாலுகிறது சொல்லும்படி எங்ஙனேயென்ன; அவன் விசித்ரஶக்தியோகத்தாலே அகங்கள் தோறும் நாநாப்ரகாரேண வர்த்தித்துக்கொண்டிருப்பனென்று இவர்களறிந்தபடியாலே இப்படி சொல்லுகிறார்களென்னுமது கூடுமென்று கொள்ளக்கடவது. "வாசம்" என்றும், "நறு" என்றும் - பரிமளத்தைச்சொல்லுகையால், அதின்மிகுதியைத் திருவுள்ளம்பற்றி ஸஹேதுகமாக வருளிச்செய்கிறார் (ஆயாஸத்தாலேயித்யாதி.)

"ஆய்ச்சியர் - ஓசைபடுத்ததயிரரவம்." என்னவே மத்து அர்த்தஸித்தமாயிருக்கவும், விசேஷித்ததுக்கு புந:ப்ரதீகக்ரஹணபூர்வகம் த்ருஷ்டாந்தமுகேந தாத்பர்யமருளிச்செய்கிறார் (மத்தினாலித்யாதி.) கீழ் எடுத்த ப்ரதீகஶேஷத்துக்கு ஹாவமருளிச்செய்கிறார் (இந்தவித்யாதி.) "காசும்பிறப்பும்" இத்யாதியிற் சொன்ன அர்த்தங்களுக்கும் ஸம்வாதம் காட்டாநின்றுகொண்டு அதுக்கர்த்தமருளிச்செய்கிறார் (உத்காயதீநாமித்யாதி) వ్రజాఙ్గనానాం-దధ్నశ్చ-ధ్వనిః- నిర్మన్థనశబ్దమిశ్రితస్సన్ - దివమస్పృశత్ - வ்ரஜாங்கநாநாம் - த்வநி: - நிர்மந்தநஶப்தமிஶ்ரித: - திவமஸ்ப்ருஶத் இத்யந்வய: நிர்மந்தநத்தில் — கடைகிற போதையிலுண்டான ஶப்தமானது; பூஷணத்வநியென்று திருவுள்ளம்.

"தயிரரவம்கேட்டிலையோ" என்று அடையாளமாகச்சொன்ன வநந்தரம், இவளெழுந்திருந்தாளாகில், மேலே "கேட்டேகிடத்தியோ" என்னக்கூடாமையாலே எழுந்திராமை ஸித்தமாகையால், அதுக்குஹேதுவாக இவ்வடையாளத்

போதும் கடைந்தீண்டியவெண்ணெய்'' என்று - இரவும் பகலும் இடைவிடாதே தயிர்கடைகை ஸ்வபாவமன்றோ வென்று பேசாதே கிடக்க; (நாயகப்பெண்பிள்ளாய்) இப்பெண்களுக்கெல்லாம் நிர்வாஹகையானபடி இதுவோ வென்கிறார்கள். சொல்லிற்றுக்கெல்லாம் மறுமாற்றஞ் சொல்லிக்கிடக்கிறது உன்னுடைய ஐஶ்வர்யச்செருக்காலே யென்னவுமாம். "பேய்ப்பெண்ணே'' என்றத்தோடு "நாயகப்பெண்பிள்ளாய்'' என்றத்தோடு வாசியில்லையிறே அகவாயில் ஹாவம் ஒன்றாகையாலே.

என்றவிடத்திலும் வாய்திறவாமையாலே (நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ) நீ எழுந்திருப்புதியென்று நாங்கள் பாட, அதுவே குறங்கு குத்தக் கிடந்துறங்குகிறாயே. (நாராயணன்) முகம்தோற்றாமே நின்று வாத்ஸல்யத்தாலே ரக்ஷிக்கக்கடவ ஸர்வேஶ்வரன். (மூர்த்தி) தன்னுடைய ஸௌஶீல்யத்தாலே பிறந்து. (கேசவனை) கண்ணுக்குத்

தையு மங்யதாகரித்தாளென்று உத்தரார்த்தத்துக்கெல்லாம் அவதாரிகை யருளிச்செய்கிறார் (இவ்வூரிலித்யாதி.) என்று என்றது-என்று சொல்லியென்றபடி. கீழே பேய்ப்பெண்ணே'' என்றுசொல்லிவைத்து, இங்கே "நாயகப்பெண் பிள்ளாய்'' என்று தங்களுக்கு ஶேஷியாகச்சொல்லி வெறுக்கக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (பேய்ப்பெண்ணே இத்யாதி.) (அகவாயில் ஹாவமொன்றாகையாலே) என்றதுக்கு - "ప్రణయాచ్చాభిమానాచ్చ పరిచిష్టే పరాఙ్ముఖమ్'' "வ்யுணயா ஹிரோநாவுவரிவிஷேஷவராவவழ்'' என்கிறபடியே "பேய்ப்பெண்ணே'' என்கிறபோதும் தங்களுக்கு ஶேஷியென்னும் நினைவுண்டாய் வெறுத்தார்களென்று கருத்து.

மேலுக்கவதாரிகை (என்றவிடத்திலுமித்யாதி.) (வாய்திறவாமையாலே) என்ற வநந்தரம், "சொல்லுகிறார்கள்'' என்று ஶேஷம்.

"பாடவும்'' என்ற சகாரத்தாலே-எழுந்திருக்கைக்கு ஹேதுவாகத் தோன்றுகையாலும், "கேட்டே'' என்ற ஏகாரத்தாலே அதுவே கிடக்கைக்கு ஹேதுவாய்த் தோன்றுகையாலும் அருளிச்செய்கிறார் (நீயெழுந்திருப்புதியித்யாதி.) குறங்கு-துடை. "நாராயணன், மூர்த்தி, கேசவன்'' என்றபதங்களை ப்ரதாநமாக்கி, நாராயணஶப்தத்துக்கு-பஹுவ்ரீஹியர்த்தம் விவக்ஷித்து, தனித்தனியே பதார்த்தங்களை அருளிச்செய்யாநின்றுகொண்டு, உக்தார்த்தத்தைத்தொகுத்தருளிச்செய்கிறார்(நாராயணனென்றுதொடங்கி, என்கிறார்கள் என்னுமளவும்.) பிறந்தென்றது-பிறந்தவனென்றபடி. "యస్మాత్త్వయైవ దుష్టాత్మా హతః క్లేశీ జనార్దన । తస్మాత్కేశవనామాత్వం లోకే ఖ్యాతిం గమిష్యసి'' "யஸ்மாத் த்வயைவ துஷ்டாத்மா ஹத: க்லேசீ ஜநார்த்தந । தஸ்மாத் கேசவநாமாத்வம் லோகே க்யாதிம் கமிஷ்யஸி'' என்கிற நிருக்தியைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (கண்ணுக்கித்யாதி.)

தோற்ற நின்று நம்விரோதிகளைப் போக்குமவனை. (பாடவும்) இப்படி வாத்ஸல்யத்தையும் ஸௌஶீல்யத்தையும் ஆஶ்ரிதவிரோதி நிரஸநத்தையும் பேசினவிடத்திலும், பின்னையும் இவர்கள் பேச்சே தனக்கு தாரகமாய்க் கிடக்கையாலே (கேட்டேகிடத்தியோ) என்கிறார்கள். இவள் துணுக்கென்றெழுந்திருக்கைக்காக, நிருபாதிகஸ்வாமியான ஸர்வேஶ்வரன் ஆஶ்ரித வத்ஸலனாய் க்ருஷ்ணனாய் வந்து அவதரித்த விடத்திலே கேஶிவந்து நலியப்புக, அவனை க்ருஷ்ணன் கொன்றான்காண் என்ன; அதுக்கும் பேசாதே கிடந்தாள் (பாடவும் நீகேட்டே கிடத்தியோ) அவனுடைய விஜயத்தைக்கேட்டு, கேஶிவந்து நலியப்புக்கான் என்கிற துணுக்கும் கேட்டு, கரவதாநந்தரம், "భర్తారంపరిషస్వజే" "ப⁴ர்தாரம் பரிஷஸ்வஜே" (அள) என்று சக்ரவர்த்தித் திருமகனை ஸ்ரீஜநகராஜன்றிருமகள் அணைத்தாப்போலே, நீயும் க்ருஷ்ணனை யணைக்கப் புறப்படுவாயோ என்று சொன்னோம், அதுவு முனக்கு க்ருஷ்ணவிரோதி பயந்தீர்ந்து மார்பிலே கைவைத்து உறங்கலாம்படியாய் விடுவதே! யென்றுமாம்.

(தேசமுடையாய்திற) உன்னைக் காணப்பெறாதே அந்தகாரமாய்க் கிடக்கிற எங்களுக்கு இத்தைத் திறந்து புறப்பட்டு, உன்னுடைய நிரவதிக தேஜஸ்ஸாலே வெளிச்செறிப்பிக்கைக்காகவும், உன்னுடைய அழகு காண்கைக்காகவும் நீயே வந்துதிற; (தேசமு

---

* కేశిశబ్ద ఉపపదే "వధహింసాయామ్" ఇతిధాతోః "అన్యేభ్యోపి దృశ్యతే" ఇతి డప్రత్యయే "అచోన్త్యాదిటి" ఇతిసంజ్ఞకస్య అధత్ ఇత్యేతస్య లోపే పృషోదరాదిత్వాద్ వకారస్య అకారే కేశవశబ్దో నిష్పన్నః * கேஶிஶப்³த³ உபபதே³ "வத⁴ஹிம்ஸாயாம்" இதி தா⁴தோ: "அந்யேப்⁴யோऽபி த்³ருஶ்யதே" இதி ட³ப்ரத்யயே "அசோऽந்த்யாதி³டி" இதி ஸம்ஜ்ஞகஸ்ய அதஸ இத்யேதஸ்ய லோபே ப்ருஷோத³ராதி³த்வாத் வகாரஸ்ய அகாரே கேஶவ ஶப்³தோ³ நிஷ்பந்ந: என்ற ப்ரக்ரியை கண்டுகொள்வது. "நாராயணன், மூர்த்தி" என்ற விரண்டையும் விஶேஷணமாக்கி, * கேசவபதத்தை விஶேஷ்யமாக்கி, நாராயணபதத்துக்கு தத்புருஷார்த்தத்தைத் திருவுள்ளம்பற்றி தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (இவள் துணுக்கித்யாதி.) விவரணம் (அவனுடையவித்யாதி.)

"கிடத்தியோ" என்கையாலே - எழுந்திருந்து வரச்சொல்லுகை அர்த்தஸித்தமாகையாலே, கதவுதிறவாமல் வரக்கூடாமையால் அதுவு மர்த்தஸித்தமாயிருக்க, "தேசமுடையாய்திற" என்றதுக்கு தாத்பர்ய மருளிச்செய்கிறார் (உன்னையித்யாதி.)

டையாய்த்திற) இவள் பின்னையும் பேசாதே கிடக்கையாலே, ஜாலக ரந்த்ரத்தாலே பார்த்தார்கள். இவளுக்கு க்ருஷ்ண விஜயாநுஸந்தாந ப்ரீதியாலே வடிவிற் பிறந்த புகரைக்கண்டு கிண்ண கத்தை அணை செய்யாதே வெட்டிவிடா யென்கிறார்களாகவுமாம். ... ... (எ)

முன்பு தாங்கள் கண்டிருக்கும் ஸ்வாபாவிக தேஜஸ்ஸைப்பற்ற ஒருதாத் பர்யமருளிச்செய்து, கேசவனைப்பாடினபின்பு பிறந்ததேஜஸ்ஸாக தாத்பர்யாந் தரமருளிச்செய்கிறார் (இவள்பின்னையுமித்தியாதி.) பின்னையுமென்றது-"கிடத் தியோ" என்றவநந்தரமுமென்றபடி. கிண்ணகத்தை யணைசெய்யாதே யென்ற து - இப்போதையில் புகரின் ப்ரவாஹத்தைக் கதவாலணை செய்யாதே கொள் ளென்றபடி. வெட்டிவிடாயென்றது - கதவைத்திறந்துவிடா யென்றபடி.

ஆனைச்சாத்தன் - கீசுகீசென்றெங்கும் - கலந்து பேசினபேச்சரவம் கேட் டிலையோ, பேய்ப்பெண்ணே - வாசநறுங்குழலாய்ச்சியர் - காசும் பிறப்பும் கல கலப்பக்கைபேர்த்து - மத்தினாலோசையித்யாதி அந்வயம் கண்டுகொள்வது. ஏலித்யர்தி - பாதபூரணம். (எ)

ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்.

அ.—ஏழாம்பாட்டு. (கீசுகீசு இத்யாதி) இப்பாட்டில், பகவத் விஷயத்திலும் பாகவத விஷயம் நன்றென்றறிந்தும் மறந்திருப்பா ரொருவரை யெழுப்புகிறார்கள்.

வ்யா.—(எங்குமானைச்சாத்தன் கலந்து – கீசுகீசு என்று பேசின பேச்சரவம் கேட்டிலையோ) ஸர்வதோதிக்கமாக, அஹங்கார நிவர் த்தகரான மஹாபாகவதர், "நாம்பிரியப் புகாநின்றோமே!" என்று பிரிந்தால் மறுபடி கூடுந்தனையும் தரித்திருக்கைக்காக பரஸ்பரம் ஸம்ஶ்லேஷித்து, கத்கதஸ்வரமாகையாலே அநக்ஷரரஸமாக, பே சின பேச்சரவம் - விஶ்லேஷவ்யஸநம் தோற்றும்படியாகப் பேசின பேச்சினுடைய த்வநியைக் கேட்டிலையோ. (பேய்ப்பெண்ணே) அறி ந்துவைத்து, பேசாதே கிடக்கையாலே மதிகேடீ! என்கிறார்கள்.

அவர்களை யெழுப்புகைக்கு நீங்களுண்டே, வேறுடையாளமு ண்டோவென்ன; சொல்லுகிறார்கள் (காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து) திருமந்த்ரமும் த்வய சரமஶ்லோகங்களும் ஒன்றோ டொன்று சேர்ந்து த்வநிக்க, ஸ்வரூபோபாய புருஷார்த்தஜ்ஞாநம் தலையெடுத்து. (வாசநறுங்குழல் இத்யாதி) மிக்க பரிமளத்தையு டைய பகவத்விஷய வ்யாமோஹத்தையுடைய அநந்யார்ஹ ஶேஷபூ தரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸங்கல்பத்தாலே ஶிக்ஷிதரான ஸம்ஸாரி சேதநருடைய திவ்யப்ரபந்தாநுஸந்தாந த்வநியைக் கேட்டிலையோ.

(நாயகப்பெண்பிள்ளாய்) இதுவன்றோ நமக்கு நீ நிர்வாஹகை யானமைக் கடையாளம். அதாவது - சொன்னதுக்கெல்லாம் மறுமாற்றஞ் சொல்லி யெழுந்திராமலிருக்கை. (நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ) ஸர்வஸ்மாத்பரனான நாராயணனுடைய அவதாரமாய் கேஶிஹந்தாவான க்ருஷ்ணனைப் பாடச்செய்தேயும், "ஸம்ஶ்ருத்ய" "தம் த்ருஷ்ட்வா" என்கிறபடியே க்ருஷ்ண விஜயத்தைக் கேட்டுப் புறப்பட்டு அவனை யணைக்கக்கடவநீ, அதுவே துடைகுத்தாக பகவதபாய பயந்தீர்ந்து உறங்கக் கடவையோ. (தேசமுடையாய் திற) இப்படி சொன்னவிடத்திலு மெழுந்திராமையாலே ஜாலகரந்த்ரத்தாலே பார்த்து, பகவத்குணாநுபவத்தாலுண்டான மஹாதேஜஸ்ஸை யுடையவளே! இத்தேஜஸ்ஸு, காட்டிலெரித்த நிலாவாகாமே நாங்களநுபவிக்கலாம்படி எங்கள் அஜ்ஞானத்தை நீக்காயென்கிறார்கள்.

அ.—எட்டாம்பாட்டு. எல்லாரும் வந்தழைக்கும்படி க்ருஷ்ணனாலே வேண்டப் பாடுடையா ளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

மூ.—கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமற் காத்துன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோது குலமுடைய
பாவா யெழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாஞ் சேவித்தால்
ஆவா வென்றாய்ந் தருளேலோ ரெம்பாவாய். (அ)

பதம்.	உரை.
எல்லாரும் வந்தழைக்கும்படி க்ருஷ்ணவல்லபையாயிருப்பா ளொருத்தியைப் பார்த்து,	
கீழ்வானம்	கிழக்குத்திக்கில் ஆகாஶமானது
வெள்ளென்று,	வெளுத்தது என்று அறிவிக்க;

எட்டாம்பாட்டு (கீழ்வானமித்யாதி.) "கோதுகுலமுடையபாவாய்" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகையிடுகிறார் (எல்லாருமித்யாதி.) எல்லாரும் என்றது - "மிக்குள்ளபிள்ளைகளும்" என்றத்தைப்பற்ற. வேண்டப்பாடு - வால்லப்யம்.

"நீங்கள் அத்திக்கைப் பார்க்கையால் உங்கள் முகவெளி வ்யாபித்து வெளுத்தது, வேறடையாள முண்டாகிற் சொல்லுங்கள்" என்ன;

எருமை	எருமைகள்
மேய்வான்	பனிப்புல் மேய்கைக்காக
சிறுவீடு	விடியற்காலத்தில் விடப்பட்டு
பரந்தனகாண்,	வயல்களெங்கும் பரம்பின்காண் என்று சொல்ல;

"உங்களை யொழிந்தாரெல்லாரும் போனார்களோ" என்று கேட்க;

போவான்போகின்றார்	போகையே ப்ரயோஜநமாகப் போகாநிற்கிற
மிக்குள்ளபிள்ளைகளையும்	உன்னையொழிந்தா ரெல்லாரையும்
போகாமல் காத்து	போகாதபடி தடுத்து
உன்னைக்கூவுவான்	உன்னை யெழுப்புகைக்காக
வந்து நின்றோம்,	உன்வாசலில்வந்து நிலைபெற்று நின்றோம்,
கோதுகலமுடைய பாவாய்!	கௌதூஹலமுடைய பெண்ணே!
எழுந்திராய்,	எழுந்திரு என்றெழுப்ப;

"எழுந்திருந்து செய்வதென்" என்று வினவ;

மா வாய்	குதிரைவடிவுகொண்டுவந்த கேசி யென்னும் அஸுரனுடைய வாயை
பிளந்தானை	இருபிளவாகக் கிழித்துப் பொகட்டவனாய்,
மல்லரை மாட்டிய	சாணூர முஷ்டிக ரென்னும் மல்லவர்க்கத்தை அழியச்செய்தவனாய்,
தேவாதிதேவனை	நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவனை
பாடி	குணகீர்த்தநம்பண்ணி
பறைகொண்டு	அவனை ஸேவிக்கையாகிற நோன்பை மேற்கொண்டு
நாம் சென்று	நாமே அவன்பக்கல் சென்று
சேவித்தால்	ப்ரபத்திபண்ணினால்,
ஆராய்ந்து	நம்முடைய குறைகளை விசாரித்து
ஆ ஆ என்று அருளும்.	ஐயோ! என்று இரங்கி க்ருபைபண்ணுவன் என்கிறார்கள்.

வ்யா.—(கீழ்வானம் வெள்ளென்று) கிழக்கு வெளுத்தாலும் கிடந்துறங்கு மித்தனையோ, எழுந்திரா யென்கிறார்கள். கிழக்கு வெளுத்ததன்று, உங்களிலே யாரேனும் அத்திக்கைப் பார்க்கையாலே உங்கள் முகத்திலொளி ப்ரதிபலிக்கையாலே கிழக்கு வெளுத்ததா யிருக்

"வெள்ளென்று' என்றதுக்கு - வெளுத்ததென்றர்த்தமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கிழக்கித்யாதி.) (கிழக்குவெளுத்தாலும்) என்றசகாரத்தாலே - "புள்ளும்சிலம்பினகாண்" "கீசுகீசு" என்கிறபாட்டிலும் சொன்ன காலங்களுமெல்லாம் தப்பிப்போய், அதுக்குமேலே கிழக்கும் வெளுத்ததென்று தோற்றுகிறது. ப்ரதிபலிக்கையாலே - வ்யாபிக்கையாலே.

கிறது ; இவர்கள் தாங்கள் * திங்கள் திருமுகத்துச் சேயிழையாரிறே ; அது அந்யதாஜ்ஞாநம், மற்றடையாளமுண்டோ வென்ன ;

(எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்) பனிப்புல்மேயக் காலத்திலே விட்டு வயல்களெங்கும் பரந்தனகாண். ஸ்ரீநந்தகோபர்க்கு முத்திறமுண்டே, அவற்றின் பின்னே க்ருஷ்ணன்போம், பின்னை யாரைக்காண்பது எழுந்திராயென்ன ;

உங்கள் முகத்திலொளியைக்கண்டு இருள் திரைந்து போகிறதித்தனை ; [அது உங்களுடைய விபரீதஜ்ஞாந மிருக்கிறபடி. ஸத்வநிஷ்ட்டர் ஸந்நிதியில் அந்தகாரம் நில்லாதிறே. பெரியாழ்வார் பெண்பிள்ளை அக்நிஹோத்ராநுஷ்ட்டாந மறிகையொழிய, சிறுவீடு வாசியறியும்படியான மெய்ப்பாடு.] ‡ அருணோதயத்துக்கஞ்சி இருள் சிதறிப்போகிற தென்னவுமாம். "மேட்டிளமேதிகள் தளைவிடுமாயர்கள்" என்று -.இவள் தமப்பனார் எம்பெருமானை யெழுப்பினார் ; இவள் இவர்களை யெழுப்புகிறாள்.

நாங்கள் ப்ரமித்தோமாயிடுக, நீ விடிந்ததில்லை யென்றறிந்தபடி யெங்ஙனே யென்ன ; பஞ்சலக்ஷம் குடியிற் பெண்களில் உங்களை

"எருமை-மேய்வான்-சிறுவீடு-பரந்தனகாண்" என்றந்வயித்து, எருமைகள் பனிப்புல் மேய்கைக்காக, சிறுவீடு-காலத்தில் விடப்பட்டு, பரம்பின வென்றருளிச்செய்கிறார் (பனியித்யாதி.) முத்திறம்-மூன்றுவகைப்பட்ட [க] ப்ருந்தம்; - ஆட்டுத்திறம், மாட்டுத்திறம், எருமைத்திறம். பால்கறக்கைமுதலான வடையாளம் சொல்லாமல் எருமை விடுகையைச்சொல்லுகைக்கு ஹாவமருளிச் செய்கிறார். (அவற்றினித்யாதி.)

"மிக்குள்ளபிள்ளைகளும்" இத்யாதிக்கு உக்திப்ரத்யுக்திரூபமாக அவதாரிகையருளிச்செய்வதாக, கீழ்ச்சொன்னவடையாளத்தை அந்யதாகரிக்கிறபடியை இரண்டுவகையாகக்காட்டுகிறார் (உங்களித்யாதி வாக்யத்வயத்தாலே.) இருள் திரைந்து போகிறதித்தனை யென்றது-இருள் கூட்டம் கூட்டமாகப்போகிறதித்தனை, எருமைபோகிறதன்றென்றபடி. இப்படி அந்யதாகரிக்கும்படி எருமைகளைச்சொல்லுவானென், முத்திறமுண்டாயிருக்கப் பசுக்களைச்சொல்லவொண்ணாதோவென்று தடஸ்த்தஶங்கையை த்ருஷ்டாந்தமுகேந பரிஹரியா நின்றுகொண்டு ஈடுபடுகிறார் (மேட்டிளமித்யாதி.) "மேட்டிளமேதிகள் தளைவிடுமாயர்" என்றது - பெருத்து இளை சான எருமைகளுடைய காலில்கட்டுகிற கயிற்றினை விடுகிற இடையரென்றபடி.

---

‡ இந்த வாக்யத்திற்குப் பதிலாக "அதுவும் அந்யதாஜ்ஞாநம்" என்று சில ஸ்ரீகோஶங்களிற் காண்கிறது. [க] ப்ருந்தம்-கூட்டம்

யொழிய அல்லாதாருணராமையாலே யென்ன (மிக்குள்ள பிள்ளைகளும்) உன்னை யொழிந்தாரெல்லாரும் ஆற்றாமையாலெ போனார்கள், நீயே எழுப்பக்கிடந்தாய். (போவான் போகின்றாரை) அர்ச்சிராதிகதி, அக்ரூரயாநம், திருவேங்கட யாத்ரைபோலே, போகையே ப்ரயோஜநமாகப் போகாநின்றார்கள்; நான் இனி யெங்கேபோக அவர்கள் போனார்களாகி லென்ன (போகாமற்காத்து) "செய்யாதன செய்யோம்" என்று அடியில் நம்முடைய வ்யவஸ்த்தையை யுணர்த்தி, நீ வந்ததில்லையென்று அவர்கள் போகாதபடி தடுத்து. (உன்னைக் கூவுவான்) உன் வாசலிலே வந்தெழுப்பினோமென்னும் தரம்பெறுகைக்கு. (வந்து) '𑌉𑌤𑍍𑌤𑌰𑌂 𑌤𑍀𑌰𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯" "உத்தரம் தீரமாஸாத்ய" (அஅ) என்னுமாப்போலே. (நின்றோம்) "𑌖𑌸𑍍𑌥 𑌏𑌵 𑌵𑍍𑌯𑌤𑌿𑌷𑍍𑌠𑌤" "கஸ்த ஏவ வ்யதிஷ்டத" (அகூ) என்று நிலைபெற்று நின்றோம்.

எல்லார்க்கும் க்ருஷ்ணனோட்டை ஸம்பந்த மொத்திருக்க, என் பக்கல் நீங்கள் ஸாபேக்ஷராய் வந்தோமென்று சொல்லக் கடவிகளோ வென்ன (கோதுகுலமுடைய பாவாய்) உன்னை முன்னிட்டுக்கொண்டு செல்ல, க்ருஷ்ண வஷயீகா முண்டென்னும்படி அவனாலே கொண்டாடப் படும்வளிறே. பத்நீத்வ மவிஸிஷ்டமானாலும் க்ருஷ்ணவல்லபை நீயன்றோ. நாங்கள் அவனுக்கு நல்லோம், நீ அவனோட்டை ஸம்பந்தத்

மிக்குள்ளவென்றது - அவஸிஷ்டமானவென்றபடி. "போவான்போகின்றானை-மிக்குள்ளபிள்ளைகளையும்" என்றந்வயம். "போவான்" என்று - போகை உத்தேஸ்யமாகத் தோற்றச்சொல்லுகையாலே, அத்தை த்ருஷ்டாந்தமுகேந வருளிச்செய்கிறார் (அர்ச்சிராதி இத்யாதி.) தரம்-அதிஸயம். "கூவுவான்- நின்றோம்" என்றாதல், "வந்தோம்" என்றாதல் சொல்லவமைந்திருக்க, இரண்டும் சொல்லுகைக்கு த்ருஷ்டாந்தமுகேந ப்ரயோஜநமருளிச்செய்கிறார் (உத்தரமித்யாதி.) "𑌉𑌤𑍍𑌤𑌰𑌂 𑌖𑌸𑍍𑌥 𑌏𑌵 𑌵𑍍𑌯𑌤𑌿𑌷𑍍𑌠𑌤" "உத்தரம் கஸ்த ஏவ வ்யதிஷ்டத" என்னாதே, "𑌤𑍀𑌰𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯" "தீரமாஸாத்ய" என்கையாலே- அத்தேஸப்ராப்தியே ப்ரயோஜநமென்று தோற்றுகிறது. "𑌖𑌸𑍍𑌥 𑌅𑌤𑌿𑌷𑍍𑌠𑌤" "வ்யதிஷ்டத" என்னாதே "ஸ்த" "வி" என்றுசொன்னத்தால் - நிற்கையே ப்ரயோஜநமென்றும் தோற்றுகிறது.

"கோதுகுதம்" என்றது - கௌதூஹலமென்றாய், தன்பக்கல் க்ருஷ்ணனுடைய கௌதூஹலமுடையவளென்று ஸப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னை யித்யாதிவாக்யத்வயத்தாலே.) ததீயரிடத்தில் கௌதூஹலமுடையவளென்று விவக்ஷித்து, ஸஹேதுகமாகத் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (நாங்களித்யாதி) "பாவாய்" என்று ஸம்போதித்ததுக்கு

தாலே எங்களுக்கு நல்லையாயிருப்புதி; ஆகையாலே அவனிலும் ததீ யரை யுகக்குமென்னும் வேண்டப்பாடுடையை நீயன்றோ. (பாவாய்) “நாரீணாமுத்தமாவதூ:” “நாரீணாமுத்தமாவதூ:” (௯௦) என்கிறபடியே நிருபாதிகஸ்த்ரீத்வ முடையளாகை. [பாரதந்த்ர்ய பராகாஷ்ட்டை யுடையளன்றோ வென்கை. (எழுந்திராய்) இப்போது எழுந்திராயா கில் அவையெல்லாம் அஸத்ஸமமாங்கிடாய்.] ‡ பெண்ணின் வருத்த மறியாதவனைப்போ லன்றிக்கே அறியக்கடவையோ. (எழுந்திராய்) எழுந்திருக்கும்போதை பரிஸ்பந்தங் காண்கைக்காக நாங்களுணர்த்த உணர்ந்தாயாகிற ஏற்றத்தை எங்களுக்குத் தாராய்.

எழுந்திருந்து செய்வதென்னென்ன (பாடிப் பறைகொண்டு) இதுக்கு முன்பு நாம் பெற்ற ஐஶ்வர்யம்போலேயோ இப்போது நாம் பெறப் புகுகிற ஐஶ்வர்யம். முன்பு, க்ருஷ்ணன்கிடாய், பெண்கள் கிடாய்” என்கிற நாட்டார்க்குத் தெரியாதபடி நெஞ்சாலே க்ருஷ் ணனை யநுபவித்து, அவ்வநுபவஜநித ப்ரீதியானது புறம் பொசியாத படி யடக்கிப்போந்தோம்; இப்போது தாங்களே அநுமதி பண்ணு கையாலே வாய்க்கால்வெட்டி நெஞ்சிலே கங்கும் கரையுமறப் பெருகு கிற க்ருஷ்ணகுணாநுபவ ப்ரீதிக்குப்போக்கு அணைவெட்டி விட்டு க்ருஷ்ணகுணங்களை நாம் வாயார நினைத்தபடி பாடக்கடவோம். பறை கொள்ளுகையாவது - நாட்டார்க்கு நோன்பு; தங்களுக்கு ஸேவிக் கையே பலம். பாடுவதெத்தையென்ன (மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய) க்ருஷ்ணனுடைய வீரசரிதங்களைப்பாடி. (மாவாய்ம் பிளந் தானை) நமக்காக கேஶியைப்பிளந்து, நம்மையும் தன்னையுமுண்டாக் கித் தந்தவனை. தன்னை நாம்கிட்டி யநுபவிக்கைக்கீடாக, இடையில் வன்னியமறுத்த ஆண்பிள்ளையைப் பாடக்கடவோம்.

ப்ரயோஜநமருளிச்செய்கிறார் (பெண்ணினித்யாதி).“கூவுவான் வந்து நின்றோம்” என்னவே இவளை யெழுந்திருக்கச்சொல்லுகை வித்தமாயிருக்க, “எழுந்திராய்” என்றதுக்கு இரண்டுதாத்பர்ய மருளிச்செய்கிறார் (எழுந்திருக்கு மித்யாதி.

கீழ்வாக்யவிவரணம் (முன்பித்யாதி.) கங்கு-அணை. கரை-இருகரை. “மா” என்று- குதிரை; அத்தைப்பற்ற (கேஶியையென்றது.) வன்னியம்-குறும்பு.

ஸ்ரீப்ருந்தாவநத்தில் கேஶிகிரஸநாதிகளைப்போலே இடைச்சிகளான தங்க ளுக்கு உதவினதன்றிக்கே, மதுரையில்செய்த வீரசரிதத்தை இவர்கள் பாட

---

‡ இந்த வாக்யங்கள் சில ஸ்ரீகோஶங்களிலில்லை.

(மல்லரைமாட்டிய) "సఖ్యాప్తపశ్యత్" "ஸவ்யஃஎம்யத" (௯க) என்கிறபடியே அவ்வூரில் பெண்களுக்கு உதவினபடி; அது தங்களுக்கு உதவிற்றென் றிருக்கிறபடி. (தேவாதி தேவனை) "జాతోసి దేవదేవేశ" "ஜாதோஸிதேவதேவேஸ" (௬ரு) என்றும் "సోహం తే దేవదేవేశ" "ஸோஹம்தேதேவதேவேஸ" (௯உ) என்றும் சொல்லுகிறபடியே * அயர்வறுமமரர்களதிபதியா யிருக்கிறவனை. "నగరస్త్రీకలాలాప మధురం శ్రోత్రేణపాస్యతి । మధురాం ప్రాప్య గోవిన్దః కథం గోకులమేష్యతి" "நகரஸ்த்ரீகலாலாபமதுரம்ஶ்ரோத்ரேண பாஸ்யதி । மதுராம்ப்ராப்ய கோவிந்த: கதம்கோகுலமேஷ்யதி" (௯௩) என்கிறபடியே பெரியமேன்மையுடையனாயிருக்கிறவன் ஸ்ரீமதுரையிலே போய் குவலயாபீட சாணூர முஷ்டிகரை யழியச்செய்து, படைவீட்டிற் பெண்பிள்ளைகளோட்டைப் பழக்கத்தாலே பெரிய [க] விதக்தனானவன் இடக்கையும் வலக்கையு மறியாத நம்பக்கலிலே வரக்கூடுமோ வென்ன (சென்று) விரஹந்தின்று குறைக்கொள்ளியான நம் ஶரீரத்தை யவன் கண்டு புண்படும்படி அவனிருந்தவிடத்தே செல்லக்கடவோம். அவன் வேண்டப்பாட்டிலே இருக்கிலோவென்னில் (சென்று) அவன் வர ப்ராப்தமாயிருக்க நாம்சென்று. "ఉపస్థేయః ఉపస్థితః" "உபஸ்தேயோபஸ்தித:" (எச) என்றும், "పద్భ్యామభిగమాచ్చైవ" "பத்ப்யாமபிகமாச்சைவ" (எரு) என்றும் இவர்கள் சொல்லுகை அத்தலைக்கு மிகுதியாயிறே யிருப்பது. (நாம் சேவித்தால்) அத்தலை இத்தலையானால்.

ப்ரஸக்தியென்னென்ன அருளிச்செய்கிறார் (ஸக்ய இத்யாதி.) "సఖ్యాప్తపశ్యతచాణూరనియుద్ధార్థమయం హరిః । సముత్పీడనసంత్రస్తం కింవ్యధాయుద్ధకారిణః" "ஸக்யஃ பஶ்யதசாணூர நியுத்தார்த்தமயம்ஹரி: । ஸமுத்பீடநஸம்த்ரஸ்தம் கிம்வ்யதாயுத்தகாரிண:" இத்யாதிப்படியே பெண்கள்கண்காண மல்லரைக்கொன்றத்தாலே அவர்களுக்கு உதவினதே தங்களுக்கு ப்ரயோஜநமென்கை. மேலுக்கவதாரிகை (நகரஸ்த்ரீ-நகரஸ்த்ரீ இத்யாதி) "தேவாதிதேவனை, மல்லரைமாட்டிய" என்றவிரண்டையும்பற்ற கீழ் ஒரவதாரிகையருளிச்செய்து, "தேவாதிதேவனை" என்றத்தைமாத்ரம் கடாக்ஷித்தவதாரிகாந்தர மருளிச்செய்கிறார் (அவன்வேண்டப்பாடித்யாதி.) வேண்டப்பாட்டிலேயென்றது - ப்ரணயித்வத்தைவிட்டுப் பெருமையிலேயென்றபடி. "நாம்-சென்று" என்றந்வயித்து ஶப்தார்த்த மருளிச்செய்கிறார் (அவன்வரவித்யாதி.)

[க] விதக்தன் - ஸமர்த்தன்.

(ஆவாவென் றாராய்ந்தருளும்)"நம்மாலேபேறு என்று நாம் வரப் பார்த்திருக்குமவர்கள் நாமிருந்தவிடத்தே வந்தது இவர்கள் செல் லாமையிறே" என்றிரங்கி நமக்கு முகந்தருங்காண். ப்ரணயித்வம் போனாலும் ஆர்த்தரக்ஷணம் தவிருமோ. "ஆர்த்தஸம்ரக்ஷணம் பரமோ தர்ம:" "ஆந்ருஶம்ஸ்யம் பரோ தர்ம:" (கூச)என்று சொல்லிவைத்து, அநுஷ்ட் டியாதொழியுமோ. ஆனபின்பு, அவனருளுக்கு ஹேதுபூதையான நீ யெழுந்திராய்.

ஆவாவென்று ஆராய்ந்தருளும்; கோதுகுலமுடைய பாவாயெழுந் திராய் என்று அந்வயம். ... ... (அ)

"ஆராய்ந்து-ஆவாவென்று - அருளும்" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி தாத் பர்ய மருளிச்செய்கிறார் (நம்மாலே யித்யாதி.) "ஆ ஆ" என்றதுக்கு - ஐயோ! என்று ஶப்தார்த்தமாய், பலிதம் (இரங்கி) என்றது. இரண்டாமவதாரிகாநு குணமாக "அருளும்" என்றதுக்கு பாவமருளிச்செய்கிறார் (ப்ரணயித்வமித்யாதி.)

பாடிப்பறைகொண்டு என்றுதொடங்கி, அருளும், கீழ்வானம் என்று தொடங்கி எழுந்திராயென்றந்வயமென்று காட்டுகிறார் (ஆவாவித்யாதி) (அ)

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—எட்டாம்பாட்டு. (கீழ்வானமித்யாதி) இப்பாட்டில் பாகவத ஶேஷத்வபர்யந்தமான பகவச் சேஷத்வமுடைய ளாகையாலே பகவ தபிமதரானவரை எழுப்புகிறார்கள்.

வ்யா.—(கீழ்வானம் வெள்ளென்று) "வெள்ளென்று" என்றது - வெள்ளென்றது என்றபடி. அசேதநத்துக்கும் சைதந்யமுண்டாம்படி ஸத்த்வோத்தரமான காலமாயிற்று, எழுந்திரா யென்ன; அசேதநத் துக்கு சைதந்ய முண்டாய்த்து, ஸத்த்வோத்தரமான காலக்ருதமல்ல, "மரங்களு மிரங்கும்வகை"என்கிறபடியே உங்கள் ஸ்வாநுமாநக்ருதம்; வேறுடையாள முண்டோ வென்ன;

(எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்) அஜ்ஞாநமானது ஸத்த்வோதயகாலத்திலே விடப்பட்டு, தனக்கு அபாஶ்ரயம் தேடிப் போகாநின்றதுகாணென்ன; அதுவும் உங்கள் ஸந்நிதியாலே ஸந்நிஹித சேதநரஜ்ஞாநம் போம், உங்களைப் பிரிந்தவாறே பழையபடியே யுண் டாம், அது ஸத்த்வகுண க்ருதமன்றென்ன; ஆனால் விடியாமைக் கடை யாள மென்சொல்லுகிறாயென்ன; உங்களையொழிந்த பகவத்ப்ரவண ருணராமையென்ன;

(மிக்குள்ள பிள்ளைகளும்) நம்மை யொழிந்த பாகவதரெல்லாரும் போனார்களென்ன. (போவான் போகின்றாரைப் போகாமல் காத்து) பகவத்ஸந்நிதிக்குப் போகையே ப்ரயோஜநமாகப் போமவர்களை, பாகவதரை முன்னிட்டல்லது திருவடித் தொழக்கடவோமல்லோ மென்கிற நியமத்தை யுணர்த்தி, போகாமல் தடுத்து. (உன்னைக் கூவுவான் வந்துநின்றோம்) உன்னை யெழுப்பினோ மென்கிற அதிஶயம் பெறுகைக்காக உன்வாசலிலே வந்துநின்றோம். (கோதுகுலமுடையபாவாய்) பகவதபிமாந விஷயபூதராய் அநங்யார்ஹரான ஸ்வாமிநீ. (எழுந்திராய்) நீ ரெழுந்திருந்தால் நமக்கேதேனுங் குறையுண்டோ. எழுந்தால் செய்யவேண்டுவதென்னென்ன, சொல்லுகிறார்கள்;

(பாடிப் பறைகொண்டு) பாடுகையாகிற புருஷார்த்தத்தை லபித்து. (மாவாய்பிளந்தானை) அஹங்கார நிராஸகனை. (மல்லரைமாட்டிய) காமக்ரோத நிவர்த்தகனை. (தேவாதி தெவனை) நித்யஸூரி நிர்வாஹகனை. (சென்று) ப்ராப்யத்வரையாலே சென்று. (நாம்) அவன் வர இருக்கக்கடவ நாம். (சேவித்தால்) அத்தலை இத்தலையானல், ஆவாவென்று க்ருபை பண்ணி. (ஆராய்ந்தருள்) விசாரிக்கும்.

அ.—ஒன்பதாம்பாட்டு. "க்ருஷ்ணன் வந்தபோது வருகிறான்" என்று தான் போகையை அநாதரித்துக் கிடக்கிறா ளொருத்தியை எழுப்புகிறார்கள். அதாவது — ஸ்வரூபத்தை யுணர்ந்துவந்து அநுபவிக்கையும் அவன் கார்யமிறே. "தத்தஸ்யஸத்ருஶம்பவேத்" "தத்தஸ்யஸத்ருஶம் ஹவெக்ஷ" (கூரு) என்றிருப்பா ளொருத்தி யென்கை.

மூ.—தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபங் கமழத் துயிலணைமேற் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவந் தாள்திறவாய்
மாமீ ரவளை யெழுப்பீரோ வுன்மகள்தான்

ஒன்பதாம்பாட்டு (தூமணியித்யாதி.) "தூமணிமாடம்" என்றுதொடங்கி, "துயிலணைமேல் கண்வளரும்" என்னுமளவும் கடாக்ஷித்து (க்ருஷ்ணன்வந்தபோது வருகிறானென்றது.) "மாமீர்" இத்யாதியைக்கடாக்ஷித்து, க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்துக்கு உபயுக்தமாக (தான்போகையை அநாதரித்துக் கிடக்கிறாளென்றது.) மடலெடுத்தாகிலும் பெறவேண்டும் க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்துக்காக போகையை யநாதரிக்கக்கூடுமோவென்ன'வருளிச்செய்கிறார் (அதாவதித்யாதி.)

ஊமையோ வன்றிச் செகுடோ வனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (கூ)

பதம்.	உரை.

க்ருஷ்ணன் வந்தபோது வருகிறான் என்றிருப்பா ளொருத்தியைப்பார்த்து,

தூமணிமாடத்து	நிர்த்தோஷங்களான ரத்நங்களாற்செய்யப்பட்ட மாளிகையில்
சுற்றும்	கண்டவிடமெங்கும்
விளக்கு எரிய	விளக்குகள் மங்களார்த்தமாக ப்ரகாசிக்கவும்,
தூபம்கமழ	அகில்முதலியவற்றின் புகை பரிமளிக்கவும்,
துயில் அணைமேல்	எப்போதும் உறங்கப்பண்ணும் மிருதுவான படுக்கையில்
கண்வளரும்	கண்ணுறங்குகிற
மாமான்மகளே!	அம்மான்பெண்ணே!
மணிக்கதவம் தாள்	மணிக்கதவுகளின் மணித்தாள்களை
திறவாய்.	திறக்கவேண்டுமென்று சொல்ல;

இதை உள்ளினின்றும் கேட்ட தாயார்,"அவர்கள் ஆர்த்தைகளாய் வாசலில் நின்று துவள நீ பேசாதே கிடந்து உறங்குவதென்?" என்று வினவ; புறம்பில் நின்றும் அத்தைக்கேட்டவர்கள்,

மாமீர்!	மாமிமாரே!
அவளை எழுப்பீரோ?	உன்மகளை யெழுப்பலாகாதோ? என்ன;

இவ்வளவிலும் உணரக்காணாமையாலே,

உன்மகள் தான்	உன்பெண்பிள்ளை தான்
ஊமையோ?	வாய்ப்புலனில்லாதவளோ?
அன்றி	அல்லாவிடில்
செகுடோ?	செவிப்புலனில்லாதவளோ?
அனந்தலோ?	சோம்பலுடன் உறங்குகிறாளோ?
ஏமப்பட்டாளோ?	எழுந்திராதபடி காவலிடப்பட்டாளோ?
பெரும்துயில்	பேருறக்கம் கொள்ளும்படி
மந்திரப்பட்டாளோ?	மந்த்ரத்தாற்கட்டப்பட்டாளோ? என்று திருத்தாயாரைக் கேட்க;

"அவளுணருகைக்கு அவன் திருநாமங்களைச் சொல்லுங்கள்" என்ன;

மாமாயன்	அளவிடவொண்ணாத ஆஶ்சர்யசெஷ்டிதங்களையுடையவன்,

மாதவன்	பெரியபிராட்டியார்க்கு வல்லபன்,
வைகுந்தன்	ஸ்ரீவைகுண்டநாதன்
என்று என்று	என்று இப்படியாக
நாமம்பலவும்	ஆயிரந்திருநாமங்களையும்
நவின்று	சொன்னோம்.

மாமீர்! அவளை யெழுப்பீர் என்கிறார்கள்.

வ்யா).—(தூமணிமாடத்து) "துவளில் மாமணிமாடம்" என்று - குற்றமெடுத்துக் கழிக்கவேண்டாத நன்மையையுடைய மணியாலே செய்த மாடம். ஸம்ஸாரகந்தமுண்டாய்க் கழிந்த முக்தர்க்கும் அஸ்பருஷ்ட்ட ஸம்ஸாரகந்தரான நித்யர்க்கு முண்டான வாசிபோந்திருக்கை. (சுற்றும்விளக்கெரிய) மாணிக்கத்தி னொளியாலே பகல் விளக்குப்பட்டிருக்கச் செய்தே மங்களார்த்தமாக விளக்கெரிகிறது. (சுற்றும் விளக்கெரிய) க்ருஷ்ணன் வந்தால் தன் கையைப்பிடித்து உலாவுமிடமடையப் படுக்கையும் விளக்குமாக்கிவைத்தபடி. புறம்பு நிற்கிறவர்களுக்கு உள்ளே விளக்கெரிந்தது தெரிகிறபடி யெங்ஙனே யென்னில்; மாணிக்கக்குப்பிபோலே, புறம்பேநிற்க உள்ளுள்ளதெல்லாம் தோற்றுநிற்கும். (தூபங்கமழ) புகைகாணவொண்ணாதே பரிமளம் வெள்ளமிட. "சீருற்றவகிற்புகை" இத்யாதியிற் சொல்லுகிறபடியே எங்களுக்கு அஸஹ்யமான பரிமளம் உனக்கு ஸஹ்யமானபடி யெங்ஙனே யென்கை. (துயிலணைமேல் கண்வளரும்) க்ருஷ்ணவிரஹத்தையும் ஆற்றவற்றான படுக்கையிலே உறங்குகிற. எங்களுக்கு * மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாயிருக்க, உனக்கு படுக்கை பொருந்திக் கண்ணுறங்குவதே! (மாமான்மகளே) ஸ்வாமிநியாயும் தோழியாயும்

சுற்று மேற்றின விளக்குகளெரியவென்று அர்த்தம் விவக்ஷித்து "சுற்றும்" என்றதுக்கு ப்ரயோஜநமருளிச்செய்கிறார் (க்ருஷ்ணன்வந்தாலித்யாதி.) படுக்கையுமென்றது - அர்த்தஸித்தம். அதாவது- தூமணிமாடமாகையாலே சுற்றும் விளக்குவேண்டாமையால் மங்களார்த்தமாகிலொன்றே யமைந்திருக்கையால், "சுற்றும்" என்றது வ்யர்த்தமாகாமைக்காக ப்ரதிபர்யங்கமங்களதீபம் வேணுமென்கை. "தூபம்" என்றபோதே பரிமளிக்கை அர்த்தஸித்தமாயிருக்கவும், "கமழ" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (புகை இத்யாதி.) இப்பரிமளப்ராசுர்யத்தை இவர்கள்சொல்லுகைக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார் (சீருற்றவித்யாதி.) துயிலைத்தாராநிற்கும் அணையென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, இப்படி விஶேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (க்ருஷ்ணவிரஹத்தையுமித்யாதி.)

இப்படிசொன்னதுக்கு ப்ரயோஜந மருளிச்செய்கிறார் (எங்களுக்கித்யாதி.) "பாவாய்" என்னாதே, இப்படி ஸம்போதித்ததுக்கு அர்த்த மருளிச்செய்கிறார் (ஸ்வாமிநி இத்யாதி.) "நாயகப்பெண்பிள்ளாய்" இத்யாதியைக்கடாக்ஷித்து

அநுபவித்ததொழிய, ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலும் ஆண்டாளநுபவிக்கிறுள். "மாமான்மகளே" என்று — இட்டீடுகொள்ளுகைக்கு விடவொண்ணுத உறவு சொல்லுகிறுள். திருவாய்ப்பாடியிலே ஒருப்ராக்ருத ஸம்பந்தம்தனக்கு உஜ்ஜீவநமென்றிருக்கிறுள். பகவத்ஸம்பந்திகளுக்கு எல்லாம் அடிக்கழஞ்சு பெற்றிருக்கிறபடி. (மணிக்கதவம்தாள்திறவாய்) நீங்களே திறந்துகொண்டு புகுருங்கோள் என்ன; மாணிக்கங்களினொளியாலே தாள்தெரிகிறதில்லை, நீயே திறவாயென்கிறுர்கள்.

"அவர்களழையாநிற்க, நீ பேசாதே கிடக்கிறதென்?" என்று தாயார்சொல்ல; புறம்புநின்றவர்கள் அது கேட்டவாறே (மாமீரவளையெழுப்பீரோ) என்கிறுர்கள். (மாமீர்) அவளுடைய திருத்தாயாரென்று அவளுறவாலே சொல்லுகிறுர்கள். பின்னையு முணரக்காணுமையாலே சிவிட்கென்று (உன்மகள்தான் ஊமையோ) என்கிறுர்கள்;— வ்யவஹாரயோக்யையன்றோ வென்கை. (அன்றிச்செவிடோ) ஊமைக்கும்கேட்டுவந்து திறக்கலாம், அதுக்குமேலே, செவியில் துளையில்லையோ; எங்கள் வார்த்தைகேளாதபடி அந்யபரையோ. (அனந்தலோ) நெடும்போது க்ருஷ்ணுநுபவம்பண்ணி, படுக்கையிற் சாய்ந்தது

(ஸ்வாமிநியாயு மென்றது.) "சுற்றத்துத்தோழிமார்" என்றத்தைப்பற்ற (தோழியாயுமென்றது.) ப்ரக்ருதிஸம்பந்தத்தைச் சொல்லவேண்டினுல் மற்றும்முறைகளுண்டாயிருக்க, இப்படி ஸம்பந்தத்தைச் சொன்னத்துக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறுர் (மாமானித்யாதி.) இட்டீடுகொள்ளுகை - வார்த்தையிட்டு வார்த்தைகொள்ளுகை. ப்ரக்ருதிஸம்பந்தம் த்யாஜ்யமன்றோவென்ன அருளிச்செய்கிறுர் (திருவாய்ப்பாடியிலே யித்யாதிவாக்யத்வயத்தாலே.) அடிக்கழஞ்சு - ஶ்லாக்யம். "மணி" என்று விஶேஷித்ததுக்கு உக்திப்ரத்யுக்திமுகேந தாத்பர்ய மருளிச்செய்கிறுர் (நீங்களே இத்யாதி.) (புகுருங்கோளென்ன) என்றதுக்கு - புகுருங்கோளென்றபிப்ராயமாக வென்றபடி. இங்ஙனன்றுகில், மேல் "ஊமையோ" என்னக்கூடாதிறே.

சிவட்கென்று - ஶீக்ரமாக சீற்றமுண்டாய். 'வ்யவஹாரம் - வார்த்தைசொல்லுகை. அன்றிச்செவிடோ" என்றதுக்கு இரண்டர்த்தம்; - ஊமையான வளவன்றிக்கே செவிடாயுமிருக்கிறுளோவென்றும்; அங்ஙனன்றிக்கே செவிடுபோலேயிருக்கிறுளோவென்றும். அதில்முந்தினது (ஊமைக்குமித்யாதி.) இரண்டாவது (எங்களித்யாதி.) அந்யபரையோவென்றது - செவியுண்டாயிருக்க க்ருஷ்ணுநுபவம் நடக்கிறதோவென்றபடி. அனந்தல் - [க] தந்த்ரியோடேகூடின வுறக்கமென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி ப்ரஸக்திபூர்வகம் தாத்பர்ய மருளிச்செய்கிறுர் (நெடும்போதித்யாதி.) "ஏமப்பட்டாளோ, பெருந்துயில் மந்

[க] தந்த்ரி - சோம்பல்.

இப்போதோ. (ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ) "ஏமம்" என்பது - காவல். எழுந்திராமைக்குக் காவலிட்டாருண்டோ; நெடும் போது உறங்கும்படி மந்த்ரவாதம்பண்ணினாருண்டோ. "மையலேற்றி மயக்க உன்முகம் மாயமந்திரந்தான்கொலோ" என்று-அம்மான்பொடி தூவினாருண்டோ வென்கை.

"அவளுணரும்படி திருநாமங்களைச் சொல்லுங்கோள்" என்று திருத்தாயார்சொல்ல, நாங்கள்சொன்ன திருநாமம் ஏநேகமன்றோ வென்கிறார்கள்; அவைதா னெவையென்ன (மாமாயன்) ஆஶ்சர்ய குணசேஷ்டிதங்களாலே அபலைகளான பெண்களை எழுதிக்கொண்டவன்: (மாதவன்) அதுக்கடியான ஸ்ரீயஃபதி; அந்த ஸௌலப்யத்துக்கு குருகுலவாஸம் பண்ணின விடம். (வைகுந்தன்!) ஸ்ரீயஃபதித்வத்தாலே வந்த மேன்மைக்குத் தகுதியான தேஶவிஶேஷத்தை யுடையவன். அப்பெரிய மேன்மையுடையனாய் ஸ்ரீயஃபதியானவன்கிடீர் பெண்களுக்கெளியனானனென்கை. மேன்மைக்கடியான திருநாமங்களும், நீர்மைக்கடியான திருநாமங்களும், இரண்டுக்கும் நிதாநமான ஸ்ரீயஃபதித்வத்துக்கு வாசகமான திருநாமங்களுமாக ஒரு ஸ்ரீஸஹஸ்ர நாமத்துக்குப் போரும் திருநாமங்கள் சொல்லிற்றென்கிறார்கள்.

நாமம்பலவும் நவின்று - மாமீரவளை யெழுப்பீரோ என்று அந்வயமாகவுமாம்.

திரப்பட்டாளோ" என்றுவிவக்ஷித்து ஶப்தார்த்தகதநபூர்வகம் தாத்பர்யமருளிச் செய்கிறார் (ஏமமித்யாதிவாக்யத்ரயத்தாலே.) அம்மான்பொடியென்றது - "அம்மான், அம்மான்" என்றுகொண்டு பின்தொடரும்படியான சுக்குப்பொடி யென்றபடி. ஸ்ரீயஃபதியென்றது - ஸ்ரீயஃபதித்வமென்றபடி. "என்றென்றுநாமம் பலவும் நவின்றோம்" என்று க்ரியையாக்கி, அதுக்குத்தாத்பர்ய மருளிச்செய்கிறார் (மேன்மைக்கித்யாதி.) ... ... (க)

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—ஒன்பதாம் பாட்டு. (தூமணியித்யாதி) உபாயாத்யவஸாய நிஷ்டரான அதிகாரியை யெழுப்புகிறார்கள்.

வ்யா.—(தூமணிமாடத்து) அப்ராக்ருதமாய் பஞ்சோபநிஷன்மயமான திவ்யமங்கள விக்ரஹத்திலே. (சுற்றும் விளக்கெரிய) ஸர்வதோமுகமாக ஜ்ஞாநதீபம் ப்ரகாஶிக்க. (தூபம் கமழ) ஜ்ஞாநம் பரிமளிக்க. ஜ்ஞாநம் பரிமளிக்கையாவது - அநுஷ்டாந ஶேஷமாயிருக்கை. (துயிலணைமேல் கண்வளரும்) நித்ராப்ரதமான ஶயநத்திலே

கண்வளருகிற. அதாவது- ஸ்வப்ரயத்நஸாமாந்ய நிவ்ருத்திபூர்வகமான பகவதேகோபாயாத்யவஸாயத்திலே நிஷ்ட்டனுயிருக்கை. (மாமான் மகளே) "மாமான்" என்றும் "அம்மான்" என்றும் இரண்டும் பர்யாய மாகையாலே ஸ்வாமியான எம்பெருமானுலே புத்ரத்வேநாபிமத ராய் அநந்யார்ஹரான பாகவதரே. (மணிக்கதவம்) மணிமாடத்தினு டைய மணிக்கதவையும் மணித்தாள்திறவாய். அதாவது - த்வதநு பவ விரோதியான தேஹாத்மாக்களிரண்டிலுமுண்டான மமகாரத் தைத் தவிர்ப்பியாயென்றபடி. அன்றிக்கே, த்வதநுபவவிரோதியான பகவத்ஸௌந்தர்யத்திலும் பகவத் பக்தியிலும் மமகாரத்தைத் தவிர் ப்பியா யென்கிருர்கள். இவர்களிப்படி சொன்னவிடத்திலு மிவ்வதி காரி பேசாதே கிடக்கையாலே இவ்வதிகாரிக்கு ஜநகையாயிருக்கிற அநந்யோபாயத்வ ஸ்வரூபஜ்ஞாநமாகிற திருத்தாயார், அவர்களிப்படி யழைக்க நீ பேசாதே கிடப்பதேயென்ன (மாமீரவளை யெழுப்பீரோ) என்கிருர்கள். அதாவது - ஸ்வாமிநியானவளே, உனக்கு ஸ்வம்மான வவளை யெழுப்பீரோ வென்றபடி. தன்னிடத்தி லநந்யோபாயத்வ ஜ்ஞாநம் பிறந்தபின்பிறே ததேகோபாயாத்யவஸாயம் ஜநிப்பது. இப் படி சொன்னவிடத்திலும் எழுந்திராத வின்னுப்பாலே "உன்மகள்தா னூமையோ" என்கிருர்கள். அதாவது - மறுமாற்றஞ் சொல்லவல்ல ளல்லளோவென்றபடி. இவளைப் பேசவொட்டாதே வாயை மூடினு ருண்டோ வென்று பர்வார்த்தம். (அன்றிச்செகுடோ) ஊமையான மாத்ரமன்றிக்கே, நம் வார்த்தைகேளாதபடி செகுடோ. நம்பேச்சுக் கேளாதபடி அங்கே ஆரவாரமுண்டோ வென்று பாவார்த்தம். (அனந் தலோ) சோம்பலோ என்றபடி. நெடும்போது நாயகனோடு கூடியிரு ந்து படுக்கையிலே சாய்ந்ததிப்போதோவென்று பாவார்த்தம். தனித் தனியே வாகாதி இந்த்ரியங்கள் பகவத்விஷயத்திலே ப்ரவணங்களா கையாலே ஒருகார்யத்திலும் ஸக்தையல்ல ளென்றுமாம். (ஏமப்பெ ருந்துயில் மந்திரப்பட்டாளோ) காவலிடப்பட்டாளோ; மஹாநித்ரை யுண்டாம்படி மந்த்ரவாதம் பண்ணப்பட்டாளோ. ஸ்வப்ரவ்ருத்தி ஸாமாந்யமும் உபாயவிரோதி யாகையாலே இதில் அந்வயியாதபடி தடுத்துவைதவர்களுண்டோ. அதாவது-நமஸ்ஸு தடுத்ததோ வென்ற படி. உபாயவைலக்ஷண்யம் ப்ரவ்ருத்யந்தரத்தில் அந்வயியாதபடி மோஹிப்பித்ததோ வென்றபடி.

இப்படி யிவர்கள் இன்னுதாக, திருத்தாயார், திருநாமத்தைச் சொல்லுங்கோள் இவளெழுந்திருக்கைக்கு என்ன (மாமாயன்மாத

வன் வைகுந்தனென்றென்று நாமம்பலவும் நவின்று) (மாமாயன்) அத்யந்தம் ஸுலபன். (மாதவன்) இதுக்கு குருகுல வாஸம்பண்ணின விடம். (வைகுந்தன்) இஸ்ஸௌலப்யம் குணமாகைக்கு ஈடான பரத்வமுடையவன். (என்றென்று நாமம்பலவும் நவின்றோம், மாமீ ரவளை யெழுப்பீரோ) ஸ்வார்த்தப்ரவ்ருத்தி ஸாமாந்யமு முபாய விரோதி,பரார்த்தப்ரவ்ருத்தி ஸாமாந்யமு முபாயபலமாயும் உபாயாநு கூலமாயு மிருக்குமென் றறிவித்து. (அவளை) உபாயாத்யவஸாய நிஷ்டரை, (எழுப்பீரோ) என்று அந்வயம்... ... (கூ)

அ.—பத்தாம் பாட்டு. பெண்களெல்லாரும், "க்ருஷ்ணன்" என்றால் படும்பாட்டை அவன் தான்பட்டு "தண்ணீர், தண்ணீர்" என்னும்படி வீறுடையா ளொருத்தியை எழுப்புகிறார்கள். "ஆனந்தம்ப்ரஹ்மணோவித்வாந்" "ஆநந்தம்ப்ரஹ்மணோவித்வாந்" (கூரு) என்னாதே, "ஏஷ ஹ்யேவாநந்தயாதி" "வஷஹ்யேவாநந்தயாதி" (கூஎ) என்றிருப்பா ளொருத்தி யென்றுமாம். (நோற்றுச்சுவர்க்கம்புகுகின்றவம்மனாய்) க்ருஷ்ணன் அசல் திருமாளிகையாய் நடுவிட்ட வாசலாகையாலே[க] ஒருபோகியாக அநுபவிக்கிறாளென்றுமாம்.

மூ.—நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்
மாற்றமுந் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற வனந்த லுடையா யருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (க0)

பத்தாம்பாட்டு (நோற்றித்யாதி.) "அருங்கலமே" என்றதுக்கு-ஹாரத்துக்கு நாயகக்கல்போலே யிருக்குமவளென்றுதல்; நல்லபெண்ணென்றுதல். வக்ஷ்யமாணமான ஶப்தத்தைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகையிடுகிறார் (பெண்களித்யாதி.) வீறு-அதிஶயம். "சுவர்க்கம்" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகாந்தரமருளிச்செய்கிறார் (ஆநந்தமித்யாதி.) (ஆனந்தம்ப்ரஹ்மணோவித்வாந்-ஆநந்தம்ப்ரஹ்மணோவித்வாந் என்னாதே) என்றதுக்கு-வேதநம் ஸாதநமென்றிராதே யென்றுகருத்து. "ஏஷ ஹ்யேவ" "வஷஹ்யேவ" என்றதுக்கு இந்த ஈஶ்வரனே ஆநந்தஸாதநனென்று கருத்து. "புகுகின்ற" என்றவர்த்தமாநார்த்தத்தைக்கடாக்ஷித்து க்ருஷ்ணாநுபவமாகிற பலம் கைபுகுந்தவளாக த்ருதீயாவதாரிகை யருளிச்செய்கிறார் (க்ருஷ்ணன் அசலித்யாதி.)

[க] ஒருபோகியாகை - ஏககாலத்தில் பலமாகை.

பதம்.	உரை.
	க்ருஷ்ணன் தானே வந்து மேல்விழும்படி அதிஶயமுடையாளொருத்தியைநோக்கி,
நோற்று	க்ருஷ்ணநுபவத்துக்கு நோன்புநோற்று
சுவர்க்கம் புகுகின்ற	ஸுகத்தை யிடைவிடாமலநுபவிக்கிற
அம்மனாய்!	ஸ்வாமிநியானவளே!
	என்று எழுப்பியும் பேசாதேகிடக்க;
வாசல்திறவாதார்	வாசற்கதவைத் திறவாமற்போனாலும்
மாற்றமும் தாராரோ?	ஒருபேச்சாகிலும் பேசலாகாதோ?
நாற்றம்	பரிமளம் வீசாநின்றுள்ள
துழாய்	திருத்துழாய்மாலையால் அலங்க்ருதமான
முடி	திருவபிஷேகத்தையுடையவனும்,
நாராயணன்	எங்கும் வ்யாபித்து எல்லார்க்கும் ரக்ஷகனும்,
நம்மால் போற்ற	ஆஶ்ரிதரானநாம் மங்களாசாஸநம்பண்ணும்படி
பறைதரும் புண்ணியனால்	கைங்கர்யமாகிற புருஷார்த்தத்தைத்தரும் தார்மிகனுமானவவனாலே,
பண்டு ஒருநாள்	ராவணன் பிராட்டியைப்பிரித்தகாலத்தில்,
கூற்றத்தின்வாய்வீழ்ந்த	ம்ருத்யுவின் வாயில் விழுந்த
கும்பகரணனும்	கும்பகர்ணனும்
உனக்குத்தோற்று	உனக்குத்தோற்றுப்போய்
பெரும் துயிலும்	பேருறக்கத்தையும்
தானேதந்தானோ?	தானே தந்துபோனானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்!	மிகுந்த சோம்பலுடையவளே!
அரும் கலமே!	ஹாரத்துக்கு நாயகக்கல்போலே எங்களுக்கு ஶிரோபூஷணமாயிருப்பவளே!
தேற்றமாய்வந்து	தடுமாறாதே தெளிந்துவந்து
திற.	கதவைத்திறக்கவேண்டும் என்கிறார்கள்.

வ்யா.—(நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்) வைகினபின்பும் எழுந்திராமையாலே அம்மே! அழகிதாக நோற்று ஸுகம் பெறக் கோலினாய்! என்று ஸ்தோபிக்கிறார்களென்றுமாம். நோற்க வேண்டாதபடி நோன்பின் பலம் கைபுகுந்தவளிறே யிவள் என்றுமாம். (நோற்று) ஸித்தஸாதநை யாகையாலே உபாயாம்ஶத்தில்

ப்ரதமாவதாரிகையைத் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வைகினவித்யாதி.) வைகினபின்புமென்றது - போதோடினபின்புமென்றபடி. ஸ்தோபிக்கிறார்களென்றது - தங்களோடே நோற்கக்கடவோமென்று அவர்கள் சொன்ன வார்த்தையை நிரர்த்தகமாக்குகிறார்களென்றபடி. மூன்றாமவதாரிகாநுகுணமாக தாத்பர்யமருளிச்செய்கிறார் (நோற்கவித்யாதி.) த்விதீயாவதாரிகைக்குச்சேர ப்ரதீகக்ரஹணபூர்வகம் ஹாவமருளிச்செய்கிறார் (ஸித்தஸாத

நிர்ப்பரையா யிருந்தாள். அவனுடைய ரக்ஷகத்வத்தை யுணர்ந்தால் தனக்கு யத்நம் பண்ண ப்ராப்தியில்லை; தன் ஶேஷத்வத்தை யுணர்ந் தாலும் ப்ராப்தி யில்லையிறே. "విదుఃకృష్ణం బ్రాహ్మణాస్తత్త్వతో యేతేషాం రాజన్సర్వయజ్ఞాస్సమాప్తాః" "விதுஃக்ருஷ்ணம் ப்ராஹ்மணாஸ்தத்த்வதோயே தேஷாம் ராஜந்ஸர்வயஜ்ஞாஸ்ஸமாப்தா:" (கூஅ) என்றிறே யிருப்பது. எழுப்புகிறவர்களுக்கும் இதுவன்றோ ஸ்வரூபமென்னில்; ஸித்தோ பாய நிஷ்ட்டர்க்கு விளம்ப ஹேதுவில்லாமையாலே ப்ராப்யத்தில் த்வ ரையாலே பதறுகிறாள். ஸித்தோபாய நிஷ்ட்டர்க்கும் கர்மஜ்ஞாந பக்திகளுண்டு; இவர்களுடைய க்ரியாகலாபம் கைங்கர்யத்திலே அந்வி தமாயிருக்கும். ஜ்ஞாநம் ஸ்வரூபத்திலே அந்விதம்; பக்தி ப்ராப்யருசி யிலே அந்விதம்.

(சுவர்க்கம்புகுகின்ற) ஸுகத்தை இடைவிடாதே அநுபவிக்கிற இவர்களுக்கு க்ருஷ்ணாநுபவமிறே ஸுகம். "యస్త్వయాసహసస్వర్గోనిరయో యస్త్వయావినా" "யஸ்த்வயாஸஹஸஸ்வர்கோநிரயோயஸ்த்வயாவிநா" (கூகூ) என்று, ஸ்வர்க்கஶப்தம்-ஸுகவாசி. (அம்மனாய்) ரக்ஷகையா

நேத்யாதி.)ப்ரதமாவதாரிகைக்குச் சேர்ந்திருந்தபோது, நோன்பு நோற்று அதுக்கு பலமான ஸ்வர்க்கஶப்தவாக்யமான க்ருஷ்ணாநுபவத்தைக் கைபுகரப்பண்ணிக்கொண்டாயேயென்று ஶப்தார்த்தமாய், இப்படியாகாதேபோனாயென்று விபரீதலக்ஷணையாக்கிக்கொள்வது. த்ரீயாவதாரிகைக்குச்சேர்ந்தபோது, நோற்றுப்பெறவேண்டும்பலமான க்ருஷ்ணாநுபவத்தை நிரந்தரமாக வநுபவிக்கிறாயென்று ஶப்தார்த்தம். த்விதீயாவதாரிகைக்குச்சேர்ந்தபக்ஷத்தில், நோற்றவள் பொலே க்ருதக்ருத்யையாய் பலம் கைபுகுந்ததென்றிருக்கிற அம்மனேயென்று ஶப்தார்த்தம். அவதாரிகாக்ரமேண ஹாவமருளிச்செய்யாமல் த்விதீயாவதாரிகைக்கு அநுகுணமான அர்த்தத்தைக் கடைக்கோடியிலே யருளிச்செய்தது-இவ்வர்த்தத்திலே யுபபாதிக்க வேண்டுவதுண்டாகையாலே யென்று திருவுள்ளம். நிர்ப்பரையாயிருக்கைக்கு உபபத்தியையும் ப்ரமாணத்தையும் காட்டுகிறார் (அவனுடையவித்யாதிவாக்யத்ரயத்தாலே.) "తత్త్వతః-ఉపాయోపేయభావేన-యజ్ఞాస్సమాప్తాః" "தத்த்வத: - உபாயோபேயபாவேந - யஜ்ஞாஸ்ஸமாப்தா:" என்றது - ஸமாப்தா ஏவ என்றபடி. இத்தால் - கர்த்தவ்யாம்ஶமில்லை என்றபடி. இது வென்றது - யத்நம்பண்ண ப்ராப்தியில்லாமலிருக்கை யென்றபடி. (பதறுகிறாள்) என்றதுக்கு - உறங்குகிறவளுக்கு அத்யவஸாயம் தலையெடுத்து ப்ராப்யருசி தலைமடங்கிக்கிடக்கும்; அங்ஙனன்றியே, எழுப்புகிறவர்களுக்கு ப்ராப்யருசி தலையெடுத்து அத்யவஸாயம்மடங்கி த்வரைப்படுத்துகிறாளென்று கருத்து.

ஆனால் ஸித்தோபாயநிஷ்ட்டர்க்கு ஒன்றும் செய்யவெண்டாவோவென்னில், அருளிச்செய்கிறார் (ஸித்தோபாயேத்யாதி.) அவதாரிகாத்ரயத்துக்குச் சேர யதாஶ்ருதத்திலே ஶப்தார்த்தம் (ஸுகத்தையித்யாதி;) த்ரிதீயாவதாரி

ணவளே, நீ ரக்ஷகையாக, நாங்களுனக்குக்குழைச்சரக்கானபடி யழகிதாயிருந்தது. அவள் பேசாதேகிடப்பானென்னென்னில்; திருவடிவரத்தில் பிராட்டி, "ப்ரஹர்ஷேணாவருத்தா ஸா வ்யாஜஹார ந கிஞ்சந" "ப்ரஹர்ஷேணாவருத்தா ஸா வ்யாஜஹார ந கிஞ்சந" (க௦௦) என்றிருந்தாப்போலே, "ஸம்ஸ்ரவே மதுரம் வாக்யம்" "ஸம்ஸ்ரவே மதுரம் வாக்யம்" (௯௯) என்னும்படியே யிவர்கள் பேச்சே யமையுமென்று கிடக்கிறாள். தங்களடியேனை யிருக்கிற வென்னை "அம்மனாய்" என்பதே! என்று கிடக்கிறாளாகவுமாம். (மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்) இவள் வாய்பேசாதே கிடக்கிற விது பொறுக்கமாட்டாமையாலே, "மாற்றமுந் தாராரோ வாசல்திறவாதார்" என்கிறார்கள். வாசல் செம்மினால் வாயும் செம்மவேணுமோ. ஐஶ்வர்யம் மிக்கால் பந்துக்களை என்? என்னலாகாதோ. "போதயந்த: பரஸ்பரம்" "போதயந்த: பரஸ்பரம்" (௯௫) என்கிற ந்யாயமும் தவிர்ந்ததோ. உடம்பை க்ருஷ்ணனுக்குக் கொடுத்தால் எங்களுக்குப் பேச்சாகிலும் தரலாகாதோ. கண்ணுஞ் செவியு மொக்கப் பட்டினிகொள்ள வேணுமோ. "மதுராமதுராலாபா" "மதுராமதுராலாபா" (க௦க) என்றிறே யிவள் பேச்சிருப்பது.

நீங்கள் பழியிடுகிறதென், அவன் இங்குண்டோ என்ன (நாற்றத் துழாய்முடி) [க] கோயிற்சாந்தை யுன்னை லொளிக்கப்போமோ என்ன; இப்போது உண்டாகவேண்டா, அவன் ஒருக்காலணைத்துவிட்டால் அவை அஞ்சாறுகுளிக்குப் பரிமளம் நிற்குமோ. கட்டுங் காவலுமாயிருக்கிற வாசலிலே புகுரப்போமோ அவளுக்கென்ன; (நாராயணன்) அவனுக்கு எங்களைப்போலே கதவு திறக்கப் பார்த்தி

கைக்குச்சேர வருளிச்செய்கிறாரென்னவுமாம். குழைச்சரக்கு - ஸாப்யாயான வஸ்து. அதாவது - ரக்ஷ்யமென்றபடி. எழுப்புகிறவர்கள், "மாற்றமுந்தாராரோ" என்று சொல்லும்படி இவள் பேசாதிருக்கைக்கு ஹேதுவென்னென்னும் ஜிஜ்ஞாஸா ப்ரஶ்நத்தை யநுவதித்து இரண்டுவிதமாக வருளிச்செய்கிறார் (அவளித்யாதி வாக்யத்வயத்தாலே) இத்தால் - பாகவதவிஷயத்தில் அநாதரத்தாலிருந்தவளுமன்று, உறக்கமுண்டாயு மன்று என்றதாய்த்து. "வாய்திறவாய்" என்னாதே, "மாற்றமுந்தாராரோ" என்று - க்ஷேபந்தோற்றச்சொல்லக்கூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (இவளித்யாதி.) "மாற்றமும்" என்ற சகாரத்துக்கு - வாசல்திறவாதத்தோடு ஸமுச்சயமென்று திருவுள்ளம்பற்றி ஹாவமருளிச்செய்கிறார் (வாசலித்யாதி.) செம்மினாலென்றது-பந்தித்தாலென்ற

[க] கோயிற்சாந்து - ஒப்பற்ற கலவைச்சாந்து

ருக்கவேணுமோ, வ்யாப்திக்கு ப்ரயோஜநம், வேண்டினவிடத்தே ஸ்புரிக்க வல்லனாகையன்றோ. உகவாதாரையும் விடாதவன் உகந்த வுன்னை விடுமோ.

(நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியன்) வெறுமையே பச்சையாக இடைச்சிகளுக்கும் சென்று ஆஸ்ரயிக்கலாம்படியான தார்மிகன். இவர்களுடைய ஆஸ்ரயண முபாயமன்று, ருசியாலே. (புண்ணியன்) "ஸ்ரீமத்வாசாரதி" "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" (கOஉ) என்று இவர்களுக்கு உபாயமவன்றானிறே. ஸ்நேஹோக்தியாகவுமாம்.

இவனால் (பண்டொருநாள்) முன்பு உன்னைப்போலே யுணராதே படுத்தினருண்டுகாண் என்கை. (பண்டொருநாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த) தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே யமிழ்ந்து சாவாரைப் போலே, * ரிபூணாமபிவத்ஸலரான பெருமாள்பக்கலிலே தப்புச் செய்த. (கும்பகரணனுந் தோற்றுமுனக்கே பெருந்துயில்தான் தந்தானோ) உறக்கத்தில் தலையானவனும் உன்க்குத் தோற்றுத்தன் உறக்

நம்மால் போற்றப்படும்படி கைங்கர்யத்தைத்தரும் புண்ணியனென்று ஸப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, தாத்பர்ய மருளிச்செய்கிறார் (வெறுமையே யித்யாதி.) தார்மிகனென்றது - "தர்மம் சரதி" "யஜ்ஞம் வஹதி" என்கிற ஸூத்ரத்தாலே - தர்மாசரணம்பண்ணுமவனென்றாய், பறைதருகையாகிற தர்மம்பண்ணுமவனென்கை. "போற்றப்பறைதரும்" என்று - போற்றுதல் ஹேதுவாகத் தோன்றியிருக்க வெறுமையைச்சொல்லக்கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி.) (ருசியாலே) என்றவநந்தரம், "வந்ததித்தனை" என்று ஸேஷம். ஆஸ்ரயணம் உபாயமாகாவிட்டால் வேறுபாயமேதென்ன; அதுக்கு பரிஹாரமாக, "புண்ணியன்" என்றார்களேயென்று விவக்ஷித்து, ப்ரதீகக்ரஹண பூர்வகம் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (புண்ணியனித்யாதி.

"கும்பகரணன்" என்றபோதே பூர்வகாலீநத்வம் தோற்றியிருக்க, "பண்டொருநாள்" என்றதுக்கு உபாலம்பம்தோற்ற ஹாவமருளிச்செய்கிறார் (முன்பித்யாதி.) "வாய்வீழ்ந்த" என்றது - நஸிக்கவென்றாய், அதுதானும் தத்க்ருதமாய்த் தோன்றுகையாலே, (இவனால்) என்றது - கரணார்த்தமாகத் திருவுள்ளம் பற்றி, த்ருஷ்டாந்தபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தண்ணீரித்யாதி.) "கும்பகரணனும்" என்றசகாரம் ப்ராதாந்யத்திலேயாக்கி, "உனக்கு" என்றத்தை "தோற்று" என்றதுக்கு முந்துறக்கூட்டி, ஏகாரத்தை "தான்" என்றபதத்தோடேசேர்த்து, "தோற்றும்" என்றசகாரத்தை, "துயில்" என்றத்தோடேவயித்து, "பெரும்" என்றத்தை - பெரிதாம்படி யென்றாக்கி, "கும்பகரணனும் - உனக்கு - தோற்று - பெரிதாம்படி - துயிலை - உம் - தானே - தந்தானோ" என்றந்வயம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யங்களை யருளிச்செய்கிறார் (உறக்கத்திலித்யாதி வாக்யத்ரயத்தாலே.) "துயிலையும்" என்றசகாரம் - அநுக்தஸமுச்சயமாய்,

கத்தையுந் தானே தந்து போனுனே. அவனது துயில்; உன்னது பெருந்துயில்· அவன் ஒருத்தியையிறே பிரித்தது; நீ ஊராகப் பிரித்து உறங்காநின்ருயே.

(ஆற்றவனந்த லுடையாய்) இப்படி சொல்லக்கேட்டுப் பெரிய வனந்தலோடே "க்ருஷ்ண க்ருஷ்ண" என்ன; எங்களுக்கு அங்கே போய் *துயிலெழபாடவேணுமோ, நீ யுணரும்படி காணவமையாதோ. (அருங்கலமே) எங்களுக்கெல்லாம் ஸிரோபூஷணமல்லேயோ. ஹாரத்தைப்பண்ணி அதுக்குக் கல்லழுத்தினுப்போலே, நீ புகுந்து இக்கோஷ்ட்டியை ஸநாதமாக்காயென்கிருர்கள். எங்களுக்குப் பெறுதற்கரிய வளல்லேயோ நீ யென்னவுமாம். இவர்களார்த்தியைக்கண்டு துணுக்கென்று வரப்புக்காள் (தேற்றமாய்வந்துதிற) இரண்டாம் நிலத்திலே கிடக்கிறவளாகையாலேதடுமாருதேதெளிந்துவந்து திற என்கிருர்கள்.

தன்னபராதத்தையும் பெரிதாகத்தந்தானேவென்று விவக்ஷித்து, அதின்பெருமையை உபபாதிக்கிருர் (அவனெருத்தியையித்யாதி.) இத்தால் - "புண்ணியனல் - கூற்றத்தின் வாய்வீழ்ந்த" என்று - அபராதத்தைப்பண்ணி நஸித்தவனென்கையாலே இவ்வர்த்தம் லபித்ததென்று திருவுள்ளம். ராவணன் பிராட்டியைப் பிரித்தவனுயிருக்க, கும்பகர்ணன் பிரித்ததாகச்சொன்னது - அவன் ஸம்வதித்துப் பெருமாளோடேயெதிர்ந்து யுத்தத்துக்கு வருகையாலே யென்றுகொள்வது. "ఇదానీంఖల్వహంనాస్మి యస్య మేపతితో భుజఃదక్షిణో యంసమాసాద్య నబిభేమిసురాసురాత్" "இதாநீம்வலுஹம் நாஸ்மியஸ்யமேபதிதோபுஜ:। தக்ஷிணோயம்ஸமாஸாத்ய ந பிபேமிஸுராஸுராத்" என்கிறபடியே - தானே அவனுகவும் தனக்கு அவன் வலக்கையாகவும் அவலம்பமாகவும் ராவணன் சொல்லுகையாலே - கும்பகரணனே பிரித்ததாகச் சொன்னதாகவுமாம்.

கீழே "பெரும்துயில்" என்றுசொல்லிவைத்து, இங்கே அனந்தலேயிட்டு ஸம்போதிக்கையாலே: அவள் இவர்களிட்டபழிக்கஞ்சி, தன்னுணர்த்தி இவர்களுக்குத்தோற்றத் திருநாமஞ்சொன்னுளென்று ஸங்கதியைக்காட்டுகிருர் (இப்படி யித்யாதி.) ஆற்ற - மிகுந்திருக்கிற, அனந்தல் - தந்த்ரியை யுடையவளே யென்று இதினுத்தேஸ்யதைதோற்ற இத்தையிட்டு ஸம்போதித்ததுக்குத் தாத்பர்யத்தை வ்யாவ்ருத்திபூர்வக மருளிச்செய்கிருர் (எங்களுக்கித்யாதிவாக்யத்வயத்தாலே.) "கலம்" என்றவிடத்தில் "மனக்கள் மாருடிவரும்" என்கிற ந்யாயத்தாலே "கலன்" என்ருய், ஆபரணவிவக்ஷையாகக் கீழருளிச்செய்து, "கலம்" என்று விவக்ஷித்து, அதுபாத்ரமென்ருய், அத்தால் - நல்லபெண்ணேயென்று அர்த்தாந்தர மருளிச்செய்கிருர் (எங்களுக்குப் பெறுதற்கித்யாதி.)

* தேற்றமாய் வரவேணுமென்கைக்கு ஹேதுவை யருளிச்செய்கிருர் (இரண்டாம்நிலத்திலே யித்யாதி.) இரண்டாம்நிலம் - மேல்மெத்தை. "ஒருபோகி

(தேற்றமாய்வந்துதிற) ஊராகத் திரண்டு கிடக்கிறது, படுக்கை யிற்கிடந்தபடியே வாராதே ஸதஸ்யையாய்வந்து திற. "ஸுப்ரஜ்ஞ ஸ்ரீ" "ஸாஸ்வஸ்வஸுஸ்ரீ" (க0௬) என்னும்படி வாராதேகொள் என்கிறுர்கள்.

யாக க்ருஷ்ணநுபவம்பண்ணுமவள்" என்ற த்ருதீயாவதாரிகைக்குச்சேரத் தாத் பர்யாந்தர மருளிச்செய்கிறுர் (ஊராகவித்யாதி.) ... ... (க0)

ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்.

அ.—பத்தாம்பாட்டு. (நோற்றித்யாதி) இப்பாட்டில், உபாய நிஷ்ட்டரை யெழுப்புகிறுர்கள்.

வ்யா.—(நோற்று) ஸித்தஸாதந பரிக்ரஹம்பண்ணி. (சுவர்க்கம்) ஸ்வகரூபமான ப்ராப்யத்தை. (புகுகின்ற) அநுபவிக்கிற. (அம்மனுய்) ஸ்வாமிநியானவளே. (வாசல்திறவாதார்-மாற்றமும் தாராரோ) த்வதநுபவவிரோதியான வாசலை – அஹங்காரத்தை நீக்கி, எங்களை உன்னை யநுபவிப்பியாவிடிலும் நாங்கள் கேட்டு வாழும்படியான ஒரு வார்த்தையுமரிதோ. அவனே யெழுந்திருக்க வொட்டாவிடிலும் இருந்தவிடத்தே யிருந்து வார்த்தைசொன்னு லாகாதோ என்று பாவார்த்தம்.

இப்போது அவனிங்குண்டோ, என் பழியிடுகிறிகோளென்ன (நாற்றத்துழாய்முடி) இப்போது அவனிங் கில்லாவிடில் பரிமளமே தென்ன ; அவனெருக்காலணைக்க ஒன்பதுகுளிக்குப் பரிமளம் நிற்குமேயென்ன ; கட்டுங் காவலுமானவிடத்தே அவனுக்குப் புகுரப்போமோவென்ன (நாராயணன்) வேண்டுமிடத்தே ஆவிர்ப்பவிக்கைக் கன்றே அவனுடைய வ்யாப்தியென்ன ; (நம்மால் போற்றப்பறைதரும் புண்ணியனுல்) நம்மாலே போற்றப்பட்டவனைக் கொண்டு புருஷார்த்தப்ரதனுன நாராயணனுலே.

(பண்டொருநாள் கூற்றத்தின்வாய்வீழ்ந்த கும்பகரணனும் தோற்று முனக்கேபெருந்துயில்தான் தந்தானே) முன்பொரு தமோபிபூதமான காலத்திலே ம்ருத்யுவினுடைய வாயிலே விழுந்த தாமஸனுன கும்பகர்ணனும், உன் துயிலுக்குத் தான்தோற்று, உனக்கே தன்னுடைய பெருந்துயிலையும் தானே தந்தானே. இவ்விடத்திலே "கும்பகரணன்" என்கிறது - தமோகுணத்தை. தமோகுணந்தன்னையன்றியிலே இவளுக்குண்டான நித்ரையைக்கண்டு இவளுடைய நித்ராஜநகத்வ ஸக்திக்குத் தான்தோற்றுத் தன்னுடைய நித்ராஜநகத்வஸக்தியை

யும் தந்தானோ என்று ரஹஸ்யம். ஸாத்த்விகனான இவ்வதிகாரிக்கு நித்ரையாவது - "ప్రాజ్ఞేనాత్మనా సంపరిష్వక్తో బాహ్యం కిఞ్చన వేద" "వ్యజ్ఞనాత్మనాసం వరిష్వక్తోవాహ్యంకిఞ్చనవేద" என்கிறபடியே ஸ்வாநுபவதசையிலே இதரவிஷயங்கள் தோற்றாதிருக்கை.

இப்படி யிவர்கள் சொன்னவாறே அவளெழுந்திருந்து சோம்பல் முறிக்க (ஆற்றவனந்தலுடையாய்) மிகவும் சோம்பலையுடையவளே. சோம்பலாவது - வ்யாபாராந்தராக்ஷமதை. அதஏவ, (அருங்கலமே) துர்லபமான ஆபரணமே. "ஆற்றவனந்தலுடையாய், "அருங்கலமே" என்கையாலே - "కిమివహిమధురాణాం" "కిమివహిమధురాణాం" என்கிறபடியே சோம்பல் முறிக்கையும் துர்லபமான ஆபரணம்போலே அத்யாகர்ஷகமாயிருக்கிறது என்றுமாம். இவர்களாற்றாமையைக்கண்டு சடக்கெனவந்து திறக்கப்புக; (தேற்றமாய்வந்துதிற) என்கிறார்கள். நாங்கள் புறக்கட்டிலே யிருக்கிறோ மாகையாலே இருந்தபடியே வாராமே, ஸதஸ்யையாய்வந்து திற என்கிறார்கள். தேற்றமாய் வந்து திற என்கையாலே - இவ்வதிகாரிக்கும் லோககர்ஹை வாராமல் லௌகிகாநுவர்த்தநம் கார்யமென்றதாய்த்து. ()

அ.—பதினோராம்பாட்டு. எல்லாவற்றாலும் அபிஜாதையா யிருப்பா ளொருத்தியை யெழுப்புகிறார்கள். ஆபிஜாத்யத்தால் க்ருஷ்ணனோ டொப்பாளொருத்தி யிவள்.

மூ.—கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றர வல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி நீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (கக)

பதினோராம்பாட்டு (கற்றித்யாதி.) "கோவலர்தம்பொற்கொடியே, புற்றரவல்குல் புனமயில், செல்வப்பெண்டாட்டி" என்கிறபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை (எல்லாவற்றாலுமித்யாதி.) எல்லாவற்றாலுமென்றது – குலத்தாலும், ரூபத்தாலும், குணத்தாலுமென்றபடி. குலாதிகளால் இவள் ஶ்லாக்யையாயிருந்தாளேயாகிலும் இவர்கள் அவற்றையிட்டுச் சொல்லுவானென்னென்னில்? அதுக்குஹேதுவை யருளிச்செய்கிறார் (ஆபிஜாத்யத்தாலித்யாதி,) க்ருஷ்ணனோடொத்தவராகையாலே கொண்டாடுகிறார்களென்று கருத்து.

பதம்.	உரை
	குலம் - ரூபம் - குணம் இவற்றால் ஶ்லாக்யையாயிருப்பா ளொருத்தியைப்பார்த்து,
கன்று	கன்றுகளாயிருக்கிற
பல கறவைக்கணங்கள்	அநேகபசுக்கூட்டங்களை
கறந்து,	முலைக்கடுப்புத் தீரும்படி கறப்பவர்களாய்,
செற்றார்	க்ருஷ்ணன் பெருமைபொறாத கம்ஸன் தொடக் கமான ஶத்ருக்களுடைய
திறல் அழிய	வலிமை அழியும்படி
சென்று	அவர்களிருந்தவிடங்களிற்போய்
செருச்செய்யும்,	போர்செய்யுமவர்களாய்,
குற்றம் ஒன்று இல்லாத	படையெதிர்த்துவரப் பார்த்திருத்தல் கையிலா யுதமில்லாதாருடன் எதிர்த்தல் முதலிய ஒரு வகைக்குற்றமு மில்லாதவர்களான
கோவலர்தம்	இடையர்வயிற்றிற்பிறந்த [ளாய்;
பொன்கொடியே!	பொன்கொடிபோ லழகிய வடிவை யுடையவ
புற்று அரவு	புற்றிற்கிடக்கும் பாம்பின் படம்போல் ம்ருது
அல்குல்	நிதம்பத்தையும், [வாய் அகன்றிராநின்ற
புனம்மயிலே!	காட்டில் தன்னிச்சைப்படி திரியும் மயில்போல் அளகபாரத்தையு முடையவளே!
போதராய்;	புறப்பட்டுவாராய் என்றழைக்க;
"நாம் புறப்படும்படி	எல்லாரும் வந்தார்களோ" என்ன;
சுற்றம் எல்லாரும்	ஊரிலுள்ள எல்லாபந்துக்களும்
தோழிமார் எல்லாரும்	எல்லாத்தோழிகளும்
வந்து	திரண்டு வந்து
நின் முற்றம் புகுந்து	உன் திருமுற்றத்திற்புக்கு
முகில்வண்ணன்பேர்பாட	மேகம்போல் வடிவழகையும் ஔதார்யத்தையு முடையவன் திருநாமத்தைப் பாடச்செய்தே யும்,
செல்வப்பெண்டாட்டிநீ	க்ருஷ்ண ஸம்ஶ்லேஷமாகிற ஸம்பத்தையுடைய [நீ,
சிற்றாதே பேசாதே	அசையாமலும் பேசாமலும்
என்பொருளுக்கு	என்ன ப்ரயோஜநத்துக்காக
உறங்கும்.	உறங்குகிறாய் என்று எழுப்புகிறார்கள்.

வ்யா.—(கற்றுக்கறவை) எல்லாம் தலைநாகுகளாயிருக்கை. இது க்கு ஹேது நித்யஸூரிகள் பகவத் ஸ்பர்ஶத்தாலே பஞ்சவிம்ஶதி வார் ஷிகராயிருக்குமாப்போலே, இப்பசுக்களும் க்ருஷ்ணஸ்பர்ஶத்தாலே

கன்றுகளான பசுக்களென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, கன்றுகளா யிருக்கை இளமையைப்பற்றவென்று அருளிச்செய்கிறார் (எல்லாமித்யாதி.)

கீழ்நோக்கிப் பிராயம்புகுகை. ' ஸ்ப்ருஷ்டாஸ்ச ஹரிணா' "ஹவாமீத்ருஷாவவ–நரூ)–லெவ" (கoச) என்று – பகவத்ஸ்பர்ஶம் இளகிப் பதிக்கப் பண்ணுமிறே. (கணங்கள்பல) தனித்தனியே யெண்ணி முடியாமையன்றிக்கே, ஸமூஹங்களும் எண்ணிமுடியாது. "ரதக்ஷஜ ஜஸ்ரா" "ரயகூ–ஜூரவாஜிநோ" (கoரு) என்னுமாப்போலே, "பல" என்னுமித்தனை. ஆத்மாக்களுக்குத் தொகையுண்டானாலிறே பசுக்களுக் குத் தொகையுள்ளது. (கறந்து) ஈஶ்வரன் ஒருவனுமே ஸர்வாத்மாக் களுக்கும் நியமநாதிகளைப் பண்ணுமாப்போலே, இடைச்சாதியில் மெய்ப்பாட்டாலே அடங்கக்கறக்கவல்ல ஸாமர்த்யம். பாலும் நெய் யும் கொண்டு விநியோகமில்லாதபடி ஸம்ருத்தமாகையாலே,முலைக்கடுப் புக்கெடக் கறந்தென்றுமாம்.

(செற்றார்) இவர்களுக்கு ஶத்ருக்களாகிறார்கள் - க்ருஷ்ணனு டைய பெருமை பொறாதவர்கள். (திறலழிய) "தேவர்களும் எனக் கெதிரன்று" என்றிருக்கும் கம்ஸாதிகளுக்கும் புகுரவொண்ணாத மிடு க்கை யுடையவர்கள். (சென்றுசெருச்செய்யும்) எதிரிகள் வந்தால் பொருகையன்றிக்கே, இருந்தவிடங்களிலே சென்று பொருகை. "அபியாதா ப்ரஹர்தா ச" "கஅியாதாவ்ரஹர்தா" (கoசு) என்று - சக்ர வர்த்தித் திருமகனைப்போலே இவர்கள் வீரம். (குற்றமொன்றில் லாத) எடுத்துவரப் பார்த்திருக்கும் முற்றமில்லை. கையிலாயுதம்

க்ருஷ்ணஸ்பர்ஶத்தால் இளமைவருகைக்கு ப்ரமாணபூர்வகம் த்ருஷ்டாந்த மரு ளிச்செய்கிறார் (ஹாவாமீத்யாதி.) "ஸ்ப்ருஷ்டாஶ்ச" "ஷ்ருஷாவ" என்றசகாரம் ஸ்ப ர்ஶத்தை ஸமுச்சயிக்கிறதென்று திருவுள்ளம். எண்ணமுடியாமைக்கு த்ருஷ் டாந்தமருளிச்செய்கிறார் (ரதேத்யாதி.) "ராஜாஶ்வரதநாகா" "ராஜாஷஶா யொநாஶ" என்றத்தால் - ரதாதிகள் அர்த்தஸித்தமாயிருக்கவும், "ரதக்ஷஜ ஜஸ்ரா" "ரயகூ–ஜூரவாஜிநோ" என்றமதுப்பு புக்தியாகையாலே அவை யும் மணஶ: அஸங்க்யேயங்களென்றுகருத்து. "கறந்து" என்றதுக்கு இர ண்டுவகையாலே தாத்பர்யம் காட்டுகிறார் (ஈஶ்வரனித்யாதி வாக்யத்வயத் தாலே.) மெய்ப்பாட்டாலேயென்றது - ஸ்வாபாவிகதையாலேயென்றபடி.

ராஜாக்களுக்குப்போலே இடையர்களுக்கு ஶத்ருக்களுண்டாகைக்கு ப்ர ஸக்தியேதென்ன அருளிச்செய்கிறார் (இவர்களுக்கித்யாதி.) திறலழியும்படி யிருக்குமவர்களென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, இவர்களுக்கு அப்படிப் பட்ட மிடுக்குண்டோவென்ன அருளிச்செய்கிறார் (தேவர்களுமித்யாதி.)

"குற்றமொன்றில்லாதே – சென்று" என்று கூட்டியருளிச்செய்கிறார் (எடுத் தித்யாதி.) "குற்றமில்லாதே - செருச்செய்யும்" என்றந்வயித்து அர்த்தமருளிச் செய்கிறார் (கையிலித்யாதி.) "கோவலர்" என்றத்தோடேசேர்த்து மூன்றும்

பொகட்டவர்களை யெதிர்க்குங் குற்றமில்லை யென்றுமாம். அழியச் செய்யாநின்றார்களென்று க்ருஷ்ணனுக்கு முறைப்பட்டால் "செய் தாரேல் நன்றுசெய்தார்" என்னும்படி பிறந்தவர்களென்றுமாம். "ஸாதுரேவஸ மந்தவ்ய:" "ஸாது-ரேவஸமந்தவ்ய:" (கOஎ) என்றிறே அவன்படி. (கோவலர்தம் பொற்கொடியே) "ஜநகாநாம் குலே கீர்த்திமாஹரிஷ்யதி மே ஸுதா" "ஜநகாநாம் குலே கீர்த்திமாஹரிஷ்யதி மே ஸுதா" (கOஅ) என்னும்படியே ஊருக்காகவொரு பெண்பிள்ளை. (பொற்கொடி) தர்ஸநீயமாயிருக்கையும், "பதிஸம்யோகஸுலபம் வய:" "வதிஸம்யோகஸுலபம் வய:" (கூ) என்கிறபடியே பர்தாவாகிற கொள்கொம்பை யொழிய ஜீவியாமையும். "ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலால றிகின்றிலேன் நான்" என்றிறே யிருப்பது.

(புற்றரவல்குல்) தன்னிலத்தில் ஸர்ப்பம்போலே ஒசிவையும் அகலத்தையுமுடைய அல்குலையுடையாய். இவர்கள் இத்தனை சொல்லுவானென்னென்னில்; "யா ஸ்த்ரியோ த்ருஷ்டவத்யஸ்தா: பும்பாவம் மநஸா யயு:" "யாஸ்த்ரியோ த்ருஷ்டவத்யஸ்தா: பும்பாவம் மநஸா யயு:" (கOகூ) என்னும்படியே பெண்களை ஆண்களாக்கு மழகிறே. "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" (கக) என்று - அவன் ஆண்களைப் பெண்ணுடை யுடுக்கப்பண்ணுமாப்போலே. (புனமயிலே) தன்னிலத்தில் மயில். க்ருஷ்ணனையும் தங்களையும் பிச்சேற்றவல்ல அளகபாரத்தை யுடையளாகை. "பொற்கொடியே" என்கையாலே - ஸமுதாயஸோபையைச் சொல்லிற்று; மேல்விஸேஷணத்வயத்தாலும் - அவயவஸோபையைச் சொல்லுகிறது. (போத

தாத்பர்யமருளிச்செய்கிறார் (அழியவித்யாதி.) அழியச்செய்கையாவது - க்ருஷ்ணஸக்தியாலே ஸ்வேச்சாவிஹாரம்செய்து மர்யாதைகளை யழிக்கையென்றபடி. "அபிசேத்ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக். ஸாதுரேவஸ மந்தவ்ய: ஸம்யக்வ்யவஸிதோஹிஸ:" "அபிசேத்ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக். ஸாதுரேவஸ மந்தவ்ய: ஸம்யக்வ்யவஸிதோஹிஸ:" என்றஸ்லோகம் கண்டுகொள்வது. "கோவலர்பொற்கொடி" என்னுமல், "தம்" என்று விஸேஷிக்கைக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஜநகாநாமித்யாதி.) ஒசிவு- மார்த்தவம். அல்குல்- ஜகநப்ரதேஸம். இத்தனையென்றது- "புற்றரவு" என்றத்தை. "புனமயில்" என்றதுக்கு அவயவஸாத்ருஸ்யம் சொல்லலாயிருக்க அளகபாரத்திலே யொதுக்கினதுக்கு நியாமகம் காட்டுகிறார் (பொற்கொடியித்யாதி.)

"எற்றுக்குறங்கும்பொருள்" என்றுசொல்லும் க்ரியையே யமைந்திருக்க, "போதராய்" என்றதுக்கு "பொற்கொடியே" இத்யாதியைக் கடாக்ஷித்து

ராய்) "ஶ்ரீயஸ்ஸுசுருத்பீஷு" «மோஹயநுஇணு காரணைஶ்" (ககO) என்னும்படியே - நாங்கள் நிறக்கும்படி புறப்படாய்.

நாம் புறப்பட எல்லாரும் வந்தாரோ என்ன (சுற்றமித்யாதி) "சுற்றத்துத்தோழிமார்" என்கிறது - இவ்வூரடங்க இவளுக்கு வுறவு முறை யாகையாலே. (நின்முற்றம்புகுந்து) "உத்ரம் ரீஸாஸாத்ய" உத்தரம் தீரமாஸாத்ய" (அஅ) என்கிறபடியே எங்களுக்கு ப்ராப்யமானமுற்றத்திலேபுகுந்து. இவர்களுக்கு ப்ராப்யமானபடி யென்னென்னில்; "முற்றம்புகுந்து முறுவல்செய்துநின்றீர்" என்றும், "முற்றந்தூடுபுகுந்து நின்முகம்காட்டி" என்றும் -ஶேஷியானவனுக்கு ப்ராப்யமான முற்றமாகையாலே ஶேஷபூதைகளான எங்களுக்குச் சொல்லவேணுமோ. புகுந்துகொள்ளப்புகுகிற கார்யமென்னென்ன (முகில் வண்ணன் பேர்பாட) நீ யுகக்கும் அவனழகிலும் ஔதார்யத்திலும் ஈடுபட்டு அவன் திருநாமத்தைப் பாடச்செய்தேயும்.

(சிற்றாதே பேசாதே) "முகில்வண்ணன்" என்றவாறே, அவ்வடிவை நினைத்துப்பேசாதே கிடந்தாள். (சிற்றாதே) சிற்றுதல் - சிதறுதல். உணர்ந்தமைக்கடையாளமான சேஷ்டையைப் பண்ணாதே. இவள் சேஷ்டிதமும் வார்த்தையும் தங்கள் கண்ணுக்கும் செவிக்கும் போக்யமாகையாலே இன்னாதாகிறார்கள். (செல்வப்பெண்டாட்டிநீ) உன்னோடுகூடுமது எங்களுக்கெல்லா ஐஶ்வர்யமுமான நீ. க்ருஷ்ணனுஸந்தாநத்தாலே புஷ்கலையான நீ என்னவுமாம். இங்கே கூடு பூரித்துக்கிடந்ததோ என்ன; இல்லையாகில் (எற்றுக்கு உறங்கும் பொருள்) எங்கள்பாடே புறப்படாதே உறங்குகைக்கு ஒரு ப்ரயோஜந

ஹாவமருளிச்செய்கிறார் (ஶோஹயதித்யாதி) நிறக்குமென்றது - அவளோட்டைச்சேர்த்தியால் தாங்களெல்லாரும் விளங்குமென்கை.

"சுற்றத்து" என்று விஶேஷிக்கையாலே - உறவில்லாததோழிகள் வந்ததில்லையென்று தோன்றுகையால், பண்ணினப்ரஶ்நத்துக்கு உத்தரமாகாமையாலே கருத்தருளிச்செய்கிறார் (சுற்றத்தித்யாதி.) "நின்" என்றதுக்குத் தாத்பர்யம் (உத்தரமித்யாதி.) (சொல்லவேணுமோ) என்றவநந்தரம் "என்று இவர்களுக்குக் கருத்தாகையாலே" என்று ஶேஷம்.

"பேசாதே" என்றத்தையும் கூட்டித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவளித்யாதி.) "செல்வமான" என்று கீழருளிச்செய்து, "செல்வமுடையவள்' என்று விவக்ஷித்து யோஜநாந்தர மருளிச்செய்கிறார் (க்ருஷ்ணேத்யாதி.) நான் புஷ்கலையாயிருக்க இங்கே க்ருஷ்ணாநுபவம் நிறைந்துகிடக்கிறதோ வென்னும் ஶங்கையை யநுவதிக்கிறார் (இங்கேயித்யாதி.) கூடு - தாங்யமிருக்கிற க்ருஹ விஶேஷம். உறங்குகையாகிறவர்த்தம், எற்றுக்கு-எந்தப்ரயோஜநத்துக்கு? என்று ஶப்தார்த்தம் விவக்ஷித்து, தாத்பர்ய மருளிச்செய்கிறார் (எங்களித்யாதி.)

முண்டோ. "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதென்றுகொலோ" என்று திரளோடே அநுபவிக்கும் அநுபவத்தைவிட்டு, கைவல்யம்போலே கிடக்கிற கார்யமென் என்னவுமாம். (எற்றுக்கு உறங்கும்பொருள்) உன்னுடைய உத்தேஶ்யத்தைப் பாராதே, எங்களுடைய ஆற்றாமையைப் பாராதே, க்ருஷ்ணனுடைய நிரதிஶயபோக்யதையைப் பாராதே, எதுக்காகக் கிடக்கிறாய்? ... ... கக

ப்ரஶ்ந ப்ரதிவசநரூபேண கீழொரு ஸாவமருளிச்செய்து, அப்படி ப்ரஶ்நமன்றியிலே ஸாவாந்தரமருளிச்செய்கிறார் (அடியார்களித்யாதி.)

"எற்றுக்கு" என்றதுக்கு அநேககோடி ஸ்மாரகத்வம் திருவுள்ளம்பற்றி மூன்றாம்ஸாவமருளிச்செய்கிறார் (உன்னுடையவித்யாதி.) உன்னுடைய உத்தேஶ்யத்தையென்றது - ததீயரோடு கலக்கையென்கை.

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—பதினோராம்பாட்டு. (கற்றித்யாதி.) இப்பாட்டில், ஈஶ்வரனே உபாயோபேயமென்று அத்யவஸித்திருப்பார்க்கு மிகவும் ஆதரணீய விஷயமான அதிகாரியை யெழுப்புகிறார்கள்.

வா.—(கற்றுக்கறவை) ஸஸந்தாநரான ஶிஷ்யர். (கணங்கள்பல) அவர்களுடைய பலவான ஸமூஹங்களை. (கறந்து) அவர்களுடைய அபிநிவேஶாநுகுணமாக ஜ்ஞாநப்ரதாநம்பண்ணி.

(செற்றார்திறலழிய) செற்றாருண்டு - உபாயாந்தரபரரும், உபேயாந்தரபரரும்; அவர்களுடைய திறலுண்டு- ஸ்வார்த்தபரதை, அழிய-நஶிக்கும்படி. (சென்றுசெருச்செய்யும்) தாங்களே விஜயயாத்ரையைப்பண்ணி அவர்களோடே வர்த்திக்கிற. (குற்றமொன்றில்லாத) பூர்வோத்தராகங்களி லொன்றுமில்லாத. (கோவலர்தம்) "அவனே உபாயோபேயம்"என்று அத்யவஸித்திருக்குமவர்களுக்கு.(பொற்கொடியே)ஸ்ப்ர்ஹணீயமான பொற்கொடிபோன்ற திருமேனியையுடையவளே. ஜ்ஞாநவைஶத்யத்தை யுடையவளே என்றுமாம். (புற்றரவல்குல்) கீழ், பொற்கொடியென்று - பக்தியைச் சொல்லுகையாலே, அல்குலென்று - ஸ்வவிஷயத்திலே படிந்த பரமபக்தியைச் சொல்லுகிறது. (புனமயிலே) அளகமென்று - ஸ்வாபதேஶத்தில் வ்யாமோஹத்தைச் சொல்லுகையாலே, வ்யாமோஹந்தான் இதரவிஷய வைராக்ய பூர்வகமாய் ஸ்வவிஷய விரஹாஸஹிஷ்ணுவான ப்ரேமரூபஜ்ஞாநமாகையாலே, "புனமயிலே" என்று - பரமபக்தியை யுடையவளேயென்கிறது. (போதராய்) நீ புறப்பட்டு வரவேணும்.

நாம் புறப்பட்டு வருகைக்கு நம்முடையவர்களெல்லாரும் வந்தார்களோவென்ன (சுற்றத்துத்தோழிமா ரெல்லாரும்வந்து) உனக்கு பகவதநந்யார்ஹ சேஷபூதரான பாகவதரெல்லாரும்வந்து. (நின் முற்றம்புகுந்து) பரமப்ராப்யமான உன்னுடைய திருமுற்றத்திலே புகுந்து. (முகில்வண்ணன்பேர்பாட) பரமோதாரனும் ஶ்ரமஹரமான வடிவையுடையவனுமான வவனுடைய திருநாமத்தை, நீ புறப்பட்டு வருவதி என்றுபாட.

(சிற்றாதே பேசாதே) பரக்க வொருவ்யாபாரத்தையும் பண்ணாதே, வார்த்தையுஞ்சொல்லாதே. (செல்வப்பெண்டாட்டி) பகவத்குணங்களை [க] ஒருமடைசெய்து புஜிக்கையாகிற ஸம்பத்தையுடைய நிருபாதிகபாரதந்த்ர்யமுடையவளே. (நீ)இஸ்ஸம்பத் தென்றும் மாறாமல் செல்லுகிற நீ. (உறங்கும்பொருள் எற்றுக்கு) உறங்குகிறதுக்கு ப்ரயோஜநமேது? எங்களை அகற்றுகையே ப்ரயோஜநமோ? இன்னம் ஸம்ஸாரிகளை சேதநராக்குகைகயே ப்ரயோஜநமோ? சொல்லாயென்கிறார்கள். இப்பாட்டில், ஜாத்யுசிதமான தர்மத்தை ஸாதநபுத்யா வன்றிக்கே கைங்கர்யபுத்யா அநுஷ்ட்டித்தால் குற்றமில்லையென்கிறது - கற்றுக்கறவைக் கணங்கள் பலகறந்து குற்றமொன்றில்லாத வென்கையாலே. ... ... (கக)

அ.—பன்னிரண்டாம்பாட்டு. க்ருஷ்ணனைப்பிரியாதே இளைய பெருமாளைப்போலே யிருப்பானொருவன் தங்கையாகையாலே ஶ்லாக்யையா யிருப்பாளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

மூ..—கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திரா யீதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரு மறிந்தேலோ ரெம்பாவாய். (கஉ)

பன்னிரண்டாம்பாட்டு (கனைத்தித்யாதி.) "நற்செல்வன் தங்காய்" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகையிடுகிறார் (க்ருஷ்ணனையித்யாதி.)

[க] ஒருமடைசெய்கை - ஏகமுகமாக்குகை.

பதம்.	உரை.
	க்ருஷ்ணனைப்பிரியாமலிருப்பா னொருவனுடைய தங்கையாய் ஶ்லாக்யையாயிருப்பாளொருத்தியைநோக்கி,
இளம் கன்று எருமை	இளைதானகன்றுகளையுடைய எருமைகளானவை
	பால்கறப்பாரில்லாமையால் முலைகடுத்து
கனைத்து	கதறிக்கொண்டு
கன்றுக்கு இரங்கி	தங்கள் கன்றுகள்பக்கல் இரக்கமுற்று
நினைத்து	அவற்றைநினைத்து
	பாவநாப்ரகர்ஷத்தாலே
முலைவழியே	முலைகளின் வழியாக
பால் நின்றுசோர	பால்இடைவிடாமல்பெருக
	(அத்தாலே)
இல்லம் நனைத்து	அகங்களையெல்லாம் ஈரமாக்கி
சேறாக்கும்	துகைத்துச்சேறாகப்பண்ணும்
நல்செல்வன்	நல்லஸம்பத்துடையவனுடைய
தங்காய்!	ஸோதரியானவளே!
தலைபனிவீழ	எங்கள் தலையில் பனிவிழுகையால்
நின்வாசல் கடைபற்றி	உன்வாசற்காலில் தண்டியத்தைப் பற்றிக்கொண்டு
	கிடக்கிறோமென்று சொன்னவிடத்திலும் பேசாதேகிடக்க;
சினத்தினால்	"திருவடியைநலிந்தான்" என்கிறகோபத்தாலே
தென் இலங்கைக்கோமானை	அழகையுடைத்தாய் ஐஶ்வர்யம்மிக்கிருக்கிற லங்கைக்கு நிர்வாஹகனைராவணனை
செற்ற	நிரவித்தவனாய்,
மனத்துக்கு இனியானை	மநஸ்ஸுக்கு இனியனாயிருக்கும் சக்ரவர்த்தித்திருமகனை
பாடவும்	பாடச்செய்தேயும்,
நீ வாய்திறவாய்;	நீ வாய்திறந்துபேசுகிறிலை;
இனித்தான்	எங்களாற்றாமையை அறிவித்தபின்பும்
எழுந்திராய்;	எழுந்திருக்கிறிலை;
ஈது என்னபேருறக்கம்;	இது என்ன பெருந்தூக்கம்;
	நாங்கள் திரண்டுவந்து உன்வாசலில் நிற்கிறமையை
அனைத்து இல்லத்தாரும்	ஊரிலுள்ளாரெல்லாரும்
அறிந்து.	அறிந்தார்கள் எழுந்திராய் என்கிறார்கள்.

வ்யா.—(கனைத்து) கறப்பாரில்லாமையாலே முலைகடுத்துக் கதறுகை. (இளங்கற்றெருமை) இளங்கன்றாகையாலே பாடாற்ற

"நல்செல்வன்" என்றதைக்கடாக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கறப்பாரித்யாதி.) இளசான கன்றையுடைத்தான எருமையென்று ஶப்தார்த்தம் விவக்ஷித்து, இளங்கன்றையிட்டு விஶேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இளங்கன்றித்யாதி.) பாடாற்றமாட்டாமை - க்லேஶம் பொறுக்க

மாட்டாமை. (கன்றுக்கு இரங்கி) தன் முலைக்கடுப்புக்கிடக்க, "கன்று என்படுகிறதோ!" என்றிரங்கி. எம்பெருமான் ஆஶ்ரிதவிஷயத்திலிருக்கும்படிக்கு நிதர்ஶநமிறே. இத்தால் சொல்லிற்றாய்த்து— அவன் எருமைகள் கறவாவிட்டால் அவை படும்பாட்டை நாங்கள் உன்னாலே படாநின்றோமென்கை. (நினைத்து முலைவழியே) கன்றை நினைத்து பாவநாப்ரகர்ஷத்தாலே முலையிலே வாய்வைத்ததாகக்கொண்டு பால்சொரியாநிற்கும். (முலைவழியே) கைவழிதவிர. (நின்று பால்சோர) நினைவு மாறாமையாலே, திருமலையில் திருவருவிகள்போலே, பால்மாறாதே சொரிகை. இவன் எருமை கறவாதொழிவானென்னென்னில்; இளையபெருமாள் க்ஷத்ரிய தர்மமான அக்நிகார்யத்துக்கு உறுப்பாமன்றிறே இவனெருமைகள் விட்டுக் கறப்பது. அதுவென்னென்னில்; "న దేవలోకాక్రమణం నామరత్వమహం వృణే" "நதெவலொகாக்ரமணம் நாமரத்வமஹம்வ்ருணெ" (ககக) என்னுமாப்போலே க்ருஷ்ணனைப் பிரியக்ஷமனல்லாமையாலே, "పరిత్యక్తా మయా లఙ్కా—" "பரித்யக்தாமயாலங்கா" (உக) என்னும்படியாலே ப்ராப்ய விரோதிகளில் நசையற்றபடியாகவுமாம். (நனைத்தில்லம் சேறாக்கும்) பாலின் மிகுதியாலே அகம் வெள்ளமிடும், அத்தாலே துகையுண்டு சேறாகும்; இத்தால் - சேறாகையாலே புகுரவொண்கிறதில்லை யென்கை. (நற்செல்வன்) தோற்றிமாயும் ஸம்பத்தன்றிக்கே நிலைநின்ற ஸம்பத்து. அதாகிறது - க்ருஷ்ணன் திருவடிகளில் நிரந்தரஸேவை. "లక్ష్మణో లక్ష్మిసమ్పన్నః" "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" (உ0) என்கிறபடியே - கைங்கர்யலக்ஷ்மியிறே யிவ்வாத்மாவுக்கு நிலைநின்ற ஸம்பத்து.

மாட்டாமை. வ்யாக்யாதா ஈடுபடுகிறார் (எம்பெருமானித்யாதி.) முலைகடுத்துக் கறக்கையைச் சொல்லுகைக்கு ப்ரக்ருதோபயோகம் காட்டுகிறார் (இத்தாலித்யாதி) அவனென்றது - நற்செல்வனை. நினைவை விவரியாநின்றுகொண்டு மேலுக்கு ஹேதுவானமையைக் காட்டுகிறார் (பாவநேத்யாதி.) அதுவென்னென்னிலென்றது - ஸ்வதர்மமான கறக்கயைவிட்டு க்ருஷ்ணனைப் பின்செல்லுகைக்கு ஹேதுவென்னென்னி லென்றபடி.

"இல்லம்- நனைத்து- சேறாக்கும்" என்றந்வயித்து ஹேதுபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார். (பாலினித்யாதி.) மாயும் - நசிக்கும். சித்ரபிடாதரராய்க் கொண்டு எழுந்தருளுகிற இளையபெருமாளை "లక్ష్మీసంపన్నః" "லக்ஷ்மிஸம்பந்ந:" என்கையாலே - கைங்கர்யமே லக்ஷ்மியென்றுவிவக்ஷித்து, க்ருஷ்ணஸேவை நற்செல்வமானமையை யுபபாதிக்கிறார்; - "లక్ష్మీసంపన్నః సమ్యక్సంహితః- லக்ஷ்மிஸம்பந்ந: ஸம்யக்ஸம்ஹித:" என்றாய் ஸம்யக்த்வத்தை யுப

"லக்ஷ்மி ஸம்பந்ந:" என்றது, "ஊரும் நாடு முலகமுந் தன்னைப் போல்" என்கிறபடியே - தன் வைஷ்ணவஸ்ரீயாலே ஜகத்துக்கடைய வைஷ்ணவத்வமுண்டாம்படி யிருக்கை. (தங்காய்) குணஹாநிக்கு "రావణస్యానుజో భ్రాతా" "ராவணஸ்யாநுஜோ ப்ராதா" (கக௨) என்னுமாப்போலே குணத்துக்குத் தமையனில் தன்னேற்றமுடைய ளென்கை.

(பனித்தலைவிழ நின்வாசல் கடைபற்றி) மேல் வர்ஷம் வெள்ளமிட, கீழ் பால் வெள்ளமிட, நடுவு மால் வெள்ளமிட, நின்றநிலையாகையாலே, தெப்பம் பற்றுவாரைப்போலே நின்வாசற்கடையில் தண்டியத்தைப்பற்றிக் கிடக்கிற இத்தர்மஹாநி அறிகிறிலே.

இப்படி சொன்னவிடத்திலும் இவர்கள் படுமலமாப்புக் காண்போமென்று பேசாதே கிடக்க; (சினத்தினால்) பெண்களைத் தீராமாற்றாக நெஞ்சாறல் பண்ணும் க்ருஷ்ணனை யொழிய, பெண்பிறந்தார்க்குத் தஞ்சமான சக்ரவர்த்தித் திருமகனைச் சொல்லுவோம் இவள் எழுந்திருக்கைக்காக என்று ராமவ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறார்கள் (சினத்தினால்) தண்ணீர்போலே யிருக்கிற சக்ரவர்த்தித் திருமகனுக்கும் சினமுண்டோ வென்னில்; ஆஸ்ரித ஸத்ருக்கள் இவர்க்கும் ஸத்ருக்களிறே: "తతో రామో మహాతేజా రావణేన కృతవ్రణమ్ । దృష్ట్వా ప్లవగశార్దూలం కోపస్య వశమేయివాన్" "ததோ ராமோ மஹாதேஜா ராவணேந க்ருதவ்ரணம் । த்ருஷ்ட்வா ப்லவகசார்தூலம் கோபஸ்ய வசமேயிவாந்" (கக௩)

பாதிக்கிறார் (லக்ஷ்மிஸம்பந்ந இத்யாதி.) "நற்செல்வன்" என்றதுக்கு க்ருஷ்ணனிடத்தில் பக்தியாலே கைங்கர்யம்பண்ணுமவனென் றர்த்தமாகையாலே அவனுக்குத் தங்கையென்று இவளைச் சொல்லுகையாலே புருஷனிற்காட்டில் ஸ்த்ரீக்கு ப்ராவண்யம் பள்ளமடையாகையாலே அவனிலேற்றமுடையவளே யென்று விவக்ஷித்து த்ருஷ்டாந்தபூர்வக மருளிச்செய்கிறார் (குணஹாநிக்கித்யாதி.) குணத்துக்கு - ப்ராவண்யரூபகுணத்துக்கு.

தலையிலே பனி விழுகையாலே நின்வாசல் கடையைப் பற்றி என்று ஸப்தார்த்தம் விவக்ஷித்து "பால்சோர" என்றத்தைக் கடாக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (மேலித்யாதி.)

தங்களுக்குத்தேஸ்யமான க்ருஷ்ணனைப் பாடவுமென்னாதே, சக்ரவர்த்தித் திருமகனைச் சொல்லுவா னென்னென்ன அருளிச்செய்கிறார் (பெண்களை இத்யாதி.) (தீராமாற்றாக) என்றது - மாற்றாலே-ப்ரதிக்ரியையாலே தீராதபடியாக வென்றபடி. "న క్రుధ్యత్యభిశస్తో౽పి క్రోధనీయాని వర్జయన్" "ந க்ருத்யத்யபிசஸ்தோபி க்ரோதநீயாநி வர்ஜயந்" என்னும் ப்ரமாண ப்ரஸித்தியைப்பற்றி ஸங்காநுவாதம் (தண்ணீரித்யாதி.) ஆஸ்ரிதஸத்ருக்களிடத்தில் இவர்க்குச் சினமுண்டென்னுமதுக்கு, திருவடியை நலிந்த ராவணனிடத்தில் கோபம்பண்ணினரென்னும் ப்ரமாணத்தைக் காட்டுகிறார் (ததஇத்யாதி.) ஆஸ்ரித விரோதி

மஹாராஜர்க்குச் சிற்றம் பிறந்தபோது வாலியை யெய்தார், அவரழுத போது கூட அழுதாரிறே. "ద్విషదన్నం న భోక్తవ్యమ్" "த்³விஷத³ந்நம் ந போ⁴க்தவ்யம்" (கககச) என்றிறே யிருப்பது. (தென்னிலங்கைக் கோமானை) "యద్యధర్మో న బలవాన్ స్యాదయం రాక్షసేశ్వరః । స్యాదయం సురలోకస్య సశక్రస్యాపి రక్షితా" "யத்³யத⁴ர்மோ ந ப³லவாந் ஸ்யாத³யம் ராக்ஷஸேச்வர: ஸ்யாத³யம் ஸுரலோகஸ்ய ஸஶக்ரஸ்யாபி ரக்ஷிதா" (கக௫) என்று திருவடி மதித்த ஐஶ்வர்யத்தை யுடையவனை. (செற்ற) ஓரம்பாலே தலையைத் தள்ளி விடாதே படையைக்கொன்று, தேரை அழித்து, ஆயுதங்களை முறித்து, "தான்போலும்" இத்யாதி, ✻ கோன்போலு மேன்றெழுந்து கிளர்ந்துவந்த மாநத்தை யழித்து, நெஞ்சாறல் பண்ணிக் கொன்றபடி. (மனத்துக்கினியானை) "வேம்பேயாக வளர்த்தாள்" என்னும்படியே- பெண்களைப் படுகுலையடிக்கும் க்ருஷ்ணனைப்போ லன்றிக்கே, ஏகதார வ்ரதனாயிருக்கை. பெண்களை ஓடியெறிந்து துடிக்க விட்டுவைத்து பின் இரக்கமுமின்றிக்கே யிருக்கும் க்ருஷ்ணனையொழிய. "సఞ్జాతబాష్పః పరవీరహన్తా" "ஸஞ்ஜாதபா³ஷ்ப: பரவீரஹந்தா" (ககசு) என்று - ஶத்ருக்களுக்கும் கண்ணநீர் பாயுமவரை யென்றுமாம். (பாடவும் நீ வாய் திறவாய்) "கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்" என்று நம்மை நலியும் க்ருஷ்ணனுடைய பேரைக் காற்கடைக்கொண்டு, 'ఇతః పరమృతసఞ్జీవనం రామస్య దర్శనమ్" "இத: பரம்ருதஸஞ்ஜீவநம் ராமஸ்ய த³ர்ஶநம்" (ககஎ) என்னும்படியே க்ருஷ்ணவிரஹத்தாலே கமர்பிளந்த நெஞ்சு பதஞ் செய்யும்படியான சக்ரவர்த்தித் திருமகனைப் பாடச்

களிடத்தில் கோபமுண்டென்னுமதுக்கு உதாஹரணம் காட்டுகிறார் (மஹாராஜரித்யாதி.) "தென்" என்று - அழகாய், ஸ்ப்ருஹணீயமாகையாலே- ஐஶ்வர்யத்தைக் காட்டுகையால், அத்தை ப்ரமாணபூர்வகமருளிச்செய்கிறார் (యద్యధర్మ - யத்³யத⁴ர்ம) இத்யாதி. "சினத்தினால்" என்று ஸம்பந்திஸம்பந்திகளளவும் கோபம் விவக்ஷிதமாகையாலே "செற்ற" என்றதுக்கு அத்தைப்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஓரம்பாலே யித்யாதி.)

(படுகுலையடிக்கும்) என்றதுக்கு - "கருமலர்க் கூந்தலொருத்தி தன்னைக் கடைக்கணித்து" இத்யாதிப்படியே பெண்களனைவர்க்கு மாசையுண்டாக்கி ஸம்ஶ்லேஷியாமல் பாதிக்குமென்றபடி. ஓடியெறிகை - காட்டுவழியே வேடர் மரத்தைத்தள்ளுகையாதல்; பாதிமரத்தை அர்த்தஜீவனாக்கி விடுகையாதல். இத்தால் - க்ருஷ்ணன் தங்களை வஶீகரித்து ஸம்ஶ்லேஷியாமல் துடிக்க விடுவனென்று கருத்து. "பாடவும்" என்றசகாரம் - ப்ராதாந்யத்திலேயாய், அந்த ப்ராதாந்யத்தை வ்யாவ்ர்த்திபூர்வக மருளிச்செய்கிறார் (கண்ணனித்யாதி.)

செய்தேயும். (வாய்திறவாய்)வாய்திறக்கிறிலே. ப்ரீதிக்குப் போக்குவிட வேண்டாவோ.

(இனித்தா னெழுந்திராய்) எங்களாற்றுமை யறிவித்த பின்பும் உறங்கக் கடவையோ, எழுந்திராய். (ஈதேன்ன பேருறக்கம்) "ஜாகர்த்தி ஸ்வப்நாய நம:" "ஹமவதஸ்ஸ்வாபேயநம:" (கக அ) என்று கொண்டு பிறரார்த்திக்கு த்வரித்து உணருமவனோடே பழகிவைத்து இங்ஙனே யுறங்குவதே!என்கிறார்கள். ஆபந்நர்க்காக உணருமவன் படியுமன்றிக்கே காலமுணர்த்த உணரும் ஸம்ஸாரிகள் படியுமன்றிக்கே யிருப்பதே! உன்னுறக்கம்.

(அனைத்தில்லத்தாரு மறிந்து) பெண்களெல்லாரும் வந்து உன் வாசலிலே யழைக்கிறமை ஊராக அறியவேணுமென் றிருந்தாயாகில், எல்லாரு மறிந்தது, இனி எழுந்திராய்; பகவத்விஷயம் ரஹஸ்யமாக அநுபவிக்கு மித்தனை, புறம்பு இதுக்கு ஆளுண்டோ வென்று கிடக்கிறாயாகில் அதெங்கும் ப்ரஸித்தமாய்த் தென்றுமாம். எம்பெருமானார் திருவவதரித்தாப்போலேகாணும் இப்பெண்பிள்ளையும். ... (கஉ)

" திறவாய் " என்றது - திறக்கவேணுமென் றர்த்தமாகில், "பாடவும்" என்றது அந்வயியாமையாலே, வ்யதிரேக முகமாக ஸப்தார்த்த மருளிச்செய்கிறார்(வாயித்யாதி.) நீங்கள்பாட, நான் அநுபவித்துக்கொண்டிருக்கை ப்ராப்தமாயிருக்க, வாய்திறக்கவேண்டுவானென் என்று அவளுக்குக் கருத்தாக அருளிச்செய்கிறார் (ப்ரீதிக்கித்யாதி.) "ஈது" என்றத்தாலும், "பேருறக்கம்" என்றத்தாலும் தோன்றுகிற உபாலம்ப த்வயத்தையும் க்ரமேண வருளிச்செய்கிறார் (ஹகவத இத்யாதி வாக்யத்வயத்தாலே.)

" அறிந்து " என்றது-கடைக்குறைத்தலாயிருந்ததென்று ஸப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார். (பெண்களித்யாதி.) "பெண்கள் அழைக்கிறமையையறிந்து" என்று அத்யாஹாரம் திருவுள்ளம்பற்றிக் கீழொரு தாத்பர்ய மருளிச்செய்து, "ரஹஸ்யத்தையறிந்து" என்று அத்யாஹரித்து தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (பகவத்விஷயமித்யாதி.) இப்பெண்பிள்ளையென்றது-எழுப்புகிற பெண்பிள்ளையென்றாய், ஆண்டாளென்றபடி. இவள்வாசலிலே யிருந்து அவள் ரஹஸ்யமாக வநுபவிக்க அத்தை வெளியிட்டாளென்றுகருத்து

ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்.

அ.—பன்னிரண்டாம்பாட்டு. (கனைத்தித்யாதி) இப்பாட்டில், பாகவதாபிமாந நிஷ்டரை யெழுப்புகிறார்கள்.

வ்யா.—(கனைத்து) ஸ்வாசார்யன், தனக்கும் ஸ்வஸந்தாநத்துக்கும் பகவத்குணாநுபவம் பண்ணுவிக்கவில்லையென்று வ்யஸநப்பட்டு. (இளங்கற்றெருமை) பாலஸந்தாநமுடைய ஶிஷ்யர். (கன்றுக்கிரங்கி) ஸ்வஸந்தாநத்திலே தயைபண்ணி. (நினைத்து) ஸ்வாசார்யன்றன்னை யநிஷ்ட்டித்துக்கொண்டு ஸ்வஸந்தாநத்துக்கு பகவத் குணாநுபவம் பண்ணுவித்தருளுகிறானென்று நினைத்து. (முலைவழியே நின்று பால்சோர) பாவநாப்ரகர்ஷத்தாலே ஸ்வாசார்யாபிமாநமடியாக பகவத்குணங்கள் சுரக்க, (நனைத்தில்லம் சேறாக்கும்) ஶ்ரோதாக்களுடைய ஹ்ருதயத்தை ஸாம்ஸாரிக தாபமெல்லா மாறும்படி குளிரப்பண்ணி, குணாநுபவத்தாலே களிக்கும்படி பண்ணுகிற. (நற்செல்வன்) ஶ்லாக்யமான ஸம்பத்தையுடைய பாகவதனுடைய. (தங்காய்) ஸோதரியானவளே.

(பனித்தலைவீழ) பனியானது தலைமேலேசொரிய. அதாவது—* மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுடைய ஶ்ரீஸூக்திகளாலே வரும் பகவத்குணாநுபவம். (நின்வாசல் கடைபற்றி) கீழ் ...ார்யோபதேஶமடியாகவரும் பகவத்குணாநுபவப்ரவாஹமென்ன, ...மலே, *மயர்வறமதிநல மருளப்பெற்ற வாழ்வார்களுடைய அருளிச்செயல்களால் வரும் குணாநுபவ ப்ரவாஹமென்ன, நடுவே பாகவத குணாநுபவ ப்ரவாஹமென்ன, இப்படி ப்ரவாஹத்ரயத்திலே அகப்பட்டு அலைகிற நாம், உனக்கு ப்ரதிபாதகமான நமஸ்ஸிலே த்வாரவர்த்தியான நகாரமாகிற அவலம்பத்தைப்பற்றி. கீழ்ச்சொன்ன குணாநுபவங்களில் போக்த்ருத்வபுத்தி வாராதபடி தடுக்கிற நகாரத்தைப்பற்றியென்றபடி. (சினத்தினால் தென்னிலங்கைக்கோமானைச் செற்ற மனத்துக்கினியானை) கோபத்தினாலே, யமவஶ்யதாமூலமான ஸம்ஸாரத்துக்கு நிர்வாஹகமான அஹங்காரத்தை நஶிப்பித்து, அதவ மநத்துக்கினியனான சக்ரவர்த்தித்திருமகனை. (பாடவும் நீவாய் திறவாய் இனித்தானெழுந்திராய்) எங்களாற்றாமை காணவேணுமென்றிருந்தாயாகில் கண்டபின்பு உறங்குமித்தனையோ, எழுந்திராய். (ஈதென்ன பேருறக்கம்) காலமுணர்த்த வுணரும் ஸம்ஸாரிகள் நித்ரைபோலு மன்றிக்கே, ஆஶ்ரிதர்களார்த்தி யுணர்த்த வுணரும் ஈஶ்வரனுடைய உறக்கமும்போலன்றிக்கே, உபயவிலக்ஷணமான இம்மஹாநித்ரையேது?. ஸம்ஸாரிகள் நித்ரை, தமோபிபூதையாலுண்டான தாகையாலே ஸத்த்வோத்தரமான காலத்திலே தீரும்படியாயிருக்கும்; ஈஶ்வரனுடையநித்ரை, ஜகத்ரக்ஷணசிந்தாரூப மாகையாலே பரரார்த்திகாணத்தீரும்; இவளுடைய நித்ரை, சரமபர்வ நிஷ்ட்ட

ருடைய ஆற்றாமை காணத்நீரும் ; ஆகையாலே அநுக்கதிகாரிகள் கிடையாமையாலே பேருறக்கமாயிருக்கும். (அனைத்தில்லத்தாருமறிந்து) நாங்கள் உன்னையெழுப்புகிறது எல்லாருமறியவேணுமென்றிருந்தாயாகில், அதெல்லாருமறிந்தார்கள் எழுந்திராயென்கிறார்கள். பகவத்விஷயம் ரஹஸ்யமென்றிருந்தாயாகில் அது எங்கும் ப்ரஸித்தமாய்த்து, எழுந்திராயென்கிறார்கள்.

கீழ்ப்பாட்டில் "கற்றுக்கறவைக் கணங்கள் பலகறந்து" என்று ஸ்வவர்ணோசித தர்மாநுஷ்டானத்தைச்சொல்லி, இப்பாட்டில் சொல்லாமையாலே அநுஜ்ஞா கைங்கர்ய நிஷ்ட்டனுக்கு ஆஜ்ஞாகைங்கர்ய ஹாநி ஸ்வரூப விரோதமன்றென்கிறது. இவன் எருமை கறவாமைக்கு இளையபெருமாளை த்ர்ஷ்டாந்தமாக வருளிச்செய்து, உபாயாந்தர த்யாகத்துக்கு ப்ரமாணமாக "ஸர்வ்வ தர்மாந்" "நமெஷவஸொகாக்ஷ ணே" என்கிற ஶ்லோகத்தை உதாஹரித்தது ஐஶ்வர்ய கைவல்ய பகவல்லாபங்களி லபேக்ஷையில்லாதவர்க்கு தத்ஸாதநாநுஷ்ட்டானத்திலபேக்ஷை பிறவாதிறே யென்னு மபிப்ராயத்தாலே. ... கஉ

அ.—பதின்மூன்றாம்பாட்டு—நம் கண்ணழகுண்டாகில் தானே வருகிறானென்று கிடக்கிறாளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

மூ.—புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்,
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று,
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்,
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (கங)

பதம். உரை.

"நம் கண்ணழகுண்டாகில் தானேவருகிறான்" என்றிருப்பாளொருத்தியைப்பார்த்து,

பதம்	உரை
புள்ளின்வாய்கீண்டானை	பகாஸுரனுடைய வாயைப்பிளந்தவனாய்,
பொல்லாஅரக்கனைக்கிள்ளிக் களைந்தானை	ஸகலவிதமான பொல்லாங்கையுஞ்செய்து திரிந்த ராவணனுடைய பத்துத்தலைகளையும் கிள்ளியெறிந்து பொகட்டவனான சக்ரவர்த்தித்திருமகனுடைய,

பதின்மூன்றாம்பாட்டு (புள்ளின்வாயித்யாதி.) "போதரிக்கண்ணினாய்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (நம்கண்ணித்யாதி.) நம், கண்ணுண்டாகிலென்றது - கண்ணழகுண்டாகிலென்றபடி.

கீர்த்திமை	எதிரிகள் மனங்கலங்கும்படியானவீரசரிதத்தை
பிள்ளைகளெல்லாரும்	எல்லாப்பெண்களும்
பாடி	தங்கள்ப்ரீதிக்குப்போக்குவீடாகப்பாடி,
போய்	அவன் திருநாமமேவழிக்குதாரகமாகச்சென்று,
பாவைக்களம்	க்ருஷ்ணனும் தாங்களும் கூடுகைக்குக் குறித்த விடத்தில்
புக்கார்;	புகுந்தார்கள் என்றுசொல்ல;

"அவர்கள்போகைக்குப் போதுவிடிந்ததோ?" என்றுவினவ;

வெள்ளி எழுந்து	ஶுக்ரன் உச்சிப்பட்டு
வியாழம் உறங்கிற்று;	ப்ரஹஸ்பதியும் அஸ்தமித்தது;

அன்றியும்,

புள்ளும்சிலும்பினகாண்;	பக்ஷிகளுங்கூட இரைதேடுகைக்காகக்கூவிச்செல்லாநின்றன;
போது அரிகண்ணினாய்!	பூவையும் மானையும் ஒத்த கண்ணழகையுடையளாய்
பாவாய் நீ	ம்ருதுஸ்வபாவையானநீ,
நல்நாள்	க்ருஷ்ணனும் நாமும் ஜலக்ரீடைபண்ணி அவன் மடியில் சாயலாம்காலமான நல்லநாளில்,
கள்ளம்தவிர்ந்து	க்ருஷ்ணகுணசேஷ்டிதங்களைநினைத்துத்தனியே கிடக்கையாகிற கபடத்தைவிட்டு
கலந்து,	எங்களோடுசேர்ந்து,
குள்ளக்குளிர	வவ்வலிடும்படி
குடைந்துநீராடாதே,	அமிழ்ந்து ஸ்நானஞ்செய்யாமல்,
பள்ளி	க்ருஷ்ணஸ்பர்ஶமுடையதொரு படுக்கையில்
கிடத்தியோ?	கண்வளருகிறாயோ?

எழுந்திராய் என்று எழுப்புகிறார்கள்.

வ்யா.—(புள்ளின்வாய் கீண்டானை) "பள்ளத்தில் மேயும்" இத்யாதி - பகாஸுரனைப் பிளந்தபடி. (பொல்லா அரக்கனை) தாயையும் தமப்பனையும், உடலையும் உயிரையும் பிரித்தாப்போலே பிரித்தநிர்க்ருணன். "சுரிகுழல் கனிவாய்" இத்யாதி; "முன்பொலா விராவணன்"

"புள்ளின்வாய்கீண்டான்" என்றதுக்கு - அஸுரனுகையாலே கீண்டானென்னுமத்தை ப்ரமாணமுகேந தர்ஶிப்பித்துக்கொண்டு ஶப்தார்த்த மருளிச்செய்கிறார் (பள்ளத்திலித்யாதி) (இத்யாதி) என்றவநந்தரம் "என்கிறபடியே" என்றுஶேஷம். "రామస్య దయితా భార్యా నిత్యం ప్రాణసమాహితా" "రావణస్య దయితా భార్యా నిత్యం ప్రాణసమాహితా" என்றத்தைப்பற்ற (உடலையு முயிரையு மென்றது.) திருவினைப்பிரித்தமையைப்பொல்லாங்காக்கி-விஶேஷபரமாக்கிக்கீழொருதாத்பர்ய மருளிச்செய்து, ஸாமாந்யமாக ஸகலவிதமான பொல்லாங்கையும் விவக்ஷித்துத் தாத்பர்யாந்தரத்தை ப்ரமாணபூர்வக மருளிச்செய்கிறார் (முன்பொலாவித்யாதி வாக்யத்வயத்தாலே.)

என்னு மித்தனைபோக்கி அவன் தண்ணிமைக்கு ஒருபாசுரமில்லையிறே. அத்தாலேயிறே பிராட்டியும் "త్వన్నీచశశవత్ స్మృతః" "த்வம் நீசஶஶவத் ஸ்ம்ருத:" (கககூ) என்றது. "విభీషణస్తు ధర్మాత్మా" "விபீஷணஸ்து தர்மாத்மா" (கஉ0) என்று - நல்ல அரக்கனும் உண்டென்கை. (கிள்ளிக்களைந்தானை) திருவிளையாடுசூழலிலே நோய்புக்கவிடங்களைக் கிள்ளிப்பொகடுமாப்போலே, தோஷாம்ஸத்தை வாங்கிப் பொகட்டபடி. (கீர்த்திமை) "శత్రోః ప్రఖ్యాతవీర్యస్య" "ஶத்ரோ: ப்ரக்யாதவீர்யஸ்ய" (கஉக) என்று - எதிரிகளுக்கும் நெஞ்சுளுக்கும்படியான வீரசரிதத்தை. "రఞ్జనీయస్య విక్రమైః" "ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" (கஉக) என்று - உகவாதார்க்கும் விடவொண்ணாத வீரம் உகந்த பெண்களுக்குச் சொல்லவேணுமோ. ["లోకాంశ్చ లోకానుగతాన్ పశూంశ్చ హిత్వాశ్రితాస్త్వచ్చరణాతపత్రమ్ । పరస్పరం త్వద్గుణవాదశీధుపీయూషనిర్యాపితదేహయాత్రాః" "லோகாம்ஶ்ச லோகாநுகதாந் பஶூம்ஶ்ச ஹித்வாஶ்ரிதாஸ் த்வச்சரணாதபத்ரம். பரஸ்பரம் த்வத்குணவாதஸீதுபீயூஷநிர்யாபிததேஹயாத்ரா:"]‡ ராவணன் பெருமாள் வீரத்துக் கிலக்கானான்; தங்கை அழகிலே கண்கலங்கினாள், தம்பி ஸீலத்துக்கிலக்கானான். (பாடிப்போய்) இவர்களுக்கு பாதேய மிருக்கிறபடி. "పాథేయం పుణ్డరీకాక్ష నామసఙ్కీర్తనామృతమ్" "பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்" (ருஎ) என்று - வழிக்கு பாதேயம் திருநாமமிறே. "தன் தாள்பாடி" என்னக்கடவதிறே. (பிள்ளைகளித்யாதி) நாம் சென்று எழுப்பவேண்டும் பாலைகளும் உனக்குமுன்னே யுணர்ந்து புறப்பட்டார்கள். (பாவைக்களம்புக்கார்) க்ருஷ்ணனும் தாங்களும் கழகமிடும் ஸங்கேதஸ்தலம் புக்கார்கள்.

"அரக்கன்" என்றால் போராதோ, "பொல்லா" என்னவேணுமோவென்ன அருளிச்செய்கிறார் (విభీషణస్తు-விபீஷணஸ்து - இத்யாதி.) நெஞ்சுளுக்கும்படி-மநஸ்ஸை தில்யம் பிறக்கும்படி. ஸௌந்தர்யாதிகளைப் பாடவேண்டியிருக்க வீரசரிதத்தைப்பாடுகிற தென்னென்ன வருளிச்செய்கிறார் (రఞ్జనీయస్య-ரஞ்ஜநீயஸ்ய-இத்யாதி.) ப்ரதிகூலர் வீரத்துக்கு உட்கக்கூடுமோவென்ன; த்ருஷ்டாந்தம் காட்டிக்கொண்டு உபபாதிக்கிறார் (ராவணனித்யாதி.) "பாடி" என்றது, "போய்" என்றதுக்கு ஹேதுவாகத் தோன்றுகையாலே, அத்தை ப்ரமாணபூர்வக முபபாதிக்கிறார் (இவர்களுக்கித்யாதி வாக்யத்ரயத்தாலே.) "தானுகந்த ஊரெல்லாம் தன்தாள்பாடிப் பூங்கோவலூர்தொழுதும் போதுநெஞ்சே" என்று பாடுகை வழிக்குதாரகமென்றதிறே யென்றபடி. கழகம்-ஒலக்கம். ஸங்கேதஸ்தலமாவது-வர்ஷார்த்தமாக இந்த்ராணியையும் ஸம்ஶ்லேஷார்த்தமாக ரதியையும் நோற்கைக்குப் பெண்கள் திரளுமிடம்.

---

‡ இந்த ஸ்லோகம் சில ஸ்ரீகோஸங்களி லில்லை.

அவர்கள் போகைக்குப் போதுவிடிந்ததோவென்ன ; (வெள்ளி யெழுந்து வியாழமுறங்கிற்று) வெள்ளி உச்சிப்பட்டது, வியாழம் அஸ்தமித்தது. உங்களுக்கு நக்ஷத்ரமெல்லாம் வெள்ளியும் வியாழ முமாயிறே யிருப்பதென்ன ; அதுவேயன்று (புல்லும் சிலும்பின காண்) புட்களுணர்ந்தமாத்ரமேயன்றிக்கே இரைதேடிச் சிலும்பிப் போய்த்தின.

(போதரிக்கண்ணினாய்) புஷ்பம்போலேயும் மான்போலேயு மிருந் துள்ள கண். அரியென்று - மான். அன்றிக்கே, பூவிலே வண்டு இருந்தாப்போலே யென்றுமாம். "அரி" என்று - வண்டு ; அன்றியே, போதை ஹரிக்கிற கண்ணென்றுமாம். பூவோடே சீறுபாறென்னும் கண் என்னவுமாம். (குள்ளக்குளிர) ஆதித்யனுதித்து நீர்கொதிப்ப தற்குமுன்னே. (குடைந்துநீராடாதே) "ஸரயூமவகாஹதே" "ஸாயஞ் ச்வமாஹதே" (ருக) என்னும்படியே க்ருஷ்ண விரஹமாற நீராடப் போகாதே. நமக்குச்செல்லுகிற க்ருஷ்ணவிரஹ தாபம் ஶமிக்கைக்கும் இனி யொருக்கால் க்ருஷ்ணவிஶ்லேஷம் பிறவாமைக்காகவும், க்ருஷ்ண குணங்களிலே அவகாஹித்து அநுபவிக்கப்போராதே. (போதரிக்கண் ணினாய்) உன்கண்ணாலே க்ருஷ்ணனைத்தோற்பித்து, அவன் கண்ணாலே குமிழிநீருண்ணப்போராய். ✻ நெடுங்கணிளமான் இவள் ; ✻ அனைத் துலகு முடைய அரவிந்தலோசநன் அவன். இருவர்கண்ணுக்கும் இலக் கானவர்களிறே இவர்கள். உன்னுடைய ஸௌந்தர்யம் எங்கள் பேற் றுக்கு உடலென்றிருந்தோம், அங்ஙனன்றிக்கே இழவுக்கு உடலாகா நின்றதோ !. (பள்ளிக்கிடத்தியோ) க்ருஷ்ணஸ்பர்ஶமுடையதொரு படுக்கையை மோந்துகொடு கிடக்கிறாயோ. விளைந்து கிடக்க உதிர்நெல் பெறுக்குகிறாயோ.

(பாவாய்நீ) தனிக்கிடைகிடக்க வல்லளல்லையே நீ. (நன்னாளால்) க்ருஷ்ணன்கிடாய் பெண்கள்கிடாய் என்கிற நாட்டாரும் இசைந்து அவனும் நாமுமாய் ஜலக்ரீடைபண்ணி அவன் மடியிலே சாயலாம் காலத்தைப்பெற்றுவைத்து, படுக்கையை மோந்துகொடு கிடப்பதே !.

"அரி" என்று - ஶத்ருவாய், அத்தையருளிச்செய்கிறார் (பூவோடேயித் யாதி.) ஸ்வாபதேஶத்துக்குச்சேர அர்த்தமருளிச்செய்கிறார் (நமக்கித்யாதி.) இவளைக்கண்ணழகையிட்டுச்சொல்லுகிறது நீராடுகைக்கு உபயுக்தமென்னுமது தோற்றுகைக்காகவென்று ப்ரதீகக்ரஹணபூர்வகம் ஹாவமருளிச்செய்கிறார்(உன் கண்ணாலே யித்யாதி.) கண்வளர்ந்திருக்கும் பெண்ணை "பள்ளிக்கிடத்தியோ" என்றதுக்கு ஹாவமருளிச்செய்கிறார் (க்ருஷ்ணேத்யாதி)

பாவையாயிருக்குமவளை "பாவாய்" என்று மீளவும் ஸம்போதிக்கைக்கு தாத்பர்யமருளிச்செய்கிறார் (தனியித்யாதி.)

(நன்னாளால்) மேல்வருகிறநாள் ராவணாதிகளைப்போலே பிரிக்கிற நாளிறே. (கள்ளம்தவிர்ந்து) கள்ளமாவது - தனியே க்ருஷ்ணகுண சேஷ்டிதங்களை நினைத்துக்கிடக்கை. அத்தைத் தவிர்ந்து எங்களோடேகலந்து. எங்களுக்கு உன்னைக்காட்டாதே மறைக்கையாகிற (கஉஉ) * ஆத்மாபஹாரத்தைத் தவிர்ந்து எங்களோடே கலவென்றுமாம். ஶேஷத்வத்தை அபஹரித்தால் பொறுத்தோமென்பாரில்லை; குற்றம் நின்றே போமித்தனை.

கலந்து - குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத்தியோ என்றந்வயம். ... ... கங.

தன்னைமறைத்தால்வந்த விநோதமென்னென்ன வருளிச்செய்கிறார் (ஶேஷத்வத்தையித்யாதி.) ... ... கங.

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—பதின்மூன்றாம்பாட்டு. (புள்ளித்யாதி) இப்பாட்டில் - நமக்கு ஸ்வரூபஜ்ஞாநமுண்டாகில் அவன்தானே வருகிறானென்று நிர்ப்பரரா யிருக்குமவரை யெழுப்புகிறார்கள்.

வ்யா.—(புள்ளின்வாய்கீண்டானை) ஸ்வாஶ்ரிதருக்கு ஸ்வாநுபவவிரோதியான காமாதிதோஷ நிவர்த்தகனாய். (பொல்லாவரக்கனைக் கிள்ளிக்களைந்தானை) பொல்லாத அப்ராப்த விஷயகதமான அஹங்காரத்தை. அஹங்காரத்துக்கு நன்மை தீமைகளாவன; - "அஹம், மம" என்றால், ஈஶ்வரனும் ஈஶ்வரவிபூதியும் ஸ்வாபிமாந விஷயமாகத்தோன்றுகை - அஹங்காரத்துக்கு நன்மையாவது; தேஹமும் ஆத்மாவும் ஸ்வதந்த்ரமாகத் தோன்றுகை - தீமையாவது. அநுகூலமான அஹங்காரத்துக்கு அழல்தட்டாதபடி நிரஸித்தவனுடைய. (கீர்த்திமை பாடிப்போய்) கல்யாணகுணங்களை ப்ரீதிக்குப் போக்குவீடாகப்பாடி, அதுவே தாரகமாகப்போய். (பிள்ளைகளெல்லாரும்) நாம் சென்றெழுப்பவேண்டிய அபிநவபாகவதரும். (பாவைக்களம்புக்கார்) அநந்யார்ஹரான ஸ்ரீவைஷ்ணவர்கள் நிரூபகமான ஸங்கேத ஸ்தலத்தை ப்ரவேஶித்தார்கள். அதாவது - காலக்ஷேபகூடம். (வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று) பரிஶுத்தமான ஜ்ஞாநம் அபிவ்ருத்தமாய், அஜ்ஞாநம் தலைமடிந்தது. (புள்ளுஞ் சிலம்பினகாண்) மற்றுமுள்ள பாகவதரும் த்வரித்துக்கொண்டு போந்தார்கள். (போதரிக் கண்ணினாய்) ஸ்வச்சமாய் ஶ்லாக்யமாய் ஸாரக்ராஹியான ஜ்ஞாநத்தை

யுடையவரே. (குள்ளக்குளிர) அவனைப்பிரிந்திருந்த வ்யஸநமெல்லாம் நிஸ்ஸேஷமாய்ப்போம்படி. (குடைந்து) காலக்ஷேபகூடத்திலே ப்ரவேஸித்து. (நீராடாதே) பகவதநுபவத்தைப் பண்ணாதே. (பள்ளிக்கிடத்தியோ) தனித்து குணாநுபவம் பண்ணுகிறாயோ. (பாவாய்நீ) தனித்து குணாநுபவம் பண்ணவல்லையோ. (நன்னாளால்) ஸத்த்வோத்தரமான காலம் நேர்பட்டபடி யென்றான்!. (கள்ளம்தவிர்ந்து) உன்னை யெங்களுக்குக் காட்டாமலிருக்கிற களவைவிட்டு. (கலந்து) எங்களோடே ஒருநீராகக்கலந்து, எங்கள் ஸத்தையையுண்டாக்காய். ... ... கரு

அ.—பதினாலாம்பாட்டு. இவையெல்லாவற்றுக்கும் தானே கடவளாய், எல்லாரையுந் தானேயெழுப்பக்கடவதாகச் சொல்லிவைத்து, அதுசெய்யாதே உறங்குகிறாளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

மூ.—உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக்கூறை வெண்பற் றவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும்
நங்கா யெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். (கச)

பதம்.	உரை
நீராடுகைக்கு எல்லாரையும் தானே யெழுப்புவதாகச் சொல்லி வைத்து உறங்குகிறாளொருத்தியை நோக்கி,	
உங்கள்புழைக்கடைத்தோட்டத்துவாவியுள்	உங்களுடைய புழைக்கடைத் தோட்டத்தி லிருக்கின்ற தடாகத்திலுள்ள
செங்கழுநீர்	செங்கழுநீர்மலர்கள்
வாய்நெகிழ்ந்து	விகஸித்து
ஆம்பல்	கருநெய்தல்மலர்கள்
வாய்கூம்பினகாண்;	மொட்டித்தனகாண்;
அன்றியும்,	
செங்கல்பொடிக்கூறை	காஷாயந்தோய்த்த வஸ்த்ரம்தரித்தவர்களும்
வெண்பல்	தாம்பூலாதிகள்தரியாமல் போக்ய த்ரவ்யங்களில் விரக்தரும்

பதினாலாம்பாட்டு (உங்களித்யாதி.) "நங்காய்" என்றத்தையும், "எங்களை முன்னமெழுப்புவான்வாய்பேசும்" என்றத்தையும் கடாக்ஷித்தவதாரிகை யிடுகிறார் (இவையெல்லாவற்றுக்குரித்யாதி.)

தவத்தவர்	ஸாத்விகருமான ஸந்ந்யாஸிகள்
தங்கள் திருக்கோயில்	தங்கள் க்ருஹங்களில்
சங்கிடுவான்	திருவாராதநம்பண்ணுகைக்காக
போகின்றார்;	ஸந்த்யாவந்தநம்பண்ணி வாராநின்றார்கள்;
எங்களை	* கோழியழைப்பதன்முன்னம் குடைந்து நீராடவிருக்கிற வெங்களை
முன்னம் எழுப்புவான்	முன்னமே எழுப்புவதாக
வாய்பேசும்	வாயாற்சொல்லிச் செய்யாதொழிந்த
நங்காய்!	பூர்ணையானவளே!
நாணாதாய்!	"சொன்னபடி செய்யாதொழிந்தோமே" என்னும் லஜ்ஜையில்லாதவளே!
நாவுடையாய்!	பேச்சிலினிமையுடையவளே!
சக்கரம்	வலத்திருக்கையில் திருவாழியாழ்வானையும்
சங்கொடு	இடத்திருக்கையில் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்
ஏந்தும்	பூவேந்திளுப்போலே தரிக்குமவனாய்,
தடம் கையன்	நீண்ட திருக்கைகளையுடையனாய்,
பங்கயம்	தாமரைமலர்போன்ற
கண்ணானை	திருக்கண்களையுடையனானவனை
பாட	ப்ரீதிக்குப்போக்குவிட்டுப்பாடுகைக்கு
எழுந்திராய்.	எழுந்திருக்கவேண்டும் என்று எழுப்புகிறார்கள்.

வ்யா.—(உங்கள்புழைக்கடை) செங்கழுநீரலர்ந்து ஆம்பல் மொட்டிக்கும்படி போதுவிடிந்தது, உறங்குவதே இன்னம் என்ன; நீங்கள்வயலிலே போனிகளோவென்ன; புழைக்கடைத்தோட்டத்து வாவியுள் செங்கழுநீரலர்ந்து ஆம்பல் மொட்டித்தனவென்ன; அது பின்னை நீங்கள் வலிய அலர்த்தினிகோளென்ன; (உங்கள் புழைக்கடைத்தோட்டத்து வாவியுள்) எங்களுக்குப் புகுரவொண்ணாதே, * அஸூர்யம்பஶ்யமான உங்கள் புழைக்கடைத்தோட்டத்துவாவியுள் செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்மொட்டித்தன. வெய்யில் பட்டன்றிக்கே காலபாகத்தாலேயென்கை. இவளெழுந்திராத

"புழைக்கடை" என்றுவிஶேஷித்ததுக்கு உத்திப்ரத்யுக்திமுகேந ஹாவமருளிச்செய்கிறார் (செங்கழுநீரித்யாதி.) "உங்கள்" என்ற பதப்ரயோகத்துக்கு உத்திப்ரத்யுக்திமுகேந ப்ரயோஜநமருளிச்செய்கிறார் (அதுபின்னையித்யாதி;) இவர்களுக்குப் புகுரவொண்ணாதபுழைக்கடையில் அலருகையையும் மொட்டிக்கையையும் பறம்புள்ளவர்றைக்கண்டு அநுமித்துச்சொல்லுகிறார்களென்று கருத்து. "தோட்டம்" என்று விஶேஷித்ததுக்கு பலிதார்த்தமருளிச்செய்கிறார் (வெய்யிலித்யாதி.) இத்தால் - கிரணஸ்பர்ஶத்தாலொழிய அலருகையும் மொட்டிக்கையும் கூடாதென்று அவள்பண்ணுகிற அந்யதாஸித்தியைப் பரிஹரித்தார்களென்று சொல்லிற்றாய்த்து.

இன்னாப்பாலே, "உங்கள்புழைக்கடை" என்று வேறிட்டுச் சொல்லுகிறார்கள்.

அலரப்புகுகிற வளவிலே கழியவலர்ந்ததென்று சொல்லுகிறீகோள், வேறடையாளமுண்டோ வென்ன; (செங்கற் பொடிக்கூறை) அளற்றுப்பொடியிலே புடைவையைப் புரட்டி ப்ரஹ்மசர்யந்தோற்றப் பல்லைவிளக்கி தண்டபரிஹாரார்த்தமாக தபோவேஷத்தையுடையரான ஶிவத்விஜருங்கூட தங்கள் தேவதைகளை ஆராதிக்கும் காலமாய்த்து. "திருக்கோயில்" என்றது அவர்கள் சொல்லும் பாசுரத்தாலே. "சங்கு" என்று - ஆராதநோபகரணத்துக்கு உபலக்ஷணம். குச்சியிட வென்றுமாம். இத்தால் - அஶுத்தருங் கூட வெழுந்திருக்குங் காலமாய்த்தென்கை. ஸந்யாஸிகள் ஸந்த்யாவந்தநம்பண்ணித் தங்களுடைய அகங்களிலே திருவாராதநம் பண்ணுங்காலமாய்த்தென்றுமாம்.

தமஃப்ரசுரரநுஷ்டாநம் ப்ரமாணமோவென்ன; (கஉ௯) * ధర్మజ్ఞ సమయః ప్రమాణం వేదాశ్చ - தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாஶ்ச அன்றோ வென்ன; தர்மஜ்ஞையான உன்னுடைய ஸமயமும் ப்ரமாணமன்றிறே யென்கிறார்கள் (எங்களை முன்னமெழுப்புவான் வாய்பேசும்) எல்லாரையும் நானே யெழுப்புகிறேனென்று சொன்னது உன்பக்கல் கண்டிலோமீ! என்கிறார்கள்.

இவளுடைய தோட்டமென்று தோற்றவேண்டில் "இந்தப்புழைக்கடை" என்னலாயிருக்க, "உங்கள்" என்று-மமகாரமுண்டானவர்களைப்போலே சொல்லக்கூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (இவளித்யாதி.)

தண்டபரிஹாரார்த்தமாகவென்றது-ராஜாக்கள் தண்டம்கொள்வர், அது வாராமைக்கென்றபடி. "சங்கிடுவான்" என்றதுக்கு - சங்காலே நீர்விடுகை அர்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (சங்கென்றித்யாதி;) இது எம்பார் நிர்வஹிக்கும்படி. "செங்கல்பொடிக்கூறை" என்றதால் - காஷாயவஸ்த்ரதாரிகளென்றும், "வெண்பல்" என்று - தாம்பூலாதிகளில்லாமையாலே போக்யத்ரவ்யங்களில் விரக்தரென்றும், "தவத்தவர்" என்று - ஸாத்விகரென்றும் ஶப்தார்த்தம்விவக்ஷித்து திருமலைநம்பி யருளிச்செய்த யோஜநாந்தரமருளிச்செய்கிறார் (ஸந்யாஸிகளித்யாதி.)

"நங்காய்" என்றதே அமைந்திருக்க, "எங்களைமுன்னமெழுப்புவான் வாய்பேசும்" என்று விஶேஷித்ததுக்கு - அவள்ஶங்கிக்குமிடத்தில் ஸோபாலம்போத்தரமாக தாத்பர்யமருளிச்செய்கிறார் (தமஃப்ரசுரரித்யாதி;) தமஃப்ரசுரர்க்கு அநுஷ்டாநத்தில் ஐதம்பர்ய மில்லாமையாலே அவர்களெழுந்திருக்குமது விடிந்தமைக்கடையாளமாக மெய்க்கொள்ளப்போகாதென்று ஶங்கைக்குக் கருத்து. திருமலைநம்பிநிர்வாஹத்தில், விடிவுக்கடையாளமாக ஸந்யாஸிகளெழுந்திருந்தார்களென்னச்செய்தேயும் நிருத்தரையாய்க்கிடக்கையாலே வெறுக்கிறாளென்று "எங்களைமுன்னம்" இத்யாதிக்கு ஸங்கதிகண்டுகொள்வது.

(வாய்பேசும்)உக்திமாத்ரமேயாய் அநுஷ்டாநமின்றிக்கேயிருக்கை. க்ருஷ்ணனோடே பழகின வுனக்குப் பொய் சொல்லுகை வம்போ. (நங்காய்) பூர்ணையிறே. எனக்கு உங்களை யொழியச் செல்லாதென்று சொல்லும்படியும், உன் நைரபேக்ஷ்யமுமெல்லாங் கண்டோமிறே. சொலவும் செயலும் சேராதார்க்கு ஒரு பூர்த்தியும் வேணுமோ. (எழுந்திராய்) எங்கள் குறைதீர்க்க வெழுந்திராய்.

(நாணாதாய்) சொல்லிவைத்துச் சொன்னபடி செய்யப்பெற்றிலோ மென்னும் லஜ்ஜையுமின்றிக்கே யிருந்ததி!. நீயிருந்தவிரில் பூசினியுங் காயாதோ வென்கை. (நாவுடையாய்) என்னை க்ஷேபித்துக்கொண்டாகிலும் வருகிறதென்னென்ன ; “నాఋగ్వేదవినీతస్య నాయజుర్వేదధారిణః” “நாருக்வேதவிநீதஸ்ய நாயஜுர்வேததாரிண:” (கஉச) என்றும் “నూనంవ్యాకరణంకృత్స్నమ్” “நூநம்வ்யாகரணம்க்ருத்ஸ்நம்” (கஉரு) என்றும் “సంశ్రవేమధురంవాక్యమ్” “ஸம்ச்ரவேமதுரம்வாக்யம்” (௬௬) என்றும் உன்பேச்சிலினிமை கேட்க. இவளெல்லாம் படுத்தினாலும் விடவொண்ணாத நாவீறுடைமை.

உங்களுக்குச் செய்ய வேண்டுவ தென்னென்ன (சங்கித்யாதி) திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுமேந்தி அந்தஸ்பர்ஶத்தாலே வளர்ந்த திருக்கைகளை யுடையனாய், ஆழ்வார்களிலே வந்து அலையெறிகிற கண்களையுடையவனை. “இளவாய்ச்சியர் கண்ணினுள் விடவே செய்துவிழிக்கும்பிரான்” என்று இவர்களைத்தோற்பித்துக்கொள்ளும்

வம்போவென்றது - புதுமையோவென்றபடி. ஶப்தார்த்தகதநமுகேந உபாலம்பம்தோற்ற வருளிச்செய்கிறார் (பூர்ணையிறேயென்று.) இது உபாலம்பமானபடியை யுபபாதிக்கிறார் (எனக்கித்யாதிவாக்யத்வயத்தாலே.) உன் நைரபேக்ஷ்யமுமென்றது-உனக்கு எங்களையொழியச் செல்லும்படி யிருக்கையுமென்றபடி. (கண்டோமிறே) என்றவநந்தரம், “ஆகையாலே” என்று ஶேஷம். பூர்த்தியும் வேணுமோவென்றது-பூர்த்தியுண்டென்றிருக்கவேணுமோவென்றபடி. “எழுந்திராய்” என்று - ப்ரார்த்தனைதோன்றியிருக்கையாலே இதுக்குச்சேரக்கூட்டி அர்த்தமருளிச்செய்கிறார் (எங்களித்யாதி;) வெறுத்ததெல்லாம் ந்யாயநிஷ்டுரோக்தியாகையாலே யிப்படி ப்ரார்த்திக்கத்தட்டில்லை.

நாணில்லாதவளேயென்றுஶப்தார்த்தமாய் அத்தை ஹேதுபூர்வகமருளிச்செய்கிறார் (சொல்லியித்யாதி.) நாணையும், பூசினியுடைய் சரசரப்பையும் சுணையென்று - வ்யவஹரிக்கையாலே, இவள் சுணையற்றவளாகையாலே இவளிருந்தவூரிலும் சுணையற்றமையை விதவத்கரித்து, அதில்லாவிட்டால் காய் காயாதென்கிற ப்ரஸித்தியைப்பற்ற ஹார்த்தஹாவத்தை யருளிச்செய்கிறார் (நீயிருந்தவித்யாதி.) இத்தால் - இவளுக்கு லஜ்ஜாஶூந்யதையை நிரூபகமாகச் சொல்லுகையால் இப்படிசொல்லலாமென்று திருவுள்ளம் ... ... (கச)

கண்ணிறே. "ஆழியொடும் பொன்னூர் சார்ங்கமுடைய வடிகளை யின்னூரென்றறியேன்" என்று – அநுபவிப்பாரைப் பிச்சேற்றக்கடவ திருவாழியையும், திருமேனிக்குப் பரபாகமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், முற்படத் தன்னை யெழுதிக்கொடுத்துப் பின்னை யெழுதிக்கொள்ளுகிற திருக்கண்களையு முடையவனை. (பாட) உன்ப்ரீதிக்குப் போக்கு விட்டு எங்களையும் உஜ்ஜீவிப்பிக்க. க்ருஷ்ணன்கையில் இப்போது ஆழ்வார்களுண்டோ வென்னில்; எப்போதுமுண்டு; அது பெண்களுக்குத் தோற்றும்; அல்லாதார்க்குத்தோற்றாது. "உபஸம்ஹர" "உபஸம்ஹர" (சூரு) என்றதும் உகவாதார்க்குக் கூசியிறே. இவர்களுக்குத் தோற்றத் தட்டில்லையே. ... ...(கச)

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—பதினாலாம்பட்டு. (உங்களித்யாதி) இப்பாட்டில் - பாகவத ஸமுதாயத்துக்கெல்லாம் தாமே கடவராய் இவர்களுக்கெல்லாம் பகவத்ஸம்பந்த கடகர் தாமேயாம்படி ஜ்ஞாந பக்தி வைராக்யங்களாலே பூர்ணரான பாகவதரை யெழுப்புகிறூர்கள்.

வ்யா.—(உங்கள் புழக்கடை யித்யாதி) ஆகாரத்ரய விஶிஷ்டரான வுங்களுடையவிஹாரஸ்தாநமான திருமந்த்ரத்தினுடைய மத்யே வர்த்திக்கிற நமஸ்ஸிலே பாரதந்த்ர்யம் ப்ரகாஶமாய் ஸ்வாதந்த்ர்யம் தலைமடிந்ததுகாண்.

(செங்கல் பொடிக்கூறை வெண்பல்தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றூர்) ராகப்ரயுக்தமான ஶேஷத்வஜ்ஞாநமுடைய மந்தஸ்மிதமுடையரான ப்ரபந்நாதிகாரிகள் தங்கள் தங்களெம்பெருமான் ஸந்நிதியிலே திருவாராதநம் பண்ணுகைக்குப் போந்தார்கள்

(எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும் நங்கா யெழுந்திராய்) எங்களையெல்லாம் நாங்கள் அபேக்ஷிப்பதற்கு முன்னே ஜ்ஞாநிகளாக்கும்படி ஸ்ரீஸூக்திகளை யருளிச்செய்யும் பூர்த்தியை யுடையவரே! எழுந்திராய். (நாணாதாய்) சொல்லும் செயலு மொத்திராதார்க்கு நாணமுமின்றிக்கே யொழிவதே! இப்படி யென்னை க்ஷேபித்துக் கொண்டாகிலும் என் பக்கல் ஸாபேக்ஷராய் வருவதேதென்ன; (நாஉடையாய்) வாங்மாதுர்யமுடையவரே. நீர் அஹ்ருதயமாகச் சொல்லிலும் பேச்சினினிமையைப் பார்த்தால் ஸ்வதஸ்

ஸர்வஜ்ஞனை விஸ்வரனுக்கு மிது ஸஹ்ருதயம் அவஶ்யம் கர்த்தவ்யம் என்னும்படியா யிருக்கை.

ஜ்ஞாநமுண்டானால் செய்வதென்னென்ன; (சங்கொடித்யாதி) "ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" "ஹாவுஹாவுஹாவு" என்கிறபடியே திருவாய்மொழி பாடுகையே ப்ரயோஜநம், எழுந்திரா யென்கிறார்கள். (கச)

அ.—பதினஞ்சாம்பாட்டு. எல்லாருடைய திரட்சியுங் காணவேண்டி யிருப்பா ளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

மூ.—எல்லே யிளங்கிளியே யின்ன முறங்குதியோ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதருகின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடைமை
எல்லாரும் போந்தாரோ போந்தார்போந் தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (கரு)

பதம்.	உரை.
	எல்லார் திரட்சியுங்காணவேண்டியிருப்பா ளொருத்தியைப்பார்த்து,
இளம் கிளியே!	இளமைதங்கிய கிளிபோன்ற சொற்களையுடையவளே!
எல்லே!	உன்பேச்சினினிமையிருந்தபடி யென்னே!
இன்னம்	நாங்கள்வந்து நின்றபின்பும்
உறங்குதியோ?	தூங்கக்கடவையோ? என்று எழுப்ப:
நங்கைமீர்!	பூர்ணைகளானவர்களே!
சில் என்று அழையேல்மின்,	சிலுகு சிலுகு என்று அழையாதேகொள்ளுங்கள்,
போதருகின்றேன்;	புறப்பட்டுவருகிறேன் என்ன;
உன்கட்டுரைகள்	உன்சொற்களைப்பார்த்தால்
வல்லை	நீஸமர்த்தையாகையால்
உன்வாய்	உன்வார்த்தையை
பண்டே அறிதும்;	முன்னமே அறிவோம் என்றுசொல்ல;
நீங்களே வல்லீர்கள்,	நீங்களே பேசுந்திறமுடையவர்கள்,
நானேதான் ஆயிடுக;	நான்றானே ஆகக்கடவேன் என்றுசொல்லி,
	"உங்களுக்குச்செய்யவேண்டுவதென்?" என்றுவினவ;
நீ ஒல்லைபோதாய்,	நீ சடக்கெனப்புறப்பட்டு எங்கள்திரளில் புகுரவேணும் என்ன;
	"ஆகில் புறப்படாநின்றேன்" என்றுசொல்ல.

பதினஞ்சாம்பாட்டு (எல்லே யித்யாதி.) "எல்லாரும்போந்தாரோ" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகையருளிச்செய்கிறார் (எல்லாருடையவித்யாதி.)

உனக்கு வேறு என்ன உடைமை?	உனக்கு வேறு என்னப்ரயோஜநத்தையுடைத்தாயிருக்கிறாய்? என்று தன்னாற்றாமைதோற்றக்கேட்க;
எல்லாரும் போந்தாரோ?	உணரவறியாத சிறுபெண்களெல்லாரும் உணர்ந்து வந்தார்களோ? என்று மறுமாற்றஞ்சொல்ல;
போந்தார்;	உன்னைக்காண உன்வாசலில்வந்து கிடந்தார்கள் என்ன;
	"ஆகில், உள்ளேபுகுரவிடுங்கள்" என்றுசொல்ல;
போந்து எண்ணிக்கொள்;	புறப்பட்டுவந்து எண்ணிக்கொள்ளாய் எனவே;
	நாமெல்லாருங்கூடிச்செய்யப்பார்ப்பதென்னென்ன;
வல் ஆனைகொன்றானை,	பலிஷ்டமான குவலயாபீடத்தைக் கொன்றவ [னாய்,
மாற்றாரை	ஶத்ருக்களானகம்ஸாதிகளுடைய
மாற்று	"நம்மைவெல்லவல்லாரில்லை" என்கிறமதிப்பை
அழிக்க வல்லானை,	அழிக்கைக்கு ஸமர்த்தனாய்,
மாயனை	பெண்கள்மாயையி லகப்பட்ட ஆஶ்சர்யபூதனா [னவனை
பாட.	பாடுகைக்காக என்கிறார்கள்.

வ்யா.—(எல்லே இளங்கிளியே) "சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையன் பங்கயக்கண்ணானைப்பாட" என்று அசலகத்துப் பெண்பிள்ளையை யெழுப்புகிற பாசுரத்தைக் கேட்டு, இவள் அந்தப் பாசுரத்தைத் தன்மிடற்றிலே யிட்டுப் பாட, எழுப்புகிறவர்கள், அந்தத்வநிவழியே கேட்டுச் சென்று, இவள்பேச்சி லினிமையாலே (எல்லே! இளங்கிளியே!) என்கிறார்கள். (இளங்கிளியே) கிளியை வ்யாவர்த்திக்கிறது. கிளி இவள்பேச்சுக் கொப்பாமித்தனை,பருவத்துக்கொப்பன்றென்கை. (எல்லே!) என்னே!. "எல்லே" என்கிறது-பேச்சி லினிமையாலே ஆஶ்சர்யப் படுகிறார்கள்.(இன்னம் உறங்குதியோ)இவர்களழைக்கிறது தன் அநுஸந்தாநத்துக்கு விக்நமாகையாலே பேசாதே கிடக்க (இன்னமுறங்குதியோ) என்கிறார்கள். க்ருஷ்ண விரஹத்தாலே தளர்ந்து உறக்கமின்றிக்கே உன் கடாக்ஷமே பற்றாசாக நாங்கள் நின்றபின்பும் உறங்குமத்தனையோ. க்ருஷ்ணாநுபவத்துக்கு ஏகாந்தமான காலம் ஸித்தித்திருக்க உறங்கக் கடவையோ என்றுமாம்.

உறங்குகிறவளை பேச்சிலினிமைகேளாதபோது "கிளியே" என்று ஸம்போதிக்கைக்கு ப்ரஸக்தியேதென்ன வருளிச்செய்கிறார் (சங்கொடித்யாதி.) பேச்சிலினிமையையிட்டு "கிளியே" என்று ஸம்போதிக்குமிடத்து "இளம்" என்றதுக்கு ப்ரயோஜநமில்லாமையாலே, இளமையுடையளாயும் கிளிபோன்றவளாயுமிருக்குமவளேயென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார் (கிளியையித்யாதி.)

பேச்சைக்கேட்டு "கிளி" என்று ஸம்போதித்தவர்கள், "இன்னமுறங்குதியோ" என்னக்கூடுமோவென்ன; அதுக்குச்சேர தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி.) "இன்னம்" என்றதுக்கு இரண்டுவிதமாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ருஷ்ணேத்யாதி வாக்யத்வயத்தாலே.)

உத்தேஶ்யம் கைபுகுந்தாலும் உறங்குவாருண்டோ வென்ன (சில்லென்றழையேன்மின்) தன்னநுஸந்தாநத்துக்கு இவர்களழைக்கிறது விக்நமாகையாலே, சிலுகிடாதே கொள்ளுங்கோளென்கிறார்கள். இவர்கள் வார்த்தை அஸஹ்யமோ வென்னில்; திருவாய்மொழி பாடாநின்றால் செல்வரெழுந்தருளுகையும் அஸஹ்யமாமாப்போலே. (நங்கைமீர் போதருகின்றேன்) நாங்களும் எங்கள்சொல்லும் பொறுதபடி உன் பூர்த்தி யிருந்தபடி யென்னென்ன; சிவிட்கென்னக்கூசி (நங்கைமீர் போதருகின்றேன்) நீங்கள் வாய்திறவாதிருக்கவல்லிகோளாகில் நான் புறப்படுகிறேனென்ன;

(வல்லை உன்கட்டுரைகள் பண்டே உன்வாயறிதும்) "நங்கைமீர்" என்று - உறவற்ற சொல்லாலே வெட்டிமை யெல்லாஞ் சொல்லவல்லை யென்னுமிடம் நாங்களின்றாக வறிகிறோமோ; சொல்லிற்றைச் சொல்லி யெங்கள் தலையிலே குற்றமாம்படி வார்த்தை சொல்லவல்லை யென்னுமிடம் பண்டே யறியோமோ வென்றுமாம். (வல்லீர்கள் நீங்களே)

இவர்களெல்லாரும் தம்வாசலிலே வந்திருக்கையும் க்ருஷ்ணநுபவத்துக் கேகாந்தம்விதிக்கையும்இவளுக்குத்தேஶ்யமென்று திருவுள்ளம்பற்றி,யோஜநாத்வயத்துக்கும் சேர உக்தார்த்தாநுவாதரூபேண மேலுக்கு ஸங்கதியைக் காட்டுகிறார் (உத்தேஶ்யமித்யாதி.) "இன்னமுறங்குதியோ" என்றத்துக்கு - "நங்கைமீர்போதருகின்றேன்" என்று இவ்வளவைச் சொல்லவேண்டியிருக்க, மத்யே அநாதரம் தோற்ற "சில்லென்றழையேல்மின்" என்னக் கூடுமோ வென்ன அருளிச்செய்கிறார் (தன்னநுஸந்தாநத்துக்கித்யாதி.) திருவாய்மொழி பாடுகை - திருப்புன்னைக்கீழே. கீழே "சில்லென்றழையேல்மின்" என்று சொல்லிவைத்து, "நங்கைமீர்" என்று பூர்த்தியையிட்டு இவள் ஸம்போதிக்கைக்கு ப்ரஸக்தி யருளிச்செய்கிறார் (நாங்களுமித்யாதி.) "போதருகின்றேன்" என்றனந்தரம் "என்கிறாள்" என்று ஶேஷம். நீங்கள் பூர்ணைகளன்றோ? வாய்திறவாதிருந்தால் நானுமெழுந்திருந்துவருகிறேனென்று அநுநயநவசநரூபமாகக் கீழுக்குத் தாத்பர்யத்தைச் சொல்லாநின்றுகொண்டு மேலுக்கவதாரிகையிடுகிறார் (நீங்களித்யாதி.)

உன்னுடைய கட்டுரைகளை - சொற்களைப் பார்த்தால், நீ, வல்லை - ஸமர்த்தையாகையாலே, உன்வாய்:- உன்னுடைய வார்த்தையை, பண்டேயறிதுமென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி "சில்லென்றழையேல்மின்" இத்யாதியை யுட்கொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (சொல்லிற்றையித்யாதி.) (எங்கள் தலையிலே குற்றமாம்படி) என்றதுக்கு - நாங்கள் சிவிட்கென்றதாய் நீகூசி யநுநயம்பண்ணி நல்லவார்த்தைசொல்ல ஸமர்த்தையென்று கருத்து.

ஸகிகளைக்குறித்து "நங்கைமீர்" என்று பூர்ணதையையிட்டுச் சொல்லுகை உறவற்றசொல்லாகத் திருவுள்ளம்பற்றி "நங்கைமீர்" இத்யாதி, "வாயறிதும்" என்றவளவுக்கும் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (நங்கைமீரித்யாதி.) வெட்டிமை - நிஷ்ட்டூரம்.

"இன்னம்உறங்குதியோ" என்றும்,"வல்லையுன் கட்டுரைகள்" என்றும் வெட்டிமை உங்களதன்றோ வென்ன ; உன் வாசலிலே வந்தெழுப்ப, "சில்லென் றழையேன்மின்" என்றது உன்னதன்றோ வெட்டிமை யென்ன ; அது என்குற்றமன்று, அதுவும் உங்கள் குற்றமே:— நம்மு டைய வார்த்தை கேட்க வுகக்குமிவள், நம்வார்த்தை அஸஹ்யமாம் படியிறே க்ருஷ்ணகுணங்களிலே அவகாஹித்தது என்று உகக்கவே ண்டி யிருக்க, அதிலே தோஷத்தை யேறிட்ட வுங்களதன்றோ குற்றம். அதுகிடக்க, "பரஸ்பரநீசபாவை:" "வஹஸ்ரநீஹாமெவ:" (கஉசு) என்றன்றோ ஸ்வரூபமிருப்பது, ஆகையாலே (நானேதான் ஆயிடுக) இல்லாத குற்றத்தையுஞ் சிலர் "உண்டு" என்றால் இல்லைசெய்யாதே யிசைகையிறே வைஷ்ணவ லக்ஷணம். "மத்பாபமேவாத்ரநிமித்தமாஸீத்" உதாவஹேவாதநிஷிதஸாவஸ்" (கஉஎ) என்று - பிறர் குற்றத்தையும் தன்னுடைய பாபபல மென்றானிறே ஸ்ரீபரதாழ்வான்.

உங்களுக்குச் செய்யவேண்டுவ தென்னென்ன;(ஒல்லைநீபோதாய்) தங்களுக்கு ஒருக்ஷணமும் இவளை யொழியச் செல்லாமையாலே எங் கள் திரளிலே சடக்கெனப் புகுந்துகொடுநில்லாய். "சாதுகோட்டியுட் கொள்ளப்படுவாரே" என்று - அவளுக்கும் இத்திரளேயிறே ப்ராப் யம். (உனக்கென்ன வேறுடைமை) பஞ்சலக்ஷங் குடியில் பெண்களுக் குள்ளதொழிய தனியே ஸ்வயம்பாகம் பண்ணுவாரைப்போலே உன க்கு வேறே சிலவுண்டோ. வைஷ்ணவ விஷயத்தை பஹிஷ்கரித்துப் பற்றும் பகவத் விஷயத்தோடு தேவதாந்தரத்தோடு வாசியில்லை ; "நீ யொருவர்க்கும் விரோதியல்லை, நீ புக்குத் திருவடித்தொழு"

ஏவகாரம்தவிர "வல்லீர்கள்நீங்கள்" என்றதுக்கு ஹாவமருளிச்செய்கிறார் (இன்னமித்யாதி.) ஏவகாரத்துக்கு - நான் வல்லையென் என்று அர்த்தவித்த மாகையாலே, இதுக்கு ப்ரஸக்தியை யருளிச்செய்யாநின்றுகொண்டு தாத்பர்ய மருளிச்செய்கிறார் (உன்வாசலித்யாதி வாக்யத்ரயத்தாலே.) "உங்கள்குற்றம்" என்றத்தை யுபபாதிக்கிறார் (நம்முடையவித்யாதி.) மேலுக்கவதாரிகை யருளிச் செய்கிறார் (அதுகிடக்கவித்யாதி.) ஸ்வரூபத்தையுணர்ந்தால் இல்லாத குற்றத் தையும் அங்கீகரிக்கவேண்டுவா னென்னென்ன ; அருளிச்செய்கிறார் (இல்லாத வித்யாதி.) "நானேதானாயிடுக" என்று பிறர்பக்கல் குற்றத்தை யில்லைசெய்து, தன்மேலே யாக்கிக்கொண்டபேருண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (மத்பாப மித்யாதி.)

"ஒல்லை" என்றதினர்த்தம் (சடக்கெனவென்றது.) இவர்களைப்போலே யவளுக்கும் செல்லாமை யுண்டானாலிறே சடக்கென வரக்கூடுமென்ன ; அரு ளிச்செய்கிறார் (சாதுவித்யாதி.) இவளுக்குத் தனியே க்ருஷ்ணாநுபவ மில்லை யோவென்ன ; அருளிச்செய்கிறார் (வைஷ்ணவேத்யாதி.) ஆழ்வான்வார்த்தை.

என்ற ஆழ்வான்வார்த்தையை நினைப்பது. (எல்லாரும்போந்தாரோ) எனக்கு உங்களையொழிய ஸுகமுண்டோ, உணரவறியாத சிறு பெண்களு முணர்ந்தால் புறப்படவிருந்தேன். எல்லாரும் போந்தாரோ வென்ன ; (போந்தார்) க்ருஷ்ண விரஹத்தாலே துவண்ட பெண்களுடைய வுன்னைக் காண்கைக்கு உன்வாசலிலே வந்து கிடந்தார்களென்ன ; ஆகில் உள்ளே புகுரவிடுங்கோ ளென்ன ; (போந் தெண்ணிக்கொள்) புறப்பட்டு மெய்க்காட்டுக்கொள். மெய்க்காட்டுக் கொள்ளுகைக்கு ப்ரயோஜநம் தனித்தனியே பார்க்கையும், அநுபவிக்கையும்.

நாமெல்லாருங் கூடினுல் செய்வதென்னென்ன (வல் ஆனைகொன்றானை) குவலயாபீடத்தைக் கொன்று நம் ஜீவநமான தன்னைநோக்கித் தந்தவனை. (மாற்றாரை மாற்றழிக்க வல்லானை) எதிரிட்ட கம்ஸாதிகளை அநாயாஸேந நஸிப்பித்து, "ஸஸம்யுத்தமித்யாஹு:" "நவஸேயஹஸீதாஹ:" (கஉஅ) என்று அஞ்சின பெண்களை வாழ்வித்தவனை. (மாயனை) தன்கையில் அவர்கள் படுமத்தை தான் பெண்கள் கையிலே படுமவனை. (வல்ஆனை கொன்றானை) அங்கே குவலயாபீடத்தைக்கொன்றாப்போலே நம்முடைய ஸ்த்ரீத்வாபிமாநத்தைப் போக்கினவனை. (மாற்றாரை மாற்றழிக்க வல்லானை) சாணூர முஷ்டிகாதிகளை நிரஸித்தாப்போலே,

---

யாவது - எம்பெருமானார் ஸம்பந்திகளை "கோயிலுக்குள்ளே புகுரவொண்ணாது" என்ன" "எம்பெருமானார் ஸம்பந்தமே போரும்" என்று திரும்பிச்சொன்ன வார்த்தை. "உனக்கென்ன வேறுடைமை" என்றத்தால் - தன்னிடத்தில் ஸ்வாதந்த்ர்யத்தை யேறிடுகையாலே அஞ்சினமைதோன்ற ஹாவமருளிச்செய்கிறார் (எனக்கு உங்களையித்யாதி.) மெய்க்காட்டிக்கொள் - எண்ணிக்கைபிடித்துக் கொள் என்றபடி. அநுபவிக்கையுமென்றது – ஸம்ஶ்லேஷித் தநுபவிக்கையு மென்றபடி.

வலியதாய் - பலிஷ்டமாயிருக்கிற ஆனையென்றாய், அத்தைக் கொல்லுகை குணமாம்படி தாத்பர்ய மருளிச்செய்கிறார் (குவலயேத்யாதி.) "மாற்று" என்று - பொன்னினுடைய வர்ணோத்கர்ஷமாய், இங்கே பலாதிஶயத்தைச் சொல்லுகையாலே, மாற்றாரை பலம்போக்கும் மிடுக்கனையென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி பலிதார்த்தத்தை யருளிச்செய்கிறார் (எதிரிட்ட வித்யாதி.) கீழைக்கடாக்ஷித்து ஹாவமருளிச்செய்கிறார் (தன்கையிலித்யாதி.) அதாவது - தன்கையில் எதிரிகள்படுவத்தையெல்லாம் பெண்கள்கையிலேதான்பட்டு, பெண்களுக்குத்தான் தோற்ற தோல்வியாலே அவர்களை வென்றிருக்குமவனென்கை.

"வல்லானை" இத்யாதிக்கெல்லாம் தாத்பர்யாந்தரங்களையருளிச்செய்கிறார் (அங்கேயித்யாதி.) "வல்லானை" இத்யாதிக்கெல்லாம் சொன்ன விரண்டு

நம்மைத் தன்னோடு சேரவொட்டாதஇடையருடைய ஸங்கல்பத்தைப் போக்கினவனை. (மாயனை) எதிரிகளைத் தான் தோற்பிக்குமாப்போலே நங்கையிலே தோற்ற ஆஸ்சர்யபூதனை. (பாட) பாடுகைக்கு. நமக்கு அவன் தோற்கும் தோல்விக்குத் தோற்றுப் பாட. ... (கரு)

ஹாவத்தையும் திருவுள்ளம்பற்றி, "பாட" என்றதுக்கு தாத்பர்யமருளிச்செய்கிறார் (நமக்கித்யாதி.) "பாடக்கடவோம்" என்றந்வயம்கண்டுகொள்வது. *

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—பதினஞ்சாம்பாட்டு. (எல்லே யித்யாதி) இப்பாட்டில் பாகவத கோஷ்டியைக்காண வாசைப்பட் டிருப்பா ரொருவரை யெழுப்புகிறார்கள்.

வா.—(எல்லே) அசலகத்துப்பிள்ளையை யெழுப்புகிறவர்கள், "சங்கொடு சக்கரம்" இத்யாதியைப்பாட, அப்பாசுரத்தைத் தன்மிடற்றிலே வைத்துப் பாடுகையாலே, அது தானும் இவர்களுக்கு அத்யந்தம் ஆகர்ஷகமா யிருக்கையாலே, அவரைக் கொண்டாடுவதற்கு முன்பு "எல்லே"! என்று - ஆஸ்சர்யப் படுகிறார்கள். (இளங்கிளியே) கிளி பேச்சுக்கொப்பா மத்தனையல்லது பருவத்துக் கொப்பாமோ. இவ்விடத்தில், பருவமென்பது - அபிநிவேஶத்தை. அவற்றுக்கு அபிநிவேஶ பூர்வகமாக வார்த்தை சொல்லவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லையிறே. (இன்னம் உறங்குதியோ) நாங்களனைவரும் வந்தபின்பும் உறங்கக்கடவையோ.

(சில்லென் றழையேன்மின்) இப்படி அவர்களழைக்கை ஸ்வாநுபவ விரோதியாகையாலே, "சில்லென்றழையேன்மின்" என்கிறார். (நங்கைமீர் போதருகின்றேன்) நாங்களும் நம்பேச்சும் போராதபடி உன்பூர்த்தி யென்னென்ன; நம்பாசுரத்தை மிடற்றிலே வைத்துப் பாடுகிற விவ்வநுபவத்துக்கு விரோதம் பண்ணலாகாதே யென்று எழுப்பாதே யிருக்க வேண்டியிருக்க, அதுபொறுதே யெழுப்புகிற நீங்களன்றோ பூர்ணைகள், நீங்கள் வெறுமனேயிருந்திகோளாகில் நான் புறப்பட்டு வருகிறேனென்ன;

(வல்லை யுன்கட்டுரைகள்) நீர் கட்டுவார்த்தை சொல்ல ஸமர்த்தர். (பண்டே யுன்வாயறிதும்) இவ்வர்த்தம் முன்பே யுன்பாசுரங்களாலே யறிவோம். (வல்லீர்கள் நீங்களே) உங்கள் பாசுரத்தை யநுபவிக்கிற வென்னுடைய வநுபவத்துக்கும் விரோதத்தைப் பண்ணி,

அதுக்குமேலே யென்மேலே பழியாம்படி வார்த்தை சொல்ல வல்ல நீங்களன்றோ ஸமர்த்தர்களென்ன; (நானேதான் ஆயிடுக) பாகவத ஶேஷத்வம் ஸ்வரூபமானால் அவர்களிடும் பழியும் தம்மாலேறிட்டுக் கொள்ளுகை ஸ்வரூபமன்றோ, ஆகையாலே நானே அபராதையாயிடுக.

(ஒல்லைநீ போதாய்) இப்படி பழியைத் தம்மேலே யேறிட்டுக் கொண்ட விவரை, சடக்கென இக்கோஷ்ட்டியிலே ப்ரவேஶியாய் என்கிறார்கள். (உனக்கென்ன வேறுடைமை) உனக்கென்று ப்ரதக்கான பகவத்குணாநுபவமென். நாம் புறப்படுகைக்கு எல்லாரும் போந்தாரோ வென்ன; (போந்தார் போந்தெண்ணிக்கொள்) எல்லாரும் போந்தார்கள், நீயுமிக்கோஷ்ட்டியிலே ப்ரவேஶித்து மெய்க்காட்டுக்கொள்.

புறப்பட்டுச் செய்யவேண்டிய தென்னென்ன; (வல்லானை இத்யாதி) ஸ்வயத்நத்தால் கடக்க வரிதாய். ப்ராயஶ்சித்த விநாஶ்யமுமின்றிக்கே யிருக்கிற அஹங்கார நிவர்த்தகனாய் மற்றுமுள்ள காமக்ரோதாதிகளுக்கும் நிவாரகனாய் ஆஶ்ரிதபரதந்த்ரனைப்பாட, ஒல்லைநீபோதாய் இத்யந்வய꞉. ... ... (கரு)

பதினாறும்பாட்டு (நாயகனித்யாதி.) முதலஞ்சுபாட்டாலே - பகவதநுபவோபகரணங்களை யருளிச்செய்து, எழுப்புகிற பத்துப்பாட்டிலும் வைத்துக் கொண்டு, முதல்பாட்டில் - ஹமவதேகஹோமரான ஸ்ரீவைஷ்ணவர்கள் அநந்யப்ரயோஜநராய் இவ்விஷயத்தில் தேஶிகரன்றிக்கே யிருப்பாரை அவர்கள் பக்கல் பரிவாலே தேஶிகராக்குகை தங்களுக்கு க்ருத்யமென்றிருக்கை ஸ்ரீவைஷ்ணவத்வலக்ஷணமென்று அவர்கள் ஸ்வபாவத்தைச் சொல்லுகிறது; இரண்டாம்பாட்டில் - பகவத்விஷயத்தில் ஜ்ஞாதமானவர்த்தம் ஒருவனுக்கு விஸ்ம்ருதமானால் தங்கள் பரிவாலே, "బోధయన్తః పరస్పరమ్" "ബോധയന്തഃ പരസ്പരം" என்கிறபடியே அறிவிக்கை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூப மென்கிறது; மூன்றாம் பாட்டில் - பகவதநுபவத்தில் ப்ரத்யாஸந்நரா யிருப்பாரைக்குறித்து ஸாபேக்ஷராயிருக்கையும் அவர்களை முன்னிட்டு ஈஶ்வரனைப்பற்றுகையும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபமென்கிறது; நாலாம்பாட்டில் - "తత్తస్య సదృశం భవేత్" "തത്തസ്യസദൃശംഭവേത്" என்று - பூர்வார்த்தநிஷ்ட்டராயிருப்பாரை பகவத் ப்ரேமாதிஶயத்தாலே ததீயபோகரா யிருப்பார்க்கும் அவர்கள் போகார்த்தமாக ப்ரேரிக்கை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபமென்கிறது; அஞ்சாம்பாட்டில் - "జ్ఞానీ త్వాత్మైవ మే మతమ్" "ജ്ഞാനീത്വാത്മൈവമേമതം" என்றும், "అహం స చ మమ ప్రియః" "അഹംസചമമപ്രിയഃ" என்றும் அவன் பக்ஷபதித்திருப்பார்

அ.—பதினாறும்பாட்டு. கீழில் பத்துப்பாட்டாலும் -- முற்படவுணர்ந்தவர்கள் உறங்குகிறவர்களை யெழுப்பி, எல்லாருங்கூடி வந்து ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையிலே சென்று கோயில்காப்பானையும் திருவாசல்காப்பானையும் எழுப்புகிறார்கள். "செய்யாதன செய்யோம்" என்று பண்ணின ப்ரதிஜ்ஞையை அநுஷ்டாந பர்யந்த மாக்கவேணுமே. ததீயரை முன்னிட்டுப் பற்றாதவன்று முறை தப்பின சூர்ப்பணகி பட்டது படுமத்தனை. "வல்லபரிசுவருவிப்பரேலதுகாண்டும்" என்னும் பெரியாழ்வார்திருமகளிறே யிவள்.

மூ.—நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றுந் தோரண
வாசல்காப் பானே! மணிக்கதவந் தாள்திறவாய்,
ஆயர் சிறுமிய ரோமுக் கறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னெலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழ பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மா நீ
நேச நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (கசு)

திறத்து நித்யஸாபேக்ஷரா யிருக்கை ஸ்வரூபமென்கிறது; ஆறும்பாட்டில்-பகவத்ஸம்பந்தம் விச்சேதியாதே போந்த வாசார்ய ஸந்தாநப்ரஸூதர் நமக்குபூஜ்யரென்றும் அவர்களடியாக பகவத்ஸமாஶ்ரயணம்பண்ணுகையும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபமென்கிறது; ஏழாம் பாட்டில்-பகவத் விஶ்லேஷம் அஸஹ்யமாம்படி அவகாஹித்தவர்கள் நமக்கு உத்தேஶ்யராமளவன்றிக்கே, தத்ஸம்பந்திஸம்பந்திகளும் உத்தேஶ்யரென்றிருக்கை ஸ்வரூபமென்கிறது; எட்டாம்பாட்டில்-பகவதநுபவபரிகரமான ஜ்ஞாந வைராக்ய பக்திகளால் பூர்ணராயிருப்பார் திறத்து ததர்த்தமாக ஸ்ரீவைஷ்ணவர் ஸாபேக்ஷரா யிருக்கை ஸ்வரூபமென்கிறது; ஒன்பதாம்பாட்டில் - பகவத் விஷயத்தில் மூட்டுகையிலே அதிகரித்த நிர்வாஹகர் முன்னாக பகவதநுபவம் பண்ணுகை ஸ்வரூபமென்கிறது; பத்தாம் பாட்டில் - ஸ்ரீவைஷ்ணவர்கள்ஸமூஹம் அபிமதமாயிருக்குமவர்களைக்கண்டால் அந்த ஸமூஹமாக, அவர்களையுகக்கை ஸ்வரூபமென்கிறது" என்று ஆறாயிரப்படியிலே அருளிச்செய்த ஸ்வாபதேஶத்தைக் கண்டுகொள்வது.

ஆக, கீழ்ப்பத்துப்பாட்டுக்கும் இப்பாட்டுக்கும் பேடிகாஸங்கதியை யருளிச்செய்கிறார் (கீழித்யாதி.) கோயில்காப்பானுயிருக்கும் திருவாசல்காப்பானை எழுப்புகிறார்களென்றும் ஓரவதாரிகை கண்டுகொள்வது. முன்பு பெண்களிடங்களிலேபோய் அவரவரைப் பேரைச்சொல்லி யெழுப்பினாப்போலே, இங்கும் நோன்புக்குவந்து எழுப்புங்கோளென்று சொல்லிப்போந்த க்ருஷ்ணன்பேரைச்சொல்லிக் கூப்பிடவேண்டியிருக்க இவர்களையழைக்கிறதென்னென்ன; அருளிச்செய்கிறார் (செய்யாதனவித்யாதி.) (பெரியாழ்வார் திருமகளிறே இவள்) என்றதுக்கு - ஆண்டாளேயித்தனைகோபிமாராக பாவித்திருக்கையாலே இங்ஙன் ஏகவசநமாகச்சொல்லலாமென்று கருத்து.

பதம்.	உரை.
முற்படவுணர்ந்தவர்கள் உறங்குமவர்களை யெழுப்ப எல்லாரும் திரண்டு சென்று,	
நாயகனாய்நின்ற	எங்களுக்கு ஸ்வாமியாயிருக்கிற
நந்தகோபனுடைய	ஸ்ரீநந்தகோபருடைய
கோயில்காப்பானே!	திருமாளிகையைக்காக்குமவனே!
"உள்ளே புகுரவிடவேணும்" என்ன; அவன்கண்ணாலே "போங்கோள்" என்று சைகைகாட்டிநிற்க; இரண்டாம்வாசலளவும் சென்று,	
கொடித்தோன்றும்	துகிற்கொடிகள் விளங்காநிற்பதாய்
தோரணம்	தோரணங்கள் கட்டியிருப்பதான
வாசல்காப்பானே!	திருவாசலைக் காக்குமவனே!
மணிக்கதவம் தாள்	அழகிய கதவின்தாழ்ப்பாளை
திறவாய்,	திறந்து எங்களைஉள்ளேபுகுரவிடவேணும் என்[ன
"நீங்கள் வஞ்சகைகளாயிருப்பீர்கள், உங்களைப்புகுரவிட பயமாயிராநின்றது" என்ன;	
ஆயர்சிறுமியரோமுக்கு	இடையர் வயிற்றிற்பிறந்த சிறுபெண்களான எங்களுக்கு,
மாயன்	ஆஶ்சர்யசேஷ்டிதங்களையுடையனாய்
மணிவண்ணன்	நீலமணிபோன்ற திருநிறத்தையுடையனான ஸர்வேஶ்வரன்
அறைபறை	ஶப்தியாநின்றுள்ள பறைதருகிறோமென்று
நென்னலே	நென்னேற்றே
வாய்நேர்ந்தான்;	திருவாய்மலர்ந்தருளினான் என்றுசொல்ல;
"ஆகிலும், நீங்கள் ப்ரயோஜநாந்தரபரைகளன்றோ" என்றுவினவ;	
துயில் எழ	தூக்கத்தைவிட்டு அவனெழுந்திருக்கும்படி
பாடுவான்	திருப்பள்ளியெழுச்சிபாடுகைக்கு
தூயோமாய்வந்தோம்	அநந்ய ப்ரயோஜநராய் நாங்கள் வந்திருக்கிறோம்;
அம்மா!	ஸ்வாமீ!
முன்னம் முன்னம்	முதல் முதல்
வாயால்	உன்வாயாலே
மாற்றாதே;	மறுக்காதொழியவேணும்;
அன்றியும்,	
நேசம்	சேர்ந்திருக்கிற
கதவம்	கதவையும்
நிலை	நிலையையும்
நீ நீக்கு,	நீயே திறக்கவேணும் என்கிறார்கள்

வ்யா.—(நாயகனாய்நின்ற நந்தகோபனுடைய கோயில்காப்பானே) ஸ்ரீநந்தகோபர் திருமாளிகைக்குக்காவலாய் எங்களுக்கு நிர்வாஹகனானவனே. "நாயகன்" என்று - ஸ்ரீநந்தகோபரைச் சொல்லிற்றாகவுமாம். இவர்களால்பெறுமவனன்றோ நாயகனாவான், இவனை "நாயகன்" என்கிற தென்னென்ன; "పాపిష్ఠక్షత్రబన్ధుశ్చ పుణ్డరీకశ్చ పుణ్యకృత్ । ఆచార్యవత్తయా ముక్తౌ తస్మాదాచార్యవాన్ భవేత్" "பாபிஷ்டக்ஷத்ரபந்துஶ்ச புண்டரீகஶ்ச புண்யக்ருத் । ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவான் பவேத்" (கஉகூ) என்று– பலஸித்தி ஆசார்யனாலே யாகையாலே, உபகாரகனை "நாயகன்" என்கிறார்கள். ப்ரதாநஶேஷியிற் காட்டில் த்வாரஶேஷிகளே யெங்களுக்கு ஶேஷிகளென்கிறார்கள். (நந்தகோபனுடைய கோயில்) நாங்களாஶ்ரயிக்கிறவன் பரதந்த்ரன், தங்களை ஶேஷிகளாகவைக்க விசைவாரோடே கலந்து பரிமாறவிறே யிவனிங்கு வந்தவதரித்தது. "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ" என்று - பரமபதத்திலும் தான் பரதந்த்ரனாய் அவர்களிட்ட வழக்காயிறே யிருப்பது. (கோயில் காப்பானே) சிறுபெண்களாகையாலே, அவன் தொழிலையிட்டுச் சொல்லுகிறார்கள். "இன்னது பிடிப்பான்" என்னுமாப்போலே. அவனும் உகக்கும்படியாலே சொல்லுகிறார்களாகவுமாம். இத்தால்—ஶேஷவ்ருத்தி ப்ரயுக்தமான பேரே இவ்வாத்மாவுக்குப் பேரென்னுமிடந் தோற்றுகிறது. "యద్వా చిత్తం శేష ఇతీర్యతే జనైః" "யத்வா சித்தம் ஶேஷ இதீர்யதே ஜனை:" (கஙo) என்னக்கடவதிறே.

"நாயகனாய் நின்றவனே! நந்தகோபனுடையகோயில் காப்பானே!" என்றுமப்தார்த்தம் விவக்ஷித்து, நாயகனாகைக்கும் கோயில்காப்பானாகைக்கும் ஹேதுவாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீநந்தகோபரித்யாதி.) இவர்களால் பெறுமவனென்றது-இப்பெண்களால் பெறப்படுமவனான க்ருஷ்ணனென்றபடி. ஆசார்யனைப்போலே உபகாரகத்வேந உபசரித்து "நாயகன்" என்றார்களென்று ஒருபரிஹாரமருளிச்செய்து, ஶேஷித்வத்தைப்பற்றிச்சொல்லுகிறார்களென்று பரிஹாராந்தரமருளிச்செய்கிறார் (ப்ரதாநேத்யாதி.) ஸ்வாபதேஶத்தில், த்வாரஶேஷிகள் - ததீயர்.

நீங்கள், "க்ருஷ்ணன்கோயில்" என்னாதே "நந்தகோபன்கோயில்" என்கிறதென்னென்ன; அருளிச்செய்கிறார் (நாங்களித்யாதி.)

பேரையிட்டழையாதே, "கோயில்காப்பான்" என்றதுக்கு இரண்டுவிதமாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சிறுபெண்களித்யாதி.) இரண்டுதாத்பர்யத்துக்கும்சேர ஸ்வாபதேஶத்திலே பலிப்பிக்கிறார் (இத்தாலித்யாதி.)

(கொடித்தோன்றும் தோரணவாசல் காப்பானே) அவன் கண்ணாலே "போங்கோள்" என்று சொல்ல, திருவாசல் காக்கிறவனை வந்தெழுப்புகிறார்கள். "கோயில் காப்பான்" என்று - அங்குத்தைக்கும் நிர்வாஹகமாய், அவன் றன்னையே கொடித்தோன்றும் தோரணவாசல் காப்பா னென்னவுமாம். க்ஷேத்ராதிபதி தன்னை, "கோயில்காப்பான்" என்று, வேறே திருவாசல் காப்பானைச் சொல்லிற்றாகவுமாம். ஆர் விக்நம் பண்ணுகிறார்களோ வென்று பயப்பட்டு எல்லார் கால்களிலும் விழுகிறார்கள். (கொடித்தோன்றும் தோரணவாசல் காப்பானே) ஆர்த்த ரக்ஷணத்துக்குக் கொடிகட்டித் தோரணமும் நட்டுவைத்தாப் போலே, பெண்கள் தடுமாற்றந்தீர முகந்தருகைக் கன்றோ உன்னையிங்கு வைத்தது.

(மணிக்கதவம் தாள்திறவாய்) "பொன்னியலும் மாடக்கவாடம் கடந்துபுக்கு" என்னுமாப்போலே - புகுவாரைத் தன்னழகாலே காற்கட்டும் கதவினுடைய தாள்திறவாய். திருவாசலுக்குள் புகுவாரைக் காற்கட்டும் இது; அவன் புக்காரைப் புறப்படாதபடி காற்கட்டும் தன்னழகாலே. "தாள் திறவாய்" என்றவாறே, அவன், பயமுள்ள தேசத்திலே மத்யராத்ரத்திலே வந்து திறக்க வழைக்கிற நீங்களாரென்ன; (கூகூ) ⁕ ஸ்யாஸ்யாம ஸ்லாக பயா நாவேஹாரி யிருந்தவிடத்தில் பயமென்னென்ன; காலம் த்ரேதா யுகமாய், தமப்பனார் ஸம்பராந்தகருமாய், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகளாய், மந்த்ரிகள் வஸிட்டாதிகளாய், ஊரும் திருவயோத்யையாய்ப் பயமற்றிருக்கிறதோ; காலம் கலிக்குத் தோள்தீண்டியான த்வாபராந்தம், தமப்பனார் ஸாது ஸ்ரீநந்தகோபர், இவர்கள் சிறுபிள்ளைகள், அதுக்குமேலே தீம்பர்கள், ஊர் இடைச்சேரி, கம்ஸன் ஸத்ரு, எழும் பூண்டுகளெல்லாம் அஸுரப்

அங்குத்தைக்கும் நிர்வாஹகமாயென்றது - வாசலுக்கும் காப்பானேயென்றபடி. கோயிலென்றது - திவ்யதேஸவாஸியாக விவக்ஷித்து, மூன்றாம் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (க்ஷேத்ரேத்யாதி.) திருவாசல் காக்குமவரை அநுமதி கொண்டால் அமையாதோ, இப்படி இவர்களை யழைப்பானென்னென்ன (ஆரித்யாதி.)

கதவு கால்கட்டுகையை ஸத்ருஷ்டாந்தமாக உபபாதிக்கிறார் (திருவாசலுக்குள்ளித்யாதி.)

"எங்களுக்கு வாய்நேர்ந்தான்" என்னவமைந்திருக்க, "சிறுமியர்" என்கிற விடத்தில் - ஸ்த்ரீத்வம் சொல்லுகைக்கும், "ஆயர்" என்று - இடையர்ஸம்பந்தம் சொல்லுகைக்கும், "சிறுமியர்" என்று - பால்யம் சொல்லுகைக்கும் ப்ரஸ்நப்ரதிவசநமுகேந ஹாவமருளிச்செய்கிறார் (தாள் திறவாயித்யாதி.)

பூண்டுகள், பயங் கெட்டிருக்கலாமோ என்ன; பெண்களுக்கு பயப் படவேணுமோ வென்ன; ஶூர்ப்பணகை பெண்ணன்றோ வென்ன; அவள் ராக்ஷஸி, நாங்கள் * ஆயர்சிறுமியர், இவனுக்கு என்வருகி றதோ! என்று வயிறு பிடிக்கு மிடையர்க்குப் பிறந்தவர்களன்றோ வென்ன; பூதனைக்குப்பின்பு இடைச்சிகளுக்கன்றோ பயப்பட வேண்டு கிறதென்ன; (ஆயர் சிறுமியரோமுக்கு) க்ருத்ரிமமறியாத சிறுப் பெண்களென்ன;

வார்த்தையிலே யறியலாம், வந்த கார்யத்தைச் சொல்லுங்கோ ளென்ன; (அறைபறை) நோன்புக்குப் பறைவேண்டி வந்தோமென்ன; அதுவாகில் திருப்பள்ளியுணர்ந்தால் விண்ணப்பம் செய்கிறோம், அவ் வளவும் நில்லுங்கோளென்ன;

(மாயன் இத்யாதி) நீ இன்றறிவிக்க வேண்டாதபடி நென்னே ற்றே சொல்லிப் போந்தான். (மாயன்) பெண்கள் கோஷ்டியில் தாழநின்று பரிமாறினபடி. (மணிவண்ணன்) தாழநில்லாவிடிலும் விடவொண்ணாத வடிவழகு; பூவலர்ந்தாப்போலே வார்த்தை சொல் லுகிறபோதை ஓஷ்ட ஸ்ப்புரண மென்னவுமாம். "வாக்³மீ ஶ்ரீமாந்" "வாக்³மீ ஶ்ரீமாந்" (கஙஉ) (நென்னெலே) உன்காலைப் பிடிக்கவேண்டு கிற வின்றுபோலேயோ, அவன் காலைப்பிடிக்கவிருந்த நென்னேற்றும் ஒருநாளே! என்கிறார்கள். (வாய்நேர்ந்தான்) ஓலக்கத்திலே ஒருவார் த்தை சொன்னானாகில் மெய்யாக வேணுமோவென்ன; "க்ருஷ்ணே ந ஸமோ லோகே பவதி" "க்ருஷ்ணே ந ஸமோ லோகே பவதி" (கஙங) என்று ஒருத்திக்குச் சொன்னவார்த்தை அவள்விஷயத்தில் பழுதாய்த்த தாகிலன்றோ இவ்வார்த்தையும் பழுதாவதென்ன;

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (வார்த்தையிலேயித்யாதி.) அறை தல் - ஶப்திக்கையாய், அப்படிப்பட்டபறையென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம் பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார் (நோன்புக்கித்யாதி.) நீலமணிபோன்ற வடி வுடையவனென்று ஶப்தார்த்தமாய் ஒருதாத்பர்யமருளிச்செய்து, "வாய்நேர்ந் தான்" என்றத்தைக்கடாக்ஷித்து, மணி - பத்மராகமாய், வண்ணம் - அதரத் தின் வர்ணமாய், தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (பூவித்யாதி.) ஸ்புரணம்- ப்ரகாஶம். வார்த்தைசொல்லும்போதைத் திருவதரத்தில்சிவப்பை "ஸ்ரீமாந்" என்றதென்று திருவுள்ளம்பற்றி ப்ரமாணங் காட்டுகிறார் (வாக்மீத்யாதி.) "புத்³தி⁴மாந் நீதிமாந் வாக்³மீ ஶ்ரீமாந் ஶத்ருநிப³ர்ஹண:" "பு³த்³தி⁴மாந் நீதிமாந் வாக்³மீ ஶ்ரீமாந் ஶத்ருநிப³ர்ஹண:" என்று வசநஶேஷம். "நென்னெல்" என்ன வமைந்திருக்க, "நென்னெலே" என்ற ஏகாரத்துக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (உன்காலித்யாதி.) "சொன்னான்" என்னாதே "வாய்நேர்ந்தான்" என்றத்தாலே ஶ்லாக்யதைதோன்றுகையாலே அதுக்கு ஹாவத்தை யருளிச்செய் கிறார் (ஓலக்கத்திலேயித்யாதி.) ஒருத்திக்கு - த்ரௌபதிக்கு.

சொன்னேனே யாகிலும் நீங்கள் ப்ரயோஜநாந்தரபரைகளன்றோ வென்ன; (தூயோமாய் வந்தோம்) "பறை" என்று - ஒரு வ்யாஜம், அநந்ய ப்ரயோஜநைகள் நாங்கள். அதாவது - அவனுக்கு மங்களா ஶாஸநம் பண்ணுமதொழியத் தங்களுக்கொன்றின்றிக்கே யிருக்கை. (வந்தோம்) அவன்செய்வத்தை நாங்கள்செய்தோ மென்கை. நீங்கள் அநந்ய ப்ரயோஜநைகளென்கைக்கு அடையாளமென்னென்ன; (துயிலெழ பாடுவான்) திருப்பள்ளியெழுச்சி பாடவந்தோம். "ஸமயேஶீத தஸ்மிந் ஸுகஸுப்தப்ரபுத்தயோ:" "ஸ்வாயவிலோசிதஸ்ரீர்நு ஸுவஸுவ்ரூ வாரணவ:" (கஙச) என்று - பிராட்டி யுறங்குகிறபடியைக் கண்டு உகந்தாள் இவர்கள் இவனுணரும்படியைக்காண வாசைப்படுகிறார்கள்.

அங்ஙனே யாகில் திறக்கிறேன், நில்லுங்கோளென்ன; (வாயால் முன்னமுன்னம் மாற்றாதே) எங்களை முற்பட நிஷேதியாதொழிய வேணும். நெஞ்சால் நினைத்தா யாகிலும் வாயாலே நிஷேதியாதொழியவேணும். உன் கையதுகிடா யிவர்களுக்கு, அவன் கையதிறே வாணாள். "ஸர்வதாஸி" "வயத்ராஸ்" (கஙரு) என்றவர்தாமே, "அஸ்துதேஸ்துஸர்வத:" "ஸ்வாரிவஸரவாஸவத" (கஙசு) என்ற பின்பிறே யவன் ஸத்தை பெற்றது. (அம்மா) பச்சையிடுகிறார்கள். உள்ளிருக்கிறவனோ நாதன், நீ யல்லையோவென்ன; தானேயுருவிக் கதவைத் தள்ளிக்கொடு புகுருங்கோள் என்ன; (நீ நேசநிலைக் கதவம் நீக்கு) அது உன்னிலும் பரிவுடைத்தான கதவு, எங்களால் தள்ளப் போகாது, நீயே திறக்கவேணு மென்கிறார்கள். சேதநாசேதநவிபாக மின்றியே, இவ்வூரிலுள்ளதெல்லாம் அநுகூலமா யிருக்கிறபடி. கம்ஸன் படைவீட்டில் எல்லாம் ப்ரதிகூலமா யிருக்குமாப்போலே. (நேச நிலைக்கதவம்) செறிந்திருக்கிற கதவையும் நிலையையும். (நீக்கு) நீயே வந்து திறக்கவேணும். ... ... (கஙா)

பிராட்டியைப்போலே உறங்குகிறபோதையில் அழகிலே ஈடுபட்டிருக்க வேண்டியிருக்க, திருப்பள்ளியெழுச்சிபாட வரக்கூடுமோவென்ன; அருளிச் செய்கிறார் (ஸமயேத்யாதி.)

நெஞ்சிலே நிஷேதிக்கையைநினைத்து நில்லுங்கோளென்றதாகத் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எங்களையித்யாதி.) "முன்னமுன்னம்" என்றவீப்ஸையாலே - நோன்புக்கு ப்ரதமம் விக்நவார்த்தை சொல்லாதொழிய வேணுமென்னுமிவர்களபிப்ராயத்தை யருளிச்செய்கிறார் (உன்கையதித்யாதி.)

"நேசம்" என்றதினர்த்தம் (அதுவித்யாதி.) "நேசம்" என்றதுக்கு - செறிவாக அர்த்தாந்தரமருளிச்செய்கிறார் (செறிந்தித்யாதி.) ... ... (கஙு)

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—பதினாறும் பாட்டு. (நாயகனாயித்யாதி.) இப்பாட்டில்-முன்பு உணர்த்தினவர்களு முணர்ந்தவர்களும் எல்லாருங்கூடி பகவதநுபவத்துக்கு தேஶிகனான வாசார்யன்திருமாளிகையிலேபுக்கு, அங்கு கோயில் காப்பானையும் திருவாசல் காப்பானையு மெழுப்புகிறார்கள். ஆசார்ய ஸம்பந்த கடகரை முன்னிட்டு ஆசார்யனைத் தொழுகையும் பெரியோர் செயலிறே.

வ்யா.— (நாயகனாய்நின்ற) தன்னுடைய ஶேஷித்வம் ஸித்திக்கைக்காக தனக்குப் புறம்பாயிருப்பானொருஶேஷியைத்தேடிப்போகவேண்டியிருக்கையன்றிக்கே, தானே ஶேஷித்வகாஷ்ட்டையிலே நிற்கிற. (நந்தகோபனுடைய) பகவதநுபவ ஜநிதாநந்த நிர்ப்பரனாய் ஸம்ஶ்ரிதரக்ஷகனான ஆசார்யனுடைய. (கோயில்காப்பானே) கோயிலுண்டு – அவனுக்கு ப்ரதிபாதகத்வேந இருப்பிடமான திருமந்த்ரம்; அத்தை அநதிகாரிகள் செவிபடுத்தாதபடி ரக்ஷிக்குமவனே.

(கொடித்தோன்றும் தோரணவாசல் காப்பானே) இவனுடைய ரக்ஷகத்வம் விளங்காநின்றுள்ள அகார நமஶ்ஶப்தார்த்தங்களைக் காக்குமவனே. (மணிக்கதவம் தாள்திறவாய்) ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாகையாலே ஶ்லாக்யமா யிருந்துள்ள ஆத்ம ஸ்வரூபாநுபவத்தையும் அத்தால் வரும் ஸ்வஸ்வாதந்த்ர்ய ப்ரதிபத்தியையும் தவிர்த்தருளாய்.

பயமுள்ள தேஶத்திலே அர்த்தராத்ரத்திலே வந்தெழுப்புகிறவர்கள் ஆரென்ன; (ஆயர் சிறுமியரோமுக்கு) "எம்பெருமானே உபாயோபேயம்" என்று அத்யவஸித்திருக்கும் ஜ்ஞாநஜந்மாக்கள் திருவம்ஶத்திலே பிறந்த பகவதநந்யார்ஹ ஶேஷபூதரான பாலர்களான நமக்கு நீங்கள் வந்த கார்யமேதென்ன; (அறைபறை) த்வநிக்கிற வாத்யம் வேண்டிவந்தோமென்ன; புருஷார்த்தம் வேண்டி வந்தோமென்ன; ஆகில் திருப்பள்ளி யுணர்ந்தவநந்தரம் விண்ணப்பஞ்செய்து தருவிக்கிறேனென்ன, (மாயன்மணிவண்ணன் நென்னெலே வாய் நேர்ந்தான்) ஆஶ்ரிதபரதந்த்ரனாய் ஸுலபனாய் ஶ்ரமஹரமானவடிவையுடைய வெம்பெருமான் நென்னேற்றே பறைதருகிறோமென்று மநஃபூர்வகமாகச் சொல்லிவைத்தான். ஆகிலும் நீங்கள் ப்ரயோஜநாந்தரபரரன்றோ வென்ன; (தூயோமாய்வந்தோம்) பறையென்றது - வ்யாஜமாத்ரம், நாங்கள் அநந்ய ப்ரயோஜநராய் வந்தோம். அநந்யப்ரயோஜநருக்குக் கர்த்தவ்யமேதென்ன; (துயிலெழப்பாடுவான்) திருப்பள்ளியெழுச்சி பாடவந்தோம்.

ஆகில் நில்லுங்கோள், திறக்கிறேனென்ன; (வாயால்முன்னமுன்னம் மாற்றாதேயம்மா) வாக்காலே முந்துற முன்ன மெங்களை நிஷேதியாதேகொள். உள்ளிருக்கிறவனே ஸ்வாமி, நீ யெங்களுக்கு ஸ்வாமியன்றோ; ஆகில் கதவைத் தள்ளிக்கொண்டு புகுருங்கோளென்ன; (நேசநிலைக்கதவம் நீக்கு)நீ வாவெனிலும்,ஸ்நேஹயுக்தமான நிலையையுடைத்தான கதவைத் திறந்து விடாய். நீ யெம்பெருமானிடத்தில் ப்ரேமாதிஶயத்தாலே அநதிகாரிகளுக்கு அவனை யுள்ளபடி காட்டாதாப்போலே, ஆத்ம ஸ்வரூபம், ஸ்வவைலக்ஷண்யத்தாலே, அதிகாரிகளுக்கும் பகவத்விஷயத்தை மறைக்கக்கடவதாயிறே யிருப்பது. (கசு)

அ.—பதினேழாம்பாட்டு. இவர்களைத் திருக்காப்புநீக்கி உள்ளே புகுரவிட, ஸ்ரீநந்தகோபர் துடக்கமானாரை யெழுப்புகிறார்கள். முற்பட க்ருஷ்ணனைப் பெண்கள் களவுகாண்கிறார்களோவென்று நினைத்துக் காவலாகப் புறக்கட்டிலே கிடக்கிற ஸ்ரீநந்தகோபரை யெழுப்புகிறார்கள்; அநிருத்தாழ்வானை யகப்படக் களவுகாணக்கடவ பெண்கள், அவனழுகுக்கும் வாய்த்தலையாய் "ஸாக்ஷான்மந்மதமந்மதः" "ஸாக்ஷாந்நாயக நாயகः"(கஅ-எ)என்கிற க்ருஷ்ணனைக் களவுகாணச்சொல்லவேணுமோ.

மூ.—அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா வெழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே
எம்பெரு மாட்டி யசோதா யறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த
உம்பர் கோமானே யுறங்கா தெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயு முறங்கே லோரெம்பாவாய். (கஎ)

பதினேழாம்பாட்டு (அம்பரமேயித்யாதி.) தங்களுக்குத்தேஶ்யனான க்ருஷ்ணனை எழுப்பாதே நந்தகோபனை முந்துற எழுப்புவானென்னென்ன வருளிச்செய்கிறார் (முற்படவித்யாதி.)

பெண்கள் ஆண்களைக் களவுகாணக் கண்டதுண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (அநிருத்தேத்யாதி.)

பதம்.	உரை.
திருக்காப்புநீக்கி இவர்களை உள்ளேபுகுரவிட; முதற்கட்டிலே சென்று,	
அம்பரமே தண்ணீரே சோறே	வஸ்த்ரங்கள் குளிர்ந்ததீர்த்தம் அந்நம் இவற்றை வேண்டுவோர் த்ருப்திபெறுமளவும்
அறம் செய்யும்	ஒருபலத்தைவிரும்பாமல் தானஞ்செய்யுமவராய்,
எம்பெருமான்	க்ருஷ்ணனைப்பெற்று எங்களுக்குஸ்வாமியான
நந்தகோபாலா !	ஸ்ரீநந்தகோபரே!
எழுந்திராய்;	எழுந்திருக்கவேணும் என்றெழுப்ப ;
அவர்அநுமதி பண்ணினமை தோற்றக்கிடக்க; இரண்டாங்கட்டிலேசென்று,	
கொம்பு அனார்க்கு எல்லாம்	வஞ்சிக்கொம்பையொத்த ஸ்த்ரீகளுக்கெல்லாம்
கொழுந்தே	முதன்மையாகப்பிறந்தவளாய்,
குலவிளக்கே	நந்தகுலத்துக்கு மங்களதீபம்போன்றவளாய்,
எம்பெருமாட்டி	க்ருஷ்ணனைத்தருகையால் எங்கள்ஸ்வாமிநியான
அசோதாய் !	யசோதைப்பிராட்டியே !
அறிவு உறாய்;	நீ அறிந்து எழுந்திருக்கவேணும் என்று ப்ரார்த்திக்க ;
அவளும் ஸம்மதித்தமை தோற்றக்கிடக்க ; உள்ளேபுக்கு,	
அம்பரம் ஊடு அறுத்து	ஆகாஶமெல்லாம் இடைவெளியாக்கிக்கொண்டு
ஓங்கி	பரமபதத்தளவும் செல்லவளர்ந்து
உலகு அளந்த	எல்லாலோகங்களையும் அளந்தருளுகையாலே
உம்பர்கோமானே !	தேவர்களுக்கு ராஜாவானவனே !
உறங்காது எழுந்திராய்;	கண்வளர்ந்தருளாமல் எழுந்திருக்கவேணும் என்று எழுப்ப ;
அவனெழுந்திருக்கக் காணாமையாலே,"முந்துற நம்பிமூத்தபிரானை யெழுப்பாதே முறைதப்பச்செய்தோம்" என்றுநினைத்து,	
செம்பொன்	சிவந்து ஸ்ப்ருஹணீயமாய்
கழல்	வீரவண்டயமணிந்த
அடி	திருவடிகள் விளங்கப்பிறந்த
செல்வா பலதேவா	ஸ்ரீமானான பலபத்ரனே !
உம்பியும்	உனக்குத்தம்பியான க்ருஷ்ணனும்
நீயும்	அவன் சொல்வழியேநடக்கும் நீயும்
உறங்கேல்.	உறங்காதெழுந்திருக்கவேணும் என்றிரக்கிறார்கள்.

வ்யா.—(அம்பரமேயித்யாதி) புடைவையோடு தண்ணீரோடு சோறோடு வாசியற வேண்டுவார்க்கு வேண்டுவதெல்லாம் புஷ்கலமாகக்

புஷ்கலமாகக்கொடுக்கைக்கு ஸுலபமான தண்ணீரோடுசேர்த்துச்சொல்லுகையாலே அம்பரம் முதலானவற்றுக்கு பௌஷ்கல்யம் தோற்றுகிறதென்று திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (புடைவையோடித்யாதி.)

கொடுக்கை. ஏவகாரத்தாலே - இதுவோ இவன் கற்றதென்னும் படி கொடுக்கை. (அறஞ்செய்யும்) பலாபிஸந்திரஹிதமாக ஆந்ருஶம்ஸ்யத்தாலே கொடுக்கை. இத்தால் - நாட்டுக்கு தாரகாதிகளைக் கொடுக்கிற நீ, எங்கள் தாரகத்தையும் தாராயென்கை. (எம்பெருமானித்யாதி) எங்களுக்கு தாரகபோஷக போக்யங்களெல்லாமான க்ருஷ்ணனைப் பெற்றுத் தந்த ஸ்வாமீ, எழுந்திராய். "ఏకైకఫలలాభాయసర్వలాభాయకేశవః" "ஏகைகபலலாபாய ஸர்வலாபாயகேஶவ:" (௪௬) * உண்ணுஞ்சோறுபருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாப் பேறும் தானேயானவனிறே க்ருஷ்ணன். (எம்பெருமான்) நாட்டில், பெண்களுக்கு தாநங்கொடுப்பாரில்லை தாநங்கொள்ளுகைக்கு அதிகாரிகளல்லாமையாலே "వాసుదేవస్సర్వమ్" "வாஸுதேவஸ்ஸர்வம்" (௧௫௮) என்றிருக்கிற எங்களுக்கு க்ருஷ்ணனைத் தரப்புகுகிற நீ விஶேஷித்து எங்களுக்கு நாயகனன்றோ.

உணர்ந்து, அவன் அநுமதி பண்ணினபடி தோற்றக் கிடக்க; (கொம்பனுரித்யாதி) பிராட்டிமுன்பாக அவனை யெழுப்புமாப்போலே, இவள்முன்னாக ஸ்ரீநந்தகோபரை யெழுப்பாவிட்டதென்னென்னில்; பிள்ளைமேல் ஸங்கத்தாலே அணித்தாக உள்கட்டிலே கிடக்கையாலே பிற்பட அவனையெழுப்புகிறார்கள்.(கொம்பனார்க்கெல்லாம்கொழுந்தே) "నారీణాముత్తమావధూః" "நாரீணாமுத்தமாவதூ:" (௯௦) என்று - பெண்

"அம்பரம்கொடுக்கையே அறஞ்செய்யும், தண்ணீர்கொடுக்கையே அறஞ்செய்யும், சோறிடுகையே அறஞ்செய்யும்" என்று தனித்தனியே அந்வயித்து ஏவகாரத்தாலே - ஒரொன்றே கொடுக்கும்போது கொண்டாடும்படி யிருக்குமென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஏவகாரத்தாலேயித்யாதி.)

இவற்றைக் கொடுக்கை தர்மமென்னுமது அர்த்தஸித்தமா யிருக்கவும், "அறம்,, என்று விஶேஷித்ததுக்கு விஶேஷதர்மமென்று திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பலாபிஸந்தீத்யாதி.) பெண்கள் எழுப்பும்போது இவ் விஶேஷண மிடுகைக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி.) தாரகாதிகளெல்லாம் க்ருஷ்ணனென்னுமதுக்கு ஸம்வாதம் காட்டுகிறார் (ஏகைகேத்யாதி.) "పితృమాతృసుతభ్రాతృ దారమిత్రాదయోపివా" "பித்ருமாத்ருஸுதப்ராத்ரு தாரமித்ராதயோபிவா" என்று பூர்வார்த்தம். க்ருஷ்ணனைப்பெற்றதே தருகையாய், இந்த வுபகாரத்தைப்பற்ற ஒருதாத்பர்யமருளிச்செய்து, பெண்கள் தாநாதிகாரிகளன்றென்று பாராதே, அதிகாரிவிஶேஷத்தைப் பார்த்துத் தருவானுயிருக்கிறபடியைப்பற்ற "எம்பெருமான்" என்றதுக்குத் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (நாட்டிலித்யாதி.)

பிராட்டியென்றது-மேற்பாட்டில்சொல்லுகிற நப்பின்னைப்பிராட்டியை.

பிறந்தார்க்கெல்லாம் தலையாகப்பிறந்தவளே. (கொம்பனர்) கொம்பு—வஞ்சிக்கொம்பு. அனர் - அத்தை அனையவர்கள்- அத்தை ஒத்தவர்கள்.

(குலவிளக்கே) இக்குலத்துக்கு மங்களதீபமானவளே. பெண்பிறந்தார்க்கெல்லாம் த்ருஷ்டியான விளக்கேயென்னவுமாம். (கொழுந்தே) பெண்களுக்கு ஒரு குறைவரில் உன் முகமன்றோ வாடுவது. (எம்பெருமாட்டி) க்ருஷ்ணனைப்பெற்றுத்தந்து எங்களுக்கு ஸ்வாமிநியானவளே. (அசோதாய்) ஸ்ரீநந்தகோபரைப்போலன்றியே ஸஜாதீயையாகையாலே நோயறியுமவளே. ஹிதகாமரான ஸ்ரீநந்தகோபரெழுந்திருக்கச் செய்தேயும் ப்ரியகாமியா யிருக்கிற நீ கிடக்கக்கடவையோ. (அறிவுறாய்) நீ யறிந்தால் எங்களுக்கு ஒருகுறையுண்டோ என்கை.

அவள் ஸம்வாதத்தாலே உள்ளேபுக்கு க்ருஷ்ணனை யெழுப்புகிறார்கள் (அம்பரமூடறுத்தோங்கி) ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்காக ஆகாஶாவகாஶத்தை யெல்லாம் அடங்க ஒரு ப்ரதேஶநியதியில்லாதபடி யூடறுத்து விம்ம வளர்ந்து. இத்தால் - நிருபாதிக ரக்ஷகனாகையாலே ரக்ஷகத்வமே வினைநீராக வளர்ந்தபடி. (உலகளந்த) உறங்குகிற ப்ரஜையைத் தழுவிக்கொண்டு கிடக்கும் தாயைப்போலே, இருந்ததே குடியாக எல்லார்தலையிலும் ஊறெண்ணெய் வார்த்தாப்போலே திருவடிகளைக் குளிரவைத்தபடி. (உம்பர்கோமானே) அச்செயலாலே தேவர்களை யெழுதிக்கொண்டபடி. நித்யஸூரிகளையென்னவுமாம். அதாவது - நமக்கு ஶிரோபூஷணமான திருவடிகளையிட்டுக் காடுமோடையு மளப்பதே ! இதொரு வாத்ஸல்யமே ! என்று வாத்ஸல்யத்துக்குத் தோற்கை. (உறங்கா தெழுந்திராய்) ஆண்களுமாய்

அத்தை அனையவர்களென்றது- அதுக்கு ஸத்ருஶமென்றபடி.

நந்தகுலத்துக்குத் தன் வ்ர்த்தத்தாலே விளக்கானவளென்று கீழருளிச்செய்து, "கொம்பனர்க்கெல்லாம்" என்றத்தை இங்கும்கூட்டித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பெண்பிறந்தார்க்கித்யாதி.) முன்னே " கொழுந்து " என்றதுக்கு-லக்ஷணயா உத்தமத்வமர்த்தமாக வொருதாத்பர்யமருளிச்செய்து, கொழுந்தோட்டை ஸாத்ருஶ்யமாக விஶேஷம் விவக்ஷித்துத் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (பெண்களுக்கித்யாதி.) (அறியுமவளே) என்றவனந்தரம் " ஆகையாலே" என்று ஶேஷம். " அறிவுறாய்" என்றத்தை விவக்ஷித்து ப்ரார்த்தனைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (நீயித்யாதி.)

ஸம்வாதத்தாலேயென்றது - ஸம்மதியாலே யென்றபடி. விம்மல்—பொருமல். அதாவது-ப்ரீதிப்ரகர்ஷத்தாலே திருமேனிப் பெருமையைச் சொல்லுகிறது

"உலகு" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உறங்குகிறவித்யாதி.)

ஊறெண்ணெய்-உச்சியெண்ணெய்,

ப்ரயோஜநாந்தரபரராக வேணுமோ முகங் கொடுக்கைக்கு, அநந்ய ப்ரயோஜனைகளுமாய் அபலைகளுமான லாகாதோ. எங்களுக்கு முகங் காட்டும்போது சிறுப்பது பருப்பதாக வேணுமோ, இருந்தபடியே காட்டவமையாதோ. உன் வாசியறியாதே அந்யபரமான நாட்டுக்கு ஸுலபமான திருவடிகளை, உன்வாசியறியு மெங்களுக்குக் காட்டலாகாதோ. (உறங்கா தெழுந்திராய்) எங்களை யுறக்கமெழுப்பவந்த நீ, உறங்கக்கடவையோ. "అనిద్రస్సతతంరామః" "அநித்₃ரஸ்ஸததம் ராம:" (கஙக) என்று கேட்டிருந்தபடி அழகிதா யிருந்தது.

இப்படி சொல்லவு மெழுந்திராமையாலே, முந்துற நம்பிமூத்த பிரானை யெழுப்பாதே முறைகெடச் செய்தோமென்று அவனை யெழுப்புகிறார்கள் (செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா) பிள்ளை பிறக்கைக்குப் பொற்கால் பொலியப்பிறந்த சீமானே. (உம்பியும் நீயு முறங்கேல்) உனக்கு பவ்யனான தம்பியும், அவனுக்கு பவ்யனான நீயும் உறங்கா தொழியவேணும். "సందేశైస్సామమధురైః ప్రేమగర్భైరగర్వితైః । రామేణాశ్వాసితాగోప్యోహరిణాహృతచేతసః" "ஸந்தே₃ஶைஸ்ஸாமமது₄ரை: ப்ரேமக₃ர்பை₄ரக₃ர்விதை:। ராமேணாஶ்வாஸிதா கோ₃ப்யோ ஹரிணா ஹ்ருதசேதஸ:" (கசo) என்று-எங்களையும் அவனையும் பொருந்த விடுமவனல்லையோ நீ ... ...(கஎ)

"உறங்காதே" என்று இவ்வளவைச்சொல்ல வமைந்திருக்க, "எழுந்திராய்" என்றதுக்கு-எழுந்திருக்கை முகங்காட்டுகைக்கு நிமித்தமென்றுவிவக்ஷித்து "அம்பரம்" இத்யாதியைக்கடாக்ஷித்து ஸாவமருளிச்செய்கிறார் (ஆண்களுமித்யாதி.) அதில் முதலிரண்டுவாக்யமும் "அம்பரமூடறுத்து" என்ற அம்ஶத்தைப்பற்ற; "ஓங்கி" என்றத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (எங்களுக்கித்யாதி.) "உலகளந்த" என்றத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (உன்வாசியித்யாதி.) என்றுகண்டுகொள்வது. "உறங்காது" என்னுமதுக்கு ஸ்வாபதேஶத்தில் ஸாவமருளிச்செய்கிறார் (எங்களையித்யாதி வாக்யத்வயத்தாலே) உறக்கமெழுப்பவென்றது - ஸம்ஸாரமாகிற வுறக்கத்தையெழுப்பவென்றபடி.

செம் - சிவந்ததாய், பொன்-ஸ்ப்ருஹணீயமாய், கழல்-வீரவண்டயமுடைய அடியையுடையவனென்று ஶப்தார்த்தம்திருவுள்ளம்பற்றி, இங்ஙன் விஶேஷித்ததுக்குத் தாத்பர்யார்த்தத்தை யருளிச்செய்கிறார் (பிள்ளையித்யாதி.) இருவர்க்கும் பரஸ்பரம் பவ்யதை சொன்னதுக்கு ப்ரக்ருதோபயோகம் காட்டுகிறார்(ஸந்தேஶைரித்யாதி. ... ...(கஎ)

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—பதினேழாம்பாட்டு. (அம்பரமித்யாதி) இப்பாட்டில், கீழ்ப் பாட்டி லெழுப்பின கோயில்காப்பா னநுமதியால் திருவாசல் காப் பான் உள்ளே புகுரவிட, முந்துற ஆசார்யனை யெழுப்பி, நம்பிமூத்த பிரான் முன்னாக ஈஶ்வரனை யெழுப்புகிறார்கள்.

வ்ய.—(அம்பர மித்யாதி) ஆத்மஸ்வரூபமான ஈஶ்வரமுக விகா ஸத்தையும் தத்வர்த்தகமான போக்த்ருவ புத்திநிவ்ருத்தியையும் தத் தேதுவான கைங்கர்யத்தையும், ஒரொன்றேயோ விவன் கொடுப்பது என்னும்படி தன்னுடைய ஆந்ருஶம்ஸ்யத்தாலே ஸ்வயம் புருஷார்த்த மாகக் கொடாநின்றுள்ள, நமக்கு வகுத்த ஶேஷியாய் ஆநந்த நிர்ப்பர ராய் ஆஶ்ரித ரக்ஷகனான ஆசார்யனே! நீயுணரவேணும்.

(கொம்பித்யாதி) நதீப்ரவாஹங்களுக்கு வளைந்து பிழைக்கும் நீர் வஞ்சிக்கொம்புபோலே, ஸம்ஸாரிகளுடைய அபிமாநத்துக்கு அநுரூப மாகத் தங்களை யமைத்துவைக்கும் பகவந் மந்த்ரங்களுக்கெல்லாம் ஶ்ரேஷ்ட்டமாய் ப்ரபந்நகுலத்துக்கும் ப்ரகாஶகமாய் எங்களுக்கு நிரு பாதிகஸ்வாமிநியாய்த் தன்னை யநுஸந்திப்பார்க்கு ஆபிஜாத்யாதி ஸக லாதிஶயப்ரதமான திருமந்த்ரமே. (அறிவுறாய்) திருமந்த்ர மறிவுறுகை யாவது - ஸ்வார்த்த ப்ரகாஶகமாகை.

(அம்பரமித்யாதி) நிரீஶ்வரவாதம் பண்ணுமவர்களுக்கு அவ காஶமறும்படி அபிவ்ர்த்தனாய் இவ்விபூதியைத் தன்திருவடிகளின் கீழே சேர்த்துக்கொண்ட நித்யஸூரி நிர்வாஹகனானவனே,ஸம்ஸாரி களுறக்கம் தீர்க்க வவதரித்த நீ உறங்காதொழியவேணும்.

இப்படி யெழுப்பின விடத்திலும் எழுந்திராமையாலே, அவனை யெழுப்புகைக்காக நம்பிமூத்தபிரானையெழுப்புகிறார்கள் (செம்பொற் கழலடி) சிவந்து ஸ்ப்ருஹணீயமாய் ஸ்வர்ணத்தாலே செய்யப்பட்ட வீரக்கழலையுடைய. ஸ்வஶேஷத்வத்திலே பகவச் சேஷத்வம் அந்தர்க் கதமாம்படி யிருக்கையாலே, திருவடிகள் விருதுபூண்டன வென்று மாம். (செல்வா பலதேவா) இப்படி ஸம்பந்நனான பலதேவனே. (உம்பியும் நீயுமுறங்கேல்) உனக்கு பவ்யனான க்ருஷ்ணனும்அவனுக்கு பவ்யனான நீயும் உறங்காதொழியவேணும். ... ...(கஎ)

அ.—பதினெட்டாம்பாட்டு. இப்படி யெழுப்பின விடத்திலு மெழுந்திராமையாலே தங்களுக்கு புருஷகாரபூதையான நப்பின்னைப்

பதினெட்டாம்பாட்டு (உந்துமதகளிற்றனித்யாதி.) இப்படி எழுப்பின விடத்திலுமென்றது - திருவாசல்காக்கும் முதலிகள்தொடக்கமாக நம்பிமூத்த

பிராட்டியை யெழுப்புகிறார்கள். அவள்புருஷகாரமாக அவனைப்பற்று வதே பல வ்யாப்தமாவது. இதுதான் காக விபீஷணாதிகள் பக்க லிலே காணலாம். அவளை அநாதரித்து இவனைப் பற்றின சூர்ப்பணகி அநர்த்தப்பட்டாளிறே. பெருமாளை யொழியப் பிராட்டியைப் பற் றின ராவணனும் அநர்த்தப்பட்டான்; இருவரையும் பற்றினவிறே ஸ்ரீவிபீஷணாழ்வானைப்போலே வாழலாவது. அபிநிவேஸ ப்ரேரிதைக ளாகையாலே முந்துறவே க்ருஷ்ணன் பக்கலிலே மேல்விழுந்தார்க ளிவர்கள்:-அங்கு கார்யம் பலியாமையாலே வழியே போகவேணு மென்று புருஷகாரத்தி லிழிந்தார்கள். ஆஸ்ரயணவேளையிலேயிறே க்ரமம் பார்ப்பது, போகவேளையிலே க்ரமம் பார்க்கப்போகாதே.

மூ.—உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தங் கமழுங் குழலீ கடைதிறவாய்
வந்தெங்குங் கோழி யழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (கஅ)

பதம்.	உரை.
	ஸ்ரீநந்தகோபர் முதலானாரையெழுப்பியும் கதவைத்திறவாமையாலே,
மதம் உந்து	மதஜலத்தைப்பெருகவிடாநின்றுள்ள
களிற்றன்	யானைபோல் பலமுடையராய்,

பிரானளவும்புருஷகாரமாகப்பற்றுமவைபோலன்றிக்கே,இவளைபுருஷகாரமாக்கு மிடத்தில். அவனைப்பெறலாமோவென்ன; அருளிச்செய்கிறார் (அவளித்யாதி.) அவள்புருஷகாரமாகப்பற்றுகை பலவ்யாப்தமென்கையை அந்வயவ்யதிரேகங்க ளால் உபபாதிக்கிறார் (இது வித்யாதிவாக்யத்வயத்தாலே.) இவளையொழியப் பெருமாளைப்பற்றுமது அநர்த்தாவஹமென்கைக்கு த்ருஷ்டாந்தமருளிச்செய்கி றார் (பெருமாளையித்யாதி.)

இப்படி யிருக்கவும் முந்துற நப்பின்னையை புருஷகாரமாக்காதே வேறே க்ருஷ்ணன்பக்கல் இழிகைக்குக் காரணமென்னென்ன; அருளிச்செய்கிறார் (அபிநிவேஸேத்யாதி.) அபிநிவேஸம் கரைபுரண்டாலும் வழிதப்பியிழிகை எங் ஙனே கூடுமென்னென்ன; அருளிச்செய்கிறார் (ஆஸ்ரயணேத்யாதி.) போகவேளை யென்று இவர்கள் நினைவிருக்கையாலே முந்துற இழிந்தது பலியாமையால் ஆஸ் ரயணவேளையென்றறிந்து நப்பின்னையை புருஷகாரமாகப் பற்றுகிறார்களென்று கருத்து.

ஓடாத	எதிரிகளைக்கண்டு பின்வாங்கவேண்டாத
தோள்வலியன்	புஜபலத்தையுடையரான
நந்தகோபாலன்	ஸ்ரீநந்தகோபருடைய
மருமகளே !	மணாட்டுப்பெண்ணாய்;
கந்தம் கமழும் குழலீ !	பரிமளம் வீசாநின்றுள்ள கூந்தலையுடையளான !
நப்பின்னாய் !	நப்பின்னைப்பிராட்டியே !
கடை திறவாய் ;	தாழ்ப்பாளைத் திறவாயென்றெழுப்ப ;

“நானெழுந்திருந்துவருகைக்குப் போதுவிடிந்ததோ?” என்றுவினவ ;

கோழி	கோழியானது
எங்கும்வந்து அழைத்தன ;	நாற்புறத்திலும்வந்து சூழ்ந்துகொண்டு கூவாநின்றது ;

அன்றியும்,

மாதவிப்பந்தல்மேல்	குருக்கத்திக்கொடிகளாலாகியபந்தல்மேல்தூங்குகின்ற
குயில்கள்	குயில்களானவை
இனம்	கூட்டம் கூட்டமாக
பல்கால்	இடைவிடாமல்
கூவின ;	கூவாநின்றன என்றுசொல்லி,
பந்து ஆர் விரலி !	பந்துபொருந்திய விரற்களையுடையவளே !
மைத்துனன்	அவனும் நீயும்மைத்துனமையாடி ஒருவர்க்கொருவர் இட்டீடுகொள்ளும்போது
உன்	உன்பக்ஷத்தில் நாங்கள்நின்று
பேர்பாட	அவன்பேர்களை வசைபாடும்படிக்கீடாக,
சீர் ஆர்	அழகுமிக்கிருந்துள்ள
வளை	சூடகம் தோள்வளைமுதலிய வளைகள்
ஒலிப்ப	ஶப்திக்கும்படி
வந்து	நடந்துவந்து,
செம் தாமரைக்கையால்	சிவந்த தாமரைபோன்ற கையாலே,
மகிழ்ந்து	ஸந்துஷ்டசித்தையாய்க்கொண்டு
திறவாய்.	திறக்கவேணுமென்கிறார்கள்.

வ்யா.—(உந்துமதகளிற்றன்) மதத்தை உந்தாநின்றுள்ள களிறு. மத்த கஜம்போலே யிருக்கும் பலத்தை யுடையவன். ஆனைகளோடே பொரும்படியான மிடுக்கை யுடையவனென்கை.

மதத்தை, உந்துகை - தள்ளுகையாய், மதஜலத்தைப் பெருகவிடாநின்றுள்ள கஜம்போலே யிருக்குமவனென்று ஒருதாத்பர்யமருளிச்செய்து, மதகளிற்றைத்தள்ளுமவனென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (ஆனைகளோடேயித்யாதி.) (மிடுக்கையுடையவனென்கை) என்றிருக்கையாலே-கீழ்ச்சொன்னபலத்தை விவரிக்கிறாரென்னவுமாம்.

(ஓடாததோள்வலியன்) "యుద్ధేచాప్యపలాయనమ్" "யுத்தேசாப்யபலாயநம்" (கசக) என்கிறபடியே ப்ரதிபக்ஷத்தைக் கண்டால் பிற்காலியாததோள்வலியை யுடையவன். நாட்டில் நடையாடாத தோள் வலியன் என்னவுமாம். இப்போது இவருடைய மிடுக்குச்சொல்லிற்று, தங்களுக்கு தநமான இம்மிதுநத்துக்குக் காவலுண்டென்ற தங்கள் பய நிவ்ருத்திக்காக. "அங்கோராய்க்குலம்" என்று - கம்ஸன் படைவீடான ஸ்ரீ மதுரையை நினைத்து அஞ்சினார்க்கு அஞ்சவேண்டாத வூரிறே. (தோள்வலியன்) "నబిభేతికుతశ్చన" "நபிபேதிகுதஶ்சந" (கூசு) என்று - நம்முடைய அநீதிகளை நினைத்தால் எம்பெருமான் தோள்வலியை நினைத்துபயம் கெடுமாப்போலே, க்ருஷ்ணனுடைய தீம்புகளை நினைத்தால் இவருடைய தோள்வலியை நினைத்து பயம் கெடலாயிருக்கை. கம்ஸன் மாளிகைநிழலிற் கீழே க்ருஷ்ணனுக்கொரு தீங்குவாராதபடி வளர்க்கவல்ல மிடுக்கை யுடையவரிறே.

(நந்தகோபாலன் மருமகளே) "ஸ்ரீ கும்பர்மகளே" என்னாதே மாமனாரைச் சொல்லிற்று - "స్నుషాదశరథస్యాహం శత్రుసైన్య ప్రతాపినః" "ஸ்நுஷாதஶரதஸ்யாஹம் ஶத்ருஸைந்ய ப்ரதாபிநः" (கசுஉ) என்னுமாப்போலே, அதிலும் இவளுக்கிது ப்ரியமாகையாலே.

(நப்பின்னாய்) திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணன் பிறந்ததுக்குப் பின்பு ஸ்ரீநந்தகோபருக்கு மருமகளல்லாதாருண்டோ, நமக்கென் என்று பேசாதே கிடக்க; (நப்பின்னாய்) என்கிறார்கள்.

ஓடாதவனாய், தோள்வலியுடையனாயு மிருக்குமவனென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி சக்ரவர்த்தித்திருமகனை த்ருஷ்டாந்தமாக்கிக்கொண்டு தாத்பர்ய மருளிச் செய்கிறார் (யுத்தேத்யாதி.) பிற்காலியாதவென்றது - பின்வாங்க வேண்டாதவென்றபடி. "ஓடாத" என்றத்தை தோள்வலிக்கு விஶேஷணமாக்கி, தாத்பர்யாந்தரமருளிச் செய்கிறார் (நடையாடாதவித்யாதி.) நடையாடாதவென்றது - நாட்டில் ஸஞ்சரியாதவென்றபடி. அதாவது - அப்ரதிமமானவென்றபடி. இவன் மிடுக்கைப்பற்ற இவனூரும் பயநிவ்ருத்திக்கு உடலென்னுமத்தைக்காட்டுகிறார் (அங்கோராய்க்குலமித்யாதி.)

இம்மிதுநத்துக்குக்காவலுண்டென்று பயநிவ்ருத்தியுண்டாகைக்கு பயப்ரஸக்தியேதென்ன; அத்தை ஸத்ருஷ்டாந்தமாகக் காட்டாநின்றுகொண்டு நிவ்ருத்திக்குடலானபடியையுபபாதிக்கிறார் (நபிபேதித்யாதி.) "ఆనన్దంబ్రహ్మణోవిద్వాన్ నబిభేతికుతశ్చన" "ஆநந்தம்ப்ரஹ்மணோவித்வாந் நபிபேதிகுதஶ்சந" என்று ஶ்ருதியில், ஆநந்தபதம் - குணவிக்ரஹ விபூதிகளைக்காட்டுமென்று திருவுள்ளம்பற்றி (எம்பெருமான்தோள்வலியையென்றது.)

(கந்தம் கமழும் குழலீ) பரிமளந்தான் நிறம் பெறுவது இவள் திருக்குழலிலே சேர்ந்தவன்று என்கிறது. ✻ வாசஞ்செய் பூங்குழலாளிறே. "సర్వగన్ధః" "ஸர்வரஸ:" (கசரு) என்கிறவனுக்கும் நாற்றம் கொடுக்கும்படி பரிமளம்மிக்க திருக்குழல். (கடைதிறவாய்) க்ருஷ்ணனுடைய பரிமளமும் உன்னுடைய பரிமளமுமாகத் தேங்கிநிற்கிற வெள்ளத்தை, கதவைத் திறந்து புறப்படவிட்டு எங்கள் விடாயைத் தீராயென்கிறார்கள். கிண்ணகத்தை யணைசெய்தாப்போலே, அடைத்துக்கொண்டு கிடவாதே வெட்டிவிடாய்.

மத்யராத்ரியிலே யெழுப்புகிறதென்னென்ன; போதுவிடிந்தது என்ன; விடிந்ததுக்கடையாளமென்னென்ன; (கோழியழைத்தன காண்) கோழி கூவாநின்றதென்ன; ஒருகோழி கூவினவாறே விடிந்ததாமோ வென்ன; (வந்தெங்கும் கோழியழைத்தனகாண்) துடைதட்டி எழுப்புவாரைப்போலே ஸர்வதோதிக்கமாகக்கோழி கூவாநின்றது.

உணர்ந்தவை யெல்லாம் கூப்பிடும், பின்னையுறங்குமதுதான் சாமக்கோழியென்ன; (மாதவிப் பந்தல்மேலித்யாதி) ஸுகஸ்பர்ஶத்தாலே, "నోపజనంస్మరన్" "நோபஜநம்ஸ்மரந்" (கசச)என்னும்படியான படுக்கையிலே யுறங்குகிறவை யுணரும்போது விடிய வேண்டாவோ

கந்தம் - கந்தம் பரிமளிக்கும்படியான குழலையுடையவளென்று ஶப்தார்த்தமாய், பரிமளிக்கையாவது - அதிஶயிக்கையென்று தாத்பர்யமருளிச்செய்கிறார், (பரிமளமித்யாதி.) எடுத்தபாசுரத்துக்கர்த்த மருளிச் செய்கிறார் (ஸர்வேத்யாதி.) "கடை" என்று - கோடியாய், கோடியைத் திறவாயென்னுமர்த்தம் த்வநிக்கையாலே பலித்ததாத்பர்யத்தை யருளிச் செய்கிறார் (க்ருஷ்ணனித்யாதி.) "கடை" என்று - தாழ்ப்பாளாய், அத்தாலே - கதவுதிறக்கை வாக்யார்த்தமாகக் கண்டுகொள்வது.

"கோழி" என்று - ஏகவசநமாயிருக்கையாலே, "அழைத்தன" என்றபஹுவசநம் சேராமையாலே,ஏகவசநமாக்கி ஶப்தார்த்த மருளிச்செய்கிறார் (கோழியித்யாதி.) "எங்கும்" என்றத்துக்கு அவதாரிகையருளிச் செய்கிறார் (ஒருகோழியித்யாதி.) "எங்கும் - கோழி- வந்து- அழைத்தன" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி, "கூப்பிட்டன" என்னுதே, "வந்தழைத்தன" என்றது த்ருஷ்டாந்தம் தோன்றவேண்டியென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (துடையித்யாதி.) ஒருகோழி யெங்குமொக்க ஏககாலத்திலே கூவக்கூடாமையால், இங்கு "கோழி" என்றது - ஜாத்யேகவசநம்.

"மாதவிப்பந்தல்மேல்" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச் செய்கிறார் (ஸுகேத்யாதி.) (నోపజనంస్మరన్నిదంశరీరమ్- நோபஜநம்ஸ்மரந்நிதம்ஶரீரம்) என்னும்படி என்றது-முக்தன் தன் பந்துஜநஸமீபத்தில் வர்த்திக்கும் தான்விட்ட ஶரீரத்தை ஸ்மரியாதாப்போலே, இங்குக்கிடந்துறங்கும் குயிலும், உன்னையும்

வென்ன ; ஒருகுயில் ஒருக்கால் கூவுங்காட்டில் விடிந்ததோவென்ன; (பல்காற் குயிலினங்கள் கூவினகாண்) உன்னுடைய நோக்கும் ஸ்பர்ஶமுமே தாரகமான குயில், விடிந்தும் உன்னைக் காணப்பெறாமையாலே கூவாநின்றது. ஒருகுயில்கூவினது ப்ரமாணமோவென்ன ; உன்னைக் காணப்பெறாமையாலே நாக்கு ஒட்டினமை தோற்ற (இனங்கள் கூவின காண்) இனமினமாகக்குயில்கள் பலகாலும் கூவினகாண்.

(பந்தார்விரலி) பந்தும் கையும் பொருந்தி யிருக்கிறபடி. நாங்கள் சைதந்யத்தை விட்டு அசேதநமாகப்பெற்றிலோமோ. அதென்னென்னில் ; உன்கைக்குள்ளே கிடக்கலாமே ; இப்போது பந்தின் ப்ரஸங்கமென்னென்றால் ; க்ருஷ்ணனோடே பந்தடித்து அவனைத் தோற்பித்து அவனையொருகையாலும் பந்தை யொருகையாலும் அணைத்துக் கொண்டு கிடக்கை. அவன் இவளுக்கு போகோபகரணம் ; பந்து லீலோபகரணம். ஒருகையில் நாரமாய்த்து ; ஒருகையில் நாராயணனாய்த்து. ஒருகையிலே விபூதியாய்த்து ; ஒருகையிலே விபூதிமானாய்த்து. இத்தால் - "அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ" "ஸுவ்ரஸா நாஜமஹோ தாவிஷ்ணுவதீ" (கசரு) என்கிறபடியே உபயஸம்பந்தத்தால் வந்த புருஷகாரபாவம் தோற்றுகிறது. நீங்கள் வந்ததென்னென்ன ; (உன் மைத்துனன்பேர்பாட) நீயுமவனும் மைத்துனமையாடி ஒருவர்க்கொருவர் ஒன்றுக்கு ஒன்பதுசொல்லி இட்டீடு கொள்ளும்போது, உன்பக்ஷத்திலே நாங்கள்நின்று அவன் தோல்விக்கு வசைபாட. அவனுக்குள்ளது

நினையாதே யுறங்குமென்றபடி. "இனம்" என்றதுக்கும், "பல்கால்" என்றதுக்கும் அவதாரிகை யருளிச் செய்கிறார்(ஒருகுயிலித்யாதி.)மாதவிப்பந்தல்மேல் கிடக்கும் குயிலாகையாலே இவர்கள் வளர்த்தகுயிலென்று தோன்றுகையாலே அவை இவளைக்காணாமையால் பல்கால் கூவிற்றனவென்று அதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடையவித்யாதி.) குயில் என்றது - பஹுவசநத்துக்குத் தாத்பர்யத்தை ப்ரஶ்ந ப்ரதிவசநரூபேண அருளிச் செய்கிறார் (ஒருகுயிலித்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே.) "பல்கால்" என்றத்தால் பலித்தது நாக்கு ஒட்டினமையென்று கண்டுகொள்வது.

ஆர்தல் - பொருந்துதலாய் ஶப்தார்த்த மருளிச்செய்கிறார் (பந்துமித்யாதி,) இவ்விஶேஷணத்துக்கு ஹாவத்தை யருளிச்செய்கிறார் (நாங்களித்யாதி.) நித்ராஸமயத்தில் பந்தைச்சொல்லக்கூடுமோவென்னும் ஶங்கையை யநுவதிக்கிறார் (இப்போதித்யாதி.) ஸ்வாபதேஶத்திலே தாத்பர்யமருளிச் செய்கிறார் (இத்தாலித்யாதி.) வசை - தோஷம். பிரிந்தபோது அவன்மர்மம் சொல்லவும், கூடியிருக்கும்போது ஒன்றாய்ச்சொல்லவும் வந்தோமென்றபடி.

எல்லாஞ் சொல்லிக்கொடுக்கைக்கும், இருவரும் ஒன்றாய்ச் செல்லு மன்றுசெல்லவும். பிரிந்தால் தாய்பக்ஷத்திலேயிறே ப்ரஜைகள் நிற்பது.

அவள், அங்ஙனேயாகில் திறந்துகொண்டுபுகுருங்கோளென்ன ; (செந்தாமரைக்கையால்) நீதானேவந்து திறக்கவேணும். செந்தாமரைக்கை - அவனுமாசைப்படும்கை. "ஸ்ரீயஃஶ்ரிய:" "ஹ்ரிவேயஂஶரணஂஹிவ:" (கசசு) என்று ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்துக்கு நீங்கள் அஞ்ச வேண்டாவென்னும் கை. அவள் அப்படியே செய்கிறேமென்று முன்கையில் வளையைக்கடுக்கித் திறக்கப்புக்காள் ; (சீரார்வளையொலிப்ப) வளைக்குச் சீர்மையாவது- கழலாதிருக்கை. ✻சங்குதங்கு முன்கை நங்கையிறே. நாங்களு மந்த த்வநிகேட்டு வாழும்படி. தங்கள் கைகள், "இருகையில் சங்கிவை நில்லா" என்றிறேயிருப்பது. "சூடகமே தோள்வளையே" என்று - அவர்களிருவரும் கூடிப்பூட்டினலிறே இவர்களுக் குள்ளது. இப்பாட்டு, எம்பெருமானர் விஶேஷித்து உகந்த பாட்டு. (வந்துதிறவாய்) யந்த்ரத்தாலே திறக்கவொண்ணாது, உன்னுடைய நடையழகுகாணும்படி வந்துதிற. (மகிழ்ந்து) அர்த்திகள்வாசலிலே நிற்க வேறநுபவ முண்டோ வென்று தர்மத்துக்குத் திறக்கையன்றிக்கே, பேறும் உன்னதாகவேணும். (மகிழ்ந்து) க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்தாலே வந்த ஹர்ஷப்ரகர்ஷம் முகத்திலே தோற்றும்படி என்னவுமாம். (கஅ)

கதவுதிறக்கை கையாலேயாயிருக்க, "செந்தாமரைக்கையால்" என்றவிடத்திலே, "செந்தாமரை" என்று விஶேஷணத்துக்கும் விஶேஷ்யத்துக்கும் க்ரமேண தாத்பர்யமருளிச் செய்கிறார் (அவனுமித்யாதி வாக்யத்வயத்தாலே.) "ஶ்ரியஃஶ்ரிய:" 'ஶரணஂஹிவ:" என்றவநந்தரம், "என்று" என்று ஶேஷம்.

இவர்கள் வளையினெலிகேட்க ஆசைப்படுகைக்கு ஹேதுவை யருளிச் செய்கிறார் (தங்களித்யாதி.) ஹேத்வந்தரமருளிச் செய்கிறார் (சூடகமித்யாதி.) எம்பெருமானர் உகக்கையாவது - மதுகரத்துக்குப் பெரியநம்பி திருமாளிகைக்குத் திருப்பாவை யநுஸந்தாநத்துடனே எழுந்தருள, அப்போது திருக்காப்பைச் சேர்த்திருக்கையாலே அநுஸந்தாநத்தைக்கேட்டு அத்துழாய் திருக்காப்புநீக்கின வளவிலே "இப்பாட்டாகப் பிராட்டியென்று த்யாநித்துமோஹித்தார்" என்றவத்தை நம்பிகேட்டருளி, "உந்துமதகளிறுகாதே" என்றருளிச்செய்தாராகையாலே உகந்திருப்பரென்றபடி. ... ... (கஅ)

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—பதினெட்டாம் பாட்டு. (உந்தித்யாதி) இப்பாட்டில், ஆசார்யன் முன்னுக நம்பிமூத்தபிரானை முன்னிட்டெழுப்பின விட்த்தி

ஆம் எழுந்திராமையாலே அவனை யெழுப்புகைக்காக புருஷகாரபூதை யான நப்பின்னைப் பிராட்டியை யெழுப்புகிறார்கள்.

வ்யா.—(உந்துமதகளிற்றன்) உன்மஸ்தகமான அஹங்காரத்தை வெல்லும் பலத்தையுடையவனாய். (ஓடாத தோள்வலியன்) ஜகத் விலக்ஷணமான ஜ்ஞானபலத்தையுடையவனாய். "ஞானக்கை" என்னக்கடவதிறே. அஹங்காரத்துக்குப் பிற்காலியாத ஜ்ஞாநபலத்தை யுடையவனென்றுமாம். (நந்தகோபாலன்) ஆநந்தநிர்ப்பரனாய் ஆஶ்ரித ரக்ஷகனான ஆசார்யனுடைய. (மருமகளே) ஆசார்யனுக்கு எம்பெருமான் புத்ரவத்விதேயனானால், பிராட்டி மருமகளாகக்குறையில்லையிறே. (நப்பின்னாய்) திருநாமம் (கந்தங்கமழுங்குழலீ) "ஸர்வகந்த:" "ஸுரபிமநோ" என்னுமவனுக்கும் வாஸனையைக் கொடாநிற்கிற பகவத்விஷய வ்யாமோஹத்தையுடையவளே. இத்தால் - ஸ்வவ்யாமோஹத்தாலே ஈஶ்வரனை வஶீகரித்து, ஆஶ்ரிதரக்ஷணத்திலே மூட்டி, அவனை யெல்லாருங் கொண்டாடும்படி பண்ணுகிறாளென்னுமிடம் தோற்றுகிறது. (கடைதிறவாய்) அவனுடைய பரிமளமும் உன்னுடைய பரிமளமும் காட்டிலெறித்த நிலாவாகாமே நாங்க ளநுபவிக்கும்படி, தத்விரோதியான எங்களுடைய அஜ்ஞாநத்தைநீக்காய்.

அஜ்ஞாநம் போகைக்கு ஸத்த்வோத்தரகாலமாயிற்றோ வென்ன; ஆயிற்றென்ன; அதுக்கடையாளமென்னென்ன; (வந்தெங்கும் கோழி யழைத்தனகாண்) ஸத்த்வோத்தரமான காலமானவாறே ஸர்வதோ திக்கமாக பாகவதரெழுந்திருந்து பகவத் கைங்கர்யார்த்தமாக ஒருத்தரை யொருத்த ரெழுப்பாநின்றார்கள் என்ன; அவர்களை யுறங்க வொட்டாமைக்கு நீங்களுண்டேயென்ன; (மாதவிப் பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்) வேதாந்தங்களிலே வேதாந்தார்த் தங்களை யநுபவியாநிற்கும் நாதயாமுநர் போலும் பரமபாகவத ஸமூஹங்கள் ஸத்த்வம் தலையெடுத்தபின்பும் உன்னைக் காணாமையாலே நாக்கு ஒட்டினமை தோற்றப் பலகால் கூவாநின்றனகாண்.

இப்படி யெழுப்பினவிடத்திலும் எழுந்திராமையாலே ஜாலகரந்த்ரத்தாலே பார்த்து (பந்தார்விரலி) என்கிறார்கள். ஸத்த்வம் தலையெடுக்குந்தனையும் சேதநரைக்கொண்டு லீலாரஸம் அநுபவித்து, ஸத்த்வம் தலையெடுத்தவாறே ஒருகையாலே லீலோபகரணபூதரான சேதநவர்க்கத்தையும் ஒருகையாலே இத்தைக் கொண்டு தன்னை லீலாரஸமநுபவிப்பித்த ஈஶ்வரனையு மணைத்துக்கொண்டு கிடப்பதே! இதென்ன ஐஶ்வர்யம்! என்கிறார்கள். இப்போ தெழுந்திருந்து செய்யவேண்டுவது

என்னென்ன; (உன்மைத்துனன்பேர்பாட) நீயுமவனும் பந்தடிக் கையில் உனக்கவன் தோற்ற தோல்விக்கு அவன் திருநாமங்களைப்பாட. ஆகில் கதவைத்தள்ளி உள்ளே புகுங்கோளென்ன; அது கூடாது (செந்தாமரைக்கையால்) ஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸௌகந்த்யங்க ளாலே தாமரைபோன்ற திருக்கையாலே. இவ்விடத்தில் கையாவது - ஜ்ஞாநம்; "ஞானக்கை தா" என்றாரிறே ஆழ்வார். ஜ்ஞாநத்துக்கு ஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸௌகந்த்யங்களாவன;—இதரவிஷய நிவ்ருத்தி-ஸௌந்தர்யம்; ஸ்வபோக்த்ருத்வநிவ்ருத்தி-ஸௌகுமார்யம்; நிரதிஶயப்ரேமாத்மகத்வம் - ஸௌகந்த்யம்; இப்படியிருந்துள்ள ஜ்ஞா நத்தாலே. (சீரார்வளையொலிப்ப) நிரந்தர பகவத்ஸம்பந்தத்தாலே பூர்ணங்களாய் பகவத்ஸம்பந்தஸூசகங்களான ரஹஸ்ய த்ரயார்த்தங் கள் ப்ரகாஶிக்க. (வந்துதிறவாய்) நம்முடைய ப்ரயத்நத்தை அபேக்ஷி யாமல் நீயேவந்து ஸ்வரூபோபாயபுருஷார்த்த விரோதிவிஷயமான தத்தத்ஜ்ஞாநத்தைப் போக்காய். (மகிழ்ந்து) புருஷார்த்தம் உன்ன தாகவேணும். (கஅ)

அ.—பத்தொன்பதாம்பாட்டு. இவள் திறக்கப்புக, நம்முடை யார்க்கு இவள் திறக்க முற்பட்டாளாகவொண்ணாதென்று இவளைத் திறக்கவொட்டாதே கட்டிக்கொடு கிடக்கிற க்ருஷ்ணனையெழுப்பி, அங்கு மறுமாற்றங்கொள்ளாமையாலே மீளவும் அவனை யுணர்த்து கைக்காக அவனை யெழுப்புகிறார்கள். இத்தால் - ஆஶ்ரிதர்க்கு மாறி மாறிப்பரிகைக்கு "என்னடியார் அதுசெய்யார்" என்னுமவனும், "నకశ్చి న్నాపరాధ్యతి" "நகஶ்சிந்நாபராத்யதி" (கசஎ) என்னுமவளும் இரு வருமுண்டென்கை.

பத்தொன்பதாம்பாட்டு (குத்துவிளக்கித்யாதி.) "நப்பின்னைகொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்பா" என்றத்தைக்கடாக்ஷித்து, அவளைக்கட்டிக் கொண்டு கிடக்கிற க்ருஷ்ணனை யெழுப்புகிறார்களென்று திருவுள்ளம்பற்றி, கீழ்ப்பாட்டில் நப்பின்னை கதவுதிறக்கைக்கு உத்யோகித்தமை தோற்றியிருக்க, அதுக்குவிரோதமாகக் கட்டிக்கொண்டிருக்கக்கூடுமோ வென்னும் ஶங்கையை பரிஹரியாநின்றுகொண்டு, அவளோட்டை ஸுகத்தாலேமயங்கிக் கதவுதிறவா மல் உறங்குகையாலே அதுக்காக நப்பின்னையை எழுப்புகிறார்களென்று ஸங்கதி யிடுகிறார் (இவளித்யாதி.) நம்முடையார்க்கென்றது - இவளை புருஷகாரமாகப் பற்றினவர்கள் நம்மையே பற்றினவர்களென்னும் நினைவாலேயென்றபடி. திறக்க வொட்டாதேயென்றது - தானே முற்பட்டுத் திறக்கவேணும் என்னும் நினை வாலே. இத்தாலென்றது - கீழ்ப்பாட்டில் நப்பின்னை திறக்க உத்யோகித்தத்தா லும், இப்பாட்டில் தானே திறக்க க்ருஷ்ணனுத்யோகித்ததாய்ச் சொன்னத்தாலு மென்றபடி.

மூ.—குத்து விளக்கெரியக் கோட்டுக்காற் கட்டின்மேல்
மெத்தென்ற பஞ்ச சயநத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை
எத்தனை போதுந் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய். (கக)

பதம்.	உரை.
குத்துவிளக்கு எரிய	நிலைவிளக்குகள் நாற்புறமும் எரியாநிற்க
கோடு	யானைத்தந்தத்தாற்செய்த
கால்	கால்களையுடைய
கட்டில்மேல்	கட்டிலின்மேலே,
மெத்தென்ற	ம்ருதுவாயிருப்பதாய்,
பஞ்ச	அழகு-குளிர்த்தி-மார்த்தம் - பரிமளம் - வெண்மை என்னும் ஐந்துவிதகுணங்களை யுடைத்தான
சயனத்தின்மேல் ஏறி,	திருப்பள்ளியிலே ஏறியிருந்து,
கொத்து அலர்பூ	கொத்துக்கொத்தாக அலராநின்றுள்ள மலர்களணிந்த
குழல்	திருக்குழலை யுடையளான
நப்பின்னைகொங்கை	நப்பின்னைப்பிராட்டியின் ஸ்தநங்களை
மேல்வைத்துக்கிடந்த	மார்பில்வைத்துக்கொண்டு கண்வளர்ந்தருளுகிறவனாய்,
மலர்மார்பா!	அகன்ற திருமார்பையுடையவனே!
வாய்திறவாய்;	வாய்திறந்து ஒருவார்த்தை சொல்ல வேணும் என்ன;

அவன்வாயைத்திறந்து மறுமாற்றம் சொல்லப்புக; நம்மையொழியத்தாங்களே யெழுப்புவதே! என்று கண்ணாற்காட்டிய ஸம்ஜ்ஞையைப்பார்த்து;

பதம்.	உரை.
மை	அஞ்ஜநாலங்க்ருதமாய்
தடம்	அகன்றிருக்கிற
கண்ணினாய்!	கண்களையுடையளாய்,
பிரிவு	அவன் விஶ்லேஷத்தை
எத்தனையேலும்	க்ஷணகாலமாகிலும்
ஆற்றகில்லாய்!	ஸஹிக்கமாட்டாத நப்பின்னைப்பிராட்டியே!

நீ உன்மணாளனை	நீ உன்னுடைய மணவாளப்பிள்ளையான க்ருஷ் [ணனை
எத்தனை போதும்	ஒருக்ஷணகாலமும்
துயில் எழ ஒட்டாய்;	தூக்கத்தைவிட்டு எழுந்திருக்க வொட்டுகிறதில் [லை
	இப்படி செய்வது,
தத்துவமன்று	உன்ஸ்வரூபத்துக்கும் சேராது ;
தகவு அன்று.	உன் ஸ்வபாவத்துக்கும்சேராது என்கிறார்கள்.

வ்யா.—(குத்துவிளக்கெரிய) அர்த்திகள் வாசலிலே நிற்க ஓரனுபவமுண்டோ வென்கிறார்கள். எங்களைப்போலே ஊராரிசைவும் வேண்டாதே, "கீழ்வானம் வெள்ளென்றது" என்கிற பயமுமின்றிக்கே, "நள்ளிருட்கணென்னையுய்த்திடுமின்" என்று இருட்டுத்தேடவும் வேண்டாதே, பகலையிரவாக்கிக்கொண்டு விளக்கிலே க்ருஷ்ணன் முகத்தைப்பார்த்துக்கொண்டு படுக்கையிலே கிடக்கப்பெறுவதே! இதென்ன ஐஶ்வர்யம்! என்கிறார்கள். "[illegible]" "[illegible]" (கசஅ) என்று இவள் அவனுக்கு ப்ரகாஶகமான விளக்காயிருக்க ஓர் நிலைவிளக்குண்டாவதே!

(கோட்டுக்கால் கட்டில்மேல்) குவலயாபீடத்தின் கொம்பைப் பறித்துக்கொண்டுவந்து செய்த கட்டிலிறே. வீரபத்நியாகையாலே இவளுக்கு இதிலல்லது கண்ணுறங்காது. எங்களைப்போலே ஶ்ரீப்ருந்தாவநந்தேடிப் போகவேண்டாதே உள்ளகத்துக்குள்ளே கூச்சமறக்

பாட்டுக்கெல்லாம் ந்யாயநிஷ்டூரம் சொல்லுகிறார்களென்று தொகுத்துத் தாத்பர்யத்தையருளிச்செய்கிறார் (அர்த்திகளித்யாதி.) "நப்பின்னை கொங்கைமேல்" என்னுமளவுக்கும் ஹார்த்தஹாவத்தை யருளிச்செய்கிறார் (எங்களையித்யாதி.) ஊராரிசைவும் வேண்டாதேயென்றது - நந்தாதிகளெல்லாருங்கூட விவர்களை நோக்கிக்கொண்டிருக்கும்படி மெத்தென்ற பஞ்சசயனத்தின்மேலே கண்வளர்ந்தருளுகையாலே யர்த்தஸித்தம். பகலை யிரவாக்கிக்கொண்டு என்றது-ராத்ரிசெய்யும் க்ருத்யத்தை விடிந்தும்செய்கை. அதாவது - விடிந்தும் விளக்கு வைத்துக்கொண்டு ஸம்ஶ்லேஷித்திருக்கை. நந்தர் திருமகளாகையில் விளக்குண்டாயிருக்கை அர்த்தஸித்தமாயிருக்கவும், "குத்துவிளக்கெரிய" என்று இவர்கள் சொன்னதுக்கு விளக்கிலே க்ருஷ்ணன் முகத்தைப்பார்த்துக்கொண்டு, அத்தால்வந்த அழகின்மிகுதியை அநுபவித்துக்கொண்டிருக்கிறார்களிறேயென்று கீழொருதாத்பர்யமருளிச்செய்து, அவளே விளக்காயிருக்க இதுவும் வேணுமோவென்னும் தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் (அதீவேத்யாதி.) உண்டாவதேயென்றது - உண்டாகவேணுமோ வென்றபடி.

கட்டில்கால் குவலயாபீடத்தின் கொம்பேயாகவேணுமோவென்ன ; அருளிச்செய்கிறார் (வீரபத்நீத்யாதி.) "கட்டில்மேல்" என்றத்தால் - ஒருஶயநக்ருஹ விஶேஷம் அர்த்தஸித்தமாகையாலே, அதுக்கு வ்யாவ்ருத்திபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எங்களை யித்யாதி.) நப்பின்னையும் க்ருஷ்ணனும் கண்

கிடக்கப்பெறுவதே! இதென்ன பாக்யம். (கட்டில்) மாணிக்கத்தாலே செய்யிலும் "கட்டில்" என்று ஜாதிப்பேச்சு. (மெத்தென்ற) நாங்கள் ஆர்த்தைகளாய் வந்துகிடக்க, படுக்கையின் உள்மாநம் புறமாநங் கொண்டாடிக்கொண்டு படுக்கைபொருந்துவதே!, கண்ணுறங்குவதே!. (பஞ்சசயனத்தின்மேலேறி) பஞ்சவிதமான படுக்கையின்மேலேறி. அதாவது - அழகு, குளிர்த்தி, மார்த்தவம், பரிமளம், தாவள்யம், ஆகவிவை. இவர்களுக்கு ❋ மென்மலர்ப்பள்ளிவெம்பள்ளியாயிறே யிருப்பது. அஞ்சு உருவிட்டுச்செய்த படுக்கை யென்றுமாம். பஞ்சாலே செய்த படுக்கை யென்னவுமாம். (மேலேறி) "పాదేనాధ్యారోహతి" "பாதேநாத்யாரோஹதி" (கஉகூ) என்று நாங்கள் மிதித்தேறினு லன்றோ நீ படுக்கையிலேறுவதென்கை.

(கொத்தலர்பூங்குழல் நப்பின்னை) திருக்குழலில் ஸ்பர்ஶத்தாலே கொத்துகொத்தாக அலராநின்றுள்ள பூவையுடைத்தான குழல். காலம் அலர்த்துமாப்போலே, அவனோட்டை ப்ரணயகலஹத்தாலே யலருகை. ❋ வாசஞ்செய்பூங்குழலாளிறே. (கொங்கைமேல் வைத்துக்

வளர்ந்தருளுகைக்கு ஆனை தந்தத்தாலேசெய்து ஶ்லாக்யமாயிருந்ததை "திருப்பள்ளிக்கட்டில்" என்று உபசரித்துச்சொல்ல வேண்டியிருக்க, "கட்டில்" என்று சொல்லலக்கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார் (மாணிக்கத்தாலித்யாதி.) ஆண்டாள் கோபிமாரவஸ்த்தையை ப்ராபித்தருளிச்செய்கையாலே, க்ருஷ்ணன் திருப்படுக்கையானாலும் அந்தஜாத்யநுகுணபாஷணம் பண்ணினுரென்று கருத்து

"பஞ்சசயனத்தில்" என்றபோதே மார்த்தவம் அர்த்தஸித்தமாயிருக்க, "மெத்தென்ற" என்றதுக்கு ஹாவமருளிச்செய்கிறார் (நாங்களித்யாதி.) மாநம் - அளவு; ஸ்வபாவமென்றபடி. இவர்கள் இப்படி விஶேஷித்துச்சொன்னத்தாலே இவர்களார்த்திதோற்றுகைக்கு உபபத்தி யருளிச்செய்கிறார் (இவர்களுக்கித்யாதி.) அஞ்சுருவென்றது - பஞ்சவர்ணமென்றபடி.

"மெத்தென்றபஞ்சசயனத்தின்மேலே-நப்பின்னைகொங்கைமேல் வைத்துக்கிடந்த" என்னவே, ஏறியிருக்கை அர்த்தஸித்தமாயிருக்கவும். "ஏறி" என்று விஶேஷித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பாதேநேத்யாதி.)

"கொத்தலர்" என்றவிடத்தில் - அலராநின்றுள்ளவென்று வர்த்தமானமாகத்தோன்றுகையாலே திருக்குழலோட்டை ஸ்பர்ஶமே யிதுக்குஹேதுவென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருக்குழலித்யாதி.) தாத்பர்யாந்த்ர மருளிச்செய்கிறார் (காலமித்யாதி;) நப்பின்னை கதவுதிறக்கப்புக, க்ருஷ்ணன் "இவள்முற்படலாகாது" என்றுகட்டிக்கொண்டு வரும்போதையில் ப்ரணயகலஹத்தாலே அலர்ந்ததென்று இவ்வாக்யத்துக்குத் தாத்பர்யம். கொத்தாகவரக்கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார் (வாசமித்யாதி;) பரிமளத்தையுண்டாக்குகிற குழல், ஶ்ரத்தையை யுண்டாக்குமென்றபடி.

கிடந்த மலர்மார்பா) கொங்கையைத் தன்மேல் வைத்துக்கிடக்கை; கொங்கைமேல் தன்னை வைத்துக்கிடந்த என்னவுமாம். “ஸ்தநாஸ்த்ரீநைவச க்ரமஃ” “நஸாஸ்தநௌநவவக்ஷஃ” (கரு0) என்றிறே ப்ரணயமிருப்பது. “பர்யாயேண ப்ரஸுப்தஶ்ச” “பர்யாயேண ப்ரஸுப்தஶ்ச” (கருக) என்றுமுண்டிறே. மலையை யண்டைகொண்டு ஜீவிப்பாரைப்போலே. “மலராள் தனத்துள்ளான்” என்னக்கடவதிறே. (மலர்மார்பா) திருமுலைத்தடங்களூறுத்துகையாலே அகன்றிருந்துள்ளமார்பு. இவ்விக்ருதியால், “ஸதைகரூபரூபாய” “ஸதைகரூபரூபாய” (கருஉ) என்றத்தோடு விரோதியாதோவென்னில்; விரோதியாது: அதுஹேயகுணங்களில்லையென்கிறது. ஆஶ்ரிதஸம்ஶ்லேஷத்தில் அவிகாரித்வம் அவத்யமித்தனையிறே. (வாய்திறவாய்) உன் கம்பீரமான மிடற்றோசையாலே ஒரு வார்த்தை சொல்லாய். “ஆர்த்தோ வா யதி வா த்ருப்தஃ” “ஆர்த்தோவாயதிவாத்ருப்தஃ” (கருங) என்ற உனக்கு, உன்னாலல்லது செல்லாதே உன் புறப்பாடு பார்த்திருக்கிற எங்களுக்கு ஒருவார்த்தையுமரிதோ. அவள் புறப்படவொட்டாளாகில் கிடந்தவிடத்தேகிடந்து “மாஶுசஃ-ராமோவஃ” (கருச) என்று ஒரு உக்திநேருகையு மரிதோ.

நப்பின்னைகொங்கை, அவன் பள்ளிகொள்ளும்போது தன்மேலே வைத்துக்கொள்ள ஸம்மதிக்கும்படி எங்ஙனேயென்ன; அருளிச்செய்கிறார் (நஸாஸ்த்ரமித்யாதி.) இரண்டாமர்த்தத்தில் ப்ரமாணபூர்வகம் த்ருஷ்டாந்தம் காட்டுகிறார் (பர்யாயேணேத்யாதி.) கொங்கைமேலே தன்னைவைக்கைக்கு நிமித்தம் ஆதராதிஶய மென்னுமதுக்கு லௌகிகத்ருஷ்டாந்தம் காட்டுகிறார் (மலையித்யாதி.) “கதவுதிறவாய்” என்னாதே, “வாய்திறவாய்” என்றதுக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (உன்னித்யாதி.) “அநந்யா” என்னும்படி ஏகத்ரவ்யம்போலேயிருக்குமவர்களை யெழுப்பிக் கதவுதிறக்கச்சொல்லுகை ராவணாதிகளோபாதியிறே யென்று நினைத்து, கம்பீரமான த்வநியைக்கேட்க வாசைப்படுகிறார்களென்று கருத்து. “திறவாய்” என்றத்தை ப்ரார்த்தநாபரமாக்கி ஒருயோஜனையருளிச் செய்து, திறவாமல் போனாயென்று வ்யதிரேகபரமாக்கி உபாலம்பநம்தோற்றத் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (ஆர்த்தோவாவித்யாதி.) “பரேஷாம் ஶரணாகதஃ। அரிஃ ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்யஃ க்ருதாத்மநா” “பரேஷாம்ஶரணாகதஃ। அரிஃப்ராணாந்பரித்யஜ்யரக்ஷிதவ்யஃக்ருதாத்மநா” என்று-ஶத்ருவிஷயத்தில் ஆர்த்தாநார்த்தவிபாகமற ரக்ஷிக்குமுனக்கு ஆர்த்தைகளாயிருக்குமபலைகள் விஷயத்தில் ஒருவார்த்தையும் துர்லபமாகவேணுமோவென்று கருத்து.

அவள் புறப்படவொட்டாளாகிலென்றது - அவள்போச்யதை உன்னைப் புறப்படவொட்டாதேபோய்த்தாகி லென்றபடி. நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்பனாய், அவள்போக்யதையிலே குமிழ்நீருண்டிருக்குமவனுக்கு வார்த்தையும்சொல்லக்கூடாதென்று, தங்களுக்கு போக்யதை இடைச்

(மைத்தடங்கண்ணினாய்) இவன் மறுமாற்றஞ் சொல்லப்புக, நம்மையொழியத் தாங்களே யெழுப்புவதே! என்று கண்ணாலே "வாய் வாய்" என்று வாயை நெரித்தாள். அழகாலும் பரப்பாலும் கண்ணிலே யகப்பட்டவன் அக்கட்டலைக்கரைகண்டாலிறே நம்மைப்பார்ப்பது. "न जीवेयं क्षणमपि" "நஜீவெயம்க்ஷணமபி" (கருரு) என்னப்பண்ணுங்கண்ணிறே. "மையிட்டெழுதோம்" என்றிருக்கிற எங்களையும் மையிடப்பண்ணினாலன்றோ நீ கண்ணுக்கு மையிடுவது. உன்னுடைய கண்ணிலழகும் பெருமையும் எங்கள் பேற்றுக்குடலென்றிருந்தோம், அது இழவுக்குடலாவதே.

(நீ) அவனைப் பெறுகைக்கு அடியான நீ அவனை விலக்கக்கடவையோ. (உன்மணாளனை) "गोपीजनवल्लभः" "கோபீஜநவல்லப:" (கருகூ) என்றும் "लोकभर्तारम्" "லோகபர்த்தாரம்" (கருஎ) என்றுஞ்சொல்லுகிற பொதுவையொழிய உனக்கே ஸ்வம்மாய் நீ புருவம் நெறித்தவிடத்திலே கார்யஞ்செய்யும்படி பவ்யனாயிருக்கு மிருப்பு எங்களுக்குடலென் றிருந்தோம், அங்ஙனன்றோ, இனி யுனக்கே ஶேஷமென் றிருக்கிறோ மென்கிறார்கள். (எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்காண்) ஒருக்ஷணமும் அவனை யெழுந்திருக்கவொட்டுகிறதில்லை. புணர்ச்சிக்காகப் பிரியவும் பயப்படுவதி.

சுவராகத் தோற்றியாகிலும் அவள் மார்பிலிருந்தே ஆர்த்தைகளான வெங்களுக்கும் ஶோகநிவ்ருத்திக்கு ஒருவார்த்தைமாத்ரம் சொன்னாலாகாதோவென்று இவ்வாக்யத்துக்குக்கருத்து.

"நப்பின்னாய்" என்று ஸம்போதிக்கலாயிருக்க, "மைத்தடங்கண்ணினாய்" என்று சொன்னவர்களுடைய உட்கருத்தை யருளிச்செய்கிறார் (இவனித்யாதி.) (நெரித்தாள்) என்றவநந்தரம் "ஆகையாலே வாய்திறவாதிருக்கவேணும்" என்று ஶேஷம். அவள்கண்ணாலே வாய்நெரித்தவாறே அவன்வாய்திறவாதிருக்கவேணுமோவென்ன; அருளிச்செய்கிறார் (அழகாலுமித்யாதி.) நம்மைப்பார்ப்பதென்றது - நம்முடைய க்லேஶத்தைப்பார்த்து வார்த்தைசொல்வதென்றபடி. "न जीवेयम्" "நஜீவெயம்" என்றதுக்கு, "विना तामसितेक्षणाम्" "விநாதாமஸிதேக்ஷணாம்" என்னுமளவும் விவக்ஷிதம். "மைத்தடங்கண்ணினாய்" என்றதுக்கு தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (மையித்யாதி.) பூர்வ தாத்பர்யவிவரணம் (உன்னுடைய வித்யாதி.)

"மணாளனை" என்னவமைந்திருக்க, "உன்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (கோபீஜநேத்யாதி.)

"எத்தனை" என்றது - எவ்வளவென்றாய், அல்பகாலமென்று விவக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஒருக்ஷணமுமித்யாதி.) எழுந்திருக்கவொட்டாமை

(எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்) அது உன்குறையோ, அவனை க்ஷணகாலமும் பிரியமாட்டாத உன்னுடைய பலஹாநியின் குறையன்றோ. "அகலகில்லேனிறையும்" என்று க்ஷணகால விஶ்லேஷமும் பொறுக்கமாட்டாமையாலே யவனோட்டை நித்யஸம்யோகம் எங்களுடைய லாபத்துக்குடலாகையொழிய விபரீதபலமாவதே.

(தத்துவம் அன்றுதகவு) தத்வம் - ஸத்யம். தகவன்று - தர்மமன்று. எங்களறியாமை சொல்லுகிறோமல்லோம், மெய்யே தர்மமன்று. (தகவு தத்துவமன்று) "𑌪𑌾𑌪𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾 𑌶𑍁𑌭𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾" "வாவாநாம்வாஶுஹாநாம்வா" (௱எ) என்னுமுனக்கு "𑌨𑌿𑌹𑌤𑍍𑌯 𑌰𑌾𑌵𑌣𑌂 𑌸𑌂𑌖𑍍𑌯𑍇" "நிஹத்யராவணம்ஸம்க்யே" (கஉஅ) என்று அவனில் வாசியில்லையென்றிருக்கிறோம். அதவா, (தத்துவமன்று) தத்வம் - ஸ்வரூபம். உன்ஸ்வரூபத்துக்கும்போராது. (தகவன்று) உன்னுடைய ஸ்வபாவத்துக்கும் போராது. உன்னுடைய புருஷகாரபாவத்துக்கும் போராது; க்ருபைக்கும் போராது. ... ... (௧௯)

க்கு ஹேதுவையருளிச்செய்கிறார் (புணர்ச்சிக்கித்யாதி.) ஸம்ஶ்லேஷித்திருக்கும்போதே விச்சித்ய புநஸ்ஸம்ஶ்லேஷிக்குமதுக்கும் அஞ்சுகையாலே ஒரு க்ஷணமுமெழுந்திருக்கவொட்டாயென்று தாத்பர்யம்.

"பிரியாய்" என்னாதே, "பிரிவாற்றகில்லாய்" என்று - பிரிவை ஸஹிக்கமாட்டாயென்கையாலே, அதுக்குச்சேரத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அதுவித்யாதி.) பலஹாநியென்பானென், உங்களுக்காகவன்றோ நானிருக்கிறதென்று அவளுக்குக்கருத்தாக வருளிச்செய்கிறார் (அகலகில்லேனித்யாதி.)

மெய்யேதர்மமன்றென்றது - தர்மமன்றென்று சொல்லுகிறது ஸத்யமேயென்றபடி. தகவு - க்ருபையானது, தத்துவமன்று-ஸ்வாபாவிகமன்றென்று ஶப்தார்த்தம் விவக்ஷித்து, தாத்பர்யமருளிச்செய்கிறார் (பாபாநாமித்யாதி:) நிர்க்ருணராகச் சொல்லப்பட்ட பெருமாளுக்கும் க்ருணவதியாகச் சொல்லப்பட்டவுனக்கும் வாசியில்லையென்றுகருத்து.

ஸ்வரூபஸ்வபாவங்களையடைவேவிவரிக்கிறார் (உன்னுடையவித்யாதி.(௧௯)

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—பத்தொன்பதாம்பாட்டு. (குத்தித்யாதி) இப்பாட்டில் புருஷகாரபூதையான பிராட்டி கதவுதிறக்கப்புக, நம்முடையார்க்கு இவள் முற்படுவதே! என்று அவளை எழுந்திருக்க வொட்டாமல் கட்டிக்கொண்டு கிடக்கிற ஈஶ்வரனை யெழுப்பி, அங்கு மறுமாற்றம் பிறவாமையாலே, மீளவும் அவள்தன்னையே யெழுப்புகிறார்கள்.

வ்யா.—(குத்துவிளக்கெரிய) ஜ்ஞாநம் ப்ரஜ்வலிக்க. (கோட்டுக்கால் கட்டில் மேல்) சதுர்த்தந்தியான குவலயாபீடத்தினுடைய தந்தங்களாலே செய்யப்பட்ட கால்களையுடைய கட்டில்மேல். இத்தால் - சதுர்விதகர்த்ருத்வ மூலமான அஹங்கார கார்யமான ஶேஷத்வேகர்த்ருத்வம் ஜ்ஞாத்ருத்வேகர்த்ருத்வம் கர்த்ருத்வேகர்த்ருத்வம் போக்த்ருத்வேகர்த்ருத்வமாகிற கால்களையுடைத்தாய், அந்த கர்த்ருத்வ விஷயமான தர்மார்த்த காம மோக்ஷங்களாகிற பட்டங்களை யுடைத்தாய் தததநுஷ்ட்டநாபிநிவேஶமாகிற கச்சையை யுடைத்தாயிருக்கிற கட்டில் மேலே என்கிறது. (மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி) ஶேஷத்வாதி கர்த்ருத்வ ராஹித்யத்தாலே ம்ருதுவான அர்த்த பஞ்ச கஜ்ஞாநமாகிற படுக்கைமேலேறி.

(கொத்தலர் பூங்குழலித்யாதி) வர்க்கம் வர்க்கமாக விகஸிதஜ்ஞாநரான ஆத்மாக்களாகிற புஷ்பங்களையுடைய பகவத்விஷய ஸ்வவ்யாமோஹமாகிற அளகபாரத்தையுடைய நப்பின்னைபிராட்டியுடைய போகோபகரணமான பந்தியை ஸ்வவிஷயத்திலே வைத்துக்கொண்டு, அத்தால் விகஸிதஹ்ருதயனானவனே. (வாய்திறவாய்) நீ வாய்திறந்து ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும் என்றவாறே, அவன் வாய் திறக்கப்புக;

அவனை, நீ க்ரமம் தப்பி நடப்பதே! என்று கண்ணாலே அதட்ட, அவனை யெழுப்புகைக்காக மீளவும் அவளையெழுப்புகிறார்கள் (மைத்தடங்கண்ணினாய்) ஶுத்தஸத்வமாகிற அஞ்ஜநத்தை யுடைத்தாகையாலே விஶ்ருங்கலமான ஸ்வரூபயாதாத்மயஜ்ஞாந முடையவளே. (நீ) ஸ்வரூபயாதாத்ம்யதர்ஶிநியானநீ. (உன்மணாளனை) உனக்கு வல்லபனான க்ருஷ்ணனை. (எத்தனைபோதுந் துயிலெழ வொட்டாய்காண்) அத்யல்பகாலமும் நித்ராப்ரதமான படுக்கையில் நின்றுமெழுந்திருக்க வொட்டுகிறிலை. ஒட்டுதல் - ஸம்மதித்தல்.

ஏனென்னில் (எத்தனையேலும் பிரிவாற்றகில்லாய்) ஸம்ஶ்லேஷார்த்தமான விஶ்லேஷமும் பொறுக்குகிறிலை; அது உன்குற்றமோ, உன் பலஹாநியின் குறை. ஆல் ஆஶ்சர்யே.

(தத்துவமன்றுதகவு) ஆகிலும் புருஷகாரபூதையான உனக்கு எம்பெருமானை நம்மோடே சேரவொட்டாமல் பண்ணுகை ஸ்வரூபமன்று. ... ... கக.

அ.—இருபதாம்பாட்டு. அவனுக்கும் எங்களுக்கும் அடியான நீ எங்களை நீராட்டுவுதி என்று க்ருஷ்ணனையும் நப்பின்னைப் பிராட்டியையும் கூட எழுப்புகிறார்கள்.

இருபதாம்பாட்டு (முப்பத்துமூவரித்யாதி.) "உன்மணாளனை - எம்மைநீராட்டு - விமலாதுயிலெழாய்" என்றபதங்களைக்கடாக்ஷித்து அவதாரிகை யருளிச்செய்கிறார் (அவனுக்குமித்யாதி.)கீழ்ப்பாட்டில்க்ருஷ்ணனையும்நப்பின்னையையும்

மூ.—முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று
கப்பந் தவிர்க்குங் கலியே துயிலெழாய்
செப்ப முடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பங் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
உக்கமுந் தட்டொளியுந் தந்துன் மணாளனை
இப்போதே யெம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். (௨0)

பதம்.	உரை.
முப்பத்துமூவர் அமரர்க்கு	முப்பத்துமூன்றுவகையான தேவர்களுக்கு
முன்சென்று	துன்பம்வருதற்குமுன்னே அவர்கள் வினைத் தவிடத்திற் சென்று
கப்பம்தவிர்க்கும்	அவர்கள் நடுக்கத்தைப் போக்கத்தக்க
கலியே!	மிடுக்குடையவனே!
	நாங்கள் கண்டுவாழும்படி
துயிலெழாய்;	திருப்பள்ளியுணர்ந்துவரவேணும்;
செப்பமுடையாய்	ஆஸ்ரிதரைக்காக்குமவனாய்
திறலுடையாய்	அவர்கள் விரோதிகளை யடக்கும் வல்லமை யுடையனாய்,
செற்றார்க்கு	அவர்கள் விரோதிகளுக்கு
வெப்பம்கொடுக்கும்	துன்பத்தையே பண்ணுகின்றுள்ள
விமலா!	பரிசுத்தனானவனே!
துயிலெழாய்;	துயிலொழிந்துவரவேணும்;
செப்பு அன்ன	பொற்கலசத்தையொத்த
மெல்முலை	மிகமெல்லிதான ஸ்தநங்களையும்
செவ்வாய்	பவளம்போற்சிவந்த வாயையும்
சிறுமருங்குல்	நுண்ணிதான இடையையுமுடையவளாய்,
நப்பின்னைநங்காய்!	ஸ்த்ரீத்வபூர்த்தியையுடைய நப்பின்னைப் பிராட்டியே!
திருவே!	பெரியபிராட்டியாரையொத்தவளே!
துயிலெழாய்,	துயிலொழிந்துவந்து;
	எங்கள்நோன்புக்குப் பரிகரமான
உக்கமும் தட்டொளியும்தந்து	ஆலவட்டமும் கண்ணாடியும்கொடுத்து
உன்மணாளனை	உன்மணவாளனை க்ருஷ்ணனையும் [ளையும்
எம்மை	விரஹத்தால்மெலிந்த ஶரீரமுடைய எங்க
இப்போதே	இந்தக்ஷணத்திலேயே
நீராட்டு.	ஸம்ஶ்லேஷிக்கும்படி செய்யவேணு மென்று இரக்கிறார்கள்.

வ்யா.— (முப்பத்துமூவர்) ரக்ஷணத்துக்கு ஸங்க்யாநியதி யுண்டோ. பஞ்சலக்ஷம்குடியில் பெண்களானால் ரக்ஷிக்கலாகாதோ. ஆர்த்தியே கைம்முதலாக ரக்ஷிக்குமவனல்லையோ. (அமரர்க்கு) எல்லாவளவிலும் சாவாதார்க்கோ உதவலாவது, உன்னோக்குப் பெறுவிடில் சாகும் எங்களுக்கு உதவலாகாதோ. முகாந்தரத்தாலே ஜீவிப்பார்க்கோ உதவலாவது, என்முகத்தாலே ஜீவிப்பார்க்கு உதவலாகாதோ. ப்ரயோஜநாந்தர பரருமாய்மிடுக்கருமானார்க்கோஉதவலாவது,

---

எழுப்பியிருக்கவும், மீளவும் இப்பாட்டில் இருவரையுமெழுப்புகைக்கு ஸங்கதி எங்ஙனேயென்னில்; "துயிலெழவொட்டாய்காண், தகவன்று" என்று - பெண்களாற்றாமையாலே நம்மைச்சில குற்றங்களைச்சொன்னார்களேயாகிலும் திருவுள்ளம்பார்த்தவிடத்தில் விண்ணப்பம் செய்யவேணுமேயென்று நப்பின்னைப் பிராட்டிபேசாதே பள்ளிகொண்டருள, இவளைப்பற்றினாலும் கார்யம்செய்யக் கடவவன் இவள் தன்னையும் திறக்கவொட்டாதேபோகப்ரஸக்தனாய்ப்பேசாதே கிடந்தாயென்றவாறே, சிவிட்கென்று கிடக்கிறானாகக்கூடுமென்று பார்த்து, நீ முன்பு ஆர்த்தரக்ஷணம்பண்ணி ஆர்ஜித்தகுணங்களெல்லாம் இப்போதெழுந்திராமையாலே யிழக்கக்கிடாய் புகுகிறாயென்று சொன்னவிடத்திலும் அவன் வாய்திறவாமையாலே, நப்பின்னைப்பிராட்டிதிறத்தில் ப்ரணயரோஷத்தாலே சொன்னவையும் இவனுக்கு அஸஹ்யம்போலே யிருக்குமென்று பார்த்து, இவளுடைய தேஹகுணங்களையும் ஆத்மகுணங்களையும் சொல்லியேத்தி, அவன் தனக்குரியனோ, பரதந்த்ரனானவனை நலிகிறதென்னென்று எங்களுக்கு மவனுக்கும் கடவையான நீ எங்களபேக்ஷிதங்களைத் தலைக்கட்டித்தர வேண்டாவோ வென்று நப்பின்னைப்பிராட்டியை அர்த்திக்கிறார்களென்று ஆறாயிரத்தில் சொன்னஸங்கதி இங்கும் கண்டுகொள்வது.

"முப்பத்துமூவர்" என்றதுக்கு - முப்பத்துமுக்கோடி தேவரென்னு மர்த்தமாய் "அமரர்" என்றபோதே இது அர்த்தஸித்தமாயிருக்கவும் சொன்னதுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார் (ரக்ஷணத்துக்கித்யாதி வாக்யத்ரயத்தாலே.) அஷ்டவஸுக்கள், ஏகாதஶருத்ரர், த்வாதஶாதித்யர், அஶ்விநிகள் என்று முப்பத்துமூவரென்று ஸங்க்யையாகவுமாம்.

"ந ம்ரியந்த இத்யமரா:" "ந ம்ரியந்த இத்யமரா:" என்ற வ்யுத்பத்தியைக் கடாக்ஷித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எல்லாவளவிலுமித்யாதி.) அமரபதத்தில் ரூட்யர்த்தமான தேவத்வத்தைத் திருவுள்ளம்பற்றி, "அக்நிமுகா வை தேவா:" "அக்நிமுகா வை தேவா:" என்ற ப்ரமாணஸித்தமான ஸ்வபாவத்தை நினைத்துத் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (முகாந்தரேத்யாதி.) அஷ்டவஸுக்களுடைய முகத்தாலே யென்றும் சொல்லுமவர்கள்.

தேவர்களுடைய ஸ்வபாவாந்தரத்தையும், புல்லிங்கத்தையும்பற்ற மூன்றும் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரயோஜநாந்தரேத்யாதி.)

அநந்யப்ரயோஜநை களுமாய் அபலைகளுமா யிருப்பார்க்கு உதவலாகாதோ. (முன்சென்று) நோவு வருவதற்குமுன்னே சென்று. ஏற்கவே ரக்ஷிக்கக்கடவநீ நோவுபட்டுவந்த எங்களை ரக்ஷிக்கலாகாதோ. (சென்று) நீசென்று உதவக்கடவ எனக்கு, உன்வாசலிலே வந்த எங்களுக்கு உதவலாகாதோ. உன்பக்கலிலே வருகை மிகை என்னுமவ னல்லையோ. * எழுது மென்னுமிது மிகையாயன்றோ இருப்பது. (கப்பம் தவிர்க்கும்) "கம்பம்" என்கிற வித்தை "கப்பம்" என்று வலித்துச் சொல்லுகிறது; அதாகிறது - நடுக்கம். கம்பம் தவிர்க்கையாவது - "ദേവാസ്സ്വർഗം പരിത്യജ്യ" "ദേവാ വാസുദേവമുപസ്ഥിതാഃ" (கடுகூ) என்று— அஸுர ராக்ஷஸாதிகளாலே குடியிருப்பு மகப்பட இழந்து க்லேஶித்த அத்தைத் தவிர்க்கை. நாட்டார் நடுக்கத்தை தவிர்க்கக்கடவநீ எங்களை நடுங்கப்பண்ணுதே கொள்ளாய். துக்கநிவ்ருத்தியை யாசைப்பட்ட தேவர்களுக்கோ உதவலாவது, நீ உணரும்படி காண ஆசைப்பட்டார்க்கு உதவலாகாதோ. (கலியே) மிடுக்கையுடையவனே. அபலைகளான எங்களுக்கு உன்மிடுக்கை யொழியவுண்டோ. அரணிமையையுடையவனே யென்றுமாம். (துயிலெழாய்) தேவதைகளுக்குக் குடியிருப்பும் ஜீவநமும்போலே எங்களுக்கு நீ உணரும்படி காண்கை.

(செப்பமுடையாய்) ஆஶ்ரிதர்க்குச் செவ்வையழியா திருக்குமவனே, எங்களுக்குச் செவ்வையழியாதிருக்கவேண்டாவோ. செப்பம்— ரக்ஷையென்றுமாம். (திறலுடையாய்) திறல்— பராபிபவந ஸாமர்த்யம். அநாஶ்ரிதர்க்கன்றோ அணுகவொண்ணுது. (செப்பமுடையாய் திறலுடையாய்) பாண்டவர்களுக்குச் செவ்வியனுய் துர்யோதநாதிகளுக்கு அநபிபவநீயனுனவனே. திறல் - மிடுக்காகவுமாம்.

"கப்பம்தவிர்க்கும்" என்றதுக்குத் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறுர் (துக்கேத்யாதி.) "கப்பம்தவிர்க்கும்" என்றபோதே அர்த்தஸித்தமாயிருக்கவும், மிடுக்கை மீளவும் சொன்னதுக்கு ஹாவமருளிச்செய்கிறுர் (அபலைகளித்யாதி) அரணிமையை என்றது - கல்மதிளிட்டாப்போலே யிருக்கும் ஆழ்வார்களால் வந்த வரணையென்றபடி.

இப்பாட்டில், "துயிலெழாய்" என்று இருக்கால் சொல்லுகை ஆதராதிஶய த்தாலே யென்று திருவுள்ளம்பற்றி, அவ்வாதரம் வருகைக்கு நியாமகமாகக் கீழைக்கடாக்ஷித்து ஹாவமருளிச்செய்கிறுர் (தேவதைகளுக்கித்யாதி.)

செப்பம் - ஆர்ஜவம். "கலியே" என்றபதத்துக்கு மிடுக்குச்சொன்ன பக்ஷத்துக்குச்சேர, செப்பம் - ரக்ஷையென்று கண்டுகொள்வது. "திறலுடையாய்" என்றதுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறுர் (அநாஶ்ரிதர்க்கித்யாதி;) எங்களுக்கு அணுகவொண்ணுதோவென்று கருத்து. "கலியே" என்றதுக்கு - அரணிமை சொன்னபக்ஷத்திலே அர்த்தாந்தர மருளிச்செய்கிறுர் (திறலித்யாதி.)

(செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா) ஆஸ்ரிதவிரோதிகளுக்கு துக்கத்தைப்பண்ணும். "செய்குந்தாவரும் தீமை" இத்யாதி, இப்போது அநுகூலர் பக்கத்திலாய்த்தோ. (விமலா)என்றது-ஸம்பந்தமொத்திருக்க, ஆஸ்ரிதர்க்காகக் கண்ணற்று அழிக்கவல்ல ஶக்தி. (துயிலெழாய்) அம்பு எய்யவேணுமோ எங்களுக்கு, எழுந்திருந்து நோக்க வமையாதோ.

(செப்பன்ன மென்முலை) அவன்பக்கல் மறுமாற்றம் பெறுமையாலே புருஷகார பூதையான நப்பின்னைப் பிராட்டியை யெழுப்புகிறார்கள். மேல் அவன் அகப்படுஞ் சுழிகள் சொல்லுகிறது. நிதி இட்டுவைக்கும் செப்புப்போலே அவன் கிடக்குமிடம். "மலராள் தனத்துள்ளான்" என்னக்கடவதிறே. செப்புப்போலே ஸந்நிவேஶமென்னவுமாம். (மென்முலை) விரஹஸஹமன்றிக்கே யிருக்கை. (செவ்வாய்) அவனைத் தனக்காக்கிக்கொள்ளும் ஸ்மிதம். அந்த முலையிலே யிருந்து அநுபவிக்கும் ஜீவநம். (சிறுமருங்குல்) அதரத்தை புஜிக்கும்போது துணுக்கோடே யிருக்கவேண்டி யிருக்கை. (சிறு மருங்குல்) மேலுங் கீழுங்கொண்டு "இடையுண்டு" என்று அறியும்படி பயஸ்த்தாநமாயிருக்கை. (நப்பின்னைநங்காய்) பூர்ணையானவளே. பூர்த்தியாகிறது -- அநுக்த ஸௌந்தர்யஸமுச்சயம். (திருவே) "ஒசிந்த வொண் மலராள்" என்னுமாப்போலே ஸம்ஶ்லேஷத்தாலே வந்த துவட்சி. (துயிலெழாய்) நீ யுணர்ந்து எங்கள் ஸத்தையை யுண்டாக்காய். (திருவே துயிலெழாய்) பிராட்டியைப்போலே, ஆஸ்ரிதைகளான எங்களுக்காக உணரவேண்டாவோ; ஆஸ்ரிதர்க்காகவன்றோ பத்துமாஸம் உறங்காதிருந்தது.

கண்ணற்று-நிர்த்தயனாய். அசுரர்பக்கல் செய்யும் செப்பம், அநுகூலரான வெங்கள்பக்கலிலே யாய்த்தோவென்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இப்போதித்யாதி.)

"செப்பன்ன" என்றது - செப்புக்கு ஸத்ருஶமென்றாய், அதுதான் கார்யத்தாலேயென்னுதல்; ஆகாரத்தாலே யென்னுதல். முந்தினத்தையருளிச்செய்கிறார் (நிதியித்யாதி.) இரண்டாவது (செப்பித்யாதி.) ஸ்தநங்களுக்கு காடிந்யம் சொல்லவேண்டியிருக்க, மார்த்தவம் சொல்லக்கூடாமையாலே தாத்பர்ய மருளிச்செய்கிறார் (விரஹேத்யாதி.)

அதராம்ருதபரமாக தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (அந்தவித்யாதி.) அவனகப்படும் சுழிகளைச்சொல்லும் ப்ரகரணத்துக்குச்சேர, "நங்காய்" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பூர்த்தியித்யாதி,)

"திரு" என்றதுக்கு - ஸம்போகஶ்ரீயையுடையவளென்று ஶப்தார்த்தமுட்கொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒசிந்தவித்யாதி.)

எழுந்திருந்து உங்களுக்குச் செய்யவேண்டுவ தென்னென்ன; (உக்கமும் இத்யாதி) உக்கம் - ஆலவட்டம். தட்டொளி – கண்ணாடி. பறையென்றுமாம். (உன் மணாளனை) உன்புருவம் நெறித்தவிடத்திலே கார்யஞ் செய்யும்படி பவ்யனானவனை. உக்கத்தோபாதி அவனையும் இவள் தரவேணு மென்கை. உன் மணாளனை யிப்போதே யெம்மை நீராட்டு என்றுமாம். (இப்போதே) பிற்றைப்போதைக்கு இராத எங்களை. (எம்மை) "ஏஹிபஶ்யஶரீராணி" "ஏஹிபஶ்யஶரீராணி" (கசூ0) என்று விரஹம் தின்றவுடம்பைக் காட்டுகிறார்கள். (எம்மை) "பேய்ப்பெண்ணே" என்றும், "நாயகப் பெண்பிள்ளாய்" என்றும் தங்களில் தாங்கள்சொல்லுமித்தனை, பேற்றில்வந்தால் எல்லாரு மொத்திருப்பர்கள் என்றுமாம். (எம்மை) எங்களையும் அவனையுங்கூட முழுக்கூட்ட வேணும் என்றுமாம். (நீராட்டு) "தாரா:பித்ருக்ருதா இதி" "தாரா:பித்ருக்ருதா இதி" (கசூக) என்னுமாப்போலெ இவர்களுகப்பது இவள் தந்த க்ருஷ்ணனென்று. பெருமாள், பிராட்டியுடைய ஸௌந்தர்யாதிகள் கிடக்க ஐயர் பண்ணிவைத்த விவாஹமென்று உகப்பர்; அதுபோலே, க்ருஷ்ணன்பக்கல் ப்ராப்தியும் போக்யதையும் கிடக்க இவள் தந்த க்ருஷ்ணனென்று உகப்பர்கள். (உ0)

"உக்கமும்தட்டொளியும் - உன்மணாளனையும்-தந்து" என்று அந்வயித்து தாத்பர்யமருளிச்செய்கிறார் (உக்கத்தோபாதி இத்யாதி.) "மணாளனை" என்ற ஐகாரம்-அவ்யயமாய், "உன்மணாளனைவன் - உக்கமும்தட்டொளியும் தந்து எம்மை நீராட்டும்படி - துயிலெழாய்" என்று அந்வயமாகக்கருதி தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (உன்மணாளனித்யாதி.) இப்பக்ஷத்தில், "நீராட்டு" என்ற விடத்தில் அகாரம் கடைக்குறைத்தலாக விருக்கிறதென்று கொள்வது.

"மணாளனைத்தந்து" என்றபக்ஷத்தில் சேரத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (எங்களையுமித்யாதி.) "தந்து-நீராட்டு" என்று ப்ரார்த்தனை தோற்றுகையாலே இதுக்கு நியாமகமருளிச்செய்கிறார்(தாரா இத்யாதி.) ஶ்லோகவாக்யவிவரணம் (பெருமாளித்யாதி.) உ0

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—இருபதாம்பாட்டு. (முப்பத்துமூவ ரித்யாதி) இப்பாட்டில், மீளவும் எம்பெருமானை யெழுப்பி, அங்கு மறுமாற்றங் காணாமை யாலே நப்பின்னைப் பிராட்டியை யெழுப்பி, வந்த கார்யத்தை அறிவிக்கிறார்கள்.

வ்ரா.—(முப்பத்துமூவர்) மூப்பத்து மூவரான - அபரிமிதஸங்க்யாதரான. இத்தால் - துர்லபத்வஞ் சொல்லுகிறது. (அமரர்க்கு)

ஜ்ஞாநஸங்கோச மில்லாதவர்களுக்கு. "[illegible]" "[illegible]" என்னக்கடவதிறே. (முன்சென்று) அவர்களுக்கு ப்ரக்ருதி ஸம்ஸர்க்கத்தாலே ஜ்ஞாநஸங்கோசம் வருவதற்கு முன்னே, ரக்ஷகனை தான் அவதரித்து நின்று. (கப்பம் தவிர்க்கும்) அவர்களுக்கு ஜ்ஞாநஸங்கோச நிபந்தநமாய் வரும் பீதியைப் போக்கடிக்கிற. (கலியே) ஸாமர்த்யத்தை யுடையவனே. (துயிலெழாய்) நீ நித்ரையில் நின்றும் எழுந்திருக்கவேணும்.

(செப்பமுடையாய்) ஆஶ்ரிதர் தன்னை யநுபவிக்கும்படி தான் பாங்கா யிருக்கிறவனே. (திறலுடையாய்) அநாஶ்ரிதர்க்குக் கிட்டவொண்ணாதவனே. (செற்றார்க்கு வெப்பங் கொடுக்கும் விமலா துயிலெழாய்) பாகவத விரோதிகளுக்கு நடுக்கத்தைக் கொடுக்கும் ஶக்தியோக முடையவனே. இத்தால் – பயநிவ்ருத்தி மாத்ரமன்றிக்கே, பயஹேது நிவ்ருத்தியும் ரக்ஷககார்ய மென்றதாய்த்து. (துயிலெழாய்) நித்ராப்ரதமான படுக்கையில் நின்றும் எழுந்திருக்க வேணும்.

அங்கு மறுமாற்றம் பிறவாமையாலே அவனை யெழுப்புகைக்காக நப்பின்னைப் பிராட்டியை யெழுப்புகிறார்கள் (செப்பன்னமென் முலை யித்யாதி) விஷயக்ராஹகமாய் விஷயவிரஹாஸஹிஷ்ணுவாயிருக்கிற பகவத்விஷய பக்தியையும் அவனுக்கு மிகவும் போக்யமான பரமபக்தியையும் விஷயாந்தரவைராக்யத்தையு முடையவளாய், நப்பின்னை என்கிற திருநாமத்தையு முடையையாய், ப்ராப்யத்வ புருஷகாரத்வோபயுக்தகல்யாணகுணபூர்ணையான பெரிய பிராட்டியாரே! நீ படுக்கையில் நின்று மெழுந்திருக்கவேணும்.

நானெழுந்திருந்து உங்களுக்குச் செய்யவேண்டுவ தென்னென்ன (உக்கமுமித்யாதி) உக்கம்—ஆலவட்டம். தட்டொளி—கண்ணாடி, ஸ்வாபதேஶத்தில், கைங்கர்யத்தில் அஹங்காரமமகாரநிவ்ருத்தியும் யதாவஸ்த்தித ஸ்வரூபஜ்ஞாநமும் இவ்விரண்டையுங்கொடுத்து உனக்கு பவ்யனை விஶ்வரனை இந்தக்ஷணத்திலே மற்றைக்ஷணத்துக்குப் பிழையாதவெங்களை ஸம்ஶ்லேஷிப்பியென்கிறார்கள். உன்மணாளனையும் தந்து நீராட்டு என்கிறார்களாகவுமாம். இந்த யோஜனையில் பிராட்டிக்கு எம்பெருமான் அத்யந்த விதேயனென்னு மிடம் தோற்றுகிறது. உ0.

இருபத்தோராம்பாட்டு (ஏற்றவித்யாதி.) கீழ் நப்பின்னைப் பிராட்டியை புருஷகாரமாக அத்யவஸித்து எழுப்பினவர்கள் அவளால் கார்யமில்லையென்று தாங்களே க்ருஷ்ணனை எழுப்புகிறது சொல்லக் கூடாமையாலும், நப்பின்னைப் பிராட்டியைப் பற்றுகை பலவ்யாப்தமாயிருக்குமாகையால் அவளால் கார்யமில்லை யென்கை சேராமையாலும், இனிமேல் நப்பின்னையை மீளவும் எழுப்புகிற

அ.—இருபத்தோராம்பாட்டு. நப்பின்னைப்பிராட்டி, போகத்திலே வந்தால் நானு முங்களிலே யொருத்தியன்றோ, நாமெல்லாருங் கூட க்ருஷ்ணனை அர்த்திக்க வாருங்கோளென்ன; அவன்குணங்களிலே தோற்றார் தோற்றபடி சொல்லி யெழுப்புகிறார்கள்.

மூ.—ஏற்ற கலங்க ளெதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே யறிவுறாய்
ஊற்ற முடையாய் பெரியா யுலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்
மாற்றா ருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். ()

பதம்.	உரை.
ஏற்ற கலங்கள்	சுரந்தபாலையேற்றகலங்களெல்லாம்
எதிர் பொங்கி	எதிரேபொங்கி
மீது அளிப்ப	வேலைவழியும்படியாக
மாற்றாதே	இடைவிடாமல்
பால் சொரியும்	பாலைச்சொரியாநிற்பனவாய்,
வள்ளல்	பெண்களுங்கூட அணையலாம்படி உதாரமான
பெரும்பசுக்கள்	பருத்த பசுக்களை
ஆற்றப்படைத்தான்	தொகையின்றிக்கேயுடையரான நந்தகோபர்பெற்ற
மகனே!	பிள்ளையானவனே!
அறிவுறாய்;	திருப்பள்ளியுணரவேணும்;
ஊற்றம் உடையாய்	வேதத்தால் ப்ரதிபாதிக்கப்படுகையாகிற திண்மையை யுடையனாய்,
பெரியாய்	அந்தவேதத்தாலு மறியப்படாமையாகிற பெருமையையுடையனாய்,
உலகினில்	லோகத்தில்
தோற்றமாய்நின்ற	ஆஸ்ரிதபக்ஷபாதம் விளங்கும்படிநிற்கிற
சுடரே!	தேஜோரூபனானவனே!
துயிலெழாய்;	துயிலொழிந்துவரவேணும்;

ப்ரஸங்கமில்லாமையாலும், நப்பின்னையும் உங்கள் கார்யம்செய்கிறோமென்றத்ய வஸித்ததாகத் திருவுள்ளம்பற்றி வார்த்தைசொல்லும்போது தானும் இவர்களோடொருத்தியாகவே சொல்லி கடிப்பிக்கும் ப்ரகாரம்தோற்ற அவதாரிகை யருளிச்செய்கிறார் (நப்பின்னை இத்யாதி.) தோற்றார் தோற்றபடி யென்றது - தோற்றாராய்த் தாங்கள் தோற்றபடியையென்றபடி. இதுக்கு "மாற்றாருனக்கு வலிதொலைந்துன் வாசல்கணாற்றாது வந்துன்னடிபணியுமாபோலே" என்றதிலே நோக்கு.

மாற்றார்	ஶத்ருக்களானவர்கள்
உனக்கு	உன்வலிமையைக்கண்டு
வலிதொலைந்து	தங்கள்வலிமாண்டுபோய்
உன்வாசல்கண்	உன்வாசலில்
ஆற்றாது	தங்கள் எளிவரவைநினைத்து ஸஹிக்கமாட்டாமல்
உன் அடி	தேவரீர் திருவடிகளில்
வந்துபணியுமாபோலே	வந்துவிழுமாப்போலே,
யாம்	தாஸபூதரானநாங்கள்
புகழ்ந்து	ஸ்துதித்து
போற்றி	மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு
வந்தோம்	வந்து ஆஶ்ரயித்தோம் என்கிறார்கள்.

வ்யா.—(ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப) ஏற்றகலங்களெல்லாம் எதிரே பொங்கி வழியும்படி. கலமிடாதார் தாழ்வே, இட்ட கலங்களெல்லாம் நிறையும்; ஏலாதகலங்கள் நிறையாதொழிகிறது பாலின் குறையன்றே. (ஏற்றகலங்கள்) பெருமை சிறுமையில்லை; கடலை மடுக்கிலும் நிறைக்குமித்தனை. இவையும் க்ருஷ்ணன்படியாயிருக்கை. அர்த்தியாதார் குற்றமத்தனை போக்கி அவன்பக்கல் குறையில்லை, ஸ்வீகாரமே யமையுமிறே அவனுக்கு.

(மாற்றாதே பால்சொரியும்) முலைக்கடுப்பாலே கலமிடுவாரில்லையென்னு அதுதவிராது.

(வள்ளல்) சிலர்க்கு உபகரித்ததாக விருக்கையன்றிக்கே தன்காரியம் செய்ததாக வுபகரிக்கை. க்ருஷ்ணனைப்போலே, பெண்ணுக்கும் பேதைக்கு மணைக்கலாம்படி பவ்யமாயிருக்கை யென்றுமாம்.

"கலங்கள்" என்னவேயமைந்திருக்க, "ஏற்ற" என்றது, பத்தெட்டின்றிக்கே பஹுத்வம் தோற்றவென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (கலமித்யாதி.) "குடங்கள்" என்னாதே, "கலங்கள்" என்று ஸாமாந்யமான பாத்ரங்களென்கையாலே, அதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பெருமையித்யாதி.) க்ருஷ்ணன் குணங்களிலே தோற்றார் தொற்றபடி சொல்லுமிடத்தில் பசுக்கள் படியைச் சொல்லுவானென்னென்ன; அதுக்குட்கருத்தை யருளிச்செய்யாநின்று கொண்டு ஈடுபடுகிறார் (இவையுமித்யாதி வாக்யத்ரயத்தாலே.) இவையென்றது—பசுக்களை.

"மீதளிப்ப - பால்சொரியும்" என்னவே பால் ஸம்ருத்திக்கு "மாற்றாதே" என்பானென்னென்ன; அதுக்கு ப்ரயோஜநம் காட்டுகிறார் (முலையித்யாதி.)

"பால்சொரியும்" என்றத்தாலே - ஔதார்யம் தோற்றியிருக்குமாயிருக்க, "வள்ளல்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ருஷ்ணனைப்போலே யித்யாதி.) இத்தால்-தன்னைக் கொடுக்கையென்றபடி.

(பெரும்பசுக்கள்) க்ருஷ்ண ஸ்பர்ஶத்தாலே வளருகையாலே ஸ்ரீஶத்ருஞ்ஜயனைப்போலே யிருக்கை.

(ஆற்றப்படைத்தான்) "கழியாரும்கனசங்கம் கலந்தெங்கும் நிறைந்தேறி — வழியாரமுத்தீன்று வளங்கொடுக்கும் திருநறையூர்." அதாவது - தொகையின்றிக்கே யிருக்கை. (படைத்தான் மகனே) அவர்க்கு ஆர்ஜித்துவந்தது, இவன் பிறந்து படைத்த ஸம்பத்து. இத்தால் - "పశుంవిశ్వస్య" "பஶும்விஶ்வஸ்ய" (க௱உ) என்கிறதிற்காட்டிலும் ஸ்ரீநந்தகோபர் ஸம்பத்துக்கு இட்டுப்பிறந்த வேற்றம். பரமபதம்போலேயும் நாராயணத்வம்போலேயும் தான்றோன்றியன்றேயிது.

(அறிவுறாய்) ஸர்வஜ்ஞனானவனை உணர்த்த வேண்டியிறே உள்ளுச் செல்லுகிறது. கைப்பட்ட பெண்களைச் சரக்கிலேவாங்கிக் கைப்படாதவர்களைக் கைப்படுத்துகைக்காக வுண்டான உபாயாந்ய பரதையாலே யெழுப்புகிறார்களாகவுமாம்.

(ஊற்றமுடையாய்) த்ருடப்ரமாண வித்தனாகை. (பெரியாய்) "అప్రాప్యమనసాసహ" "அப்ராப்யமநஸாஸஹ" (கூ௱) என்றும், "యస్యామతం తస్యమతమ్" "யஸ்யாமதம் தஸ்யமதம்" (க௱௬) என்றும் - அந்த ப்ரமாணங்களுக்கும் தன்னுடைய அவதிகாண வொண்ணாதிருக்கை.

(ஆற்றல்)- மிகுதியாய், கோஸம்ருத்திக்குப் பாசுரமுகேந த்ருஷ்டாந்த மருளிச்செய்கிறார் (கழியாருமித்யாதி.) குணங்கள் சொல்லும் ப்ரகரணத்தில் பசுஸம்ருத்தியுண்டானவன் பிள்ளையென்றால் அதோரேற்றமோவென்ன (பதிமித்யாதி.) இத்தால் - ஸௌஶீல்யாதிகள் சொல்லிற்றாய்த்தென்று கருத்து. பிறவாமல்போனால் இஸ்ஸம்பத்து இவனுக்கில்லையோவென்ன ; அருளிச்செய்கிறார் (பரமபதமித்யாதி)இது ஸஹஜமன்றே யென்றுகருத்து.

உள்ளுச்செல்லுகிறதென்றது - அலாபக்லேஶமென்றபடி. யோகநித்ரை பண்ணுமவனாகையாலே யெழுப்பக்கூடுமென்று தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (கைப்பட்டவித்யாதி.) சரக்கிலேவாங்கியென்றது - வஸ்துக்களிலே சேர்த்தென்றபடி. உபாயாந்ய பரதையாகிற யோகநித்ரை க்ருஷ்ணனுக்குண்டாகையாலே எழுப்புகிறார்களென்று கருத்து. ஊற்றத்தை - ஊன்றுதலையுடையாயென்று ஶப்தார்த்தமாய், ஶ்ருதியுடைய வூன்றுதல் அதின் தாத்பர்யமாய், அத்தால் பலிதார்த்தத்தை யருளிச்செய்கிறார் (த்ருடேத்யாதி.)

பெருமை - இயத்தயா வறியப்போகாமை யென்றுவிவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணமுகேந தாத்பர்யமருளிச்செய்கிறார் (அப்ராப்யேத்யாதி.) யதஃ - யாதொருவனிடத்தில் நின்று, அப்ராப்ய - ஸ்வரூபதோகுணதஶ்ச அவதியைக் காணமை யென்றர்த்தம் ; யஸ்ய - யாதொருவனுக்கு, அமதம் - இவ்வளவென்றறியப்பட்டதன்று, தஸ்யமதம் - அவனுக்கறியப்பட்டதென்று இந்த ஶ்ருதிக்கர்த்தம். வேதபுருஷனுக்கும் இவ்வளவென் றறியப்பட்டதல்லாமையாலே இங்கு ப்ரமாணமாகத் தட்டில்லை.

(உலகினில் தோற்றமாய்நின்ற) என்றும் [க] ஓலைப்புறத்திலே கேட்டுப் போகையன்றிக்கே எல்லாருங் காணலாம்படி அஜஹத்ஸ்வபாவனாய்க்கொண்டவதரித்து * ஸகல மநுஜநயந விஷயதாங்கதனானவனே. (சுடரே) ஸம்ஸாரிகளைப்போலே பிறக்கப் பிறக்கக் கறையேறுகையன்றிக்கே, சாணையிலிட்ட மாணிக்கம்போலே ஒளிவிடாநிற்கை. "స ఉ శ్రేయాన్ భవతి జాయమానః" "ஸ உ ஶ்ரேயாந்ப⁴வதி ஜாயமாந꞉" (௧௯௪) என்றும், "మానుషీం తనుమాశ్రితం పరం భావమజానన్తః" "மாநுஷீம் தநுமாஶ்ரிதம் பரம் பா⁴வமஜாநந்த꞉" (௧௯௫) என்றும், "நிலைவரம்பில பல பிறப்பா யொளிவருமுழுநலம்" என்றும் சொல்லக்கடவதிறே.

பறைதருதியாகில்,	எங்களுக்கு உத்தேஶ்யம் செய்வாயானால்,
திருத்தக்க செல்வமும்	பிராட்டி ஆசைப்படத்தக்க ஸம்பத்தையும்
சேவகமும்	அத்தைக் காத்தூட்டவல்ல வீர்யத்தையும்
யாம் பாடி	உன்பேர்சொல்லப்பெருத நாங்கள் உகப்புடன்பாடி
வருத்தமும்தீர்ந்து	உன்னைப்பிரிந்துபடும் வ்யஸநமும்நீங்கி,
மகிழ்ந்து.	மகிழ்வோமாகவேணுமென்கிருர்கள்.

வ்யா.—(ஒருத்தி) "அந்த꞉ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா" "அந்தஃப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம்ஸர்வாத்மா" (களகூ) என்கிறபடியே ஸர்வலோகங்களுக்கும் நியாமகனானவனையுங்கூட நியமிக்குமவளாகையாலே நாட்டில் தனக்கு ஒப்பற்றிருக்குமவள். (ஒருத்திமகனாய்) "பூ⁴தாநாம்யோவ்யயஃபிதா" "பூதாநாம்யோவ்யயஃபிதா" (க௮0) என்று - ஸர்வலோகங்களுக்கும் பிதாவானவன் ஒருத்திமகனுவதே! சக்ரவர்த்திதபஸ்ஸுபண்ணி மாணிக்கம்போலே நாலுபிள்ளைகளைப் பெற்ருப்போலே, நால்வருங்கூட தபஸ்ஸுபண்ணி ஒருமகனைப் பெற்றபடி. (மகனாய்ப் பிறந்து) பிறந்தபோதே சொல்லிற்றுச் செய்கை. சக்ரவர்த்தித் திருமகன் பக்வனானபின்பு பித்ருவசந பரிபாலநம் பண்ணினான்; இவன் பிறந்தபோதே, "உபஸம்ஹர ஸர்வாத்மந்" "உபஸம்ஹரஸர்வாத்மந்" (சூ௫)என்றுசொல்ல ஆழ்வார்களையும் தோள்களையும் மறைத்தானிறே

அத்விதீயையானவளென்று விவக்ஷித்து ஹேதுபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிருர் (ஸர்வேத்யாதி.) நியமிக்குமவளாகையாலேயென்றது - "உபஸம்ஹர ஸர்வாத்மந்" "உபஸம்ஹரஸர்வாத்மந்" என்று நியமிக்கையைப்பற்ற. "ஒருத்திக்குப்பிறந்து" என்னலாயிருக்க, "மகனாய்" என்றத்தாலே - மகனாகத்தக்கவனல்லாதவன் மகனானனென்று தோன்றுகையால்வந்த ஈடுபாட்டைக்காட்டுகிருர் (பூதாநாமித்யாதி.) எல்லார்க்கும் பிதாவானவன் மகனாகைக்கு ஹேதுவென்னென்ன; அருளிச்செய்கிருர் (சக்ரவர்த்தியித்யாதி.)

"மகனாய்" என்றதுக்கு - மகன்செய்யும் கார்யம் செய்துகொண்டு பிறந்தானென்று தாத்பர்யமருளிச்செய்கிருர் (பிறந்தபோதே யித்யாதிவாக்யத்ரயத்தாலே.) "அவதரித்து" என்னதே, "பிறந்து" என்றதுக்கு உட்கருத்தை

(பிறந்து) கர்மவஶ்யர் படுவதெல்லாம் க்ருபாவஶ்யனுய்க் கொண்டு பட்டபடி. (பிறந்து) ஆவிர்ப்பவிக்கலாகாதோ; பத்துமாஸம் வயிற்றிலே யிருப்பார்களாகில் பன்னிரண்டுமாஸம் வயிற்றிலேயிருந்து பிறக்கவேணுமோ. * பன்னிருதிங்கள் வயிற்றில்கொண்டவிறே.

“ దేవకీపూర్వసంధ్యాయామావిర్భూతంమహాత్మనా ” “ தேவகீபூர்வஸந்த்யா யா மாவிர்பூதம்மஹாத்மநா” (எக) என்று பிறந்தானென்கை. அவத்ய மென்று பரிஹரித்தான் ரிஷி; அதுதான் அவத்யமென்று பிறந்தான் என்கிறார்கள். நம்முடைய கர்மம் நம்மோடே யவனை ஸஜாதீயனுக் கும். அவனுடைய க்ருபை நம்மை யவனோடே ஸஜாதீயமாக்கும்; “ పరమంసామ్యముపైతి” “பரமம்ஸாம்யமுபைதி” (கஅக) என்னக் கடவ திறே. அவன்பிறவி நமக்கென்றுகோல, நம் பிறவி அவன்மாதா பிதாக் கள் காலில் விலங்குபட்டதுபடும். நம் பிறவி நம்மையும் அவனையும் அகற்றுகைக் குடலா யிருக்கும்; அவன்பிறவி இருவருமணுகுகைக்கு உடலாயிருக்கும்.

யருளிச்செய்கிறார் (கர்மவஶ்யரித்யாதி) “மகனாய்” என்றதாலே பிறப்பு அர்த்த ஸித்தமாயிருக்கவும், “பிறந்து” என்று விஶேஷித்தது, லோகத்தார் பிறவியி லும் வ்யாவ்ருத்தமென்று தோற்றவென்று தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (ஆவிர்ப்பவிக்கவித்யாதி வாக்யத்ரயத்தாலே.)

ரிஷி “ ఆవిర్భూతమ్ ” “ ஆவிர்பூதம் ” என்றுசொல்லியிருக்க, இவர்கள் “பிறந்து” என்னக்கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார் (தேவகீத்யாதி வாக்ய த்வயத்தாலே.) அதுதானவத்யமென்றது-ஸௌஶீல்யாதிகள் அதில் புரஸ்பூர்த்தி கர மல்லாமையாலே யென்றுகருத்து, பிறப்புக்குகர்மம் அடியாகையாலே அதி ல்லாதவனுக்குப் பிறப்புச்சொல்லக்கூடுமோவென்னும் ஶங்கையைப் பரிஹரியா நின்றுகொண்டு ஸௌஶீல்யம் தோற்றும்படியை யுபபாதிக்கிறார் (நம்முடைய வித்யாதி;) நம்முடைய கர்மத்தாலே நாம் ஸம்ஸரிக்கையாலே நம்மை யெடுக் கைக்காக அவன் ஸஜாதீயனாய் வந்து பிறந்து புரையறக் கலக்கையாலே ஸௌ ஶீல்யம் விளங்குமென்று கருத்து. இதுக்கு த்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார் (அவ னுடையவித்யாதி வாக்யத்வயத்தாலே.) நம்மோடு ஸஜாதீயனாய்ப்பிறந்தானாகில் அத்தாலே அவனெடுக்கும்படி யெங்ஙனேயென்ன; “ జన్మకర్మచ ” “ ஜந்மகர் மச ” இத்யாதிவசநத்தை யுட்கொண்டு அருளிச்செய்கிறார் (அவன்பிறவி யித் யாதி.) நமக்கென்று கோலவென்றது - நமக்காக வந்தானென் றறியவென்றபடி. உக்தார்த்தத்தை வைதர்ம்ய த்ருஷ்டாந்த பூர்வகம் விவரிக்கிறார் (நம்பிறவியித் யாதி வாக்யத்வயத்தாலே.)

ஓரிரவிலே - ஒருத்திமகனாய்பிறந்து ஆய்ப்பாடியிலேபுக்கு, ஒருத்திமகனாய் என்றவ்யாத்யாத்ஹாரங்களை திருவுள்ளம்பற்றி, அவ்விரவில்தானே யங்குப் போகைக்கு ஹேதுவைக்காட்டாநின்றுகொண்டு, தாத்பர்யமருளிச்செய்கிறார்

(ஓரிரவில்) அவ்விரவிலே யசோதைப் பிராட்டிக்குப் பிள்ளையாக வேண்டுகையாலே திருவாய்ப்பாடியிலேபுக்கு. நாய்க்குடலுக்கு நறுநெய் தொங்காதாப்போலே, கம்ஸாதிகள் தன்மை ஸந்நிதாக்ருஹத்திலே ஓரிராத்தங்க வொட்டிற்றில்லை யென்கை. (ஓரிரவு) அவ்விரவை யொக்கும் இரவு முன்புமில்லை பின்புமில்லை. (ஓரிரவில்) காலக்ருதபரிணாமமில்லாத தேஶத்தில் வஸ்து காலாதீநமான தேஶத்திலே பிறப்பதே! . அவர்கள் தங்களோபாதியும் பெற்றிலனென்கை. (ஒருத்தி மகனாய்) ஒருத்தி இவனை "மகனாகப் பெறவேணும்" என்று ஆஶ்ரயிக்க, அவளுக்கு அவதார ரஸத்தைக்கொடுத்து, இவளுக்கு லீலாரஸத்தை யநுபவிப்பித்தபடி. ஓரவதாரத்திலே யாதவ ஸஜாதீயனுமாய் கோபஜாதீயனுமானபடி. "அம்ஶாவதாரோ ப்ரஹ்மர்ஷே யோऽயம் யதுகுலோத்பவ:" "அம்ஶாவதாரோ ப்ரஹ்மர்ஷே யோயம் யதுகுலோத்பவ:" (௧அ௨) என்றரிஷிதானே, "ஸோऽயம் யாதவம் வம்ஶம் மக்நமப்யுத்தரிஷ்யதி" "ஸோவாமோ யாதவம் வம்ஶம் மக்நமப்யுத்தரிஷ்யதி" (௧அ௩) என்றானிறே.

(மகனாய்) பிறப்பில் புரையில்லாப்போலே இவள் மகனானவிடத்திலும் புரையற்றிருக்கை.

(ஒளித்துவளர) கம்ஸனுடைய விஷத்ருஷ்டிபடாமே வளர்ந்தபடி. நாட்டார் செய்வன செய்யப்பெறாதே கள்ளர்பட்டது படுவதே!; திருவவதரித்திருக்கச்செய்தே அந்தர்யாமிபட்டது படுவதே! .

(அவ்விரவிலேயித்யாதி.) பிள்ளையாகவேண்டுகையாலே யென்றது - அவ்விரவில்தானே பிள்ளையாகவேண்டும்படி தபஸ்ஸைப்பண்ணுகையாலே யென்றபடி.

திருவாய்ப்பாடியில் புகுகைக்கு யஶோதாதிகளுடைய பாக்யத்தை ஹேதுவாகக் கீழருளிச்செய்து, கம்ஸாதிகளுடைய தௌர்ப்பாக்யம் ஹேது வென்றருளிச்செய்கிறார் (நாயித்யாதி) "ஓர்" என்றதுக்கு - ஏகத்வ ஸங்க்யாபரமாகக் கீழருளிச்செய்து, அத்விதீயத்வ விவக்ஷயா அவதார ஹேதுவாகையாலே அதிஸ்லாக்யமென்றும், பிறந்தவிடத்திலிருக்கவொட்டாதபடியாலே அதிக்ரூரமானதென்றும், இரண்டுதாத்பர்ய மருளிச்செய்கிறார் (அவ்விரவை யித்யாதி வாக்யத்ரயத்தாலே.) இப்போது, "ஓர்" என்றதுக்கு க்ரமேண அந்வயமென்று கண்டுகொள்வது, இரண்டுதாய்மார்க்கு ஒருவன் பிள்ளையாம்படி யெங்ஙனே சேருவதென்ன; அருளிச்செய்கிறார் (ஒருத்தியித்யாதி;) பிள்ளையாகையால் வந்தரஸம் இருவர்க்கும் துல்யமாகையாலே பிள்ளையாகைக்குத் தட்டில்லையென்று கருத்து.

ஒளித்து வளருகைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (கம்ஸனித்யாதி.) இவனவதரிக்குமிடத்தில்விஷத்ருஷ்டிரஸக்தமாய்ஒளிக்கவேண்டிற்றேயென்றுகோபிமாருடைய ஈடுபாடாக தாத்பர்யமருளிச்செய்கிறார் (நாட்டாரித்யாதி வாக்ய த்வயத்தாலே.)

உள்ளே யிருக்கச்செய்தேயும் இவனில்லை என்று எழுத்திடுமவன், முகங்காண ஸம்மதிக்குமோ வென்கை. அந்தர்யாமியாய் மறைய நிற்கிறது, பிச்சேறின ப்ரஜை தாய்முன்னே நிற்கில் தாயைக்கொல் லும்; அவள்பேரநிற்கில் தன்னை முடித்துக்கொள்ளும்; அதுக்காக முகந்தோற்றுதே நின்று இரண்டு தலையையும் நோக்கும் மாதாவை ப்போலே, இசைந்து அம்மே! என்றால் என் என்கைக்குக் கிட்ட விருக்கிறபடி யென்றுமாம். பேர்சொல்லாதே "ஒருத்தி" என்றது "அத்தத்தின் பத்தாநாள்" என்றவர் மகளாகையாலே பயத்தாலே யொளிக்கிறாள், அபிசரிக்கிலும் அதுவோ இதுவோ என்று ஸந்தே ஹிக்கைக்காக.

(தரிக்கிலானாகி) க்ருஷ்ணன் வளராநின்றான் என்று கேட்டபி ன்பு அவன் தரிக்கமாட்டிற்றிலன். ஈஶ்வரஸத்தையையும் பொறாத ஆஶ்ரயமிறே. (தான் தீங்குநினைந்த) பயத்தாலே பரிந்து மங்களா ஶாஸநம் பண்ணும் விஷயத்திலே தீங்கு நினைத்தது துஷ்ப்ருக்ருதியா கையாலே. (தான்) உத்தரக்ஷணத்திலே படப்புகுகிற பாடறியாத தான். (தீங்குநினைந்த) தங்கள் வாயாலே சொல்லமாட்டாமையாலே "தீங்கு" என்கிறார்கள். அதாவது - பூதனையுள்ளிட்டாரை வரக் காட்டியும் வில்விழவுக்கு என்று அழைத்தும் நலியத் தேடினபடி. (கருத்தைப் பிழைப்பித்து) பூதனை முதலானார் நலிவுகளைப்

"ஒளித்துவளர" என்றதுக்கு ஸ்வாபதேஶமருளிச்செய்கிறார் (உள்ளேயி த்யாதிவாக்ய த்வயத்தாலே.) கீழே "ஒருத்தி" என்றதுக்கு ஶத்ருஶங்கையென்று ஒருதாத்பர்ய மருளிச்செய்து, நாமக்ரஹணம்பண்ணாதே "ஒருத்தி" என்று ஸா மாந்யஶப்தம் ப்ரயோகிக்கிறார்களென்றதுக்கு ஹேதுபூர்வகம் தாத்பர்யமருளி ச்செய்கிறார் (பேர்சொல்லாதேயித்யாதி;) தேவகி மகனென்றும் யசோதை மகனென்றும் சொல்லுமிடத்தில், இவனுடைய ஏற்றமெல்லாமறிந்து உகவா தார் ஏதேனும் தீங்குநினைப்பாரென்னும் ப்ரேமாதிஶயத்தாலே யஞ்சிமறைத்து அநாதரம் தோற்றச்சொன்னார்களென்று கருத்து.

திருவாய்ப்பாடியிலே யொளித்துவளர இவன் தெரியாதிருக்கை எங்ங னேயென்ன; அருளிச்செய்கிறார் (க்ருஷ்ணனித்யாதி.) ஸ்வாபதேஶத்திலே தா த்பர்ய மருளிச்செய்கிறார் (ஈஶ்வரஸத்தை யித்யாதி.) உன் ஹ்ருதயத்தில் அந்த ர்யாமியிருக்கிறனென்றால் "[illegible]" "[illegible]" என்றிருக் குமவன் ஸஹியானென்று தாத்பர்யம். "தான்" என்றதுக்கு துஷ்ப்ரக்ருதி யென்று ஒருதாத்பர்ய மருளிச்செய்து, தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (உ த்தரோத்யாதி.)

கருத்தை-மநஸ்ஸை, பிழைப்பித்து-பிழையாக்கி-பொய்யாக்கியென்னுமர்த் தார்த்தமாய், இரண்டுவிதமாக தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பூதனையித்யாதி

பண்ணப்புக அத்தைத் தப்பித் தன்னை நமக்குத் தந்தபடி. அவன் நினைவை அவன் றன்னோடே போம்படிபண்ணி யென்றுமாம்.

(கஞ்சனித்யாதி) கம்ஸன் அநாதிகாலம் ஸஞ்சிதமான பாபமித்தனையும் கண்ட காட்சியிலே அநுபவித்தறும்படி நின்றவன். ஆஸ்ரிதர் வயிற்றில் நெருப்பை கம்ஸன் வயிற்றில் கொளுத்தினவனென்கை. அதாவது - பயாக்நி கொளுத்துகை. (நெடுமாலே) இதெல்லாம் படவேண்டிற்று ஆஸ்ரிதர்பக்கல் வ்யாமோஹத்தாலே யென்கை. அப்போது ஸ்ரீவஸுதேவர்பக்கலிலும் ஸ்ரீதேவகியார் பக்கலிலும் திருவுள்ளம் மண்டினபடி யென்றுமாம்.

(உன்னை யருத்தித்து வந்தோம்) அர்த்தித்வத்தில் நிரபேக்ஷனான வுன்னை. ஸ்ரீ வைகுண்டத்தில் நின்றும் இரப்பாளனாய் இவ்வளவும் வந்தது ஆர் அபேக்ஷித்து?. (நெடுமாலே யுன்னை யருத்தித்து வந்தோம்) பண்டே வ்யாமுக்தனான வுன்னை அர்த்திக்கையாலே பிச்சின்மேலே பிச்சேற்ற வந்தோம். அர்த்தித்வத்தினளவு எங்கள் வடிவைப்பார்க்க வமையும்.

(பறை தருதியாகில்) எங்களுக்கு உத்தேஸ்யம் செய்குதியாகில். "ஆகில்" என்றது - நம்முடைய அர்த்தித்வாதிகள் அப்ரயோஜகம்; அவன் நினைவாலே பலமென்கை. உன்னழகாலே பிழைப்பியாதே செய்தருளப் பார்ப்பாயாகில் என்னவுமாம்.

(திருத்தக்க செல்வமும்) "యస్యసాజనకాత్మజా-అప్రమేయంహితత్తేజః" "யஸ்யஸாஜநகாத்மஜா-அப்ரமேயம்ஹிதத்தேஜ:" (கஅச) என்று ஸ்ரீயஃபதித்வத்தால் வந்த ஸம்பத்தையும். பிராட்டி யாசைப்படும் ஸம்பத்தென்னவுமாம். (சேவகமும்) அத்தைக் காத்தூட்டவல்லவீர்யம்.

வாக்யத்வயத்தாலே.) அவன் நினைவை யவனோடே போக்கினபடியென்றது-அவன் நினைவு அவனிடத்தில் பலத்தைக்கொடுக்கும்படி தான் ஸங்கல்பித்தென்றபடி.

அர்த்தித்வ நிரபேக்ஷனுகையை யுபபாதிக்கிறுர் (ஸ்ரீவைகுண்டேத்யாதி.) "நெடுமாலேவந்தோம்" என்று சொல்லவே இவர்களாசை வித்தமாயிருக்கவும், "அருத்தித்து" என்று சொன்னது பேராசையாகவந்தோமென்று விவக்ஷித்து, ஆசையினுடைய பெருமை யெவ்வளவென்னும் ஶங்கையை யருளிச்செய்கிறுர் (அர்த்தித்வத்திலித்யாதி.)

திருவாலேதக்கசெல்வத்தையென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, தாத்பர்யமருளிச்செய்கிறுர் (யஸ்யேத்யாதி,) தத்தேஜ: என்றது-ஸமஸ்தமாய், தஸ்யதேஜ: என்றுகொள்வது. திருவுக்குத்தக்க செல்வமென்று விவக்ஷித்து தாத்பர்யமருளிச்செய்கிறுர் (பிராட்டியித்யாதி.) காத்தூட்டவென்றது-ரக்ஷித்தநுபவிப்பிக்கவென்றபடி.

(யாம்பாடி) உன்பேர் சொல்லப்பெறாத நாங்கள் உகப்போடே அத்தைச்சொல்லி. (வருத்தமுந் தீர்ந்து) உன்னைப் பிரிந்துபடும் துக்கமும் தீர்ந்து. பிரிந்தார்படும் பாடறிய உன்னை நீ பிரிந்தறியாயே. (மகிழ்ந்து) கைவல்யம்போலே துக்கநிவ்ருத்தி மாத்ரமேயன்று, ப்ரீதிக்குப் போக்கு விடும்படியாகவேணும். ... ... (உரு)

"வருத்தமும்" என்றசகாரத்தால்-மிகவும் துஸ்ஸஹதை தோற்றுகையால் அதின்படியெங்ஙனேயென்னும் ப்ரஶ்நத்திலே, அதுசொல்லத்தரமன்றென்று அநுபவித்தே யறியவேணும், அதுதன்னாலறியப்போகாதென்று உத்தரம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பிரிந்தாரித்யாதி.) ... ... உரு.]

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—இருபத்தஞ்சாம்பாட்டு. (ஒருத்தி மகனாயித்யாதி) இப்பாட்டில், கீழ்ப்பாட்டில் "எத்திப்பறை கொள்வான் இன்று யாம் வந்தோம் இரங்கு" என்று இவர்கள் அபேக்ஷிக்கையாலே உங்களுக்குச் செய்யவேண்டுவதென்னென்ன; நெடுமாலே! நீ புருஷார்த்தத்தைக் கொடுத்தாயாகில் நாமும் உன்னையும் உன் குணங்களையும் ப்ரீதிக்குப் போக்கு வீடாகப்பாடி, பட்ட வ்யஸநமெல்லாம் தீர்ந்து மகிழக்கடவோமென்கிறார்கள்.

வ்யா.—(ஒருத்தியித்யாதி) அஷ்டாக்ஷரீ ப்ரதிபாத்யனாய் குணவிக்ரஹ விபூதிவிஶிஷ்டனாய் அவதரித்து. (ஓரிரவித்யாதி) லௌகிகரறியாத அத்விதீய காலத்திலே வாஸுதேவ த்வாதஶாக்ஷரீ ப்ரதிபாத்யனாய். (ஒளித்துவளர) குணவிக்ரஹ விபூதிகளாலே ஸங்குசித்து ஸ்வரூபமாத்ரேண வளராநிற்க.

(தரிக்கிலானாகி) ஸ்வரூபமாத்ரேண ஈஶ்வரஸத்தையையும் பொறாதவனாய். (தானித்யாதி) அநவரதம் மங்களாஶாஸநம் பண்ணக்கடவ விஷயத்திலே அவனால் ஒரு உபத்ரவமுண்டாய்ப் பொல்லாமையை நினைக்கையன்றிக்கே தானே த்வேஷத்தை நினைந்த அபிப்ராயத்தை வ்யர்த்தமாக்கின அஹங்காரத்தினுடைய வயிற்றிலே நெருப்பைக் கொளுத்தினாப்போலே ஜ்வலித்து அவனருகே நின்ற ஸ்வஶேஷபூத சேதநவிஷய வ்யாமோஹாதிஶயத்தை யுடையவனே. (உன்னை அருத்தித்து வந்தோம்) உன்னை அபேக்ஷித்து வந்தோம்.

(பறை தருதியாகில்) நீ புருஷார்த்தத்தைக் கொடுப்புதியாகில். (திருத்தக்க செல்வமும் சேவகமும்) பெரிய பிராட்டியாருக்குத் தகுதியான ஸ்வரூபரூப குணவிக்ரஹ விபூதி விஶிஷ்டனாயிருக்கிற செல்வத்தையும் வீரசரிதத்தையும். (யாம்பாடி) அதுவே தாரகமான நாம் பாடி. (வருத்தமித்யாதி) உன்னைப் பிரிந்துபட்ட வ்யஸநமெல்லாம் நிஶ்ஶேஷமாகத் தீர்ந்து ஆநந்திக்கக்கடவோம்... ... (உரு)

அ.—இருபத்தாறும்பாட்டு. உங்களுக்கு அபேக்ஷித மென்னென்ன; நோன்புக்கு வேண்டும் உபகரணங்களையும் அபேக்ஷிக்கிறார்கள். க்ருஷ்ணஸம்ஶ்லேஷ ரஸோத்ஸுகரான இவர்கள் இவற்றை அபேக்ஷிக்கைக்கடி யென்னென்னில்; அந்த ஸம்ஶ்லேஷத்துக்கு ஏகாந்தமான நோன்பை ப்ரஸ்தாவிக்கையாலும், க்ருஷ்ணன் முகத்தை வெளியிலே காண்கைக்கு ஹேதுவாகையாலும், அவனுடைய திருநாமங்களை வாயாரச் சொல்லுகைக்கு ஹேதுவாகையாலும் இடையர்பக்கல் உபகார ஸ்ம்ருதியாலும் நோன்புக்கு அங்கங்களை வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

மூ.—மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய். (உசு)

பதம்.	உரை.
மாலே	ஆஶ்ரிதவிஷயத்தில் வ்யாமோஹத்தை யுடையனே,
மணிவண்ணா	நீலரத்நம்போன்ற வடிவையுடையனே;
ஆலினிலையாய்!	எங்களபேக்ஷிதத்தைத் தலைக்கட்டவல்ல ஶக்தியுடையவனே!
மார்கழிநீ ராடுவான்	மார்கழிநீராட்டத்துக்கு உபகரணங்கள் வேண்டிவந்தோம் என்ன;

மார்கழிநீராட்டமாவதென்? என்றுகேட்க; இது ப்ரஸித்தமன்றோ;

மேலையார்செய்வனகள்	பெரியோர்கள் அநுஷ்டிக்கப்பட்டவைகள் என்ன;

ஆகில் உங்களுக்கு வேண்டுவனவெவை? என்ன;

வேண்டுவனகேட்டியேல்,	வேண்டியவைகளைக் கேட்பாயாகில்,
ஞாலமெல்லாம் நடுங்க	பூமியெல்லாம் நடுங்கும்படி
முரல்வன	ஶப்தத்தையுடையனவாய்,

இருபத்தாறும்பாட்டு (மாலே யித்யாதி.) கீழ்ப்பாட்டில் - உங்களுக்கு வேண்டுவதென்னென்று அவன்கேட்க, அதுக்கு "பறைதருதியாகில்" என்று தங்களுத்தேஶ்யத்தைச் சொல்லியிருக்கவும், அவன் முலைமுதலானவற்றிலே ஸக்தனாகையாலேமறந்து மீளவும் கேட்கிறானென்று திருவுள்ளம்பற்றி அவதாரிகை யருளிச்செய்கிறார் (உங்களுக்கித்யாதி.) ப்ரஸ்தாவிக்கையாலுமென்றது-கோபவ்ருத்தர் "நீங்கள் நோன்புநோலுங்கள்" என்று அநுமதிபண்ணியிடுகையாலுமென்றபடி. வெளியிலே காண்கைக்கு ஹேதுவாகையாலு மென்றது-நிலவறையிலே கிடந்த தங்களைநோன்புக்காக க்ருஷ்ணனோடே சேரவிடுகையாலே யென்றுகருத்து.

பாலன்னவண்ணம்	பால்போன்ற நிறத்தையுடையனவாய்,
உன்பாஞ்சசன்னியம் போல்வன	உன்னுடைய ஸ்ரீபாஞ்சஜந்யத்தையொத்தனவான
சங்கங்கள்	சங்கங்களும்,
போய் பாடுடையன	பேரிடமுடையனவாய்
சாலப்பெரும்பறை	மிகவும் பெரிதாயிருந்துள்ள வாத்யங்களும்,
பல்லாண்டு இசைப்பார்	பல்லாண்டு பாடுவார்களும்,
கோலவிளக்கு	மங்களதீபங்களும்,
கொடி	த்வஜங்களும்,
விதாநம்	மேற்கட்டிகளும்,
அருள்.	க்ருபைசெய்தருளவேணுமென்கிறார்கள்.

வ்யா.— (மாலே) முன்பு "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்று அபரிச்சேத்யமான மேன்மையையும் நினைத்திருந்தார்கள்; இப்போது - இத்தலைக்கு வாத்ஸல்யமே ஸ்வரூபமென்று நிலையிட்டார்கள். "ஶரணாகதவத்ஸல:" "ஶரணாகதவத்ஸல:"(க௮௫) என்று - ஸ்ரீராமாயணத்துக்கு உள்ளீடான ப்ரதானகுணத்தைப் பிராட்டி நிலையிட்டாள்; மஹாபாரதத்துக்கு உள்ளீடான வ்யாமோஹ குணத்தை "மாலே" என்கிற ஸம்போதநத்தாலே இவர்கள் நிலையிட்டார்கள். இவர்கள் பேச்சுக்கேட்ட பின்பு பண்டையிலும் பெரும் பித்தனானபடி.

ப்ராப்ய ப்ராபகங்களை நிஷ்கர்ஷிக்கும்போது,"நாராயணனே நமக்கேபறை தருவான்" என்று - நாராயணத்வத்தை புரஸ்கரித்திருக்கையால் அபேக்ஷித்தவிடத்திலும், "நாராயணா! மணிவண்ணா" என்னவேண்டியிருக்க, "மாலே" என்று வ்யாமோஹகுணத்தையிட்டு ஸம்போதிக்கிற தெங்ஙனே கூடுமென்ன; அருளிச்செய்கிறார் (முன்பித்யாதி.) (மேன்மையையும்) என்றசகாரத்தாலே - "கார்மேனிச்செங்கண்" என்று - வாத்ஸல்யத்தையும் நினைத்தார்களென்கை. இவர்கள் "யாம்வந்தகாரியமாராய்ந்தருள்" என்று சொன்னபோதே திருமுகத்தி லலர்த்தியும், வாவென்றவாறே ஸிம்ஹாஸநத்தேற வருகையையும் கண்டு வ்யாமோஹமே இவனுக்கு ஸ்வரூபமென்று நிச்சயித்தார்களென்று கருத்து. இவனுக்கு வாத்ஸல்யமே நிரூபகமென்னுமதுக்கு த்ருஷ்டாந்தபூர்வகம் ப்ரமாணம் காட்டுகிறார் (ஶரணாகதேத்யாதி வாக்யத்வயத்தாலே.) மஹாபாரதத்துக்குள்ளீடானவென்றது-அதுக்கு உபநிஷத்தான ஸ்ரீகீதையில்சரமத்தில், "மாம்" என்றதுக்கு தாத்பர்யமானவென்றபடி. இதிலே வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யங்களாகிற குணவிஶேஷங்கள் நேராக ப்ரகாஶிக்கிறதென்னக் கடவதிறே. இப்போது மாலாகைக்கு ஹேதுவேதென்ன; அருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி.) பேச்சென்றது - "யாம்வந்தகாரியமாராய்ந்தருள்" என்ற பேச்சென்றபடி. மாலுடையவனென்னாதே "மாலே" என்றத்தையே நிரூபகமாகச்சொல்லுகையாலே (பெரும்பித்தனென்றது.)

(மணிவண்ணா) அபரிச்சேத்யனா யிருக்கச்செய்தேயும் முந் தானையிலே முடிந்தாளலாம்படியிருக்கை. கீழ்ச்சொன்ன வ்யாமோ ஹம் வடிவிலே நிழலிடுகை. இந்நீர்மையன்றிக்கே காதுகனானாலும் விடவொண்ணாத வடிவழகு. பெண்கள் பிச்சுக்கு நிதாநமான வடி வென்னவுமாம். "மாலாய்ப்பிறந்த நம்பியை மாலே செய்யும் மணா ளனை" என்னக்கடவதிறே.

நீங்கள்வந்ததென்னென்ன; வந்தகாரியத்தைச் சொல்லுகிறார்கள் (மார்கழிநீராடுவான்) மார்கழிநீராடுகைக்கு உபகரணங்கள் வேண்டி வந்தோம். ஆஸ்திக்யாதிரேகத்தாலே அங்கி கைப்பட்டிருக்கச் செய் தேயும் அங்கத்தை விடாதொழிகிறார்கள்.

மார்கழிநீராட்டமாவதென்னென்ன ; இது ப்ரஸித்தமன்றோ வென்ன ; "ஸ்வர்க்காமோயஜேத" "வ்ருஷ்டிகாமோயஜேத" (கஅசு)

"மாலே" என்றது ஸர்வாதிகனையென்று அர்த்தாந்தரம் திருவுள்ளம்பற்றி, மணியினுடைய வண்ணம்போலே யிருக்கும், வண்ணத்தை - ஸ்வபாவத்தையு டையவனேயென்று ஶப்தார்த்தமாய், அதின் ஸௌலப்ய ஸ்வபாவத்தை விவ க்ஷித்து அருளிச்செய்கிறார் (அபரிச்சேத்யனாயித்யாதி.) "மால்" என்றதின் மூந்தின வர்த்தத்தையே திருவுள்ளம்பற்றி, நைர்மல்யத்தையும் அழகையும்விவ க்ஷித்து இரண்டாம் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கீழ்ச்சொன்ன வித்யாதி வாக்யத்வயத்தாலே.) அழகு விடவொண்ணாமைக்கு ஹேதுவேதென்ன ; அரு ளிச்செய்கிறார் (பெண்களித்யாதி.)

"மார்கழிநீராட்டம்" என்கிற நோன்பு நோற்கைக்கு வேண்டு முபகரணங் களை இவர்களபேக்ஷித்திலர்களாகிலும் வ்ருஷ்டிரூபமான பலம் வரத்தட்டில்லை, க்ருஷ்ணன் ஸர்வஶக்தனாகையாலே இவர்களுக்கு உபகாரகரான கோபவ்ருத் தர் அபேக்ஷித்த வர்ஷத்தை வர்ஷிப்பிக்கக் கடவனன்றோவென்னும் ஶங்கை யிலே யருளிச்செய்கிறார் (ஆஸ்திக்யேத்யாதி .) அதாவது - நோன்பாகிற அங்கி ஸ்த்தாநீயனான க்ருஷ்ணன் தங்களுக்குச் சொல்லிற்றுச் செய்கிறவனேயாகி லும், நோன்புக்குவேண்டு மங்கங்களையும் விடாதொழிகிறது வேறே சிலவதிகாரி களுக்கு ; அங்ஙனன்றிக்கே, தங்களைப்போலே நோன்பையே யநுஷ்டித்தார் களாகில் வ்ருஷ்டிரூபபலம் ஸித்தியாமல் போம் ; அப்படியன்றிக்கே அவர்களுக் கும் பலம் ஸித்திக்கவேணுமென்னு மாஸ்திக்யாதிஶயத்தாலே யென்கை.

கோபவ்ருத்தரெல்லாரும் கூடி, "வர்ஷார்த்தமாகப் பெண்கள் நோன்பு நோற்கக்கடவர்கள்,க்ருஷ்ணன் அதுக்கு நிர்வாஹகனாகக்கடவன்" என்று க்ருஷ் ணனையும் பார்த்துச் சொல்லி யிருக்கவும் அறியாதவனைப்போலே யிங்கே ஏதென்று ப்ரஶ்நம்பண்ணுகை,வார்த்தையிட்டு வார்த்தை கொள்ளுகையே பரம ப்ரயோஜநமாகையாலே யென்று திருவுள்ளம்பற்றி ப்ரஶ்நோத்தர பரம்பரை யைக் காட்டுகிறார் (மார்கழியித்யாதி.) தர்மஜ்ஞஸமயத்தை வேதாதிகளுக்கு

என்னுமாப்போலவும், "निदिध्यासितव्यः" "நிதி₃த்₄யாஸிதவ்ய꞉"(கஅஎ)என்னுமாப்போலவும் ப்ரஸித்தமா யிருந்ததோவென்ன (மேலையார் செய்வனகள்) அவைபோலு மல்லகாண் இது ; ப்ரஸித்தங்காண்இது. ஶ்ருதிஸ்ம்ருதிகளிலும் "धर्मज्ञसमयः प्रमाणं वेदाश्च" "த₄ர்மஜ்ஞஸமய꞉ ப்ரமாணம்வேதா₃ஶ்ச"(கஉ௬) என்றும், "यद्यदाचरति श्रेष्ठः" "யத்₃யதா₃சரதி ஶ்ரேஷ்ட₂꞉" (கஅஅ) என்றும்— ஶிஷ்டாசாரமேயிறே ப்ரஸித்த ப்ரமாணம்.

ஆகில் வேண்டுவது சொல்லுங்கோளென்ன ; (வேண்டுவனகேட்டியேல்) கேட்புதியாகில் என்கிறது அங்யபரதையாலே. அங்யபரதை யென்னென்னில் ; பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களும் முன்னே நிற்கையாலே இவர்கள் முலையிலும் இடையிலும் கண்ணிலும் முகத்திலும் துவண்டு ஆனைக்குப்பாடுவாரைப்போலே யிருக்கையாலே தட்டியெழுப்புகிறார்கள். இத்தால் — ஸ்வாபதேஶத்தில், ஜ்ஞாநபக்தி வைராக்யத்தைச் சொல்லுகிறது. இவையிறே ஓரதிகாரிக்கு அழகாகிறது. காண்கைக்கு ஹேதுவாகையாலே "கண்" என்று-ஜ்ஞாநத்தைச்சொல்லுகிறது ; போகோபகரணமாகையாலே "முலே" என்று — பக்தியைச் சொல்லுகிறது ; கார்ஶ்யத்தாலே "இடை" என்று - வைராக்யத்தைச் சொல்லுகிறது. கார்ஶ்யத்தாலே வைராக்யம் தோற்றுமோவென்னில் ; கார்ஶ்யத்தாலே - விரக்தியைச் சொல்லிற்றாய், அத்தால் விஷயாந்தர ஸ்பர்ஶராஹித்யத்தைச் சொல்லுகிறது.

உங்கள் வடிவு கண்ணுக்கு போக்யமானவோபாதி, "मधुरामधुरालापा" "மது₄ராமது₄ராலாபா" (கஅகூ) என்கிறபடியே உங்கள் வார்த்தை செவிக்கு போக்யமன்றோ. சொல்லுங்கோளென்ன ;

முந்துற வெடுக்கையாலும், "श्रेष्ठदेवेतरेजनाः" "தத்ததே₃வேதரோஜநா꞉" என்று-ஶிஷ்டாசாரமே கர்த்தவ்யமென்று தோற்றுகையாலும், அதுவே அதிஶயிதப்ரமாணமென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (ஶ்ருதிஸ்ம்ருதீத்யாதி.)

ப்ரஶ்நம் பண்ணுகிறவனைக் குறித்து எங்கள் வார்த்தையைக் காதுகொண்டு கேட்டாயாகி லென்னக்கூடுமோ வென்ன; அருளிச்செய்கிறார் (கேட்புதியாகிலித்யாதி.) ஆனைக்குப்பு-சதுரங்கம்.

' मधुरालापा " " மது₄ராலாபா " என்கிறபடியே சொல்லப்பட்டமதுரமான தங்களாலாபத்தாலே எழுப்புகிறார்களென்று அந்வயித்தர்த்தம் கண்டுகொள்வது. "ஞாலத்தையெல்லாம்நடுங்கமுரல்வன, போய்ப்பாடுடையன, என்றந்வயித்து, "ஞாலத்தையெல்லாம்"என்றவிடத்தில் அத்தும் ஐகாரமும்

சொல்லுகிறார்கள் (ஞாலத்தையித்யாதி) "ஸகோஷேர்தாராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநிவ்யதாரயத்" "ஸகோஷோதார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநிவ்யதாரயத்" (கூக) என்னுமளவன்றியே, ஜகத்தெல்லாம் வாழும்படி த்வநிக்கைக்கு இடமுடைத்தானவை. * பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியிறே தாரகம். அப்படியே நாடெல்லாம் இந்தத்வநி கேட்டு வாழவேணும். இவர்கள் தாங்களும் * வலம்புரிபோல் நின்றதிரவேணு மென்றிறே சொல்லிற்று. (பாலன்ன) பாலைத்திரட்டினாப்போலே யிருக்கை. இப்படி யிருப்பன பலசங்குவேணும்.

(போய்ப்பாடு) பேரிடமாயிருக்கை. இடமுண்டாகிலிறே த்வநி முழங்கியிருப்பது. புகழ் என்றுமாம்; ருக்மணிப்பிராட்டிபோல்வாருக்கு உதவினனென்கிற புகழ். பின்னையோவென்ன; (சாலப்பெரும்பறையே) ஒருமன்றிலே த்வநிக்கையன்றியே எங்குமொக்க த்வநிப்பதொருபறைவேணும். "யஸ்யாதூர்யப்ரணாதேந பேரீணாஞ்சமஹாஸ்வநை:" "யஸ்யதூர்யப்ரணாதேந பேரீணாஞ்சமஹாஸ்வநை:" (கூ0) என்னுமாப்போலே.

பின்னையோவென்ன; (பல்லாண்டிசைப்பாரே) திருப்பல்லாண்டு பாடிக்கொண்டு போருவார் வேணும். பின்னையோ வென்ன; (கோலவிளக்கே) அழகியவிளக்கு. அதாகிறது மங்களதீபம்.

அவ்யயமாய், "ஞாலம்" என்று-ப்ரதிகூலரைச் சொல்லுகிறதாய், ப்ரதிகூலரெல்லாரும் நடுங்கும்படி த்வநிக்க இடமுடைத்தாயென்று ஸப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி வ்யாவ்ருத்திபூர்வகம் பலித்த தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸகோஷஇத்யாதி;) ப்ரதிகூலர் நடுங்கும்போது அநுகூலமான ஜகத்தெல்லாம் வாழுகை அர்த்தஸித்தமென்று கருத்து. அன்றிக்கே, "ஞாலம்" என்றது-அநுகூலர்பரமாய், "நடுங்க" என்றது-இவற்றின் செவிவழியேபுகுந்து அம்ருதரஸம்போலே குளிர்ந்து வவ்வலிடப்பண்ணுகை யென்று தாத்பர்யமருளிச்செய்கிறானென்னவுமாம். சங்குகளை யிங்ஙனே விஸேஷித்ததுக்கு உட்கருத்தை த்ருஷ்டாந்த பூர்வகம் விவரிக்கிறார் (பூங்கொளித்யாதிவாக்யத்வயத்தாலே.) நாடெல்லாம் வாழவேணுமென்னு மிவர்கள் பரஸம்ருத்திபரதைக்கு ஸம்வாதம் காட்டுகிறார் (இவர்களித்யாதி.)

"போய்ப்பாடு" என்றதுக்கு-இடமுடைத்தாகையைக் கீழொருஅர்த்தமருளிச்செய்து, அர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (புகழென்றுமா மித்யாதி.) "சாலப்பெரும்பறை" என்றதுக்கு-மிகயும் பெரிதான வாத்ய மென்று ஸப்தார்த்தமாய், அத்தால் பலித்தத்தை வ்யாவ்ருத்திபூர்வகமருளிச்செய்கிறார் (ஒருமன்றிலேஇத்யாதி.) மன்றில்-பொதுச்சாவடி. ஸ்ரீபாஞ்சராத்ரக்ரியாபாதே ஷோடஸாத்யாயே "ஜாம்பவந்தஞ்சபித்வாது பேரீநாதேநதத்பரம்" "ஜாம்பவந்துவித்வாது பேரீநாதேநதத்பரம்" இதிஸ்த்திதம் வசநம் அத்ராநுஸந்தேயம்.

(கொடி) திருக்கொடி யாடவேணும். (விதாநம்) மேல்கட்டு வேணும் என்று இவற்றை அபேக்ஷிக்க; சங்கும் பலகிடையாது, ஸ்ரீ பாஞ்சஜந்யத்தைக் கொள்ளுங்கோ ளென்றான்; தன்னைப்போலே யிருப்பார் சிலருண்டாகிலிறே புறம்பு ஸ்ரீபாஞ்சஜந்யம்போலே யிருக்கும் சங்கு உண்டாவது. * பறைக்கு பாரோர்களெல்லாம் மகிழப் பறைகறங்கக் குடக்கூத்தாடினபோது திருவரையிற் கட்டின பறையையும், திருப்பல்லாண்டு பாடுகைக்குப் பெரியாழ்வாரையும், விளக்குக்கு நப்பின்னைப் பிராட்டியையும், கொடிக்குப் பெரியதிருவடியையும், மேல்கட்டுக்கு அத்தவாளத்தையுங் கொள்ளுங்கோளென்றான். விதாநத்துக்கு திருவவதரித்த வன்று பணத்தையிட்டுக் கவித்துக் கொண்டு போந்த திருவநந்தாழ்வானைக் கொடாதொழிவானென்னென்னில்; எல்லாரையும் போகச்சொன்னாலும் தன்னையொழிய ஓரடியிடமாட்டாதவனாகையாலே, அத்தவாளத்தைக் கொடுத்தான்; *பெருமானரையில் பீதக வண்ணவாடை கொண்டிறே வாட்டந்தணியச் சொல்லிற்று.

ஓரொன்று போராது இப்படியிருப்பன பலவேணு மென்ன இல்லாதத்தைத் தேடப்போமோ வென்ன; உனக்கு அரியதுண்டோ வென்ன; எனக்கெளியதா யிருந்ததோ வென்ன; (ஆலினிலையாய்) சிறிய தொருவடிவைக்கொண்டு ஸர்வலோகத்தையும் சிறுவயிற்றிலே வைத்து பவனுயிருப்பதொரு ஆலந்தளிரிலே கண்வளர்ந்த உனக்கு

"ஆலினிலையாய்" என்று ஸம்போதித்ததுக்கு ப்ரஸக்திமுகேந தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்றிவற்றை யபேக்ஷிக்கவித்யாதி.) "ஆலினிலையாய்" என்று-வடபெருங்கோயிலுடையானைக்குறித்து இவர்கள் அபேக்ஷித்தபோது க்ருஷ்ணாவதாரத்தில் பறையைக் கொள்ளுங்களென்றும் நப்பின்னையைக்கொள்ளுங்களென்றும் சொன்னது, நாய்ச்சியாருடைய பாவநாப்ரகர்ஷத்தாலே அதீதகாலத்திலுள்ளதும் வர்த்தமாநகாலத்தோடொத்துத் தோற்றுகையாலே சேருமென்று கண்டுகொள்வது. ஓரடியிடமாட்டாதவனென்றது-அவதாரத்திலுமுட்பட, "నచసీతా త్వయాహీనా నచాహ మపిరాఘవ" "ந வஸீதா த்வயா ஹீநா ந வாஹமபி ராகவ" என்றும், "అహం సర్వం కరిష్యామి జాగ్రతస్స్వపతశ్చ తే" "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ்ஸ்வபதஶ்ச தே" என்றும் சொல்லுகையாலே - ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்த்தைகளிலும் தன்னைப் பிரியமாட்டாதவனென்கை. அத்யந்த மிஷ்டமாகையாலே கொடுத்தானென்று பரிஹாராந்தரமருளிச்செய்கிறார் (பெருமானித்யாதி.)

"சங்கங்கள்" என்று பஹுவசநமிருக்கையாலே, "பறை" இத்யாத்யேகவசநம்ஸமஷ்டிவாசகம் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் (ஓரொன்றித்யாதி.) ... ... உகூ

முடியாததுண்டோ. லோகத்தில் இல்லாததும் எங்களுக்காக உண்டாக் கவல்லே யென்று கருத்து.

(அருள்) வேண்டாதொழியில் செய்யலாவதில்லே ; ஶக்தியில்லா மையில்லே ; இத்தலேயில் பேற்றுக்கெல்லாம் ஹேது அவன் ப்ரஸாத மென்கை. "மாலே மணிவண்ணு" என்கிறவித்தால் - "ஸௌ-ஶீ" (கககூ) என்கிறவிடத்தில் ஸௌலப்யத்தைச் சொல்லிற்று ; "ஆலினி லேயாய்" என்கிற விஶேஷணத்தாலே- "அஹஸ்-ஸஹ" (கககூ) என்கிற விடத்தில் ஸஹாயாந்தர நிரபேக்ஷமான உபாயவேஷத்தைச் சொல் லிற்று; இப்பாட்டில் சொல்லுகிறது-"நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" "நிர ஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" (கககூஉ) என்கிற ஶ்ருத்யர்த்தம். (உ௬)

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—இருபத்தாரும்பாட்டு. (மாலேயித்யாதி) இப்பாட்டில், பக வத் ஸம்ஶ்லேஷத்துக்கு வேண்டு முபகரணங்களே வேண்டிக்கொள் ளுகிறுர்கள்.

வ்யா.—(மாலே மணிவண்ணு) ஸர்வாதிகனுய் ஸர்வஸுலபனு னவனே யென்னுதல்; ஆஶ்ரித வ்யாமோஹமே ஸ்வரூபமாய் அதிம நோஹரமான விக்ரஹத்தை யுடையவனே யென்னுதல். இப்படி ஸம் போதித்தவாறே, நீங்கள் வந்தகார்ய மென்னென்ன (மார்கழி நீராடு வான்) மார்கழிமாஸத்தில் நோன்புக்கு அங்கமாகக் குளிக்கை. இந் நோன்புதானே காம்யார்த்திகளுக்கு ஸாதநமாயும், நிஷ்காமருக்கு நித் யமாயும், ப்ரபந்நாதிகாரிகளுக்கு பகவத் கைங்கர்யமாயு மிருக்கும்.

ஆகையாலே ப்ரபந்நாதிகாரிகளுக்குச் சொல்லுகிற கர்மத்யாகம் ஶாஸ்த்ரோக்தமான ஆகாரத்தாலே அநுஷ்ட்டியாதொழிகையொழிய கேவலாநநுஷ்டாந ரூபத்யாக மென்றதாய்த்து.

அதில் ப்ரமாண மென்னென்ன (மேலேயார் செய்வனகள்) ப்ர மாணங்களில் தலேயான ஶிஷ்டாசார மென்ன ;

அதுக்கு வேண்டுவதென்னென்ன ; பராக்கில்லாமல் கேட்டாயா கில் சொல்லுகிறேமென்ன ; ஆகில் இதுவும் உங்கள் பேச்சன்றே கே ட்கிறேன் சொல்லுங்கோளென்ன ; சொல்லுகிறுர்கள் (ஞாலமித்யாதி யால்) பூமிப்பரப்பிலுள்ள அஹங்காரி சேதநரடைய நடுங்கும்படித்வ நிக்குமதாய், அதுக்குத்தக்க குடைகையை யுடைத்தாய் அதிபோக்ய

மாய் அதிபரிமூத்தமாய் உன் திருக்கையில் ஸ்ரீ பாஞ்சஜந்யம்போலே யிருக்கிற பலசங்கங்கள் வேணும். இத்தால்-அநந்யார்ஹஶேஷத்வஜ்ஞாநம் வேணுமென்கிறது. ஶங்கத்வநி ஓங்காரமென்று ஜகத்திலே ப்ரஸித்தமா யிருக்கையாலே ஓங்காரார்த்தம் அநந்யார்ஹஶேஷத்வ மாகையாலே லக்ஷணயா ஶேஷத்வஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது.

(சாலப் பெரும்பறையே) மிகவும் த்வநிக்கிற மத்யத்திலே யிருக்கிற பறையென்கையாலே - பகவதநந்யார்ஹ ஶேஷத்வ விரோதியான ஸ்வஸ்வாதந்த்ர்யத்தையும், ஶேஷத்வசிந்ஹமான கைங்கர்யத்தில் ஸ்வாதீநகர்த்ருத்வ போக்த்ருத்வங்களையும் நிவர்த்திப்பிக்குமதாய், மத்யேயிருக்கிற நமஶ்ஶப்தார்த்தமான பாரதந்த்ர்ய ஜ்ஞாநமும்வேணு மென்னுமிடஞ் சொல்லுகிறது. (பல்லாண்டிசைப்பாரே) ஸத்ஸஹவாஸம் வேணும்.

(கோலவிளக்கே) பகவதநந்யார்ஹஶேஷத்வத்தை யவனுக்கு அத்யந்தமநோஹரமாக்குகிற பாகவதஶேஷத்வ ஜ்ஞாநமும்வேணும். (கொடியே) கீழ்ச்சொன்ன ஶேஷத்வ லக்ஷணமான கைங்கர்யமும் வேணும். (விதாநமே) அக்கைங்கர்யத்தில் போக்த்ருத்வ நிவ்ருத்தியும் வேணுமென்ன.

இல்லாதத்தை யுண்டாக்கலாமோவென்ன (ஆலினிலையாய்) முன்பு இல்லாதத்தை யுண்டாக்கினவ னல்லையோ. (அருள்) க்ருபை யுண்டாகில் செய்யத்தட்டில்லை. ... ... (உ௬)

அ.—இருபத்தேழாம்பாட்டு. நோற்றால் அவன்பக்கல் பெறக்கடவபேறு சொல்லுகிறார்கள்.

மூ.—கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா வுன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மாநம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (உ௭)

இருபத்தேழாம்பாட்டு (கூடாரையித்யாதி.) எம்பெருமானோட்டை ஸம்ஶ்லேஷத்துக்காகத் தங்களுக்கு வேண்டும் பூஷணாதிகளெல்லாம் உத்தேஶ்யமாகத் தோற்றுமென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (நோற்றாலித்யாதி.) நோற்றால் - நோன்பென்று வ்யாஜத்தால்.

பதம்.	உரை.
கூடாரை	தன்னை ஆஶ்ரயியாதவர்களை
வெல்லும் சீர்	ஜயிக்கும் குணத்தையுடையனாய்,
கோவிந்தா !	பசுக்களை ரக்ஷிக்கையாலே கோவிந்தனென்னும் திருநாமத்தையுடையவனே !
உன்றன்னை	கோபீஜநவல்லபனான வுன்னை
பாடி	ப்ரீதிக்குப் போக்குவிட்டுப்பாடி
பறைகொண்டு	ப்ராப்யத்தைப்பெற்று
யாம் பெறுசம்மானம்	நாங்கள் பெறும்படியான ஸம்மாநமானது
நாடு புகழும் பரிசினால்,	நாட்டார் புகழும்படிக்கீடாக,
சூடகம்	கையிலணியும் ஆபரணமான முன்கைச்சரி
தோள்வளை	தோளுக்கிடும் ஆபரணமான பாஹுவலயம்
தோடு	காதுக்கிடும் ஆபரணமான தோடு
செவிப்பூ	கர்ணப்பூ
பாடகம்	காலுக்கிடும் ஆபரணமான பாடகம்
என்று அனைய	என்றாப்போலே சொல்லப்பட்ட
பல் கலனும்	பலவகையான ஆபரணங்களும்
	நீயும் நப்பின்னைப்பிராட்டியுமாக விருந்து பூட்ட,
யாம் நன்றாக அணிவோம் ;	நாங்கள் நன்றாக தரிக்கவேண்டும் ;
ஆடை உடுப்போம் ;	திருப்பரியட்டங்களைநீயுடுத்த உடுக்கவேண்டும் ;
அதன் பின்னே,	அதற்குப்பின்பு,
பால்சோறுமூட	பாற்சோறானது மூடும்படி
நெய்பெய்து	நெய் பரிமாறி
முழங்கைவழிவார	முழங்கையால்வழியும்படியாக
	பிரிந்துபட்ட வ்யஸநமெல்லாம் தீரும்படி,
கூடியிருந்து	நீயும் நாங்களுமாகக் கூடியிருந்து
குளிர்ந்து.	ஸுகிக்கவேணுமென்கிறார்கள்.

வ்யா.—(கூடாரை வெல்லும்) ஆந்தனையும் பார்த்தால் “நநமே யம்” “நநமெயம்” (கஈஅ) என்பாரை வெல்லுமித்தனை. அவர்களை வெல்லுமாப்போலே கூடினார்க்குத் தான் தோற்குமித்தனை. (சீர்) எல்லாரையும் வெல்லுவது குணத்தாலே. “[illegible]

கூடாரைவெல்லுமதான, சீரை - கல்யாணகுணத்தை யுடையவனென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆந்தனையுமித்யாதி.) “கூடாரைவெல்லும்” என்னுமதத்தால் - கூடுமவர்க்குத் தோற்குமென்று பலித்த தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் (அவர்களையித்யாதி.) தோற்குமித்தனையென்றது - ஶீலாதிகுணங்களாலே அநுகூலரை வென்று தான்தோற்றிருக்குமென்றபடி.

கூடாதாரை ஶௌர்யாதிகளாலும், கூடினாரை ஶீலாதிகளாலும், வெல்லும் ப்ரகாரத்தை ப்ரதீகக்ரஹணபூர்வகம் உபபாதிக்கிறார் (எல்லாரையுமித்யாதி

ஸுஜோசபீர்ஃ” “வவாஞுவாவஞுகோஜோவவீரஃ” (ககூங) என்று - விற்பிடித்தபடியைக் காட்டி விரோதிகளைத் தோற்பிக்கும்; அநுகூலரை அழகாலும் நீர்மையாலும் தோற்பிக்கும்; ஸர்வஜ்ஞரை “எத்திறம்!” என்னப் பண்ணும்* குணமிறே. அம்புவாய் மருந்தூட்டித் தீர்க்கலாம்; நீர் கொன்றுப்போலே இதுக்கு பரிஹாரமில்லை. (கோவிந்தா) கூடுவோமல்லோ மென்னும் அபிஸந்தியில்லாத மாத்ரத்திலே ரக்ஷித்தபடி.

(உன்றன்னைப்பாடி) “ஹிரண்யாயநமஃ” என்கைதவிர்ந்து, வகுத்த உன்னுடைய பேரை ஸ்வயம்ப்ரயோஜநமாகச் சொல்லப் பெறுவதே! என்கை. கோபீஜந வல்லபனுன வுன்னைப் பாடுகையே எங்களுக்கு ப்ரயோஜநம் போருமென்னவுமாம். (பறைகொண்டு) ப்ராப்யத்திலே ப்ராபக வ்யவஹாரம். ஊருக்கு “பறை” என்கிறது; தங்களுக்கு ப்ராப்யம். (யாம்பெருசம்மாநம்) தோளில்மாலையை வாங்கியிடுகை இவர்களுக்குப் பெருப்பேறென்கை. “ஸ்ரஜஸ்ஸ்நாநிதாஸீதா” “வதிஸ்ஜாநிதாஸீதா” (ககூச) என்று -“பெருமாள்தோளில் மாலையை வாங்கியிட்டார்” என்று ஆழ்வான் பணிக்கும்; பட்டரும் பணிக்கும். அநாதிகாலம் எல்லாராலும் பட்ட பரிபவம் மறக்கும்படி

வாக்யசதுஷ்டயத்தாலே.) அம்பாலே தோற்பிக்கையும் குணத்தாலே தோற்பிக்கையும் துல்யமாமோவென்ன; அருளிச்செய்கிறுர் (அம்புவாயித்யாதி.) தாஹார்த்தனுனவன் தீர்த்தபாநம்பண்ணும்போது ஸாத்மிக்க ஸாத்மிக்க பாநம் பண்ணுதே ஆர்த்தியாலே அதிகமாகப் பாநம்பண்ண அத்தாலே பாதைவந்தால் அதுக்கு ஈஶ்வரனுடைய தாரகமான குணங்களை யபிநிவேஶத்தாலே யநுபவிக்கையால் வந்த ஈடுபாட்டுக்கும் பரிஹாரமில்லையென்று கருத்து. * கோபத்தாலே ஹிதாஹிதஜ்ஞாநமில்லாமை தோற்றுகையால் அதுக்கு தாத்பர்ய மருளிச்செய்கிறுர் (கூடுவோமல்லோமித்யாதி.)

“உன்றன்னை” என்றவிடத்தில்’ “தன்னை” என்றத்தாலேதோற்றின தானுன தன்மை வகுத்த ஶேஷியாகையென்று தாத்பர்யமருளிச்செய்கிறுர் (ஹிரண்யாயேத்யாதி.) “கோவிந்தா” என்றபதத்தைக் கடாக்ஷித்து, “உன்றன்னை” என்றதுக்கு தாத்பர்யமருளிச்செய்கிறுர் (கோபீஜநேத்யாதி.)ப்ராப்யத்திலே- தங்களுக்குத்தேஶ்யமான கைங்கர்யத்திலே. ப்ராபக வ்யவஹாரமென்றது—நோன்புக்கங்கமாகையால் ப்ராபகவாசகமான “பறை”என்கிற ஶப்தப்ரயோகமென்கை. இதுக்கு மேற்படத் தங்களுக்குப்பேறில்லாமையால் திருத்தோள்மாலையிடுகையே ஸந்மாநமென்று தாத்பர்யமருளிச்செய்கிறுர் (தோளிலித்யாதிவாக்யத்வயத்தாலே.) சம்மானமென்றது - கொண்டாடுகையாய், அர்த்தாந்தரமருளிச்செய்கிறுர் (அநாதீத்யாதி.)

கொண்டாடுகை. (நாடு இத்யாதி) ஒருவன் கொடுக்கும்படியே! சிலர் பெறும்படியே! என்று நாட்டார் கொண்டாடவேணும். (நன்றாக) “ப்ரதேஹி ஸுபகே ஹாரம் யஸ்ய துஷ்டாஸி பாமினி” “வைதேஹி ஸஹஸ்ரஹாரம் யஸ்ய தஷ்டாவஸிஹாரிணி” (௧௧௫) என்று - இந்த்ரன் வீரக்காட்டின ஹாரத்தைப் பெருமாளும் பிராட்டியுங் கூடவிருந்து திருவடிக்குப் பூட்டினாப்போலே பூணவேணும். “தம் ப்ரஹ்லாதஜ்ஞாவலமாபூர்ணம்” “தம் வ்யூஹாஜ்ஞாவரணாஜ்ஞாவ்ருதி” (௧௧௬) என்று சிலரையிட்டு ஒப்பிக்கையன்றிக்கே, தானும் பிராட்டியுங்கூட விருந்து ஒப்பித்ததன்னேற்றம். ஆபரணத்தைப்பூண்டு அவன் வரவு பார்த்திராதொழிகை என்றுமாம்.

(சூடகமே) ப்ரதமத்திலே ஸ்பர்ஶிக்கும் கைக்கிடும் ஆபரணம். பரம ப்ரணயியாகையாலே தன் தலையிலே வைத்துக்கொள்ளும் கை. “அடிச்சியோந்தலைமிசை நீயணியாய்” என்று, அவர்களுக்கு இவன் சொல்லுமாப்போலே சொல்லி மார்பிலும் தலையிலும் வைத்துக்கொள்ளும் கைக்கு இடும் சூடகம். (தோள்வளை) அந்த ஸ்பர்ஶத்தாலே யணைக்கவேண்டும் தோளுக்கிடும் ஆபரணம். (தோடே) “பொற்றோடுபெய்து” என்று - பண்டே தோடிட்டாலும் அவனிட்டாப்போலே யிராதிறே. (செவிப்பூவே) “ப்ரியாவதம்ஸ” “வ்யாவதம்ஸ” (௧௧௭) இத்யாதியிற் சொல்லுகிறபடியே அணைத்த திருக்கையிலே யுறுத்தும் ஆபரணங்கள் போலன்றிக்கே, அணைத்த வநந்தரம் ஆக்ராணத்துக்கு விஷயமான இடம். (பாடகம்) அணைத்தால் தோற்றுப்பிடிக்கும் காலுக்கிடும் ஆபரணம். (என்றனையபல்கலன்) பருப்பருத்தன சில சொன்னோமித்தனை, நீ யறியுமவையெல்லாமென்கை. ❋ பலபலவே யாபரணமிறே. (யாம் அணிவோம்) வ்யதி

நாடுபுகழும் பரிசினல் - நாட்டார் கொண்டாடும் ப்ரகாரத்தாலே யென்று ஶப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒருவனித்யாதி.) நன்மையாவது - க்ருஷ்ணனும் நப்பின்னையும் கூடவிருந்து பூட்டுகையென்று விவக்ஷித்து, த்ருஷ்டாந்தபூர்வகம் விவரிக்கிறார் (ப்ரதேஹீத்யாதி.)

நன்மையாவது - க்ருஷ்ணன் ஸந்நிதியிலே தானே பூண்டிருக்கை யென்று விவக்ஷித்து வ்யாவர்த்திபூர்வகம் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (ஆபரணத்தையித்யாதி.)

“சூடகம்” என்றது - முன்கைச்சரியாய், அத்தை தரிக்கவேணுமென்றதுக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (அடிச்சியோமித்யாதி.) அணைத்த திருக்கையிலேயென்றது - அணைத்து உபதாநமாகக்கொடுத்த திருக்கையிலேயென்றபடி. “பல்கலனும்தரவேணும்” என்னவேண்டியிருக்க, “அணிவோம்” என்றதுக்குத்தாத்பர்யமருளிச்செய்கிறார் (வ்யதிரேகத்தி லித்யாதி வாக்யத்வயத்தாலே.)

ரேகத்தில் "மலரிட்டுநாமுடியோம்" என்றவர்கள் "பூண்போம்" என்கிறார்கள். அவனுக்கு இவர்களநுமதியைப்பண்ணுகையே யமையுமென்கை.

(ஆடை யுடுப்போம்) பண்டு உடார்களோ வென்னில்; அவனுடுத்து உடாதது உடையன்றென்றிறே யிருப்பது. அவன் திருப்பரியட்டம் இவர்க ளரையிலே யாம்படி கூறை மாறவேணு மென்றுமாம். நோன்பை முடிக்கையாலே நல்ல பரியட்டம் உடுக்கவென்றுமாம். "உடுத்துக்களைந்த" என்னுமவர்களிறே யிவர்கள். ஸ்வேத கந்த யுக்தமாய் அவனுடுத்து முசிந்த ஆடையென்னவுமாம்.

(அதன் பின்னே யித்யாதி) அதுக்குமேலே பால்சோறு மூடும்படியாக நெய் பெய்து. இத்தால் - பகவத் ஸம்பந்தமுள்ள திருவாய்ப்பாடியில் ஸம்ருத்தி யெல்லாம் ப்ரியமா யிருக்கிறபடி. (மூழுங்கை வழிவார) நம்பி திருவழுதி வளநாடு தாஸர் "நெய்படாதோ" என்ன; க்ருஷ்ண ஸந்நிதியாலே த்ருப்தைகளா யிருக்கிறவர்களுக்கு சோறு வாயில் தொங்கிலன்றோ நெய்வாயில் தொங்குவது" என்று பட்ட ரருளிச்செய்தார். வ்யதிரேகத்தில் "நெய்யுண்ணோம் பாலுண்ணோம்" என்று சொன்னவர்கள் இன்று ஆசைப்படுகிறார்கள். (கூடியிருந்து) பிரிந்துபட்ட க்லேஶம் தீரக்கூடித் தொட்டுக்கொண்டிருக்கையே ப்ரயோஜநம்; புஜிக்கை ப்ரயோஜநமன்று. (குளிர்ந்து) பிரிந்து கமர் பிளந்த நெஞ்சுகள் குளிரும்படி.

"நம்பெருமாள் திருநாள்" என்று ஒருபேரையிட்டு ஸ்ரீவைஷ்ணவர்களைத் திரட்டிக்காணுமாப்போலே, "அஹமந்நமஹமந்நம் - அஹமந்நாத:" "அஹமந்நாதோऽஹமந்நாத:" (கஙஅ) என்று ஒருவர்க்கொருவர் போக்யமாமிறே. "ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ । ப்ரஹ்மணா

(அநுமதியைப்பண்ணுகையே யமையும்) அவன் கொடுக்கைக்கென்றுகருத்து.

(என்னுமவர்களிறே) என்றவநந்தரம் "ஆகையாலே" என்று ஶேஷம். நெய்படாதோவென்ன வென்றது - முழங்கையில் தானேவழிகையித்தனைபோக்கி வாயில்புகாதோவென்ன வென்றபடி.

க்ருஷ்ணனோடே கூடியிருக்கையே ப்ரயோஜந மென்னு மதுக்கு, இவர்களோடே கூடுகை அவனுக்கு ஸ்வயம் ப்ரயோஜநமானாப்போலே இவர்களுக்கும் அவனோடு கூடுகை பரமப்ரயோஜநமென்னு மர்த்தத்தைத்ருஷ்டாந்தமுகேந வருளிச்செய்கிறார் (நம்பெருமாளித்யாதி.) இவ்வர்த்தத்துக்கு ஸம்வாத மருளிச்செய்கிறார் (அஹமந்நமித்யாதி.) அஹமந்நமென்றது - ப்ரஹ்மத்துக்குத் தான் போக்யமென்றபடி. அஹமந்நாத: - நான் ப்ரஹ்மமாகிற போக்யத்தை புஜிக்கிறவனென்று முக்தனுடைய அநுஸந்தாநமிருக்கிறபடி.

இப்பாட்டில் க்ருஷ்ணனோடே கூறை சோறுமுதலான இஷ்டங்களை புஜிக்கையைச் சொல்லுகையாலே இதுக்கு ஸம்வாதமருளிச்செய்கிறார் (ஸோऽஶ்நுதேத்யாதி.) காமாந் என்றது - இஷ்டங்களை யென்றபடி.

ఏపశ్చైతా ” “ஸொஸ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ- ப்ரஹ்மணா விபஶ்சிதா ” (க௬௬) என்கிற ஶ்ருத்யர்த்தம் இப்பாட்டிற் சொல்லுகிறது. ... உஎ

கூடாரையித்யாதி, பாடிப்பறைகொண்டுயாம் சம்மானம் பெறக்கடவோம்; நாடுபுகழும் இத்யாதி, யாமணிவோம்; ஆடையுடுப்போம்; அதன்பின்னே நெய்சோறுமூடப்பெய்து முழங்கைவழிவாரப் பாற்சோறுண்ணக்கடவோம்; இப்படி யுன்னோடுகூடியிருக்கக் கடவோமென்றந்வயம். “சூடகம்” இத்யாதியில் ஏகாரம் அவ்யயம். ... ... உஎ

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—இருபத்தேழாம்பாட்டு. (கூடாரையித்யாதி) இப்பாட்டில், நோற்றால் அவன்பக்கல் பெறுமவற்றைச் சொல்லுகிறார்கள்.

வா).—(கூடாரை வெல்லுஞ்சீர்) கரணகளேபரப்ரதாநம் முதலாக ஸாங்கஶாஸ்த்ர ப்ரதாநம்பண்ணின விடத்திலும் “ నన మేయం ” “ நநமேயம் ” என்றிருப்பாரைத் தன்னுடைய ஶௌர்யாதி குணங்களாலும் ஶீலாதிகுணங்களாலும் வெல்லுமித்தனை. விற்பிடியைக்காட்டி ராவணனை ஜயித்தான்;இது ப்ரதம யுத்தத்திலே “గచ్ఛానుజానామి” “ கச்சாநுஜாநாமி ” என்று இவனும் அதுக்கெதிர் பார்த்துப் போனவன், தோலாமை யில்லையிறே. ஆனால் மறுபடி யுத்தமுண்டானபடி யெங்ஙனேயென்னில்; பெருமாளுடைய நிரதிஶய ஶௌர்யத்தை ப்ரகாஶிப்பிக்கைக்காக மறுபடியும் யுத்தம்பண்ணினனித்தனை. “ శత్రోః ప్రఖ్యాతవీర్యస్య రంజనీయస్య విక్రమైః ” “ ஶத்ரோ: ப்ரக்யாத வீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை: ” “ స్వవిక్రమైః రంజనీయస్య ” “ ஸ்வவிக்ரமை:- ரஞ்ஜநீயஸ்ய ” என்னக்கடவதிறே என்று நம்முடைய ஆசார்யர் அருளிச்செய்வர். தன்னுடையவடிவழகைக்காட்டிகோபிமார்களை ஜயித்தான்; ஸ்வரூப ரூபகுண விபூதிகளாலே ஸர்வஸ்மாத்பரனை தன்னுடைய வைலக்ஷண்யத்தைக்காட்டி ஆழ்வார்களை ஜயித்தான்; இவையொன்றிலு மீடுபடாத நம்போல்வாரை ஆழ்வார் ஸம்பந்தத்தை வ்யாஜீகரித்து ஜயிக்குமித்தனை. (கோவிந்தா) ஸர்வஸுலபனானவனே. (உன்றன்னைப்பாடி) ஸர்வஸ்மாத்பரனாய் ஸர்வஸுலபனான வுன்னை த்வதநுபவ ஜநிதப்ரீதிக்குப் போக்குவீடாகப்பாடி. (பறைகொண்டு) புருஷார்த்தத்தை லபித்து. (யாம்பெறுசம்மாநம் நாடுபுகழும் பரிசினால் நன்றாக) நாடு ஸ்வாபிப்ராயமாகக் கொண்டாடும் ப்ரகாரத்தாலே உன்பக்கல் கைபார்த்திருக்கும் நாங்கள் லபிக்கிற பஹுமாநம். உன்பக்கல் நன்றாக யாம் பெறுசம்மாந மென்றுமாம். (சூடகமே) காப்பே. (தோள்வளையே) திருவிலச்சினையே. (தோடே) திருமந்த்ரமே. (செவிப்பூவே) த்வயமே. (பாடகமே) சரமஶ்லோகமே. இவை ஸ்வரூபஜ்ஞனாய் முமுக்ஷுவான அதிகாரிக்கு அவஶ்யாபேக்ஷிதங்களாய்

பகவத்ஸம்பந்த த்யோதகங்களா யிருப்பன. இதில் தோடு, மண்டலா காரமாய் மந்த்ரஶேஷ விவரணியான ப்ரணவாகாரத்துக்கு த்யோத கமா யிருக்கையாலே-திருமந்த்ரத்தைச் சொல்லுகிறது. (செவிப்பூ) ஸ்வயம் போகரூபமாகையாலே - போகப்ரதாநமான த்வயத்தைச் சொல்லுகிறது. (பாடகம்) பாடகம் பக்தரூபமாகையாலே - உபா யாந்தர நிவ்ருத்திபரமான சரமஶ்லோகத்தைச் சொல்லுகிறது. இம் மூன்று ரஹஸ்யத்தாலும் - ஜ்ஞாநபக்தி வைராக்யங்களைச் சொல்லுகி றது. அதெங்ஙனேயென்னில்; திருமந்த்ரம் ஆத்மஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாந பரமாகையாலும், த்வயம் உத்தரகண்டத்தில் சொல்லுகிற கைங்கர்யத்துக்கு பூர்வபாவியான பக்தி ப்ரதாநமாகையாலும், சரம ஶ்லோகம் த்யாஜ்யாம்ஶத்தில் வைராக்ய ப்ரதாநமாகையாலும்,ஜ்ஞாந பக்தி வைராக்யங்களைச் சொல்லுகிறது. (என்றணைய) என்று சொல் லப்படுகிற. (பல்கலனும்) ஜ்ஞாந பக்தி வைராக்யங்கள் மூன்றும். ஓரொன்றே விஷயபேதத்தாலே அநேகமா யிருப்பனவிறே; ஆகை யாலே (பல்கலனும்) என்கிறார்கள். (யாமணிவோம்) உன்னோடே கூடாதவன்று இவையொன்றும் வேண்டாத நாம், இன்று அணியக் கடவோம். பகவத்ஸம்பந்தியிலே ஜ்ஞாநபக்தி வைராக்யங்களுண்டா னாலும் அபாயமேயிறே பலிப்பது. பௌத்தனுக்கும் ஜ்ஞாநபக்தி வைராக்யங்களுண்டிறே.

(ஆடையுடுப்போம்) ஶேஷத்வஜ்ஞாநமாகிற வஸ்த்ரத்தை யுடுப் போம். (அதன்பின்னே) அதுக்குமேலே. (பாற்சோறு) கைங்கர்ய மானது. (மூடநெய்பெய்து) மறையும்படி பாரதந்த்ர்யத்தை வெளி யிட்டு. (கூடியிருந்துகுளிர்ந்து) போக்தாவான வுன்னோடு போக்ய ரான நாம் ஸம்பந்தித்திருந்து விஶ்லேஷவ்யஸநமெல்லாந் தீரப்பெற் றோம். இதுவன்றோ நாம் உன்பக்கல் பெறும் ஸம்மாநம். ... உ௭

அ.—இருபத்தெட்டாம்பாட்டு. முதற்பாட்டில் "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று ஸங்க்ரஹேணசொன்ன ப்ராப்ய

இருபத்தெட்டாம்பாட்டு (கறவைகளித்யாதி.) முதல்பாட்டில் "நாராய ணனே" என்றத்தால் - ப்ராபகத்தையும், "பறை" என்றத்தால் - ப்ராப்யத்தை யும் சொல்லியிருக்க, "இறைவாநீதாராய்" என்று இப்பாட்டில் சொல்லுமள வில் பௌநருக்த்யமும், "இற்றைப்பறைகொள்வானன்றுகாண்" என்று-மேல் பாட்டிலே பறையை நிஷேதிக்கையால் அந்தப்பறை ப்ராப்யமென்று சொல்லு மளவில் விரோதமும் ப்ரஸங்கிக்குமென்னும் ஶங்கையிலே யருளிச் செய்கிறார் (முதல்பாட்டிலித்யாதி.) "நாராயணனே நமக்கேபறைதருவான்" என்றது - அபராதமாய், அதுக்கு க்ஷாமணத்தையும் தங்களாகிஞ்சந்யம் முதலான வுபயுக் தார்த்தத்தையும் இப்பாட்டில் சொல்லுகையால் இது விவரணமாய்த்து;

ப்ராபகங்களை, இந்த இரண்டுபாட்டாலே விவரிக்கிறது. அதில், இப் பாட்டிலே, நாட்டார் இசைகைக்காக "நோன்பு" என்று ஒரு வ்யாஜத்தையிட்டுப் புகுந்தோமித்தனை, எங்களுக்கு உத்தேஶ்யம் அதுவன்று, உன் திருவடிகளில் கைங்கர்யமேயென்று தங்களுக்கு உத்தேஶ்யமான புருஷார்த்த ஸித்திக்கு, தங்கள் ஆகிஞ்சந்யத்தையும் ப்ராப்தியையும் முன்னிட்டு, நீயே உபாயமாகவேணுமென்று அபேக்ஷித்து, இதுக்கு க்ஷாமணம்பண்ணிக்கொண்டு ப்ராப்யப்ரார்த்தநம் பண்ணித் தலைக்கட்டுகிறது. மேலிற்பாட்டிலே ப்ராப்யப்ரார்த்தநம் பண்ணுகின்றதாகில் இங்குப்பண்ணுகிற தென்னென்னில்; ப்ராபகம் ப்ராப்ய ஸாபேக்ஷமாயிருக்கையாலே சொல்லுகிறார்கள்.

மூ.—கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத வாய்க்குலத் துன்றன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் நாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா வுன்றன்னோ
டுறவேல் நமக்கிங் கொழிக்க வொழியா
தறியாத பிள்ளைகளோ மன்பினா லுன்றன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறி யருளாதே
இறைவா நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். (உஅ)

பதம்.	உரை.
	புல்லுள்ளவிடந்தேடி மேய்க்கைக்காக
கறவைகள் பின்சென்று	பசுக்களின்பின்னேபோய்
கானம் சேர்ந்து	காட்டிலேபொருந்தி வர்த்தித்து
உண்போம்	ஶரீரபோஷணமேபண்ணித் திரிந்தவர்களாய்,
ஒன்றும் அறிவு இல்லாத	சற்றேனும் அறிவில்லாத
ஆய்க்குலத்து	கோபகுலத்திற்பிறந்த
நாம்	நாங்கள்
உன்றன்னை	உன்னை
பிறவிபெறுந்தனை	ஸஜாதீயனாகப் பிறப்பிக்கத்தக்க

மேலில்பாட்டில் அந்யாபதேஶமானவர்ஷத்தைநிஷேதித்து, "பறை" என்றதினுட்கருத்தான வர்த்தத்தை விவரிக்கையால் அதுவும்விவரணமென்று கருத்து. விவரணரூபத்வத்தை யுபபாதிக்கிறார் (அதிலித்யாதி.) "இற்றைப் பறை கொள்வானன்றுகாண்" இத்யாதியைக்கடாக்ஷித்து, இப்பாட்டில் "பறை" என்றதினர்த்தத்தை உபாயஶேஷமாக வருளிச்செய்கிறார் (நாட்டாரித்யாதி.) ப்ராபகம் ப்ராப்யஸாபேக்ஷமாகையாவது - "இறைவாநீதாராய்" என்று இவர்கள் ப்ராபகத்தைக்குறித்து அர்த்திக்கும்போது "எத்தைத்தர" என்று கர்மாகாங்க்ஷை யுண்டாயிருக்கை.

புண்ணியம்	புண்யத்தை
உடையோம்;	உடைத்தானவர்களா யிராநின்றோம்;
குறைவொன்றும் இல்லாத	ஒருவகைக்குறைகளும் இல்லாதவனாய்,
கோவிந்தா!	கோவிந்தனென்னும் பேரையுடையனாய்,
இறைவா!	ஸர்வஸ்வாமியானவனே!,
உன்றன்னோடு உறவு	உன்னோடு எங்களுக்குண்டான ஸம்பந்தம்
இங்கு	இங்கே
நமக்கு ஒழிக்க ஒழியாது;	உன்னாலும் எங்களாலும் ஒழிக்கக்கூடாது;
அறியாத	உலகவழக்கமொன்றுமறியாத
பிள்ளைகளோம்	பாலைகளான நாங்கள்
அன்பினால்	உன்பக்கலுண்டான அன்பாலே
உன்றன்னை	உன்னை
சிறுபேர் அழைத்தன	சிறியபேராலே அழைத்ததைக்குறித்து,
சீறியருளாது	கோபித்தருளாமல்,
நீ	விலக்காமைபார்த்திருக்கும் நீ
பறைதாராய்	எங்களபேக்ஷிதத்தைத் தந்தருளவேணுமென்கிறார்கள்.

வ்யா.—(கறவைகள்) "𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌹𑍀𑌨𑌃 𑌪𑌶𑍁𑌭𑌿𑌸𑍍𑌸𑌮𑌾𑌨𑌃" "ஜ்ஞாநேந ஹீநா꞉ பஶுபிஸ்ஸமாநா꞉" (உ00) என்று - அறிவுகேட்டுக்கு நிதர்ஶநமான பசுக்கள். (பின்சென்று) நாங்கள் தேவரைப் பெறுகைக்கு குருகுல வாஸம்பண்ணினபடி. இவற்றை அநுவர்த்தித்தோமித்தனை; எங்களைப்பார்த்தால், பசுக்கள், வஸிஷ்டாதிகளுக்கு ஸத்ருஶமாகப் போரும். "𑌕𑍃𑌤𑌾𑌨𑍁𑌕𑌾𑌰𑌾𑌨𑌿𑌵 𑌗𑍋𑌭𑌿𑌰𑌾𑌰𑍍𑌜𑌵𑍇" "க்ருதாநுகாராநிவ கோபிரார்ஜவே" (உ0க) என்று-பசுக்கள் அசுக்காட்டும் ஆர்ஜவம். (கானம் சேர்ந்து) தந்தாமுடைய வ்ருத்திகளாலே ஒரு நன்மைக்குடலாம் மநுஷ்யர் திரியும் நாட்டிலே வர்த்தித்திலோம், புல்லுள்ளகாட்டிலே

ஆகிஞ்சந்யத்தைச்சொல்லவேண்டி தங்கள் நிகர்ஷத்தைச்சொல்லும்போது கறவைகளைப் பின்செல்லுகை நிகர்ஷமென்று தோற்றும்படி ஸம்வாத பூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஜ்ஞாநேநேத்யாதி.) "சென்று" என்று சொல்லவமைந்திருக்க "பின்" என்றதால் - ஆசார்யாநுவர்த்தநம்போலே இதுவேயொழிய வேறொன்றுமில்லையென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (நாங்களித்யாதி.)

ஜ்ஞாநஹீநர்க்கு நிதர்ஶநமாகை ப்ரஸித்தமேயாகிலும் பசுக்கள் மநுஷ்யரில் ஜ்ஞாநாதிக்யம் தோற்றும்படி உங்களுக்கு குருஸ்தாநமாகத் தோற்றிச்சொல்லுகை யெங்ஙனேயென்ன; அருளிச்செய்கிறார் (எங்களையித்யாதி வாக்ய த்வயத்தாலே.) அசுக்காட்டுகை - அநுகரிக்கை. அதாவது - நாப்புக்காட்டுகை. ஆர்ஜவமென்றது - இடையருடைய வ்யாபார மென்றபடி.

வர்த்தித்தோமித்தனை. இருப்பாலே நன்மையை விளைக்கும் தேஶத்திலே வர்த்தித்திலோம்; காட்டிலே வர்த்தித்தோமென்றுமாம். (சேர்ந்து) ஊரில் கால் பொருந்தாதபடியிறே காட்டிலே பொருந்தினபடி. (உண்போம்) வைஶ்யருக்கு கோரக்ஷணம் தர்மமானால் ததநுரூபமான காட்டிலே வர்த்திச்கையும் வாநப்ரஸ்த்தாஶ்ரமிகளோபாதி தர்மஹேதுவாகிறதென்ன; காட்டில் வர்த்தித்தாலும் விதராகராய் வாநப்ரஸ்த்தாஶ்ரமிகளோபாதி ஶரீரத்தைஒறுத்து அவ்வருகே ஒரு பலத்துக்காக வர்த்தித்தோமல்லோம், கேவலம் ஶரீரபோஷணபரராய் வர்த்தித்தோமித்தனை. இத்தால்-வ்ருத்தியில் குறைசொல்லிற்று. இதிறே உன்னைப் பெறுகைக்கு நாங்கள் அநுஷ்ட்டித்த கர்மயோகமென்கிறார்கள்.

(அறிவொன்று மில்லாத) இப்போதில்லையாகில் விடுங்கோள், விதுராதிகளைப்போலே ஜந்மாந்தர ஸுக்ருதத்தாலேபிறந்த ஜ்ஞாநந்தானுண்டோவென்னில்; அதுவுமில்லை. (ஒன்றும்) பகவத்ஜ்ஞாநத்துக்கடியான ஆத்மஜ்ஞாநமுமில்லை. தத்ஸாத்யமான பக்தியுமில்லையென்கை. பக்தியில்லையென்கிறது, "பக்திஶ்ச ஜ்ஞாநவிஶேஷ:" "ஸ்நேஹபூர்வமநுத்யாநம் ஜ்ஞாநவிஶேஷ:" (உOஉ) என்று-பக்தியாவது ஜ்ஞாநவிஶேஷமாகையாலே. இவர்களலமாப்பு பக்தியன்றோவென்னில்; அதுஸ்வரூபமாகையாலே உபாயமாக நினையார்கள். ஆகவித்தால்-கர்மஜ்ஞாநபக்திகளில்லையென்கை. "அஹமஸ்ம்யபராதாநாமாலய:" "அகிஞ்சநோऽநந்யகதி:" (உOரு) "நோற்றநோன்பிலேன்" இத்யாதி, "குளித்துமூன்று" "நதர்மநிஷ்டோஸ்மி" "நசாத்மவேதீ" (உOச) இத்யாதி, இவையன்றோ அறிவுடையார் வார்த்தை; அவர்களோடொத்திருந்திகோளென்ன; (ஆய்க்குலம்) அறிவுண்டென்று ஶங்கிக்கவொண்ணாதகுலம். கீழ்ச் சொன்ன உபாயஹாநிதோஷமாகாதே குணமாம்படியான ஜந்மம்.

தர்மஹேதுவென்றது-தேவதா ப்ரஸாதஹேது வென்றபடி. ஒறுத்து - க்லேஶப்படுத்தி. "கானம்சேர்ந்துண்போம்" என்றதால் - ஆகிஞ்சந்யம் பலித்த ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (இதிறேயித்யாதி.)

"கறவைகள்பின்சென்று" இத்யாதியாலே - ஜ்ஞாநஹீநதை சொல்லியிருக்கவும், "அறிவொன்றுமில்லை" என்ன ப்ரஸக்தியுண்டோவென்னும் ஶங்கையிலே யருளிச்செய்கிறார் (விதுராதிகளைப்போலேயித்யாதி.) இஜ்ஜந்மத்திலே ஸம்பாதித்த ஜ்ஞாந மில்லாவிட்டாலும் ஜந்மாந்தரார்ஜித ஜ்ஞாந முண்டாகலாமே, அதுவுமில்லையென்று கருத்து.

"ஒன்றும்" என்கைக்கு அநேகமுண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (பகவத்ஜ்ஞாநமித்யாதி வாக்யத்வயத்தாலே.) பக்தியன்றோவென்றது - பக்திகார்யமன்றோவென்றபடி.

மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார் (ஆகவித்யாதி.) தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (கீழ்ச்சொன்ன வித்யாதி.) பூர்வதாத்பர்ய விவரணம்

எங்கள் ஜந்மத்தைக்கண்டு வைத்து அறிவுண்டு என்று சொல்லுகிற நீ அறிவுகேடனித்தனை.

ஆனால் விடுமத்தனையோவென்ன; (உன்றன்னையித்யாதி) பேற்றுக்குடலான புண்யமில்லாதார் இழக்குமத்தனையன்றோ வென்ன; அங்ஙன் சொல்லலாமோ வெங்களை, புண்யத்துக்குச்சோறிட்டு வளர்க்கிறவர்களன்றோ. (உன்றன்னை) "కృష్ణం ధర్మం సనాతనమ్" "க்ருஷ்ணம் த⁴ர்மம் ஸநாதநம்" (கOஉ) "ఉపాయోపేయత్వే తదిహతవ తత్త్వమ్" "உபாயோபேயத்வே ததிஹ தவ தத்த்வம்" (உOரு) என்னும்படியானவுன்னை. (பிறவிபெறுந்தனை) நாட்டார் ஆஶ்ரயணீய ரிருந்விடத்தேபோய் ஆஶ்ரயிப்பர்கள், அவர்களைப் போலேயோ நாங்கள்; ஆஶ்ரயணீயனான நீதான் நாங்களிருந்தவிடத்தே எங்களோடே ஸஜாதீயனாய் வந்தவதரிக்கும்படியன்றோ எங்களுடைய ஏற்றம். (புண்ணியம்நாமுடையோம்) "కృష్ణం ధర్మం సనాతనమ్" "க்ருஷ்ணம் த⁴ர்மம் ஸநாதநம்" (கOஉ)

(எங்களித்யாதி.) இத்தால் - நாங்கள் சொன்னது ஸ்வாபாவிகம்; "అహమస్మి" "ஸுஹ்ருதம்" இத்யாதியால் பெரியோர்கள் சொன்னது நைச்யாநுஸந்தாநமாத்ரமென்றபடி. ஆனாலென்றது - தர்மார்ஜநாதிகளில்லாமே ஸ்வாபாவிகமானாலென்றபடி. விடுமத்தனை -ப்ராப்யத்திலாசைவிடுமத்தனை. "ஆனால்" இத்யாதியை விவரிக்கிறார் (பேற்றுக்கித்யாதி.) பேற்றுக்கடியான ஸாதநமொன்றுமில்லாதார் ப்ராப்யத்தை யிழக்குமித்தனையன்றோ வென்றபடி.

இந்த ப்ரஶ்நத்துக்கு உத்தரமாம்படி ப்ரதீகத்துக்கு ஹாவமருளிச்செய்கிறார் (அங்ஙனித்யாதி வாக்யத்வயத்தாலே.) புண்யத்துக்கென்றது – ஸித்ததர்மமான வுனக்கென்றபடி. "சோறு" என்று - இங்கு ரக்ஷ்யாபேக்ஷையைச் சொல்லுகிறது. அதாவது- ரக்ஷ்யனான சேதநனுடைய அபேக்ஷையில்லாதபோது தன் ரக்ஷகத்வ ஸ்வரூபஹாநிவருமென்று அவன் ரக்ஷகனுடைய வபேக்ஷையைப்பார்த்து அது பெற்றபோது த்ருப்தனாகையாலே தாரகமென்கை. இது ஸ்வாபாவிகார்த்தம். உனக்குநாங்கள் புண்யத்துக்குச் சோறிட்டு வளர்க்க எங்களை யிங்ஙன் சொல்லலாமோவென்னும் சாட்வார்த்தம் கண்டுகொள்வது. "தன்னை" என்றத்தால் தோற்றும் தானான தன்மை ஸநாதநதர்மத்வமாய், இதுக்கு ஸம்வாதம் காட்டுகிறார் (உபாயோபேயேத்யாதி.)

உன்றன்னைப் பிறவி பிறப்பிக்கத்தக்க புண்ணியத்தை நாமுடையோமென்று ஸப்தார்த்தமாய், இப்படி புண்யத்தை விஶேஷித்ததுக்கு ஹாவமருளிச்செய்கிறார் (நாட்டாரித்யாதி.) எங்களுடைய வேற்றமென்றது - எங்கள்பக்கல் உனக்குண்டான வாத்ஸல்ய மென்றபடி. "புண்ணியம்" என்றது - அலௌகிகஶ்ரேயஸ்ஸாதநமென்று சொல்லப்பட்டதாய், க்ருஷ்ணனைத்தவிர வேறேயொன்றென்று தோன்றுமைக்காக ஸம்வாதபூர்வகம் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (க்ருஷ்ணமித்யாதி.) இது வேறொன்றாகில் கர்மாதிகளொன்றுமில்லை யென்றத்தோடு

"புண்யாநாமபி புண்யோஸௌ" "ஸத்ராநாமேவ ஸத்ராணாம்" (உ0சு) "ராமோவிக்ரஹவாந்தர்ம:" "ஸாமோவிஷ்ணு ஹவாநுயாஜ்ஞ:" (உ0எ) என்கிற புண்யத்தைப்பற்றினவர்களன்றே. (நாமுடையோம்) ஸித்தஸாதநத்தைப் பற்றினவர்களிலுங் காட்டில் இருந்தவிடத்தே சென்று ஆஶ்ரயிக்க வேண்டாதபடியான ஏற்றத்தை யுடையவர்கள் நாங்கள். நினைத்தபடி விநியோகங் கொள்ளலாம்படி கைப்புகுந்த உன்னையுடையோமன்றே.

"அறிவொன்றுமில்லை" என்பது, "புண்ணியம்நாமுடையோம்" என்பதாய்க்கொண்டு வ்யாஹதபாஷணம் பண்ணுநின்றிகோளீயென்ன ; கண்டிலையோ ! இதுதானேயன்றே அறிவுகேடு ; ஆனால் விடுமத்தனையன்றேவென்ன ; (குறைவொன்றுமில்லாதகோவிந்தா) எங்களுக்குக் குற்றஞ்சொன்னோமித்தனைபோக்கி உன்னுடைய பூர்த்திக்குக் குற்றஞ் சொன்னோமோ. ஸர்வநிரபேக்ஷனென்கை. எங்களுடைய

சேராதென்று கருத்து. "நாம்" என்றதுக்கு வ்யாவ்ருத்திபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸித்தேத்யாதி.)இங்கு, ஸித்தஸாதநத்தைப்பற்றினவர்களென்றது - ஸ்வகதஸ்வீகாரநிஷ்டரை. "உடையோம்" என்று அவன் இவர்கள் ஸ்வம்மாகத் தோன்றுகையைவிவரிக்கிறார் (நினைத்தவித்யாதி.)

(வ்யாஹதஹாஷணம்) என்றதுக்குக்கருத்து - கர்மஜ்ஞாநாதிகளில்லையென்று சொல்லிவைத்து ஸித்தோபாயமாகிற புண்ணியனுமுடையோமென்றுசொல்லுகை. கைம்முதலில்லாவிடில் அது கார்யகரமல்லாமையாலே புண்ணியமல்லாமையால் விருத்தமென்று வ்யாஹதஹாஷணம்பண்ணினிகோளென்று க்ருஷ்ணனைக்குறித்து தாத்விகார்த்தத்தை நெஞ்சில்வைத்துக்கொண்டு வ்யாஹதஹாஷணத்துக்கடியான வறிவுகேட்டைத் தங்கள்மேலே ஆரோபித்துக் கொள்ளுகிறார்களென்று அருளிச்செய்கிறார் (கண்டிலையோவித்யாதி.)

இவர்களுட்கருத்தை யறியாமல் நீங்கள் அறிவுகேடரானுல் ப்ராப்யத்திலாசையைவிடுங்கோளென்னும் க்ருஷ்ணுபிப்ராயத்தை யருளிச்செய்கிறார் (ஆனுலித்யாதி.) தான் கார்யம்செய்யும்போது ஸஹாயஸாபேக்ஷனும்படி ஜ்ஞாநஶக்த்யாதிகளில் குறையில்லாதவனென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, இத்தால்-உபாயாந்தர நைரபேக்ஷ்யம் பலிக்கையால் வ்யாஹத மென்னும் ஶங்கை பரிஹ்ருதமென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (எங்களுக்கித்யாதிவாக்யத்வயத்தாலே.) நாங்கள் எங்கள்பக்கல் அறிவொன்று மில்லாமையையும் சொல்லி உன்றன்னை ஸஹாயஸாபேக்ஷமான புண்ணியமென்று சொல்லிலன்றே இரண்டு வார்த்தையும் வ்யாஹதமாவது, நீதானேயன்றே உங்கள்பக்கல் கைம்முதலில்லாமையாலே ஸித்தோபாயம் சார்யகரமன்றென்று புண்யமாகாமையால் வ்யாஹதமென்றுயித்தனை, நாங்களானுல் ஸர்வ நிரபேக்ஷனென்றே சொன்னோமாகையாலே வ்யாஹதமன்றென்று கருத்து. நான் பூர்ணனுய் எத்தனையேனும் நிரபேக்ஷனே

அறிவொன்று மில்லாமைக்குப் போராதோ உன்னுடையகுறை வொன்றுமில்லாமை. எங்கள் குறையாலே யெங்களுக்கு இழக்க வேண்டுவது - உன்னுடைய பூர்த்தியால் ஏதேனும் குறையுண்டாகி லன்றோ என்கிறார்கள். இப்பள்ளத்துக்கு அம்மேடு நிரப்பப்போ ராதோ. இப்பாதாளத்துக்கு அப்பர்வதம் நேர் என்கை. எங்கள் பக்கல் ஜ்ஞாந வ்ருத்தாதிகள் ஏதேனுமுண்டோ நாங்களிழக்கைக் கென்று கருத்து. இத்தால் - உபாயநைரபேக்ஷ்யஞ் சொல்லிற்று. (கோவிந்தா) நீங்கள் என்னை பூர்ணனாகப் பேசினபடியாலே வேண்டி யிருந்தோமாகில் செய்தல், இல்லையாகில் தவிருதலன்றோ வென்ன; நிரபேக்ஷமான பரமபதத்திலேவந்தோமோ, எங்களையொழியச் சொல் லாமையாலே வந்தவதரித்து எங்களுக்குக் கையாளாயிருக்கிற விடத் தேயன்றோ நாங்களபேக்ஷிக்கிறது. இத்தால் – ஸௌலப்யஞ் சொல் லுகிறது.

குறைவாளர்க்கு நிறைவாளர் கொடுக்கக்கடவர்கள் என்று ஒன்று ண்டாகிலன்றோ என்பூர்த்தியும் உங்கள் அபூர்த்தியும் சொல்லுவ தென்ன; அதுவோ (உன்றன்னோடுறவு) நீ யெங்களுக்கு உறவன்றோ, எங்கள்கார்யம் செய்யவேண்டாவோவென்ன; அதுகொண்டோ, ஆனால் ஒரு குடநீரோடே போகிறதென்ன; (உன்றன்னோடுறவேல் நமக் கிங் கொழிக்க வொழியாது) உன்னோடுண்டான ஸம்பந்தம் உன்னா லும் விடவொண்ணாது, எங்களாலும் விடவொண்ணாது, இருவ ருங்கூட க்ருதஸங்கேதரானாலும் விடவொண்ணாது. இப்படி சொல்

யாகிலும் என்பக்கல் நின்று பேற்றுக் கிழவில்லாமையை யெத்தாலே அத்ய வஸித்திகோளென்ன; அருளிச்செய்கிறார் (எங்களுடையவித்யாதி வாக்ய த்ரயத்தாலே.)

பூர்த்தியில் குறையில்லாதாப்போலே தங்கள்பக்கல் அறிவில்லாமையிலும் குறையில்லையென்கிறார்கள் (எங்களித்யாதி.) "கோவிந்தா" என்றத்துக்கு ஶங் காபரிஹாரமுகேந தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (நீங்களித்யாதி வாக்ய சதுஷ்டயத்தாலே.)

நான் ஸௌலப்யத்தால் உங்களுக்குக் கையாளாயிருந்தேனேயாகிலும் பூர் த்தியையும் அபூர்த்தியையுமிட்டு என்னுடனே வழக்குப்பேச நிமித்தமேதென் னும் ஶங்கையை யநுவதிக்கிறார் (குறைவாளர்க்கித்யாதி.) "ஒழிக்க ஒழியாது" என்றதுக்கு ப்ரஸக்தியைக்காட்டாநின்றுகொண்டு ப்ரஶ்நப்ரதிவசநரூபேண தா த்பர்யமருளிச்செய்கிறார் (அதுகொண்டோவித்யாதி.) "உறவு" என்று ஸாமா ந்யேந சொன்னத்தை, விஶேஷித்து ப்ரமாணமுகேந நிர்த்தரிக்கைக்காக ப்ரஶ் நத்தைக் கிளப்புகிறார் (இப்படி இத்யாதி.) அப்ருதக்ஸித்த ப்ரகாரப்ரகாரி

லுகிறது என்ன வுரப்பென்ன ; "நானுன்னை யன்றியிலேன் கண்டாய் நாரணனே நீ யென்னை யன்றியிலை" என்ற ப்ரமாணத்தைக் கொண்டென்ன ; அவர்கள் உங்களைப் பெற்றவர்களன்றோ வென்ன, ஆனால் நீ யெங்கள் கையில் தந்த மூலப்ரமாணத்தில் முதலெழுத்தைப் பார்த்துக்கொள்ளா யென்கிறார்கள். அதாவது "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்று அடியிலே சொன்னோமென்றபடி. நீ ஸர்வ ப்ரகாரபரிபூர்ணனாகையாலே நாங்கள் நித்யஸாந்நித்ய ஸாபேக்ஷராயிருக்கிற உறவென்றுமாம். தயாபூர்ணனானவுன்னோடு தயநீயதயா பூர்ணைகளான எங்களுக்குண்டான உறவென்றுமாம்.

